கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு :

ஓம்

புலமை நூல்

ஒரு நுணுகிய ஆராய்ச்சி

CULTURE AND ITS DEVELOPMENT

A CRITICAL RESEARCH

கோயமுத்தூர் வழக்குரைஞர்
"சிவக்கவிமணி"
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்
முன்னுரையுடன் கூடியது

கோயமுத்தூர், விளாங்குறிச்சி
வி. நா. மருதாசலக் கவுண்டர்
இயற்றியது

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

1952

உரிமைப் பதிவு]

[விலை ரூ. 2½

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு :

ஓம்

புலமை நூல்

ஒரு நுணுகிய ஆராய்ச்சி

CULTURE AND ITS DEVELOPMENT

A CRITICAL RESEARCH

கோயமுத்தூர் வழக்குரைஞர்
"சிவக்கவிமணி"
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்
முன்னுரையுடன் கூடியது

கோயமுத்தூர், விளாங்குறிச்சி
வி. நா. மருதாசலக் கவுண்டர்
இயற்றியது

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

1952

உரிமைப் பதிவு] [விலை ரூ. 2½

உ
சிவமயம்.

கோயமுத்தூர் வழக்குரைஞரும்
பெரிய புராணப் பேருரையாசிரியருமாகிய
" சிவக்கவிமணி "

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்கள்

எழுதிய

முன்னுரை.

" நீல மாமிடற் றாலவா யானென நிலவு
மூல மாகிய திருவிருக் குக்குறள் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் திளைத்தார்
சாலு மேன்மையிற் றலைச்சங்கப் புலவனார் தம்முன் "

— பெரிய புராணம் — திருஞான சம்பந்த நாயனார் புராணம்.

" புலமை நூல் " என்னும் புதுமை ஆராய்ச்சி நூலினை எனது நண்பர் விளாங்குறிச்சி வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் என்னிடம் தந்து அதற்கு முன்னுரை எழுதித் தரும்படி வேண்டினர். அவர் எனது பழைய நண்பர். இதற்குமுன் " சசிகாந்தன், " " இந்திய பத்திரிகைத் தொழிலியல் " என்பன முதலிய உரைநடை நூல்கள் பலவற்றையும் " மருதாசலப் பிள்ளைத் தமிழ் ", " மருதீசர் நவரச வண்ணத் திருப்புகழ் " முதலிய செய்யுள் நூல்கள் பலவற்றையும் இயற்றியுள்ள கைதேர்ந்த புலவர். இவரது உரைநடை நூல்கள் சென்னைச் சர்வகலாசாலைப் பரிட்சைப் பாடமாகவும், கோவை ஐஸ்கூல்களுக்குப் பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளன. தமிழுலகம் இவரது நூலாசிரியப் புலமையினை நன்கு உணரும். இப்போது எழுதி வெளியிட்டிருக்கும் " புலமை நூல் " என்பதும் இவரது அரிய ஆராய்ச்சித் திறத்தினைத் தெற்றென விளக்கும். இப்படி

யிருந்தும் இந்நூலுக்கு எனது முன்னுரையினை இவர் வேண்டி நிற்பது யாது காரணமோ அறியேன். இவரது "சசிகாந்தன்" என்னும் நவீனக் கதை நூலுக்கு இவர் வேண்டியவாறு நான் ஒரு விரிவாகிய முன்னுரை எழுதியுள்ளேன். அந்தத் தொடர்பு பற்றியே இந்நூலுக்கும் எனது முன்னுரையினை வேண்டினர் என்று கருதுகின்றேன்.

"இரவி பார்க்காத இடத்தையும் கவி பார்ப்பான்" என்று தெலுங்கர்களிடையே ஒரு பழமொழி வழங்குகின்றது. ஆகையினால் புலவர்கள் எந்த இடத்தையும் தமது நுண்மாண் நுழை புலமைத் திறத்தினால் அளந்து கண்டுவிடுவார்கள். அதனால் அவர்களது புலமை ஆழ அகலங்களை நிச்சயிக்க யாராலும் முடியாது என்பர். ஆனால் நமது ஆசிரியர் அத்தகைய புலமைத் திறத்தினையும் அளந்து பாகுபாடுகள்செய்து முடித்தனர் என்றால் அது மிகவும் துணிகரமாகிய செயலேயன்றோ? இத்தகையோரது துணிபான செயலை அளந்து நிச்சயித்து மதிப்பீடு செய்து முன்னுரை எழுதுவது என்றால் அது இலகுவான காரியமல்ல; அதனைச் செய்து முடிக்க நான் ஒரு புலவனுமல்லேன். இந்நூலின் புலமையியல், புலமை யிலக்கண இயல்களுள் வகை செய்யப்பட்ட புலமை வகைகளுள் என்னை எந்த வகுப்பில் சார வைக்கலாமென்று எண்ணிப் பார்த்ததில் எனக்கு அறிவுள்ள ஒரு வகுப்பும் காணக் கூடவில்லை. இப்பெருங் காரியத்தை இந்நூலாசிரியர் எவ்வாறு செய்ய இயல்வதாயிற்று? என்று ஆய்ந்ததில் "பெரியாரைத் துணைக்கோள்" என்ற தமிழ் மூதாட்டியார் சொற்படி நடந்த தமிழ் ஒழுக்கத்தினாலாகியது என்றறிந்தேன். அப்

பெரியார் வண்ணச் சரபம் மகான் திருவாமாத்தூர் ஸ்ரீ தண்ட பாணி சுவாமிகளே யாவர். அவர்களியற்றிய அறுவகை யிலக்கணம், புலமை யிலக்கணம், ஏழாமிலக்கணம், புலவர் புராணம், தமிழலங்காரம், சத்திய சூத்திரம், சத்திய வாசகம், தியானுநுபூதி முதலிய நூல்களையே அடிநிலை ஆதாரமாகக்கொண்டு இந்நூலியற்றப்பட்டுள்ளது.

இந்நூல் (1) புலமையியல் (2) புலமை யிலக்கணவியல் (3) புலமை யிலக்கியவியல் என்னும் முப்பெரும் பகுதியினையுடையது. முதற் பகுதியில் புலமையாவது இன்னதென்று விவரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி பயிற்சி, தேர்ச்சி, தொழில் என்னும் மூன்று உட்பிரிவுகளைக் கொண்டதாய்ப் புலமையின் பல திறப்பட்ட பாகுபாடுகளையும் விவரிக்கின்றது. இதுவே இந்நூலின் சாரமான பெரும் பகுதியென்றும் கடினமான பகுதியென்றும் சொல்லலாம். இதனுள் வகுக்கப்பட்ட புலமை வகைகள் முதற் பகுதியில் உள்ளதுபோலத் தனித்தனி நிலையின வல்ல. புலமை நிலையினை எவ்வெக் கண்கொண்டு எவ்வெவ் வகையாய்ப் பாகுபடுத்தலாம் என்பதனைக் காட்டப் பட்டிருக்கின்றது. ஒரே புலமை பல வகைகளினும் அடங்கலாம். புலமை வகைகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பெயர்கள் தாமும் ஒவ்வோர் சிறப்பினை உணர்த்தி அழகாக அமைந்து ஆசிரியரின் கவிப்பயிற்சித் திறத்தினை விளக்கி நிற்கின்றன. மூன்றும் பகுதி, நூல்கள் அமையவேண்டும் நற்பண்புகளைப் போதிக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது. புலமைக்கும் நூற்களுக்கும் வரும் இழுக்குகளும் ஏதங்களும் ஆசிரியரது நற்பண்புக்கேற்ற படி மென் சொற்களால் கடிந்து காட்டப்பட்டுள்ளன.

இனி, இந்நூலினுள் வரும் அருட் புலமை, அநுபூதிப் புலமை என்னும் பகுதிகள்பற்றிச் சில கருத்துக்கள் நம் மனத்துட் கொள்ளவேண்டும். இவை பசுபோதமாகிய உயிரறிவுக்கு அப்பாற்பட்டவை யாதலின் புலமை வகை யின்பால் வைத்து வகுக்கப்படுவது உபசார மாத்திரையே யாகும். "கலையுணர்வு கொண்டு கவிகள் பாடும் சிற்றுணர் வினராகிய புலவர்களோடு முற்றறிவினரான முழுமுதற் சிவ பரஞ் சுடரையும் ஒரு புலவராக வைத்தோப்புமை கூறுதல் உபசாரமே" என்று இந்நூலாசிரியா கூறுதல் (111-ஆம் பக்கம்) காண்க. அறிவாற் சிவமேயாய் விளங்கும் பதிவாக்கியப் பெரியோர்களாகிய திருஞான சம்பந்தராதிய பெரியோர் களின் திருவாக்குக்களுக்கும் இஃதொக்கும்.

இந்நூலாசிரியர் இதுபோல இன்னும் பற்பல சிறந்த நூல்களை இயற்றித் தமிழுலகிற் குபகரித்து நீடு வாழ்க! இந்நூல் தழைத்தோங்கி இனிது வாழ்க! இந்நூலினைப் பார்த்து மகிழ்ந்து மதிப்பீடு தந்தருளிய யோகி; ஸ்ரீ சுத்தானந்த பாரதியவர்கள் இந்நூலாசிரியருக்கு **11-3-1952** ஆம் தேதி "ஆராய்ச்சி மணி" என்ற சிறந்த பட்டத்தை அளித்து ஆசி கூறியிருக்கின்றார்கள். தமிழுலகமும் அவ் வாற்றுலே நலம் கூறி ஆசி புரிவதாக. வாழ்க "ஆராய்ச்சி மணியார்" திரு. வி. நா. மருதாசலக் கவுண்டர்!

தமிழுலகம் இந்நூலை ஏற்றபடி ஆதரிப்பதாக. இந்நூல் காலேஜ் வகுப்புக்களிலும் வித்வான் வகுப்புக்களிலும் பாட மாக வைக்கத்தகுந்தது.

கோவைச்
சேக்கிழார் நிலயம்,
1—5—1952.

இங்ஙனம்,
C. K. சுப்பிரமணிய முதலியார்.

மதிப்புரைகள்.

திருநெல்வேலி அண்டு சென்னை

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

"செந்தமிழ்ச் செல்வி."

வள்ளுவர் ஆண்டு ககூஅரு மாசி மீ வெளியீடு.

புலமை நூல்: [ஆசிரியர், திரு வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள்:

இந்நூல் அதன் பெயருக்கேற்பப் புலவர்களைப்பற்றியும், புலவர்களால் பாடப்பெறும் பொருள்களைப்பற்றியும், புலவர்களின் வகைமை நெறிமுறைகளைப்பற்றியும், பாட்டு, உரைநடை முதலிய பண்புகளைப்பற்றியும், மெய்யுணர்வு, கடவுட் கொள்கை, திருவருள் வலத்தால் செய்துகாட்டிய செயற்கருஞ் செய்கை, புலவரை இகழ்ந்த புல்லோர் புலம்பு, புலவரைப் போற்றிய சீரியோர் சிறப்பு, ஆண்டவன் அருளிப்பாட்டால் பாடியருளிய நாயன்மார் ஆழ்வாராதியோர் அருட் செல்வம் முதலிய பலவற்றைப் பற்றியும் தெள்ளிதில் விளக்குகின்றது.

நூலியற்றுமுறை, உரையியற்றுமுறை, முற்காலப் பிற்கால நூல் உரையாசிரியர்களின் நுட்ப திட்பம், அறிவியல் நூல் மொழி பெயர்க்கவேண்டிய இன்றியமையாமை, அப்பெயர்ப்புக்கு அமைக்குஞ் சொற்கள் தூய தமிழ்ச் சொற்களாக இருக்கவேண்டுவதன் கட்டாயம்,

செவி வழக்காக நின்று நிலவும் பல தமிழக வரலாறுகள் முதலியவைகளும் செம்மையாக ஆசிரியரவர்களால் யாக்கப் பெற்றுள்ளன.

பொதுவாக நூல், புலமை யுணர்வார்க்கு இலக்கணமாகவும், புலவர், புரலவர், நாடு, மொழி, நன்னெறி, உணர்வார்க்கு இலக்கியமாகவும் திகழ்கின்றது. எளிய இனிய தூய தமிழ் நடை. நல்ல பதிப்பு. மாணவர்கட்கும், ஆசிரியர்கட்கும் வைப்பனைய மாண்புமிகு நூலெனலாம். செந்தமிழன்பர்கள் ஆதரவு பெருகுமாக.

அருட்கவி, யோகி; **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்,**
புதுச்சேரி.

To

" ஆராய்ச்சிமணி "

திரு. V. N. மருதாசலக் கவுண்டரவர்கள்.

அன்பு மருதம் வாழ்க !

தாங்கள் இயற்றி யனுப்பிய **புலமை நூல் தமிழுக்கே ஒரு புதுமை நூல். தெள்ளிய நடையும் ஒள்ளிய பொருளும் கொண்டு உள்ளத்தை அள்ளும் நூல். தங்கள் தமிழ்ப் பணி வாழ்க !**

எந்தாய் வாழ்க ! ஓம் சுத்த சக்தி

11—3—52.] **சுத்தானந்த பாரதி.**

பொருளடக்கம்.

நூல். பக்கம்.

ஆக்கியோன் முகவுரை i

முதற் பகுதி — புலமை யியல்.

1. புலமையின் பொருள் 1
2. புலமையின் தகுதி 6
3. புலமை நிலை 14
4. புலமை வகை 21

இரண்டாம் பகுதி — புலமை யிலக்கணவியல்.

1. பயிற்சி முறை 74
2. தேர்ச்சி முறை 94
3. தொழின் முறை 109

மூன்றாம் பகுதி — புலமை யிலக்கியவியல்.

1. நூற்சிறப்பு 153
2. கட்டுரைப் பொருள் 156
3. செய்யுள் நடை 157
4. உரை நடை 180
5. புதுவகை உரைநடை நூல்கள் ... 192
6. நூல் மதிப்பீடு 207

முடிப்புரை 220

ஓம்.

புலமை நூல்

ஆக்கியோன் முகவுரை.

---

1. **நூற் பெயர் :** முழுதுணர் புலவனுன முருகப்பெருமான் திருவருளை முன்னிட்டு எழுதப்பெற்ற "புலமை நூல்" என்னும் இந்நூற் பெயர் இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகையாய், புலமையைப் பற்றிக் கூறும் நூலெனவிரியும்.

2. **நூற் பொருள் :** புலமை = மெய்யறிவுடைமை; நூல் = இலக்கியம்; புலமை நூல் = மெய்யறிவுச் சுடர் கொளுத்தும் இலக்கியம் : என்பது பொருள்.

3. **நூற் பயன் :** இந்நூற் பயன் உலகியல் நெறி, தெருளியல் நெறி, அருளியல் நெறி என்னும் மூன்று வகையாகக் குறிக்கப்படுமாறு காண்க :—

க. **உலகியல் நெறி :** ஐந்திலக்கண இலக்கியக் கல்விப் பயிற்சியிலே முளைத்து, கவிதையிலே தழைத்து, கலையறிவிலே கதிர் விட்டு, உணர்வறிவிலே விளைந்து, திருவருட் களஞ்சியத்திலே வந்தடைந்து, அநுபூதிப் புசிப்பிலே நின்றொளிரும் பேரறிவுப் பெற்றியினது இப்புலமை நூல்.

உ. **தெருளியல் நெறி :** அகண்டமான பரவெளியிலே பேரறிவணுக்கள் உலவுகின்றன : அதாவது, அவ்வறிவணுக்கள் நாத சத்தியினிடத்திலே நிலவுகின்றன. பின், அவை பக்குவப் பட்டுப் பகர்வாரது வரவினை நோக்கி, அவரது அறிவுப் புரையிலே புகுந்து கருவுருக்கொண்டு, அன்னவர்தம் வாக்கிலே பிறந்து, கவிப் புலமையிலே வளர்ந்து, உரைநடைப் புலமையிலே நகர்ந்து, பல்கலை யறிவிலே எழுந்து, மெய்யுணர்விலே நின்று, சொற் பலிப்பிலே நடந்து விளையாடி, சொரூப சித்தியிலே கிடந் தொளிரும் பயனுடைத்தாகும் இப்புலமை நூல்.

௩. **அருளியல் நெறி:** ஐம்புல னறிவுக்கு அப்பாற் சென்று, ஐந்திலக்கண இலக்கிய தருக்கக் கருவிக் கண்கொண்டு, கவிநடை உரைநடை என்னும் இருமைக் கருமணிகளி (கருவிழிகளி) னல் கண்டு, பல்கலையறிவுப் படித்துறையிலே இறங்கி, அகமுகமாக ஊன்றி நின்று, மெய்யுணர்விற் படிந்தழுந்தி, ஆங்கு; ஊறி, அசைந்து, பெருகி, நிரம்பி, பொங்கி, இடையீடின்றி வழிந் தொழுகும் திருவருளிற் கலந்து, அக்கலப்பிலே திளைத் திருத்தலே; சுருங்கச் சொல்லின், பேரறிவுப் பெருநிலையாகிய புலமைப் பேறே; இந்நூற் பயனுதும்.

4. **நூற் பாகுபாடு:** இந்நூல் முப்பெரும் பகுதியினது. முதற் பகுதியாகிய **புலமையியல்** புலமையின் பொருள், தகுதி, நிலை, வகை இவைபற்றி ஆராய்வது. இரண்டாம் பகுதியாகிய **புலமையிலக்கணவியல்** செய்யுட் புலமையின் பயிற்சி, தேர்ச்சி, தொழில் இவற்றின் நெறிமுறைகளை வகுப்பது. மூன்றும் பகுதி யாகிய **புலமையிலக்கியவியல்** உரைநடைப் புலமைக் கட்டா யத்தில் ஈடுபடுத்துவது: அதாவது இலக்கிய வளர்ச்சிக்குரிய புதுவகை உரைநடை நூற் பெருக்கம் வற்புறுத்துவது; மொழி வளர்ச்சி, புலமை வளர்ச்சி இவற்றினுக்குரிய செய்யுள் நடை நூல்கள் யாத்தலுடன் அமையாது, புத்தம் புதுவகை ஆராய்ச்சி உரைநடை நூல்களும், பல்கலையறிவு கொழிக்கும் உரைநடை இலக்கியங்களும் இயற்றப்பெறுதலின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டுவது.

5. **நூலாதாரம்:** இந் நூல் எழுதலாகிய காரியத்திற்கான காரணங்கள் இருவகையின. அவையாவன:—

௧. **துணைக்காரணம்:** வண்ணச்சரப மகான் திருவா மாத்தூர் தண்டபாணி சுவாமிகள் இயற்றியருளிய அறுவகை யிலக்கணம், புலமையிலக்கணம், ஏழாமிலக்கணம், புலவர் புராணம், தமிழலங்காரம், சத்திய சூத்திரம், சத்திய வாசகம்,

தியானுபூதி, நான்கு நூல், நானிலைச் சதகம் முதலிய நூல்களும்; அறிவுலகம் கோண்டாடிவரும் திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம், திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், திருமந்திரம், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ், திருவகுப்பு, நூற்றெரைகை விளக்கம், பெரிய புராணம், தேவாரம் முதலிய நூல்களும்; துணைக் காரணங்களாம்.

. உ. **நிமித்த காரணம்:** புலமை நூல் இயற்றுதற்குத் தூண்டும் பேரறிவாகிய திருவருளியக்கமே நிமித்த காரணமாதும்.

6. **அவையடக்கம்:** புலமை நூல் தீட்டுதற்கு அநுபூதி வாயிலாக முற்றறிவு பூண்ட பெரும் புலவோரே தக்கவராவர். அவ்வாறிருப்ப, வெறுங் கலையறிவும், கவிப் புலமையும், ஆராய்ச்சி உரைநடை நூல் எழுதும் ஆற்றலும் ஒரு சிறிது பூண்ட சின்னஞ் சிறியனேன், அவ்வரும் பெரும் தமிழ்த் திருத் தொண்டினுக்குத் தகுதியுடையவனல்லேன். இருப்பினும், ஆசை மிகுதி பற்றி இந்நூல் வரைந்தவாறு கண்டு, புலவர் பெருமக்கள், நீர் பிரித்துப் பாலை மட்டும் உண்ணும் அன்னப் பறவை போன்று, இந்நூற் பொருளிலே வேண்டுவ கோள்க.

இன்னிசை வெண்பா.

வாரிதியி னுழந்தை வாவினு லேயளக்கும்
ஓரியதன் செய்கைதனை யொக்குஞ் சிறியேன்செய்
சீரியது மாப்புலமைச் செல்வநூல்; மற்றிதுவே
பாரிலன்ன மன்னவர்நோள் பால்.

விளாங்குறிச்சி,
Velankurichi P. O.,
Coimbatore S. Ry.,
27—2—1952.

இங்ஙனம்,
தமிழ்த் தொண்டன்,
வி. நா. மருதாசலம்.

குருவே துணை.

ஓம் :

புலமை நூல்

ஒரு நுணுகிய ஆராய்ச்சி

CULTURE AND ITS DEVELOPMENT

A CRITICAL RESEARCH

முதற்பகுதி — புலமையியல்

புலமைக்கு இன்றியமையாத மொழியறிவை ஆராய்ந்தறிந்துகொண்டவர் புலமையியலினையும் அறிந்து கோடல் கடனே. புலமையியல் என்னும் இப்பகுதியில் புலமையின் பொருள், தகுதி, நிலை, வகை என்பனபற்றி ஆராய்ந்துரைக்கப்படுமாறு காண்க.

1. புலமையின் பொருள்.

அறியுந்தன்மையைப் புலமையென்பர். புலம்= அறிவு; புலமை=அறிவுடைமை; புலவர்=அறிவுடையவர். புலமை (1) ஐம்புல அறிவுடைமை. (2) கல்வி (கலை) யறிவுடைமை. (3) மெய்யறிவுடைமை (உணர்வறிவுடைமை); என மூவகைப்பொருள்படும். ஐம்புல அறிவுடைமை புலமையின் பொதுப்பொருளாகும்; கலையறிவுடைமை பொதுச் சிறப்புப் பொருளாகும்; மெய்யறிவுடைமை சிறப்புப் பொருளாகும். பொதுப் பொருள்: புலம்=ஐம்புலனறிவு. புலமை=ஐம்புல அறிவுடைமை. புலவர்=மிக மிக உயரிய விட்புல ஐம்புல போகம் நுகர் தலின் போகி எனப்படும் இந்திரன் முதலிய தேவர்களைக் குறிக்கும். பொதுச் சிறப்புப் பொருள்: புலமை=கலை

யறிவுடைமை என்ற பொருளினது. கலையறிவுடைமை என்பது கற்பவை கசடறக் கற்க என்றபடி கற்க வேண்டிய உலகியல், அறிவியல், அருளியல் நூல்களை யெல்லாம் கற்றுணர்ந்து, இறைவனைச் சுவை ததும்பிய இனிய பாக்களால் பாடி இன்புறுதலைக் குறிக்கும். இன்னவர் கல்விப் புலவராவர். சிறப்புப் பொருள்: புலமை=மெய்யறிவுடைமை. கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக என்றபடியே கற்றதனாலாகிய பயனாகிய வாலறிவன் நற்றாள் தொழுது பாடி யாடி நாடி அடையப் பெறும் பேரின்பப் பெருநிலை யென்க. இனிப் புலமை யென்பது எழுத்துக்களின் நிற பேதங்களும் கழன்று நிறை யறிவாகி அப்பால் தற்போத நீக்கத்திலே நிகழும் இரண்டற்ற ஒடுக்க நிலையினையே குறிக்குமென்க. இதனையே கண்ணுடைய வள்ளலார் ஒழிவிலொடுக்க மென்பர்.

அதிகாரி: ஈண்டு புலமையியல் என்பது முற்குறித்த உலகியலையும் பிற்குறித்த அருளியலையும் விடுத்து, நடுக் குறித்த அறிவியலில் நின்று கல்வித் தவப்புலமை பயின்று தேர்ந்து, அவ்வருளியல் நிலையாகிய உய்திகூடும் அதிகாரி கட்குரிய கருவியின் தன்மையைக் குறிப்பதாகும்.

புலமைப் பொருளாராய்ச்சி: புலம் என்னும் சொல் மெய்யறிவினைக் குறிக்குமாறு கண்டோர். இம் மெய் யறிவு, காண்டல் முதலிய ஐம்புலவறிவை ஒருமுகமாக்கி உள்ளே செலுத்தி இறைவனை நோக்கி நோக்கி மலமா சறுத்துத் தூய்மையுற்ற நிலையிலே விளைவதாகும். இன்னணம் தூய்மையடையும் அறிவு நிலையைப் புலம் என்பர். அதனையுடையவரே புலவர். புலம் பெற்றோர்

புலவர் என்பதும் அச்சொல்லின் பொருள். இதனைப் "புலம் புரிந்துறையுஞ் சேவடி" (திருமுருகாற்றுப்படை 62—3) என்பதில் 'புலம்' என்ற சொற்கு நச்சினார்க்கினியர் மெய்ஞ்ஞானம் என்று பொருளுணர்த்துமாற்றாலுணர்க. மெய்ஞ்ஞானம் என்பது தமிழில் மெய்யறிவெனப்படும். மற்றும்,

> "செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
> முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
> புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்ற தொல்காப்பியத்தின் பனம்பாரனார் சிறப்புப் பாயிரச் செய்யுட் பகுதியிலே "புலந்தொகுத்தோனே" என வரும் தொடரில் "புலம்" என்பது மெய்யறிவினையும், "தொகுத்தோனே" என்பது ஆசிரியனையும் குறிக்கும். சிறப்பாகப் "புலம்" என்பது மெய்யறிவுக் கதிர் விரிக்கும் தமிழிலக்கணப் பெருமறையாகிய தொல்காப்பியத்தையும், "தொகுத்தோனே" என்பது அவ்விலக்கண நூலைத் தொகுத்த ஆசிரியராகிய தொல்காப்பியனாரையும் குறிக்கும். மேலும், அம்மேற்கோளின் ஈற்றடியைப் 'போக்கறு பனுவற் புலந்தொகுத்தோனே' என்று வசனக் கிரமஞ் செய்து, முன்னிரண்டு அடிகளோடு வைத்துச் சிறிதாராயின், அப் பனுவற் புலம் என்னுந் தொடர், எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றியல்களும் முந்துநூற்படி முறைப்பட வெண்ணித் தொகுக்கப்பட்டவாறு குறிப்பது காணலாம். அன்றியும், "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்றபடி இயற்கை யுண்மைக்கொத்த எழுத்தியற் புலத்தையும் (எழுத்தின் அறிவியலையும்); "சொல்லான் அறிப ஒருவனை"; "கூறிய பாற்றம்

உரைக்கும் வினைநலம்" என்றபடி தெள்ளிய வள்ளிய சொல்லியற் புலத்தையும் (சொல்லின் அறிவியலையும்); "பெரிய பொருளைப் பணிகுவாம்" என்றபடி ஒள்ளிய பொருளியற் புலத்தையும் (பொருளின் அறிவியலையும்) முறையாக ஆராய்ந்து தொகுக்கப்பட்டதனுல், மேலே, "போக்கறு பனுவற் புலம்" என்றபடி கூறிய அரிய பெரிய அறிவியற் பனுவலாகிய தொல்காப்பியம் (1) கொடிநிலை (2) கந்தழி (3) வள்ளி என்ற மூன்றனுள் இரண்டாவதாகிய கந்தழி (மெய்ப்பொருட் சீர்மை அல்லது கடவுட் தன்மை விளக்கம்) என்னும் மெய்யறிவுப் பொருளின் மாட்சிமையை வடித்தும் பிடித்தும் காட்டி நிற்றலின் இங்கு புலம் என்பது மெய்யறிவினையே குறிக்கும் எனச் செவ்விதின் வலியுறுத்தலாம்.

அல்லாமலும், தொல்காப்பியம் பற்றி வேறொரு சிறப்புக்கவி:

"பருவ ராலுகள் வாவிசூழ் மதுரையம் பதிவாழ்
பொருவ ராநர்சி னார்க்கினி யானுரை புனையாங்
கருவ ராநெறி யுதவுதொல் காப்பியக் கடற்கே
வெருவ ராதுநின் றனமகிழ்ந் தேகுவன் விரைந்தே"

எனக்கிளர்ந்து கூறுகின்றது. இக்கவிதையில் வரும் "கருவ ராநெறி யுதவுதொல் காப்பியக் கடல்" என்ற அடியுடன் முற்போந்த "போக்கறு பனுவற் புலம்" என்ற அடி ஒப்பு நோக்கத் தக்கது. இவற்றுள் முன்னையது, பிறப்பறுக்கும் மெய்யறிவுப் புணையெனவும், பின்னையது, இன்றியமையாத மெய்யறிவு நூலெனவும் தொல்காப்பியத்தைச் சிறப்பிக்கும் போக்கு அறிஞர் ஆராய்ச்சி

நோக்குக் குரியதெனக் குறிப்பித்துவிட்டு அப் "புனுவற் புலம்" என்ற தொடரிலுள்ள "புலம்" மெய்யறிவுப் பொருளினதே என அழுத்தந் திருத்தமாகக் கூறு கின்றேன்.

மற்றும் பின்வரும் கம்பர் வாக்கையும் ஆய்க:

கம்ப ராமாயணம் — ஆரணிய காண்டம் — சூர்ப்பநகைப் படலம் முதற்கவி.

"புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற்றாகி
அவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச்
[சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

இச்செய்யுளில் வரும் 'சான்றோர் கவி' யானது 'புலத்திற் றாகி' என விதந்து கூறப்பட்டுளது. ஈங்கு "புலத்திற் றாகி" என்னுஞ் சொற்றொடர் உயர்ந்த அறிவினை யுடைத்தாகி என்ற பொருளில் ஆளப்பட்டிருத்தலை நோக்கின் புலம் என்னும் சொற்கு மெய்யறிவு என்னும் பொருள் மேலும் உறுதிப்படுமாற்றை உணர்த்தின்புறலர்மன்றோ? பின்னும் "புலவர்க் காயினும்" (சிறுபாண் 203) என்ற தொடரால் புலவர் என்பவர் மெய்யறிவு தலைப்பட்டோர் எனவும் உணரலாம். தம் பொறி புலன்கட்குப் புலனாகும் பொருள்களை ஐயந்திரிபற ஆய்ந்தாய்ந் துணர்தலும் இறைவனையோ குருவையோ (மெய்யுணர்ச்சியினால்) அகக்கண்ணால் உணர்தலும் உணர்ந்தவற்றை உள்ள படியே உணர்த்தலும் உடைய நடுவு நிலையாளரே புலவர் எனப்படுவர்.

இன்னும், நக்கீரர் அருளிய "புலம் புரிந்து" என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர் "மெய்ஞ்ஞானத்தைச் சாதித்து" எனப்பொருள் கூறியதல்லாமல், 'நூலறி புலவ' என்ற தொடர்க்கு, "(வேதாகம முதலிய எல்லா) நூல்களையும் உணர்ந்த பண்டிதரே" எனவும், "அறிந்தோர் சொல்மலை" என்ற தொடர்க்கு, "வேதாகம முதலிய சாத்திரங்களை அறிந்த மெய்யறிவுடையவர்களாலே சொல்லப்படும் புகழாகிய மலையை யுடையவரே" எனவும், "பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே" என்ற தொடர்க்கு, "பலரும் புகழ்கின்ற நன்மையாகிய சொற்களையுடைய பரசமயபண்டிதர்(களாகிய யானை)களுக்குச் சிங்கவேறு போல்பவரே" எனவும் பொருள் கூறியிருத்தலும், "வாலறிவன்" என்ற திருக்குறட் பகுதியும், "வானிற் புலவர்பிரான்........மெய்த் தெய்வமே" என்ற தியானுநுபூதியும், முன்னே, புலம், புலவர் என்ற சொற்களுக்குச் செய்த பொருளாராய்ச்சிகளுடன் ஒப்பு நோக்கி ஆராயத்தக்கன.

2. புலமையின் தகுதி.

மெய்ப்புலவர் தகுதிகள் யாவை? ஆய்வோமாக.

"நும்மோ ரன்னோர் மாட்டும், இன்ன பொய்யொடு
மிடைந்தவை தோன்றின் மெய்யாண் டுளதோ
இவ்வுலகத் தானே" (அகம் 283)

எனவும், "செய்யா கூறிக் கிளத்தல், எய்யா தாகின்று எம் சிறு செந் நாவே" (புறம் 148) எனவும், "மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின், புலவர் பாடாது வரைக என் நிலவரை" (புறம் 72)

எனவும், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவ னேவா வான வூர்தி எய்துப என்பதம் செய்வினை முடித்து" எனவும், "தொல்லிசை நுணங்கு நுண்பனுவற் புலவன் பாடிய, இனமழை தவழும் எழிற்குன்றம்" (அகம் 345), "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்" (அகம் 78) எனவும் வருவனவும், "புவியில் யார்பெறுஞ் செல்வமுஞ் செந்தமிழ்ப் புலவோர், கவிகொள் வார்புகழ்க் கொவ்வுரு" என்ற வண்ணச் சரப தண்டபாணியடிகள் திருவாக்கும் அன்ன பிறவும் பழங்காலப் புலவரது வாய்மையும், அதனால் அவர்மாட்டு மக்கள் பூண்டிருந்த நன்மதிப்பும் தெள்ளிதின் விளக்கும்.

அன்றியும், அத்தகு மெய்ப்புலவோர், பண்பும் பயனும் மிக்க சொற்களையே பேசுவர்; பிறர்க்கும் எடுத் துரைப்பர். அன்னவர் உலகியற் பொருளையேனும், அறிவியற் பொருளையேனும், அருளியற் பொருளையேனும் சொல்லுதற்கு வாய்க்கும் சொற்களில் சொல்லின் தெளி வும், அச்சொல்லால் சுட்டப்படும் பொருளின் உண்மைப் பொலிவுமாகிய அழகுகள் காணப்படும். தேர்ந்த அறிவின் முடிவுகளே அவர் சொற்களால் வெளிவருவன. மேலும் அப்புலமைச் சான்றோர் தகுதிகளை :

"அம்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்" (புறம் 235) எனவும், "செந்நாப் புலவர்" (புறம் 107) எனவும், "நாநவில் புலவர்" (புறம் 282) எனவும், "பொய்யடிமை யில்லாத புலவர்" (சுந்தரர் திருத்தொண்டத் தொகை) எனவும்; "மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்" (குமரகுருபரர்) எனவும்; "மன்னனிற் கற்றோன் சிறப் புடையன்....கற்றோற்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு"

(மூதுரை—உரு) எனவும்; "பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி, மன்னு மறிஞரைத்தா மற்றெவ் வார்" (நன்னெறி—சுய.) எனவும்; "காவலர் வெருண்டு போற்றுங் கவித்தமிழ்ப் புலவர்"; 'மணிகுலவு முடிவேந்தர் வாழ்வனந்தஞ் சிதைந்தாலு மாறு நோங்குந், திணிகுலவு கவிபாடும் புலவர்'; "சொற்படி நடத்தும் வலி துன்னு புலவோர்"; "நௌவலம் பொன்னு நாணு நறுந்தமிழ்ப் புலவர்"; "வியன்றமிழ்ப் புலமை தன்ஞ, னசித்திடாக் கதி சேர்ந்தோரை"; (புலவர் புராணத்தார்) எனவும் வருவனவற்றுற் காண்க.

மற்றும் "பாமாலை, என்று மழியாததே" என்ற நான்கு நூலின்படியும், "என்றுங் கிழியாதென் பாட்டு" என்ற புலமைப் பெருமாட்டி ஔவையார் திருவாக்கின் படியும் மங்காமல் அழியாமல் நீண்டொளிர்வன புலவர் பெருமக்களின் சொல்லோவியங்களேயாம். மேலும், ஔவையார் பாடியருளிய "சீதக்களப" எனத் துவங்கும் விநாயகர் அகவலும், முருகப் பெருமானும் ஔவை யாரும் ஆற்றிய கலா விநோதங்களாகிய "இனியது, கொடியது, அரியது, பெரியது" என்பனபற்றிய அகவல் களும், மங்களகரமான காப்பியப் பெரும்பண்புகளும் இலக்கியப் பெருஞ் செல்வக் களஞ்சியங்களுமான கம்ப ராமாயணமும் திருத்தணிகைப் புராணமும், பஞ்சகாவியங் களும், அருமைத் திருமுருகாற்றுப் படையும், வெல் காப்பியமாகிய தொல்காப்பியமும், தமிழ்ச் செழுமறை யாகிய திருக்குறளும் அன்ன பிற நூல்களும் அவற்றை ஆக்கித் தந்த புலவர் பெருமணிகளும் இவ்வுலகம் உள்ள மட்டும் நீடு நிலவும் அறிவு வைப்புக்களேயன்றோ?

இன்னும், செந்தமிழ்ப் புலமைப் பெருவள்ளல்களின் புகழ் ஊழி பேரினும் பேரா நிலையுடைத்து. இதனை, தலையாலங்கானம் என்னுமிடத்தில் மன்னர் எழுவரை ஒரே காலத்திற் புறங்கண்ட பெருவெற்றி சிறந்தகோன் "உலகமொடு நிலை இய பலர் புகழ் சிறப்பிற், புலவர்" என்று சொற்றவாற்றால் விளக்கமுறத் தெரியலாம், பின்னும் இவ்வுண்மையினைச் சேரருள் ஒருவராய்ச் சிறந்த பாலை பாடிய பெருங் கடுங்கோ என்பவர் "சேண் விளங்கு நல்லிசை நிறீஇய....புலவர்" எனக் கூறியமையி னின்றும் துளக்கமற அறியலாகும்.

அல்லாமலும், புலவர் நன்மணிகள் தாம் நல்வழி ஒழுகுதலும், பிறர்க்குறுதி கூறுதலும் தமக்குத் தொழி லாக உடைமையினால் அறிவிற் சிறந்த மக்கள் பலர் அப் புலவர் பெருமக்களுடன் கூடிப்பேசும் வாய்ப்புக் கிட்டப் பெற்றவராயின் அவ்வாய்ப்பினை எஞ்ஞான்றும் மறவார்; அத்தகையினரைப் பிரிய நேர்ந்திடின், அவரை எந்நாள் மீண்டும் கூடி யுரையாடி நாடியின்புறுவோமோ என் றெண்ணி அவரைத் திக்கு நோக்கி நின்று வணங்கி யுணங்கா நிற்பர். நேர்வுழி அன்பின்பில் வணங்கா நிற்பர்; தெருளிலருளில் இணங்கா நிற்பர். "முத்திக்கு வித்தாகும் முழுதுணர்ந்தோர் நன்னட்பே" என்ற இலக்கணத்திற்கு இலக்கியப் பொருளாய் இலங்கிய மெய் யடிமை பூண்டு விளங்கும் புலமைத் "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே". இவ்வியன்றமிழ்ப் புலமைத் திருவினர் பூதவுடம்பு மறைந்து போயினும் இவர் தம் போதவுடம்பானது என்றென்றும் அழியாது—ஒழி யாது; மறையாது—குறையாது.

புலமை ஓர் தனிச் செல்வம் : செல்வத்துட் செல்வம் புலமைச் செல்வம். அச்செல்வம் ஏனைச் செல்வங்களைப் போல் அல்லாமல் பெறற்கரும் பெருமைச் செல்வம். கல்வி வேறு; புலமை வேறு; கல்வியும் தேர்வும் முயல்வார் அனைவோர்க்கும் பொதுச் சொத்து; புலமையோ ஓர் இயற்கைத் திரு. இவ்வுண்மையினை :

"புலமைக் கானெனப் போதல் பொறித்த
தலையினாற் கிபாப்பியல் பதனைச் சாற்றிடல்
பாய்தொழிற் புலிக்கது பயிற்றல் போலும்
அல்லாற் குறைசெய லத்தொழி லெருமைக்
கிசைத்திட லொப்பா மெனத்தெளிந் தனமே"

என முழங்கும் தண்டபாணி சுவாமிகள் அறுவகை யிலக்கணம்—யாப்பிலக்கணம்—நாடகத்தியல்பு எ-ஆம் சூத்திரத்தாலுணர்க மக்கள் புலமையின்றிப் பல்கலைகளையும் கற்கின்றனர்; நினைவு வன்மையுடன் பல தேர்வுகளிலும் தேர்கின்றனர்; புலமை அத்தன்மைத்தன்று; அஃது ஒரு தனிப்பட்ட ஆற்றல். கல்வியும் தேர்வும் உயிரறிவின் முயற்சிகள். புலமையோ அவ்வுயிரறிவினிடத்து மன்னி நின்று, பயிருக்கு எருவும் நீரும் ஒளியும்போல அதனை வளம்படுத்தும் இறையருளின் ஆற்றலாகும். இங்கே "திருவேறு; தெள்ளியராதலும் வேறு;" என்ற திருக்குறட் பகுதியினை நினைவு கூர்தல் மெத்தப் பொருத்தமாகு மன்றோ? இவ்வாற்றால் புலமை என்பது அருண்ஞானத்தின் ஒரு கூறே எனத் தெள்ளிதின் உணரலாகும். இதன் சார்பாக, நமது "பண்டித மணி"யாரின் பின்வரும் கூற்றுப் பொருந்துமாறு காண்க :—

"கண் முதலிய அறிவுக் கருவிகளாற் காண்டற்கியலாத நுண் பொருள்களையெல்லாம் நுண்மாண் நுழை

புலமாகிய உட்கருவியாற் செய்யுளுலகத்திற் கண்டு இன்புறுதல் கூடும். அவ்வளவின் அமையாது, அவ்வுட்புறக் கருவிகளுக்கும் எட்டாது, அப்பாற்பட்ட திருவருளாற்றலினது சீரிய நிலையின் ஒரு சிறு கூற்றினையாதல் செவ்விய புலமை முயற்சியின் பயனாகிய மெய்யுணர்விற் கண்டு இன்புறுதற்கு முயலவேண்டும். அவ்வின்பப் பேறொன்றே நம் புலமை வாழ்க்கையில் அரிதின் முயன்று அடைதற்பாலதாகிய முடிந்த பயனாகும்." என அறிஞர் மு. கதிரேசச் செட்டியார் சொற்றுள நன்மொழிகளையும் ஆய்க.

தெய்வத் தன்மை பொருந்திய புலவர் ஒரு சிலராவர்; ஏனைப் புலவர் பற்பலராவர். தெருட் புலவர் நூற்றுள் ஒருவரென்பதும், அருட்பெருந் தெய்வப் புலவர் ஆயிரத்துள் ஒருவரென்பதும்; "ஆர்த்த சபை நூற்றொருவர்; ஆயிரத்தொன்றாம் புலவர்" என்ற ஔவைப் பெரும் புலவியின் மணித் திருவாக்கினால் அறியலாம். இத்தகு மெய்ப் புலவோர்தம் அவையிடத் திலங்குவன இன்னவை; இன்னவை: எனக் கீழ்வரும் அறுவகையிலக்கணம்— பொருளிலக்கணம்— உழியியல்பு கூ-ஆம் சூத்திரத்திற் காண்க:—

> "நால்வகைப் பயனையு நன்கெடுத் தோதலும்
> உயர்ச்சியைத் தாழ்த்தலுந் தாழ்ச்சியை யுயர்ச்சி
> ஆக்கலுந் தலைசேர்ந் தளர்வறக் களித்தலும்
> மன்னரும் பரவு மாண்புடைத் தாதலும்
> ஈவார் புகழ்ச்சியு மில்லை யென்பார்
> இகழ்ச்சியு நிறுவலு மெண்ணில்பல் கோடி
> தெய்வமு மொழிப்படி செய்யக் காண்டலும்
> ஆதிய பிறவு மருந்தமிழ்ப் புலவோர்
> அவையிடத் துள்ளன வென்னுமம் புவியே"

மேற்போந்த சூத்திரத்திலிருந்தறியும் உண்மை, புலமையினால் விளையும் தகுதியின் பயன் பல்வகையினதென்பதும் ஒன்றும். புலமையின்பம் அறிவு சான்ற மக்களிடையே பெரும் பயன் விளைத்துவருகின்றது. அம்பெரும் புலமையின் கூறுபாடுகளவான :—

(1) வழுவற்ற மொழியறிவு (2) வளப்பம் வாய்ந்த எழில் நடை (3) "நுண்மாண் நுழைபுலம்" என்றாங்கு உண்மை காணும் நுழைநோக்கு (4) திகரற்ற பொதுமை விளக்கம் (5) திருந்திய பெருங்கருத்துக்கள் (6) பயன் பெய்யும் சொல்வன்மை (7) அறம் நிறுத்தும் உறுதியுரை (8) ஆக்கமுறுத்தும் அருள் வாய்மை (9) புலவரினம் பேணும் போத நிறைவு முதலனவாம்.

அக்காலந் தொட்டு இக்காலம்வரை அத்தகைய புலமைப் பெருஞ் செல்வர்கள் தோன்றி நின்று தத்தம் இலக்கியப் பெருந்தொண்டினை ஆற்றிவந் திருப்பதனாலன்றோ மக்கள் நாகரிகக் கண்கொண்டு அன்பருள் ஒளி கண்டு வாழ்க்கை வீறுபெற்று விளங்கலாயினர்? அப் புலவர் பெருமக்கள் இலராயின் நாடு காடாகியன்றோ காட்சியளித்திருக்கும்? உலகில் இயங்கும் இயக்கங்கள் அத்துணையும் செய்யமுடியாத நாகரிகத் தொண்டினை அகத்தியர் முதல் இளங்கோவடிகள் வரையுள்ள புலமைச் செல்வத்தினர் இலக்கியத் தொண்டினாற் செய்து முடித்த தனை எண்ணிப்பார்மினோ. மக்கட் கூட்ட வளர்ச்சிக்கும், நாட்டு வளர்ச்சிக்கும், உலக வளர்ச்சிக்கும் ஆணிவேர் போன்று இன்றியமையாத புலமைச் சான்றோர்களைப் போற்றாதே ஆற்றநாட் போக்கி வருதலினாலன்றோ

இன்றைக்குத் தமிழ் மக்கள் இரங்கத்தக்க இழிநிலையில் உள்ளனர்? ஷேக்ஸ்பியர், மில்டன், வோர்ட்ஸ்வொர்த், பைரன், ஜான்ஸன், மெக்காலே போன்ற வெளிநாட்டுப் புலவர்களைப்பற்றிப் பெருகப் பெருகப் படித்துணர்ந்திருக்கும் நம் மக்கள் இரவீந்திரநாத தாக்கூர், சரோஜினிதேவி, பாரதியார், கம்பர், திருவள்ளுவர், சம்பந்தர், சடகோபர், குமரகுருபரர், சேக்கிழார், அருணகிரியார், வடலூர் இராமலிங்கர், வண்ணச்சரப தண்டபாணி அடிகள் முதலிய நம் நாட்டுப் புலவர்களைப்பற்றி அறியாதிருத்தல் எவ்வளவு வருந்தற்பாலது? அற்றை நாளில் பொருளாட்சிக்குப் பெருமுத்தரையர் என்று புகழப்பெறும் சேர சோழ பாண்டியரென்னும் மூவேந்தரும் விளங்கினர். அங்ஙனமே . பிற்றைநாளில் மறைமலையடிகள், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், பண்டித நாவல ந. மு. வேங்கடசாமி நாட்டார் என்னும் தமிழ்முடியுடை வேந்தர் மூவரும் புலமை ஊற்றுக்களாய்த் திகழுமாற்றைப் போற்றுகின்றோமா? இல்லை யில்லை. போனது போக, இனிமேலேனும் அத்திறப்பட்ட புலமை "நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே; நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடிணங்கி யிருப்பதுவும் நன்று." என்று அன்னவரைக் கொண்டாடி வருதலின் வழியாக, அவர்தம் இலக்கியக் கொடைகளைப் பேணுதலாகிய நன்றியைக் கொன்ற தீவினைக்குக் கழுவாய் தேடி அவர்தமை வாழ்த்தி வணங்கி வாழ்வோமாக!

இதன் சார்பாக அறிஞர் மு. கதிரேசச் செட்டியாரது பொன்மொழிகளைப் பின்வருமாறு காண்க :—

"சிறந்துயர்ந்த நோக்கங்களை மேற்கொண்டு திருவருளுணர்ச்சியிற் றலைப்படும் புலமைச் செல்வம் வாய்ந்து விளங்கிய நம் பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பண்டைத் தமிழ் நில வேந்தர்கள் எத்துணைப் பெருமை பாராட்டிப் போற்றி யொழுகினர் என்பதற்குப் புறநானூறு முதலிய நம் அரிய தமிழ் நூல்களே தக்க சான்றாக மிளிர்கின்றன."

"புலனழுக்கற்ற தூய பெரும்புலவர்களையும் அருண் மிகு நெஞ்சத்தினராகிய புலவர்களையும் இரு கண்ணெனப் பெற்றுத் திகழ்ந்த நம் தமிழ் நிலம் இற்றைஞான்று ஒற்றைக் கண்ணிழந்து மற்றொரு கண்ணும் ஒளி நலங் குன்றப்பெற்று ஒடுங்கிக் கிடத்தலை உன்னுங்கால், எத் தகைய தமிழ் மகனும் வருந்தாமலிருக்க முடியாது."

"மொழி வளர்ச்சி கொண்டே அது வழங்கும் நாட்டின் நலத்தை யுணரலாம்."

"எந்த நாடு தன் மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ, அது மற்றையெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும். ஆதலின் தமிழ்ச் செல்வர்களும் தமிழ்ப் புலவர்களும் விழிப்புடையராய் நின்று நம் உடைமையை விளக்கமுறப் பேணல்வேண்டும்."

3. புலமை நிலை.

இனிப் புலமை நிலையினை ஒருவாறு காண்போமாக. அறிவின் தகுதிக்கேற்றபடி புலமை நிலை ஆராயப்படும். கண்டதே காட்சி, கொண்டதே கோலம்; என விலங்கு போல் ஒழுகுவோரது அறிவு மிகத் தாழ்ந்ததாகும். இதனை,

> "விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்"

என்ற குறள் விளக்கும். இதனால் திருந்திய பழக்க வழக்கங்கள் உடையவரே கல்விப் பயிற்சிக்குரியராவர் என அறியலாம். இத்தகுதியுடையோர் மொழிப்பயிற்சியினால் அறிவு விளக்கம் சிறிதடைவர். கலைப்பயிற்சியினால் அறிவு முதிர்ச்சியுறுவர். கல்வி கேள்விகளினால் விளங்கிய அறிவுடையராவர். நல்லொழுக்கத்தினால் ஓங்கிய அறிவு விளக்கம் பெறுவர். நட்பு, ஈவு, இரக்கம் என்னும் உயிர்ப் பண்புகளால் தெருண்ட அறிவினராவர். அன்பருட் பண்புகளால் பேரறிவாகிய மெய்யறிவு தலைப்பட்ட புலவராவர். இவ்வாராய்ச்சியால் திருத்தமும் மொழியறிவும் கல்வியறிவு பெறுவதற்கும், ஒழுக்கமும் அன்பு முதலிய உயிர்ப் பண்புகளும் அக்கல்வியறிவின் மாட்சிமையாகிய தெருட் புலமைக்கும், இத்தெளிந்த அறிவுநிலை கைவரப்பெறுதல், கடவுளோடு இரண்டறக் கலத்தலாகிய (மெய்புணர்வுப் பெருநிலையாகிய) அருட்பெரும் புலமைக்கும் உதவிபுரியும். இந்நிலையில்தான் புலமை நிறைவுறுகின்றது. இத்தகைய மேலோர் புலவர் என்ற சொல்லாற் குறிக்கப்படுதலை, "பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்"; "பொய்வழக் கொழித்துயர்ந்த புலவர்"; என்ற திருவாக்குகளால் தெளியலாம். கல்வியின் நிறைவாகிய இந்நிலையினை :

> "நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
> கற்கின்ற செய்யின் கழிந்தறும் பாவங்கள்
> சொற்குன்ற லின்றித் தொழுமின் தொழுதபின்
> மற்றொன் றிலாத மணிவிளக் காமே"

என மிக அழகாகத் திருமூல நாயனார் அருளிய மெய்யுரையால் தெளிந்துகொள்ளத்தகும்.

அறிஞர் மு. கதிரேசச் செட்டியார் புலமை நிலையைப் பற்றிப் பின்வருமாறு பேசியிருத்தல் கண்டு மகிழ்க :—

"உலக வாழ்க்கையேபோலப் புலமை வாழ்க்கையும் இல்நிலை துறவுநிலை என இருதிறப்பட்டு நிகழுமாறு":

"கல்வியே கற்புடை மனைவியாகவும், செல்வப் புதல்வரே செழும் பாடலாகவும், கற்றதுணர விரித்துரைத்தலாகிய சொல்வளனே இந்நிலைக்கு வேண்டிய பொன்னிலையாகவும் கொண்டு இல்லறப் புலமை வாழ்க்கையைச் செவ்வன் நடத்திய செம்புலச் செல்வனொருவன், முடிவில் மெய்யுணர்வு கைவரப்பெற்று அது வாயிலாகத் திருவருள் நிலையையுணர்ந்து அவ்வருள் நிலை இன்பத்தில் நிலைப்பின், அந்நிலையே துறவறப் புலமை வாழ்க்கையாகும். உண்மைப் புலமையின் சிறந்த குறிக்கோள் இதுவேயாம். முடிந்த பயனும் இதுவேயாகும்."

"புலமையின் குறிக்கோள் மிகச் சிறந்துயர்ந்த அறிவு வளர்ச்சியான் எய்தும் உலப்பிலா இன்பப்பேறு கவும் அதனை மறந்து, அழிதன் மாலையதாகிய குறுகிய உலகவின்பமே அதுவெனக் கொள்ளப்படுமாயின், அது நிறைவேறுந் துணையும் அப்புலமை நின்று பின் வளர்தலின்றி ஒழியும் இயல்பினதாகும். அந்நிலையில் அமைந்த புலமையுஞ் சிறிதேயாம்." இவ்வணம் கூறுவதாயிற்று பண்டித மணிமொழி.

இனிப் புலமையைப் பல நிலைகளில் வைத்துச் சிறிது ஆராய்ந்து பார்ப்போமாக. புலமை ஒன்பான் நிலைப்படும். அவை வருமாறு: க. முனை. உ. அரும்பு. ங. போது. ச. மலர். ரு. பிஞ்சு. சா. காய். எ. கனி. அ. தாய். கூ. பரம் என்பன.

க. முளை நிலை : குற்றமற எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியின் நிலை முளைப் புலமையாம் : இஃது கல்வியறிவின் துவக்கநிலையாதலின் முளைப் புலமை எனப்படும். இது புலமையின் ($\frac{1}{64}$) கால்வீசம் பாகத்தினது. இதனையுடையவர் துவக்கப் புலவராவர்.

உ. அரும்பு நிலை ($\frac{1}{32}$) : இந்நிலை புலமையின் அரைவீசம் பாகத்தினது. இப்புலமை வெறும் உலகியல் நூலறிவு மட்டும் அரும்பிய நிலையினதாகலின் அரும்புப் புலமை எனப்படும். இதனையுடையவர் வெறும் புலவராவர்.

ங. போது நிலை ($\frac{1}{16}$) : இந்நிலை புலமையின் ஒரு வீசம் பாகத்தினது. இப்புலமை உலகியல் நூலறிவும், உயிரியல் நூலறிவும் மட்டும் கொண்ட நிலையினதாகலின் போதுப் புலமை எனப்படும். இதனையுடையவர் குறும் புலவராவர்.

ச. மலர் நிலை ($\frac{1}{8}$) : இந்நிலை புலமையின் அரைக்கால் பாகத்தினது. இப்புலமை உலகியல் உயிரியல் நூல்களின் அறிவுடன் இறையியல் நூலறிவும் தோய்ந்து நறுமணங் கமழ்தலின் மலர்ப் புலமை எனப்படும். இதனையுடையவர் நறும் புலவராவர்.

ரு. பிஞ்சு நிலை ($\frac{1}{4}$) : இந்நிலை புலமையின் கால்பாகத்தினது. இப்புலமை மேற்காட்டிய மூவகையியல் நூலறிவுடன் உயிர்ப் பண்புகளில் ஒன்ருகிய அன்புமட்டும் பூண்டதாகலின் பிஞ்சுப் புலமை எனப்படும். இதனையுடையவர் அன்புப் புலவராவர். ஈண்டு " ஆசிரியனை அடுத்துக் கற்றது அவன் தன் புலமையளவிற் காற்கூரும். அத்துணையே யல்லது முற்றும் நிரம்பியதாகா தென்பது

நம் பெரியார் கண்ட உண்மை." என்ற அறிஞர் மு. கதிரேசச் செட்டியாரது மணிமொழி சிந்திக்கத்தக்கது.

௬. காய் நிலை ($\frac{1}{2}$): இந்நிலை புலமையின் அரைப் பாகத்தினது. இப்புலமை முற்கூறிய இலக்கணங்களுடன் உயிர்ப் பண்புகளிற் சிறந்தனவாகிய ஈவிரக்கங்களும், செவ்விய மதுரம் பொங்கிய வாக்கும் காய்க்கப்பெற்ற தாகலின் காய்ப் புலமை எனப்படும். இதனையுடையவர் தேன்புப் புலவராவர்.

௭. கனி நிலை ($\frac{3}{4}$): இந்நிலை புலமையின் முக்காற் பாகத்தினது. இப்புலமை முற்கூறிய இலக்கணங்களுடன் சொற்படி முடிக்கவல்ல வாக்குப் பலித சித்தி கனியப் பெற்றதாகலின் கனிப் புலமை எனப்படும். இதனையுடையவர் இன்புப் புலவராவர்.

௮. தாய் நிலை ($\frac{7}{8}$): இந்நிலை புலமையின் முக்காலே மூன்று வீசம் பாகத்தினது. இஃது புலமையின் நிறை வினதாகினும் சுட்டறிவாகிய தற்போதத்துடன் கூடிய தாகலின், முழுப் புலமையில் ஒருபடியாகிய ஒரு வீசம் பாகம் குறைந்ததாகும். இப்புலமை முற்கூறிய இலக் கணங்களுடன் கற்றுணர்ந் தடங்குதலாகிய ஒழுக்கமும் கைம்மாறு கருதாத அருட் பண்புகள் என்னும் தாய்மைக் குணங்களும் வாய்க்கப் பெறுதலால் அருட் புலமை அல்லது தாய்ப் புலமை எனப்படும். இதனையுடையவர் அருட் புலவர் அல்லது தாய்ப் புலவராவர்.

இத்தாய் நிலை புலமையின் வரம்பாகலின் முழுதுணர் புலமை யெனப்படும். மற்றும், இது புலமைக்குத் தாயக மாகும். முழுதுணர் புலமைக்கு நிலைக்களமாகிய இதனைக்

கலைமகள், கலையணங்கு, நாமகள், வாக்கின் கிழத்தி, வாக்கின் செல்வி, சகல கலாவல்லி,

"நாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணி"

என்ற வாக்குகளால் உய்த்துணர்க. இதனையுடையவள் முழுதுணர் புலவி. இது நாத தத்துவத்தில் இயங்கும் பரமான்மையினதாகலின் தாய்ப் புலமை யாகும். இதனை யன்றோ கம்பர்:

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை"

எனக் கலைமகளைத் துதித்தனர்?

௬. பரநிலை: இந்நிலை புலமையின் முற்ற முடிந்த முழுப் பெருநிலை அல்லது விரிநிலையாகும். இதனைப் பரதுரியம், குருதுரியம், துரியாதீதம் எனினும் பொருந்தும். முற்கூறிய தாய்நிலையை அடைந்தவரே தந்தை நிலையாகிய இந்தப் பரநிலையினை அடைதற்குரியர். இவ் வுண்மையினை "தாயை யறிந்துபின் தாதையைக் கூடி" என்ற திருவாக்கினுல் உய்த்துணர்க. இப்பரதுரியம் அல்லது குருதுரியம் எய்தினேரே அதீத நிலையினராவர். இதனைப் "பார்க்குமிடத்திற் பரமாயிருக்கு மதீதத்திலே" என்ற கந்தரலங்காரத்தினுலும், "அவ்வா றறிவா ரறிகின் றதலால், எவ்வா ருெருவர்க் கிசைவிப் பதுவே" என்ற கந்தரநுபூதியினுலும் உணரத்தகும். இப்புலமை உயிரும் இறையும் நீக்கமற நிறைகின்ற—இரண்டறக் கலக்கின்ற பரவெளிப் புலமை யென்க. இதனையுடையது அருட் பெருந் தனிப் பரவெளியாகும். ஏனெனில் அபரநாதமாகிய புலமை

யினை இயக்குவது பரநாதமாகும். பரம துரியமாகிய இந்நிலையினைப் பரத்துவ நிலையெனினும், குருத்துவ நிலையெனினும், அதீதநிலையெனினும் பொருந்தும். இக்காரணம் பற்றியன்றோ "குருவென்றுந் தெய்வமென்றும் பொதுப்படச் சொல்லு நிலையே சமயாதீதம் என்னத்தகும்" என முழக்குவதாயிற்று சத்திய வாசகம்?

புலமையின் இப் படிமுறை ஆராய்ச்சியினாலே எழுதப் படிக்கத் தெரிந்த சாதாரணக் கல்வியறிவைப் புலமையின் முளைநிலை யெனலாம். வெறும் உலகியற் கல்வியறிவைப் புலமையின் அரும்புநிலை யெனலாம். அவற்றுடன் உயிரியற் கல்வியறிவுடைமையைப் புலமையின் போதுநிலை யெனலாம். அவற்றுடன் இறையியற் கல்வியறிவுடைமையைப் புலமையின் மலர்நிலை யெனலாம். அவற்றுடன் அன்புடைமையைப் புலமையின் பிஞ்சுநிலை யெனலாம். அவற்றுடன் செவ்விய மதுரவாக்கும் ஈவிரக்கமும் உடைமையைப் புலமையின் காய்நிலை யெனலாம். அவற்றுடன் வாக்குப் பலித சித்தியுடைமையைப் புலமையின் கனிநிலை யெனலாம். அவற்றுடன் மனோலய சாதனமாகிய அருளொழுக்க முடைமையை - நிரம்பிவரும் புலமையுடைமையைப் புலமையின் தாய்நிலை யெனலாம். அதன்மேல் உள்ள உணர்வறிவின் நிறைவை அல்லது அநுபூதியறிவைப் பரநிலை அல்லது ஒடுக்க நிலை எனத் தெற்றென அறியக் கிடக்கின்றதன்றோ? இந்நிலையின் பெற்றி நோக்கியே சேக்கிழார் நாயனார், சம்பந்தர் புராணம் 70-வது பாடலின்கண் "உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்; தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்" என விதந்தனர். (பெரிய புராணம்)

எனவே, புலமையென்பது வெறும் எழுத்துவாசனை முதல் கவிபாடுதல் வரையுள்ள நிலைமட்டுமன்று; அன்பு ஈவு, இரக்கம், நல்லொழுக்கம் என்னும் உயிர்ப் பண்புகளும் கூடி விளங்குதலுமாகும். தீஞ்சுவைக் கவிபாடுதல் மட்டுமன்று; வாக்குப் பலித சித்தியடையப் பெறுதலுமாகும். வெறும் வாக்குச் சித்தி மட்டுமன்று; அருட் பண்புகளுடன் விளங்கி இரண்டறக் கலக்கும் சொரூப சித்தியென்னும் திரும்பாத வீடுபேறு மாகுமென்க. அதாவது புலமை, எழுத்துப் பயிற்சியிலே முளைக்கின்றது; கல்விப் பயிற்சியிலே அரும்புகின்றது; அன்பிலே மலர்கின்றது; ஏனை உயிர்ப்பண்புகளிலே காய்க்கின்றது; மதுர வாக்குப் பலித சித்தியிலே கனிகின்றது; மனோலய சாத்திய நிலையினால் வீடுபேற்றுச் சுவையாய் நிறைவுறுகின்றது.

4. புலமை வகை.

புலமை நிலை இம்மட்டில் நிற்க. இனிப் புலமை வகை பற்றி ஆராய்வோமாக. புலமையை ஐந்து வகைப்படுத்தலாம். அவற்றுள் :—

1. மூவகைப் புலமை.

இதனை க அறிவுத்தன்மைப் புலமை உ தெய்வத் தன்மைப் புலமை ௩ அருட் பெருந் தன்மைப் புலமை எனப் பகுக்கலாம். இவற்றுள் :—

(1) அறிவுத் தன்மைப் புலமை: ஒருவன் இடையீடின்றி எழுதிக்கொண்டேயிருக்கும் வண்ணம் - தங்கு தடையின்றிக் கவி மழை பொழியும் வாக்குத் தாட்டிகம் காட்டுதல் அறிவுத் தன்மைப் புலமையாகும். இதனை,

"பாட மெழுதவிற் பட்டோலை வாய்ப்பினுந்
தடையற வொருவ னெழுதச் சாற்ற
லரிதா மதுவரை யறிவுத் தன்மைப்
புலமை யாமெனப் புகல்வது துணிவே"

எனவரும் புலமை யிலக்கணம்—தேற்றவியல்பு உ௫-வது சூத்திரத்தாலும்; புலவர் புராணம், "நல்லறிவுத் தன்மை கொடு நவில் சொற் பாடற், குட்டிகத்தா லழியாத கீர்த்தி மட்டுந் தலைக்கொண்டோர்" எனவரும் பல தெய்வப் புலவர் சருக்கம்—ஈற்றுக் கவிப் பகுதியாலும்,

"ஓதலாற் றெய்வீக முளுற்றிறு ரெனும்பெருமை
பூதலத்தி னிறுவாமற் போனபுல வரும்பல்லோர்
சாதநீர் புகமெய்துந் தன்மையுணர்ந் தவர்தகவுங்
காதல்கூர்ந் துரைக்கின்றேன் கற்றவரின் புறுமாறே"

எனவரும் அறிவுத் தன்மைப் புலவர் சருக்கம் ௩-வது கவியாலும் அறியலாம்.

(2) தெய்வத் தன்மைப் புலமை: சொற்சுவை பொருட்சுவை ததும்பப் பருவமழை போன்று நாட்டிக மான புதுப் புதுக் கவிமழை பொழிதலும், நன்மை யாகவோ தீமையாகவோ சொன்ன சொற்கள் அவ்வப் படியே பலிக்கும்படி பாடிக் காட்டுதலும், நம்பியுள்ள அன்பர்க்கு வேண்டிய வேண்டியபடியே எய்தச் செய் தலும், தெய்வத்தைக் கண்ணெதிரில் காண்டலும் பேசலும், காண்பித்தலும் பேசுவித்தலும் அப்படிப்பட்ட பிறவும் தெய்வத் தன்மைப் புலமையாகும். இதனை,

"கால மழையெனப் புதுக்கவி கழறலும்
சொற்படி நடக்கக் காண்டலும் பிறவும்
தெய்வத் தன்மைப் புலமை யாமே" எனவும்;
"கருதிய தெய்வங் கண்முற் றோன்றிப்
பேசி னல்லது பெருந்தகைப் புலமை
எய்தா தென்றிட லியல்பா மன்றே"

எனவும் வரும் புலமை யிலக்கணம்—தேற்றவியல்பு ௨௫, ௨௯-வது சூத்திரங்களால் முறையே தெரியலாம். அன்றியும், "தெய்வத்தை மனத்தாலு நேத்திரத்தாலுங் கண்டு பேசத்தகும்" எனவும்; "நேத்திரத்தால் தெய்வத்தைக் கண்டு வரப்பிரசாதம் பெற்றோர்களே பிறரும் அறியத்தக்க அற்புதங்களைச் செய்யவல்லவரா வார்கள்" எனவும் வரும் சத்திய வாசகங்களையும் மேற் குறித்த சூத்திரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மேலும் இதனை, "சித்தியொடு கல்வியுற்றோர்களைத் தெய்வப் புலவரென்பார்" எனவும்; "பொய்ப் புணர்ப் புருத் தெய்வப் புலவர்" எனவும்;

"கும்பமுனி வனைப்போல்வார் குலவுமையாண்
டுழைத்தரைப்பாச்
செம்பதுந்தேர்ந் துரைப்பாருந் தெய்வசகா யத்தரென்பார்
வம்பனேன் றனையனையார் வாக்கினருள் வாய்ந்தோரே
உம்பரன்னோர் மற்றையர்சொல் லூகமுளா ரென்பாரே"

எனவும்;

"மூடனை யடக்கற் குபாசனைத் திறந்தான்
மொழிப்பலிப் பியுற்றலே யாகும்
பாடலின் றிறமை காட்டலே கல்வி
பயின்றவர்ப் பணித்தற்கா மிரண்டும்
கூடலுந் தமமா மொன்றுபெற் றொன்றைக்
குறித்திடா துழல்வது கொடிதே
ஏடலர் தவாக் கமலமீ திருப்பா
ளீந்திடா விடிலெது மிலையே" எனவும்;

"பாட்டிறை பகர்ந்திடுக னலந்தீ தேனும்
பழுதுட்டா துலகினர்முற் பலிக்கு மாறு
காட்டிடுதலே தெய்வப் புலமை"

எனவும் வரும் புலவர் புராணப் பகுதிகளாலும் தேறலாம்.

பின்னும், திருவள்ளுவரையும் அன்னவர் இயற்றியருளிய திருக்குறட் பனுவலையும் தெய்விகச் சங்கப் பலகை தன்னிடத்தே அமர்த்தி ஏற்றுக்கொண்டதாலும், "திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்"; "வள்ளுவன் வாயதென் வாக்கு" என்ற வாணி திருவாக்கானும் திருவள்ளுவர் புலமை தெய்வப் புலமை யென்றறிக.

தெய்வப் புலமையும் அருட்பெரும் புலமையும்: இவ்விரு பெரும் புலமைகளும் பெரும்பான்மையும் தம்முள் ஒப்பன வாகலின் இவ்விரண்டினுக்கும் வேறுபாடு காண்பதருமை. தெய்வப் புலமை என்பது பிறந்தவுடன் நறுங்கவி பாடுதல் அல்லது ஓதாதுணர்தலாகும். இத்தகையினர் திருவள்ளுவர், ஔவையார், இடைக்காடர், கபிலர் முதலியோரும், சம்பந்தர், சடகோபர் முதலியோருமாவர். அருட்பெரும் புலமை என்பது இறைவன் அருளைக் கல்வித் தவத்தாற் பெற்றபின், திருவருள் வலத்தால் எத்தெடுக்கும் பெரு வாழ்வில் ஈடுபட்டுயரும் பெருந்தகையினது. இத்தகையினர் அப்பர், சுந்தரர், மணிவாசகர், பட்டினத்தார், சேக்கிழார் முதலியோரும், பெரியாழ்வார், மூன்றாழ்வார் முதலியோருமாவர். எனவே, ஓதியுணர்ந்தருள் பெற்றுப் பாடலும் ஆடலும் இயற்றுங் கவிஞர் அருட் பெரும் புலவராவர் எனவும், ஓதா தனைத்து முணர்ந்து பாடலும் ஆடலும் இயற்றுங் கவிஞர் தெய்வப் புலவர் எனவுங் கூறலாம். இவ்வாற்றால் தெய்வப் புலமைக்கும் அருட் பெரும் புலமைக்கும் வேறுபாடில்லை அல்லது ஒரு சிறிது தான் வேறுபாடுண்டெனத் தகும். தெய்வப் புலமையில், தெய்வம், புலமையை இயக்கா நிற்கும். அருட் பெரும் புலமையில், தெய்வம், புலமையில் இயங்கா நிற்கும்.

தெய்வப் புலமையில் தெய்வம் நேரடியாக ஈடுபட்டுத் திருவிளையாட்டியற்றும். இதனைக் "கொங்குதேர் வாழ்க்கை" என்று துவங்கும் சிவனார் திருப்பாடலுக்குப் பொருள் விளக்கு முகத்தால் நிகழ்ந்த வாக்குவாதத்தில் நக்கீரப் புலவருடன் அச்சிவனார் நேரடியாகக் கலந்து நின்றவாற்றால் அறியலாம். அன்றியும் "முத்தைத் தரு பத்தித் திருநகை"; 'உலகெலா முணர்ந்தோதற் கரியவன்' "பித்தா (பிறை சூடி)" என்பன முதலாகக் கடவுளே அன்பர்களுக்கு அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படி பணித்துப் புலமையில் அவ்வன்பர்களை ஈடுபடுத்திய செயல்கள் தெய்வப் புலமையின் பாற்படும். முதலைவாய்ப் பிள்ளை அழைத்தல், எலும்பு பெண்ணாக்கல், அரவந்தீண்டி யிறந்துபோன பிள்ளையை உயிர்ப்பித்தல், பல்லோரை ஏக காலத்தில் அருட் பெருஞ் சோதியுட் கலப்பித்தல் முதலிய திருவிளையாடல்களை இயற்றிய புலமை அருட் பெரும் புலமையின்பாற்படும். இப்புலமையில் தெய்வம் நேரடியாகக் கலந்துகொள்ளாமல் மெய்யன்பர்களது திருவாக்கிற் கலந்துகொண்டு சித்தியும் முத்தியும் இயற்றிய வாற்றைக் காண்க.

(3) அருட்பெருந் தன்மைப் புலமை: வாக்குச் சுவையும், வாக்குச் சித்தியும், அருட் பெருந் திறமையும் மன்னிய தன்மையுடைய புலமையே அருட் பெருந் தன்மைப் புலமையாகும். இப் பெற்றித்தாய புலமைச்சீர், அகத்தியமா முனிவர் போன்ற குருத்துவப் பெரும்புலவர் கோமக்களை அன்புடன் வணங்கி வேண்டின் எளிதிற் கைவரப் பெறலாம். இவ்வுண்மைகளை:

"வாக்குச் சுவையுட னருட்டிற மன்னும்
புலமைத் தேற்றம் பொதிய மால்வரைக்
கடவுண் முனிவனைக் கைதொழில் வருமே"

எனவரும் புலமையிலக்கணம் — தேற்றவியல்பு ௩௪-வது சூத்திரத்தாலும்;

"கல்விப் பெரும்பயன் கருணை யென்னு
நல்விற் பனனே நாவலர்க் கிறையே"

எனவரும் புலமையியல்பு ௩-வது சூத்திரத்தாலும்;

"வண்ணப் பாநுவல் வாயின னேனுஞ்
சொற்படி நடவுந் தொழிலில னாயிற்
பல்லில்பாம் பென்னப் பரதவிப் பானே"

எனவரும் புலமையியல்பு ௫-வது சூத்திரத்தாலும் உணர்க.

அருட் பெரும் புலமையின் அருமை பெருமைகளைப் பின்வரும் நிகழ்ச்சிகளால் அறியலாம்:—

1. சிவபிரானும் உமாதேவியாரும் செய்தருளிய சிவலோகத் திருநடனத்தை நேரிற்கண்ட இமையவர்களுக்கு அத்திருக்கூத்தின் உண்மையை அறிய இயலவில்லை. அவ்வுண்மையைச் சிவபரஞ்சுடரின் திருவாணைப்படி மைலாப்பூரிலிருந்த திருவள்ளுவரிடம் போய் விண்ணாட்டினர் வினவினர். வினவலும், உடனே, வள்ளுவனார்:

"பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க — நாவில்
இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து"

என்னுந் திருவெண்பாவினால் விடை இறுக்காமல் இறுத்தனர். அத்தேவர்கள் அதுகேட்டு ஐயமறத் தெளிந்து

வள்ளுவப் பெருந்தகையாரின் அருட் பெரும் புலமைத் திறத்தினையும், அப்புலவர் பெருமானையும் வாழ்த்திச் சென்றனர்.

2. ஒரு யோகி பொதியை மலையிலுள்ள அகத்திய முனிவரிடம் சென்று தருக்கங் கருதிச் செருக்கொடு பேசினர். அதுகேட்ட தமிழ்முனிக்கோன் தமதருகிலுற்ற வெள்ளை நாயின்மீது திருநீறு தூவிச் சிறப்பு நோக்கம் புரிந்தனர். புரிதலும், அந்நாய் அரிய செழுந்தமிழ்ப் பாக்கள் தொகைபடப் பாடி யோகியை வென்றது. அது கண்ட யோகி செருக்கடங்கி யொடுங்கி முனிவர்பிரான் திருவடிகளில் வீழ்ந்து பன்முறை வணங்கி அடிமைத்திறம் புரிதலாயினர். பின்னொருநாள், அகத்தியர் அந்நாய்க்கு அதன் விருப்பப்படியே தேவேந்திரப் பதவி என்னும் பொன்னுலக அரசாட்சியைத் தந்தருளினர். இவ்வுண்மை களை, "கும்பநாதன் நாயுமன் றமிழ்ச்சீ ரோர்ந்து நவின்றமை" எனவும்; "இந்திர னுறைப் பாம்பா கிடச் செய்தோ ரினநாய் தன்னைத்; தந்திர மியாது மின்றித் தவளவா ரணஞ்துய்த்தான்" எனவும் வரும் புலவர் புராண வாக்கான் அறிக.

3. முன்னொரு காலத்தில் திரிசிரகிரியின் அண்டை யில் சாரமா முனிவர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார்; அவரது நந்தவனத்தில் ஒரு பூவை அரசன் மனைவி கொய் தனள்; அப்பிழைக்காக அவனது நகரம் மண் மழை பெய்தழியச் சபித்தனர் முனிவர்; என்ற கதை வழங்கும் அதேநாட்டில் காளமேகப் புலவர் பாடிய ஒரு பாடலானும் ஒரு மண்மழை பெய்தது. இந்நிகழ்ச்சிகளை ஆராய்ந்து தெய்வத் திருவருளும் அதனை உபாசித்துப் பெற்ற

மேலோரது வாக்கும் ஒருங்கு சேர்ந்து நடத்தியதெனத் தெளிந்து அனைவரும் பிழைக்கக் கடவர்; என அறிவுறுத்துவதாகும் கீழ்வரும் புலவர் புராணம், காளமேகப் புலவர் சருக்கம் ௯௭-வது கவி.

"பூவினு லொருமண் மாரி புயல்பொழிந் திட்ட நாட்டிற்
பாவினு லொன்றும் பெய்த பான்மையைப் பலகா லுன்னித்
தேவினு லதனை நம்பித் திருவருள் பெற்றோர் தங்கள்
நாவினு னடந்த வென்றெந் நாடரு முணர்ந்துய் வீரே"

ஐம்புலங்களை ஒடுக்கித் தவஞ்செய்த முனிவரின் சாபம்போன்றே கணிகையர் ஆசை பூண்டிருந்த காளமேகப் புலவரது சொல்லும் பலிக்கும்படி புரிந்த தெய்வப் புலமை, கலைமகளால் அமைந்தபடியினாலே வெறும் பாடல் பாடுவதில் இறுமாப்புக் கொள்ளாமல் வாக்குப் பலித சித்திபெற விரும்பி உழைத்துப் பிழைத்தல் நலமென்பது குறிப்பு.

காளமேகப் புலவர் சருக்கம் ௬௫-வது கவியில் பகைவன் உன்னைச் சிறையிடுவிப்பேன் என்றதற்குத் "தவளத் தாயா ரிதயம் நீ யறியாய்" எனவும்; ௪௮-வது கவியில் திருமலைராயன் என்னும் அரசன், "எமகண்டம் பாடவல்லையோ" என வினவியதற்கு, "எது குறித் திடினுஞ் சொல்வித் திசைதாற் கென்தாய் உள்ளாள்" எனவும் காளமேகப் புலவர் கூறியதை நினைந்தால், உள்ளத்தில் அமைந்திருந்த மூர்த்திபாவனையின் உறைப்பும் அதனை முன்னிலையாக்கித் தான் சார்ந்து நின்ற அன்பின் திறமும் விளங்கலாகும். அத்தகைய நிலையினர்க்கே எல்லா நலங்களும் வந்தமையும்; அஃதன்றி நான் எனது என்னும் அகங்கார மமகார முனைப்பினர்க்கு முழு நன்மையும் புகழும் அமையா என்பது கருத்து.

II ஐவகைப் புலமை.

புலவர்களின் தகுதி வேறுபாடு குறிக்குங்கால் குரங்கு, யானை, சிங்கம், சரபம், மேகம் என ஐவகை கூறுதல் மரபு. இதனை,

"கோளதே குறித் தலமருங் குரங்கு
    கும்ப மால்கரி கொடுஞ்சினச் சீயம்
நாள நாலடி சரபமா முகிலேனர்
    தன்மை தோபுமைந் தரப்புல மையினும்
நீள மாண்புடை யதுபுணர்ந் ததனு
    ளிணைந்த வாகவி நிதம்பொழிந் திடலிற்
கால மேகமென் றெருபெய ரியாருங்
    காசி னிக்கிடை கழறின ரம்மா"

என்ற புலவர் புராணத்தால் அறிக. இவற்றுள்:—

(1) குரங்குப் புலமை: தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்பது போலப் பிடிவாத குணமுடையது. நக்கீரர், இறைவியின் திருக்கூந்தல் இயற்கை மணம் உடைத்தாயிருத்தலை இறைவன் அவரெதிரில் வந்து அறிவுறுத்திக் காட்டியுங்கூட, அதற்கு இயற்கை மண மில்லை; செயற்கை மணந்தான் உண்டு; என்று பிடிவாதமே செய்து இறைவன் சினத்துக் காளாயினர். குரங்கு கொண்ட பிடி நழுவாத குணமுடையதாதலின், பிடிவாத குணமுடைய புலமையைக் குரங்குப் புலமையென்றும், அக்குணமிக்க புலவரைக் குரங்குப் புலவரென்றும் கூறுதல் மரபு. இக்காரணம் பற்றியே முற்குறித்த கவியில் "கோளதே குறித் தலமருங் குரங்கு" எனக் கூறப் பட்டது. பகழிக் கூத்தப் புலவர் முத்தமிழ்ப் பற்றுள எந்தத் தெய்வம் அவரிடம் வந்து தன்னைப் பாடுமாறு கட்டளையிடுமோ அந்தத் தெய்வத்தையன்றி வேறு

தெய்வத்தைப் பாடுவதில்லை என்ற பிடிவாதம் பிடித்திருந் தார். ஒருநாள் திருச்செந்தில் முருகக் கடவுள் அப் புலவரது கனவில் வந்து தோன்றி,

> "பூமாது போற்றும் புகழ்ப்பகழிக் கூத்தாவுன்
> பாமாலை கேட்கயாம் பற்றேமா — யேமம்
> கொடுக்க வரியேமா கூற்றுவன்வா ராமற்
> றடுக்க வரியேமா நாம்"

என்ற திருவெண்பாவைப் பனையோலையில் எழுதி அத் துடன் திருவெண்ணீறும் அவரருகினில் வைத்து மறைந் தனர். புலவர் விழித்துப் பார்த்தவ் விரண்டும் இருப்ப தறிந்து நிலமுற விழுந்து வணங்கி இரு கைகளாலும் எடுத்து அவற்றை முறையே ஓதியும் அணிந்தும் இன்புற்று அதுகாறும் கொழுந்துவிட் டெரிந்துகொண்டிருந்த தமது ஆணவத்தை விட்டொழித்தனர். அதன்மேல் திருச் செந்தில் முருகன் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பாடினர். அப்பால் அப்பனுவலை அரங்கேற்றினர். அதன் பயனைத் தக்க பரிசும் பெற்றனர்; மகிழ்ந்தனர். பகழிக் கூத்தரின் அப்பிடிவாதம் நல்வழியிற் செலுத்தப்பட்டமையின் அது நல்வழிக்கே மாறிப் பேரின்பப் பெரும் பயனும் புகழும் நல்கிற்று. பிடிவாதம் நல்வழிக் குய்க்கப்படின் நன்றும் அல்வழிக் குய்க்கப்படின் தீதும் பயத்தலைப் பிற்குறித்த பகழிக் கூத்தர் செயலினின்றும் முற்குறித்த நக்கீரர் செயலினின்றும் முறையே செவ்விதின் அறியலா மல்லவோ?

(2) யானைப் புலமை: யானையினிடம் நன்மை செய்தவர்க்கு நன்மையும் தீமை செய்தவர்க்குத் தீமையும் செய்யும் (பழிவாங்கும்) பண்புண்டு. புலவரிடமும்

அத்தகைய பண்புகள் உள. இரண்டாவது குலோத்துங்க வேந்தன் தனது ஆண்குழந்தை யானை வாக்கண்டஞ்சிப் புலவர் கம்பரிடம் ஓடிச் சென்றடைக்கலம் புகுதலும் கம்பர் தமது எழுத்தாணிகொண்டு அவ்வாசிளங் குருந்தைக் குத்திக் கொன்றனர். புவியரசும் கவியரசுமாகிய அக்குலோத்துங்கன் தந்திரமாக அம்பு பூட்டிய நிலையிலுள்ள ஒரு வில்லைக்கொண்ட ஒரு பெட்டியைக் கம்பரைக்கொண்டு திறப்பித்தனன். கம்பர் அதனைத் திறந்தவுடன் வில்லம்பு புலவர் மார்பினிற் பாய்ந்து அவரது ஆருயிரைக் கவர்ந்தது. தனது மகனைக் கொன்ற கம்பரைக் கொன்ற குலோத்துங்கன் புலமை யானையைப் போன்று பழிவாங்கும் பான்மையின தாயினமையின் யானைப் புலமை என்க.

மற்றொன்று. மேலச் சிதம்பரமாகிய திருப்பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் தாமியற்றிய நான்கு நூல்களில் ஒன்றும், மிகச் சிறந்த சுத்த சமரச சன்மார்க்க அநுபூதி நூலும் ஆகியது "அவிரோத உந்தியார்" என்பதாகும். அதன் கண்ணே,

> "எம்மதத் தோரெவ் வகைநிட்டை சொல்லினும்
> சம்மத மேயெமக் குந்தீபற
> தற்போத மாய்க்குமே லுந்தீபற"

என சூசு-வது கவி கூறுகின்றது. அதிற் பொதிந்து கிடக்கும் அநுபூதி புண்மையின் பொதுத் தன்மையைப் பாராட்டப் புகுந்த "புலவர் புராணத்தார்";

> "எம்மதத்தி லுள்ளவர்க ளெந்நிட்டை சொன்னாலும்
> சம்மதமே யாமெனக்குத் தற்போத மாயிலெனாப்
> பொய்ம்மதத்தோர் நாணப் புகன்றருளு மப்புனிதன்
> மும்மதமாப் போலு முழுஞான வீரனம்மா"

எனச் சாந்தலிங்க சுவாமிகள் சருக்கம் கங-ஆம் பாட்டின் ஈற்றடியிலே ஷ சுவாமிகளை மும்மத முழுஞான வீர வேழமென விதந்துள்ளார். இதனால் சாந்தலிங்க சுவாமிகள் புலமை முழுஞான வீர யானைப் புலமைக்கு ஒப்பிடப்பட்டிருக்கும் பெற்றி ஓர்ந்தின்புறற்பாற்றே.

மற்றுமொன்று. ஒட்டக் கூத்தரது புலமை யானைப் புலமை யெனலாம். விவரம் வருமாறு: ஒரு குசமரபுப் புலவரைப் பார்த்து ஒட்டக் கூத்தர்;

"மோனை முத்தமிழ் மும்முத மும்பொழி
ஆனை முன்வந் தெதிர்த்தவ ரையடா"

என வினவிய வினாவினுக்கு அக்குசப் புலவரால்,

"கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்வனை யங்குசப் பையல்யான்"

என்ற தக்க விடை இறுக்கப்பட்டது. இதனால் வினா வெனும் யானை விடையெனும் அங்குசத்தினால் அடக்கப் பட்டது. இந்நிகழ்ச்சியினால், கூத்தர் புலமை யானைப் புலமையெனவும், குசவர் புலமை சிங்கப் புலமையெனவும் காணத்தகும். இவ்வினா விடைகளிலேயுள்ள இரட்டுற மொழிதலென்னும் உத்தி அல்லது நயம் ஆய்ந்தாய்ந் தின்புறத்தக்கது.

(3) சிங்கப் புலமை: யானைகளை அடக்கி யொடுக் குந் தன்மை சிங்கத்திற்குளது. ஆணவம் முதலிய மும்மல மதங்களைப் பொழியும் யானைபோன்ற புலவர்கள் அஞ்சி நடுநடுங்கி அழிந்தொழிந்திடச் செய்வது சிங்கப் புலமை யாகும். திருமலைராயன் என்னும் வேந்தனது ஆஸ்தானப் புலவன் அதிமதுர சித்திரகவிராயன் என்பவன் பல

புலவர்களை வாதில் வென்று தோல்வியுற்ற புலவர்களைச் சிறையிலிடுவித்து மகிழ்ந்தும், தன்னைப் புகழ்ந்து கீழ்ப் படிந்த புலவர்களுக்குத் தலைமை பூண்டும் தனக்குமேற் பட்ட புலவன் இல்லையென்று மெத்த இறுமாப்புடன் வாழ்ந்து வந்தனன். காளமேகப் புலவர் "எமகண்டம்" பாடி வென்ற பின்னும் தன்னைக் கடுகளவும் மதியாத அப்புலவர்களையும் அவ்வரசனையும் 'கொடுஞ்சினச் சீயம்' என்றபடி சீறிச் சினந்து,

> "செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
> ஐயா வரனே யரைநொடியில் — வெய்யதழற்
> கண்மாரி யான்மதனைக் கட்டழித்தாற் போற்றீயோர்
> மண்மாரி யாலழிய வாட்டு"

என்ற ஒரு வெண்பாவைப்பாடி அக்கொடியோர்களை ஒருங்கழித்தும் அடைபட்டிருந்த புலவர்களைச் சிறை விடுவித்தும் கவிச் சிங்கமெனத் திகழ்ந்தனர். எத்துணை யானைகள் கூடியெதிர்க்கினும் ஒரு சிங்கத்தின் முன் நில்லா; வெல்லா; நின்றிடினும் பொன்றியழிந்திடு மன்றோ? காளமேகத்தின் சிங்கப் புலமையின் தகுதி யினைப் புலவர் புராணம்; "கைத்திறற் கரிபோல்வாரைக் காய்சினத் தரிபோல் வானே" எனப் பாராட்டியிருத்தல் காண்மினே.

(4) சரபப் புலமை: சிங்கங்களைத் தனது வலிமை பொருந்திய எட்டுக் கால்களால் அடித்துக் கொல்லுந் தன்மையினது சரபம் என்ற பெயர்கொண்ட பறவை. எத்தனை சிங்கங்களின் ஆற்றலும் ஒரு சரபப் புள்ளினை எதிர்த்து நிற்க இயலாமல் அழிவுறும். இதனைத் "தாளதாலடு சரபம்" என்று புலவர் புராணம் கூறிற்று.

காளமேகம் என்ற சரபத்தை எதிர்த்த அதிமதுர சித்திர கவி முதலிய புலவர்களாகிய சிங்கங்கள் அத்துணைப் பேரும் அச்சரபத்தினால் அழியவில்லையா? இவ்வுண் மையை:

" தங்களை மீட்க வந்தான் றனென வுணரா தாராய்
அங்கவிர் புலவ ரெல்லா மரியகேள் விகளே கேட்டார்
சிங்கமா யிரஞ்சேர்ந் தாலுஞ் சிறைவலிச் சரபமொன்றைப்
பங்கமெய் திடச்செய் யாத பான்மைபோன்
முடிந்ததன்றே "

என்று புலவர் புராணம் காளமேகப் புலவர் சருக்கம் ருசு-வது கவி கூறுமாறறிக. இச்செய்தியினால் காளமேகத்தின் புலமை சரபப் புலமை எனத்தகுமன்றோ?

பின்னுமொன்று. கடைச் சங்கப் புலவர் சிங்கங் களின் செருக்கைத் திருவள்ளுவர், இடைக்காடர், ஔவையார் என்னுந் தெய்வப் புலமைச் சரபங்கள் தமது நான்கடி (வெண்பா); ஈரடி (குறள் வெண்பா) என்னுந் தாள்களால் அடக்கி யொடுக்கிய செய்திகளும் ஈண்டு நினைவு கூர்தற் பாலனவாம்.

(5) மேகப் புலமை: மேகம் கைம்மாறு கருதாது உலகுயிர்கள் உய்யும் வண்ணம் தக்கமழை பெய்துதவுதல் இயல்பாகும். அதுபோன்றே உயர்தரப் புலவரும் பயன் கருதாமல் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதன வாகிய அன்பு, இன்பு, தெருள், அருள் முதலிய நெறிகளைத் துலக்கிச் சுவை பெருகப் பெருக மேகம் பொழிவதற் கொப்பாக ஆசுமுதல் நாற்கவி மழையும் பொழிவர். அவ்வாறு பெய்யப்பட்ட ஆசுகவி மழையே 'எமகண்டம்' ஆகும். கவியினத்திலே "எமகண்டம்" அருமையும்

பெருமையும் அருட் பண்பினதுமாகும். அத்தகைய "எமகண்டம்" பாடிப் புலவர் பற்பலரது அரிய கேள்வி கட்கெல்லாம் அவ்வப்போழ்தே தக்க விடைகள் இறுக்கப் பட்டன. பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் மற்றும் பற்பலவற்றுக்கும் சிலேடைப் பாடல்கள் வேண்டப் பட்டமையும், ஈ யே ற மலை குலுங்கப் பாடுமாறும் திருப்பாற் கடலிலே செந்தாள் எழும்பக் கவிகட்டுமாறும் அன்ன பிறவும் கடாவப்பட்டமையும் அவற்றினுக் கெல்லாம் வினவினர் துணுக்கமுறவும், இறும்பூதெய்தவும் தக்கவிடை பகர்ந்த காளமேகப் பெரும் புலவரேற்றின் புலமையின் ஆட்சியும், நீட்சியும், மாட்சியும், காட்சியும் நறிய வெண்கமலத்திருக்கும் கலைமகளே அறிதற்பாலன. முன்பின் யோசனை யின்றியும், அத்துணை வினாக்களுக்கும் முழுதும் பொருத்தமாகவும், அழுத்தமாகவும், திருத்தமா கவும், மதுரம் பொங்கி வழியவும், ஆசுகவியாகவும், சிலேடை வெண்பாக்களாகவும், கற்பனைக்கு மிஞ்சிய கருத்துக்களும், நயங்களும் பொதுளவும் பாடிய காளமேகத்தின் புலமை முழுக்க முழுக்க அருட் பண்பே யாதலின், அதனைப் புலவர் புராணம் "தோயு மெந்தரப் புலமையினும், நீள மாண்புடையது காள மேகமென் றொருபெயர்" பூண்ட புலமையெனப் புகழாநிற்கின்றது.

இவ் வைவகைப் புலமை ஆராய்ச்சியினால் குரங்குப் புலமையும், யானைப் புலமையும், சிங்கப் புலமையும், சரபப் புலமையும், மேகப் புலமையும் ஒன்றையொன்று உயர் தரத்தினதெனவும், அவற்றுட் சிறந்த மேல்நிலையினது மேகப் புலமை யெனவும், அத்தகுதி நோக்கியே உலகினர் காள்மேகமென்று அப்புலவர் கோனுக்குக் காரணப்

பெயர் சூட்டினரெனவும் உணரக்கிடக்கின்றது. இப் புலமை வகையில் குரங்குப் புலமை கடைத்தரத்தினதெனவும், ஆனைப் புலமையும் சிங்கப் புலமையும் இடைத்தரத்தின வெனவும், சரபப் புலமை உயர்தரத்தினதெனவும், மேகப் புலமை முதல்தரத்தினதெனவும் கூறலாம்.

III நால்வகைப் புலமை.

இதனை மருட் புலமை, பொருட் புலமை, தெருட் புலமை, அருட் புலமை என நான்கு வகையாகப் பகுக்கலாம். இவற்றுள் :—

(1) மருட் புலமை: பொருளல்லாதனவற்றைப் பொருளென்றுணரும் திரிபுணர்ச்சியே மருளாகும். அதனால் கீழ்நிலையே வந்துசேரும். இதனாலன்றோ?

> "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
> மருளானு மாணாப் பிறப்பு"

எனக்கூறியதாயிற்று தேவர் குறளும். மருள் = மயக்கம். உள்ளதை இல்லதெனவும், இல்லதை உள்ளதெனவும் உணரும் மயக்கத்தினால் வாக்கினிலே ஒளியுண்டாகாது; இருள்தான் உண்டாகும். ஒன்றை மற்றொன்றாக அறியும் நிலை மருள் நிலையாகும். இவ்வண்ணம் மயங்கும் அறிவுடைமையை மருட் புலமை யென்பர். இம்மருட்சியுடைய புலவர் மருட் புலவராவர். ஆகலின், தக்க அறிவாராய்ச்சியினால் மனமயக்கந் தீர்ந்து அறிவு திருந்துதலாகிய தெருட்சி நிலைக்கேறல் வேண்டும். நிலைபெற்ற பொருளாகிய அருளை அல்லது கடவுளைப் பொருளென உணர்தலாலும், மண், பெண், பொன் முதலியவற்றை நிலையற்ற பொருள்களென உணர்தலாலும் மெய்யுணர்ச்சி கைவரப்

பெறும். அதனால் மருட்சி நீங்கும்; தெருட்சியோங்கும்; பேரின்பம் உதிக்கும்; இருவினைத்தளை ஒடியும்; பிறவிப் பெரும் பிணியும் அற்றுவிடும்.

"காமம் வெகுளி மயக்கமிம் மூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்"

என்ற திருக்குறட் கருத்தினை ஓர்க. இந்நிலை எய்தப் பெறுதலுக்கு இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறைவனது திருவடிகளைப் பற்றாகப் பற்றல்வேண்டும். இக்கருத்துப் பற்றியே திருவள்ளுவ நாயனார்:

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" எனவும்;

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது" எனவும்

தெளிவாகக் கூறியுள்ளார். இக்குறளடிகளுடன்

"தெய்வந் தோன்றியுஞ் சிறுநலந் துய்த்து
மறுத்து நல்லார் வயிற்றுட் புகுவது
பேதைமை யென்பார் பெரும்புல வோரே"

என்னும் புலமையிலக்கணம் — தேற்றவியல்பு உஎ-வது சூத்திரத்தையும் ஒத்துப்பார்த்திடுக. அன்றியும், அருட் பேருளர்க் கஞ்சாத புலமையும், காமமே கண்ணாயினார் புலமையும் தீதாய் முடியுமென்க. இதனை "ஒட்டா! ஒரு மதி கெட்டாய்" என வெய்ப்பிர்த்துக் கூறி ஔவையார் தன்னை மதியாத ஒட்டக்கூத்தப் புலவரை நாணும்படி செய்ததனாலும், அப்பிரதாபதிப் பெருங் கவிஞர் வாக்குப் பலித சித்தி பெற்றிருந்தும் ஒப்பந்தத்தை மீறி ஈற்றுங் கவிதையில் சிற்றின்பக் காதற் கனிவை வைத்துப் பாடிய

தனுல் தம் ஆருயிர் துறக்க நேர்ந்ததிலிருந்தும் முறையே நன்கறியலாமல்லவோ? இக்கருத்தினுலன்றே? புலமை யிலக்கணத்தார் — தவறியல்பு :—

"அருட்பே ருளார்க் கஞ்சாப் புலமை
மருட்சி யினதென வைப்ப படுமே"

என்ற உ0-வது சூத்திரமும்;

"காமக் கடலே கதியெனக் கருதிப்
பேரவார் புலமையிற் புண்ணிய மின்றே"

என்ற கக-வது சூத்திரமும் யாத்துள்ளார்.

அழுக்கா றுடைமையும் மருட் புலமையின் பாற் படும். கலைமகள் அமைந்த நாவினராக இருந்துங்கூடக் கம்பர் அருட்பெரும் புலவியாகிய ஔவையாரிடம் பொறுமை பூண்டிருந்தபடியினுலே அவமதிப்பும் அவ மிருத்தும் சூழப்பெற்ருர் என வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒரு நாள் கம்பர் ஔவையாரை அடி! என விளித்துக்கூற நினைந்தவராய், "ஒற்றைக்காலில் நாலிலைப் பந்தரடி" என்று இரட்டுறு பொருளிற் சொற்றனர். கம்பர் கூறிய மொழியீற்றில், அடி என்பது பெண்பால் முன்னிலை விகார விளிப்பொருளொன்றும், ஒரு காம் பாகிய காலடியில் அமைய நான்கிலைகள் பந்தல் போலுள்ள ஆரைச் செடியைக் குறிப்பித்த சாதாரணப் பொருளொன்றும் அமைந்தன. அதனையுணர்ந்த ஔவை யார் கீழ்வருமாறு கம்பருக்குச் சுடச் சுடப் பதிற்கவி முழக்கினர் :

" எட்டேகா லட்சணமே யேமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே — முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
ஆரையடா சொன்னு யடி"

இவ்விடையைக் கேட்ட கம்பர் வெட்கித் தலைகுனிந்தனர். கம்பர் சோழ வேந்தன் உறவே பெரிதெனமதித்து, ஒளவையார் உறவைச் சிறிதென அவமதித்து மேற்கண்டவாறு உரையாடலில் பொருமையும் பகைமையும் காட்டியதனால் ஒளவைப் பெரும் புலவியின் முன் தலைகுனிய நேர்ந்தது. இதனால் புலமைப் பெரியார் பகை, நாணமும் அவமதிப்பும் தருமெனவும், அரசர் உறவினும் அருட்புலவர் உறவே சாலச் சிறந்ததெனவும் அறிதற்பாலன. இங்கே புலமை யிலக்கணம் — தேற்றவியல்பு :

" நாற்பகை கொள்ளினு நுண்ணிய புலமைச்
சிறியர் தம்பகை சிறிதுமா காதே"

என்ற ௬-ஆம் சூத்திரமும், ஷை இலக்கணம் — தவறியல்பு:

" தமிழறி புலவோர் தங்க ளுறவினும்
பொருளுடை மன்ன ராதியர் பொய்யுற
வுயர்வெனக் காண்பா ரொள்ளிய பனுவற்
கார னெனினுங் கடைப்படு மன்றே"

என்ற ரு-ஆம் சூத்திரமும் சிந்திக்கத்தக்கன. இதுகாறும் செய்த ஆராய்ச்சி மருட் புலமையினின்றும் தேறியுய்தற் காதாரப் ஆகுமென எண்ணுகின்றேன்.

(2) பொருட் புலமை: முன்கண்ட மருட் புலமைக் கதிகப் பொருட் புலமை. பொருட் புலமை என்ற தொடரிலுள்ள பொருள் என்ற சொல் இம்மை மறுமை

இன்பங்கட் குதவும் செல்வப் பொருளையும் வீடுபேற்றின் பத்தை உதவும் அருட் செல்வத்தையும் குறிக்கும். செல்வப் பொருளுக்காகமட்டும் அரிதின் வாய்த்த புலமையைப் பயன்படுத்துகை அறிவுடைமையாகுமா? ஆகாதன்றே? இக்கருத்தினுக்கு ஆதாரமாகப் பின்வரும் புலமை யிலக்கணச் சூத்திரங்களை நோக்குமின்.

"அருள்வலிப் புலவ ராமென விளங்கியும்
பொருளுடைச் சிலர்பாற் போவ திழிவே"

"புகலரும் பனுவற் பொற்பணங் கருதி
விற்கத் துணிவது மேம்பா டன்றே"

"பொருட்சுவை குலத்துயர் வரசு பூணுடை
பாட மாதிய பற்றிப் புலமைக்
குயர்ச்சி கூறலு மொவ்வா முறையே"

தெய்வத் தன்மை பொருந்தி விளங்கிய கம்பர் புலமையுங்கூடப் பொருட் செல்வத்தில் மயங்கியபடியால் மருட்புலமை ஆயிற்று. சிலம்பி யென்ற பெயர் பூண்டு தனிக் குடிவாழ்க்கை நடாத்திவந்த மாதொருத்தி கம்பர் பாட்டுக்காசைப்பட்டுத் தன் உடைமை முழுதும் விற்றுத் திரட்டிய ஐந்நூறு பொன்னையும் கம்பரிடம் கொடுத்தனள். கம்பர் நான் ஆயிரம் பொன்னுக்கு ஒரு பாட்டுப் பாடுவது வழக்கம்; உன் ஐந்நூறு பொன்னுக்கரைப் பாட்டுத்தான் பாடுவேன்; என்று சொல்லி:

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"

என்ற இந்த அரை வெண்பாவைச் சிலம்பியின் வீட்டுச் சுவற்றில் எழுதிவிட்டு அதற்கு விலையாக அவளிடம் ஐந்நூறு பொன் பெற்றுக்கொண்டு போயினர். அருட்

புலவி ஔவையார் ஒருநாள் கடும்பசியுடன் அவ்வீட்டில் வந்து தங்கி, சிலம்பி யிட்ட கூழினை அன்புடன் குடித்துப் பசியாறி மகிழ்ச்சி மீக்கூர்ந்து, — "பெண்ணாவாள்

"அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

எனப் பிற்பாதியைப் பாடி அவ்வெண்பாவைப் பூர்த்தி செய்தனள். ஔவையாரின் அருள்வாக்கினால் சிலம்பியின் வறுமை நீங்கியது; நிறைந்த செல்வம் பொங்கியது; சிலம்பி கட்டழகு பெற்றுத் துலங்கினள். அதுகண்ட கம்பர் ஔவையாரிடம் பொருமையுற்றனர். சிலம்பி யென்ற அக்கணிகை மகள் கம்பரைப் பார்த்து, நீர் ஐந்நூறு பொன்னுக்கு அரைப் பாட்டே பாடினீர்; அப் பகுதியில் ஒருமுறையேனும் என் பெயரை அமைத்திலீர்; அதனால் மேலும் வறுமையே அடைந்தேன். ஔவை யாரோ எனது கூழைக்குடித்துக் களிப்புற்றுப் பின்னரை வெண்பாவைப்பாடி அப்பகுதியில் என்பெயரை மும் முறை அமைத்தனர்; அதனால் எனக்குப் பெரிய செல்வ வாய்ப்பினைத் தந்தருளினர் என நயம்படக் கம்பரை இடித்துரைத்தனள். அதனைக் கேட்டலும் கம்பர் சிலம்பி யையும் ஔவையாரையும் அவமதித்தனர். பெருகிய அருட் செல்வமும் பொருட் செல்வமும் பெற்றிருந்துங் கூடக் கம்பர் புலமை, "பூரியார் கண்ணுமுள" தாகிய பொருட் செல்வத்திலும் பொருமையிலும் அழுந்திச் சென்று நாணமும் பழியும் எய்தியது.

நமது சைவச் செழுஞ் சுடராகிய சுந்தரமூர்த்திகள் புலமையோ பொருட் செல்வத்தின் வழிச்சென்று இம்மையில் அறமும் இன்பமும் புகழும் மறுமையில்

கூட்டுடன் திருக்கைலைப்பதி வாழ்க்கையும் நல்கிய தல்லவா? சுந்தரர் சிவபெருமானைப்பாடி அவரருளால் பொன் பெற்று அதுகொண்டு தமதில்லறத்தினைத் திறம்பட நடாத்தி இம்மையிலேயே இல்லறவின்பமும் துறவறவின் பமும் பேரின்பப் பெருவாழ்வும் பெற்றனரல்லரோ?

சிவபிரான் சுந்தரமூர்த்தி நாயனுருக்கு அருளிய வாறே முருகப்பெருமானும் பகழிக் கூத்தர் முதலி யோருக்குப் புலமைச் செல்வமும் பொருட் செல்வமும் நல்கித் தடுத்தாட்கொண்டருளியுள்ளார். இப்புலவர் பெருமக்களைப்போலவே பொருட் புலமையினுல் இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மைப் பெரும்பேறும் அடைய வேண்டுமேயல்லது,

“அழுக்கா றெனுமொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்”

என்ற தெய்வத் தமிழ்மறை வாசகத்திற்கு வாச்சியராதல் அதாவது துன்புறுதல் கூடவே கூடாதென்க.

(3) தெருட் புலமை: அறிவைத் தெளிவு நிலைக்குக் கொண்டுபோய் வைக்கும் இப்புலமை பொருட் புலமையைவிட ஒருபடி ஏற்றமுள்ளது. தெளிந்த அறிவுடையாரைக் கம்பர் “தெருண்ட மேலவர்” எனப் பாராட்டுதல் காண்மின். மற்றும் அன்னாரைச் “சிறியவர் சேரினும் அவர்தம் மருண்ட தன்மையை மாற்றுவர்” என அத்தெருண்ட மேலவரின் வல்லபத்தைப் புகழ்தலா யினர். இவ்வாற்றல் தெருட்சியின் பெருமையும் மருட் சியின் சிறுமையும் காணலாம். இதனையொட்டிப் புலவர் புராணம் முத்துலுக்கப் புலவர் சருக்கம் ருரு-வது பாட்டுக் கீழ்வருமாறு:

"ஒருமதத்தோன் மற்றோர்மதத் துறுதேவைப் பணிந்தாலும்
அருளடைந்தா னுலகமுழு தவன்மொழிக்கஞ் சுவதுண்மை
குருவிகற்ப மேமதங்கள் குறித்துபர மொன்றென்னும்
தெருளடைவ தெளிதன்று செய்தவமுற் றிடிலாமே"

எனவரும் இப்பாட்டின் பிற்பகுதியினால் மதங்களைக் குருவிகற்பமென்றும், எல்லா மதங்களிலும் ஊடுருவிச் செல்வது ஒரே பரம்பொருளென்றும் அறியும் நிலையே தெருட் புலமையெனத் தெள்ளத் தெளியக் காணக்கிடக்கின்றது.

ஒரோர்வழிப் பொன்னுக்காக இறைவனைப் பாடியது உண்மையாயினும் நமது வன்றொண்டப் பெருந்தகையார் மனவொருமையும் அருளநுபவமுங் கலந்த புலமைப் பெருஞ் செல்வத்தினர் என்பதனைச் சிவபெருமான் ஒருநாள் சிறிது காலந் தாழ்ந்துவந்து சேரமான் பெருமாள் நாயனாருக்குத் தமது திருச்சிலம்பொலி கேட்பித்தமைக்குக் காரணங் கூறுமுகத்தால் விளக்கியருளியவாற்றால் அறிக. அது வருமாறு:—

"என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர்நின் றருளா தெழுமொலியான், மன்றி னிடைநம் கூத்தாடல் வந்து வணங்கி வன்றொண்டன், ஒன்றுமுணர்வா னமைப்போற்றி யுரைசேர் பதிகம் பாடுதலால், நின்றுகேட்டு வரத்தாழ்ந்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார்"

வாக்குத் தெளிவும் வாக்குச் சித்தியும் அடைதல் மட்டும் தெருட் புலமையாகாது. இசைகவி வேண்டாது வசை கவிக்கே காளிதேவியிடம் வரம்பெற்ற வசை கவியாண்டான் என்ற புலவர் தம் ஆயுள்மட்டும் வசை கவியே பாடினர். அவரது வாக்கில் தெளிவும், வாக்கில்

சித்தியும் உண்டாகியும் அவரது வசைகவிகளால் எத்தனையோ பேர் மாண்டொழிந்தனர். ஒருநாள் ஒருவன் மீது இசைகவி பாடும்பொருட்டு முயன்றவர் "மகராசா" எனப் பாடி முடித்தனர். வசை கவிக்குமட்டும் பெற்ற வரப்பிரசாதத்தினுல் மகராசா என்ற அவ்வீற்றுச் சொல்லிலுள்ள சா என்ற ஈற்றெழுத்தின்படியே அப் பேர்வழி வசையின் பாற்பட்டு இறந்தொழிந்தனன். அப்புலவர் தம் ஆயுட் காலத்திலே ஒருவருக்காவது தமது வசைகவிப் புலமையினுல் நன்மைபுரிய இயலவில்லையே என்பது கண்டு நனிவருந்தினர். ஆகவின் வாக்குத் தெளிவுடன் கூடிய வாக்குச் சித்திப் புலமை மட்டும் நலம் பயவாது; இவற்றுடன் மக்கட் பண்பிற் சிறந்தொளிரும் ஈவிரக்கம், அன்பருள் என்னும் நலங்களும் தோய்ந் துயர்ந்த தெருட் புலமைதான் இருமையிலும் இன்பம் பெய்யும். "உப்புக்கும் பாடிப் புளிக்கு மொரு கவிதை ஒப்பிக்கும்" ஔவையாரின் திருவுளமே தெருண்ட உள்ளமாதலின் அத்தகைய தெள்ளத் தெளிந்த தன்மை யானது வாக்கிலும், மனத்திலும், நடக்கையிலும் ஊடுரு வப்பெற்ற புலமையே தெருட் புலமையாமென்க. இதன் சார்பாகப் பின்வரும் சத்திய வாசகக் கருத்துக்கள் சிந்திக் கத்தக்கன :—

"கல்விக்கடல் அளவுபடாதென்று ஒரு வார்த்தை உலகத்தில் விளங்குகின்றதாயினும் எந்தப் புலவன் மற்றொரு புலவனைக் காணும்போது பொருமை முதலிய குணமுதியாது ஆனந்த முதிக்கப்பெறுகின்றானோ அவன் கல்விக் கடலின் எல்லை கண்டோன் என்பதற்கு ஐயமில்லை"

"கல்விக் கடலைக் கடந்த புலவனுக்கும் செல்வக் கடலைக் கடந்த அரசனுக்கும் நாய்போன்று இனத்தைப் பகைக்கின்ற துர்க்குணம் உண்டாகாது"

(4) அருட் புலமை: தெருட் புலமையினும் அருட் புலமை மேம்பட்டது. புலமையில் தெருட்சியடைந்த வருக்கே அருட் புலமை வாய்க்கும். அருள் என்பது தொடர்புடையாரிடத்தும் தொடர்பில்லாரிடத்தும் ஒரு படித்தாய்த் திகழும் அன்புக்கனிச்சாறாகும். அது கைம் மாறு கருதாது பெய்யும் மேகத்தைப் போன்றுதவும் தெய்வப் பண்பாகும். அது அன்பு முதிர்ந்த நிலையிலே உதிப்பதினால் "அருளெனும் அன்பீன் குழவி" என்றார் திருவள்ளுவ நாயனாரும். அருளின் வாய்ப்புக்கு ஆன்மநேய ஒருமைப் பாடு அடிப்படையானது. இவ்வடிப்படையினின்று பிறக்கும் புலமையின் முதிர்ந்த நிலையே அருட் புலமையாகும். வெறும் வாக்குச் சித்தி அருட் புலமையாகாது. "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை உண்ட பாலனை அழைத்ததும், எலும்பு பெண்ணுருவாக் கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும்" அன்ன பிறவும் அருட் புலமையின்பாற் படுவனவே. முடித்துக் கூறின், தெய்வமும் வாக்கும் ஒன்றுசேர்ந்த நிலையில் நிகழ்வன வெல்லாம் தெய்வப் புலமை அல்லது அருட் புலமையின் காரியங்களாம்.

இன்னொன்று. திருமருகலில் திருஞானசம்பந்தர், அரவத்தால் இறந்த வணிகமகனை உயிர்பெற்றெழச் செய் தற்காகத் திருப்பதிகம் பாடியருளினர். பாடியவுடனே இறந்தவன் பிழைத்தெழுந்தனன். அப்பாட்டினைக் கருத் தூன்றி நோக்கின் சம்பந்தரின் அருளநுபவ மனவியல்பும்

அருள்நாத ஒலியாகிய தேவாரப் பாடல்களே அவரது பாடல்களாக உருப்பெற்று வெளிவரும் இயல்பும் நன்கு விளங்கும். சிவாநுபூதிப்பேறாகிய அருட் புலமை நிலை வருமாறு :—

" ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக, இந்துவார் சடையா ருடுமா னந்த வெல்லையிற் றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் " என்ற சேக்கிழார் பெரிய புராணத் திருப் பாடலில் கருவி கரணங்களெல்லாம் ஒருவழிப்பட்டுச் (சிவபெருமானது திருவருள் நிலையிலே கலந்தொளிரும்படி ஒருப்பட்டிருந்து) நினைந்து அருளோடு கலந்த உரையால் வந்தெய்தி நிற்கும் பேரின்ப நிலை – அருட் புலமை – யின் அநுபவம் விளக்கப்பட்டிருக்கின்றது.

தெய்வமும் வாக்கும் ஒன்றுசேர்ந்து நிகழ்த்தும் அற்புதச் செயலாலே அருட் பெரும் புலமையின் உச்ச நிலையினை அழுத்தமாக எடுத்துக்காட்டா நிற்பன மேலே குறித்த சேக்கிழார் திருப்பாட்டும்; அதற்குக் காரணமாக வெளிப்போந்த :

" சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே "

என்ற தொடக்கத்தினையுடைய சம்பந்தர் திருப்பதிகமும். இவ்விரு முதுபெரும் புலவர்களின் அப் பாக்கள் தெய்வச் செந்தமிழ் அழகொடு திருவருள் அநுபவம் கலந்தொளிரும் அருட் புலமைச் சிறப்பை இனிது விளக்குகின்றன.

இவ்வருட் புலமையாகிய தெய்வப் புலமையைப்பற்றி அருட் கவி யோகி சுத்தானந்த பாரதியார் பின்வருமாறு சொல்லுகிறார் :

"நவசக்தி" சிலம்பு : க, பரல் ௫௨; **16—10—1929;** புதன்கிழமை — பக்கம் க;ச : பார்க்க.

நமது நெஞ்சுளேயுள்ள ஒருறுப்பை ஆராய்ந்தறிய முடியாமல் அதற்கு "அவனுடைய மூட்டை" என்று மேனாட்டு மருத்துவர் பெயரிட்டுவிட்டனர். அந்த மூட்டையை அவிழ்த்து ஆராய்ந்தறிந்தவர் நம்நாட்டு உட்புலமையாளரே!

கடவுள்

"நீரிடை யுப்பும் நிலத்திடை யப்பும்
தாயிடைச் சூலுந் தளிரிடைத் துவரும்
தீயிடை வெம்மையுஞ் செறிந்தாங் கன்ன
அறிவிடை ஈசன் அமர்ந்தாங் குறலே"

என்று நமது அறிவினிடை நீக்கமற நிலவும் ஒரு நுண் பொருள், மறை பொருள், எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவனாக, எல்லா வுடல்களிலுங் கோயில்கொண்டிலகு வதை யறிவார் யார்? அவர்களே அறிவுள்ளவர். அவ்வறிவே தெய்வப் புலமை (Cosmic Conscience) *விஞ்ஞானம் எனச் சொல்லப்படும். அவ்வறிவுற்று, அதன் ஒளிமயமாக நிலைத்தவன் தேவனாவான். பிரகலாதன், ஞானசம்பந்தர், அப்பர், நம்மாழ்வார், அருட்சோதி வள்ளலார், ஏசுநாதர், புத்தர் முதலியோர் அவ்வறிவுலகில் வாழ்ந்தவர்."*

"ஆனால் மனதினால் மட்டும் மனிதன் கடவுளைக் காணமுடியாது. அடுத்தபடியான விஞ்ஞான கோசத்தில்

தான் இராமலிங்க சுவாமிகள் சாகா மருந்தாகப் புகழும் அருட் பெருஞ் சோதியின் வாயிற்படியுள்ளது அந்த விக்ஞான வோளிதான் தன்னறிவு. அதில்தான் தெய்வப் புலமையுள்ளது. அதன் மீதுதான் ஆண்டவன் ஆனந்த நடம் புரிகிறான். சித்தம்பலத்தின் திருவிளக்கு அதுவே! அந்நிலையில் மனிதன் ஏறினால் ஆண்டவனின் லீலைகளை அறியலாம். அவனை யுணரலாம். எனினும் ஆனந்த கோசத்திலேதான் சாந்தமாக, என்றுங் களித்து மனிதன் இருக்கலாம். சச்சிதானந்த வாழ்விற்குச்சென்று கடவுண் மயமா யிருத்தல்முடியும்."

"தெய்வ மனிதனின் உணர்ச்சியே கடவுட் புலமை (Cosmic Conscience). இது விக்ஞான கோசத்தா லடையும் அருட் பெருஞ் சோதியால் உண்டாவது. உடல், உயிர், மனம் இவற்றைக் கடந்த நிலையே தெய்வ நிலை. இந்நிலையை யடைய மனிதன் விக்ஞான கோசத்தில் உழைக்கவேண்டும். இதைத்தன் அகந்தையால் மனிதன் செய்யமுடிவதில்லை. இப்போதுதான் மனிதன் தனக்கு எட்டாத ஒரு பொருளுணர்ச்சியை யடைகிறான்; விசாரத் தால் உண்மையைப் பெறுகிறான்; தான் என்பதை மறக் கிறான். "எனதெனு தென்னல் இடராகும்; என்றும்," "அவனது வென்ன, அருள்" என்றும் உணருகிறான்; எண்ணங்களையும் சங்கற்பங்களையும் ஒடுக்குகிறான். "கடவுட் கீர் துன்னைக் களி" என்ற நம்பிக்கையும் உறுதியும் எய்துகிறான்; "என்செய லாவ தியாதொன்று மில்லை; எல்லாம் உன் செயல்" என்று உணருகிறான்! அந்தக் கரண சுத்தி யடைந்தால்தான் இந்நிலை வரும். சித்தம், மனம், அகந்தை இவற்றைப் புத்தியால் பகுத்

தறிந் தடக்கி, சேட்டை யொடுங்கினுல்தான் சித்த சுத்தி யேற்படும். அந்தச் சுத்தமே கடவுள் நிலை. அதுவே மனிதனை பந்தத்தினின்று சுதந்திரப்படுத்தும்; கடவுளுடன் சமரசப்படுத்தும். தானும் அவனுகப் பிறவும் அவனுகக் காணும் உண்மைச் சமத்துவம் ஏற்படும்."

"ஆழ்ந்த உறுதியும், அடைக்கலமும், உயர்ந்த அறிவும், கீழியல்புகளினின்று முற்றும் விடுதலையும், சித்த சுத்தியும் பெற்ருல்தான் அவனருட்கண் உண்டாம். அதனுல் அவனுடைய காட்சிகளையும், திருவிளையாடல் களையும் காணலாம்."

IV நால்வகைப் புலமை — வேறு.

மேலே சொல்லப்பட்ட நால்வகைப் புலமைக்கும் வேருக நான்குவிதமான புலமை சாற்றப்படுதலினுலே இங்கு நால்வகைப் புலமை — வேறு: என்ற இத்தலைப்பு வரலாயிற்று. இந்நால்வகையும் 1. தேட்டுப் புலமை 2. பாட்டுப் புலமை 3. ஆட்டுப் புலமை 4. வீட்டுப் புலமை எனப்படும். இவற்றுள் :—

(1) தேட்டுப் புலமை: என்பது பொருட் செல்வந் தேடி இகபரவின்பங்கள் நுகர்ந்த புலமையினையும், அருட் செல்வந்தேடிப் பேரின்பம் நுகர்ந்த புலமையினையும் குறிக்கும். பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் கோவை பாடி அரங்கேற்றிப் பாடலொன்றுக்கு ஒரு தேங்காயளவான பொன்னைப் பரிசிலாகப் பெற்றனர். அவ்வளவு பொன்னையும் வறுமையாளருக்கு வழங்கின

படியால் மிடிப்பிணி மீண்டுவந்து தன்னை வருத்திய போழ்தும் புலவர் அந்த நோய்க்கு மனங்குழைந்திலர்; கந்தசேய்க்கு (கந்தக் கடவுளுக்கு) மனங்குழைந்தனர். தனக்கெனச் சிறிதும் வைக்காமல் பரிசிற் பொன் அத்தனையும் வறிஞருக்கிட்டுப் பெரும்புகழ் படைத்தனர் கவிஞர். தஞ்சைவாணன் தன்மீது பாடப்பட்ட கோவைப் பனுவலுக்கு விலையாகக் கொடுத்ததோர் பெரிதல்ல; புலவர் அவ்வாயிரக்கணக்கான பொன்னையும் தனக்கெனப் பயன்படுத்தாமல் முழுதும் பிறர் வறுமை நீங்கி இன்புறற் பொருட்டு வழங்கினமையே பெரிதாகும். இங்ஙனம் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்துவந்த பொய்யா மொழியார் கடவுளருளால் மறைந்துபோன தெய்வச் சங்கப் பலகையை மேலே கிளம்பிவரச் செய்தல் முதலிய அற்புத வாக்குச் சித்திகள் காட்டி முன்னிலும் பன்மடங்கு அழியாக் கீர்த்தியை இந்நிலவுலகினிலே நாட்டிய பின்னர் பேரின்ப வீட்டினுட் புக்குய்ந்தனர். இந்நிகழ்ச்சியினலே அருளில்லாதவர் பொருள் மிகுதியாகப் பெற்றவராயினும் தம் செல்வ நிலைக்கேற்றபடி கொடுத்துப் புகழ்பெற மாட்டார்கள் எனவும், தெய்வத் திருவருள் பெற்ற பெரியோர் பொருள் போதியவளவு பெற்றவராயினும் தம் செல்வ நிலைக்கு மீறியே வறியார் போதுமென்று சொல்லுமட்டும் கொடை வழங்கிப் புகழுடம்பிலே நீடுவர் எனவும் அறிக. இந்நிலை பொய்யாமொழிப் புலவர் போன்று தெருட்சி பழுத்த சிந்தையாளர்க்கன்றிச் செல்வப் பொருளே பொருளென மகிழும் மருளாளர்க்கு விளங்கவும் மாட்டாது; வாய்க்கவும் மாட்டாதென்க. அக்கூறிய பொய்யாமொழிப் புலவர் செயல்களால்

பொருட் செல்வத்தேட்டும் அருட் செல்வத்தேட்டும் முறையே புகழின்ப வாழ்க்கையும் பேரின்ப வாழ்க்கையும் அடைதற்குக் கருவிகளாகக் கொண்டு இயன்ற மட்டும் ஈந்துவந்து வாழ்தலே தேட்டுப் புலமையின் பயனுமெனத் தெளிக.

சுந்தரர் தேட்டும் சம்பந்தர் தேட்டும்: சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம் பாடிப் பாடிப் பொருள் பெற்றனர்; இல்லறம் இனிது நடாத்தி இன்புற்றனர்; இம்மையின்பமுடன் மறுமையின்பமும் நன்குற்றனர். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் தமது தந்தையின் வேள்வியின் பொருட்டுத் தேவாரம்பாடி உலவாக்கிழிபெற்றுதவினர். அவ்வேள்வி உலக நன்மையின் பொருட்டுச் செய்யப்பட்டதால் அதற்குதவிய பொன்னும் உலக நன்மைக்கே உதவிய பொன்னுகும். சுந்தரர் புலமை சிவகவியரங்கேற்றத்தை முன்னிட்டுத் திருக்கைலைக்கு அன்னவரைக் கூட்டுடன் அழைத்துச்சென்று பேரின்பப் பெருவாழ்க்கையிலே அமர்த்தியது. சம்பந்தர் தமது புலமையினுல் திடுமெனத் தோன்றி யூன்றிப் பரவி முழங்கி யோங்கிய அருட்பெருஞ் சோதியினுள்ளே வீடுபேற்று விருப்பினர் அனைவோரையும் (வீட்டுக்கு விலக்காயிருந்த மாதொருத்தியுட்பட) கலப்பித்தருளினர். அச்சமயத்திற்றனே திருமணக் கோலத்துடன் தமது மனைவியாரும் உடன்வரக் கொண்டு அத்தனிப் பெருங் கருணைச் சோதியினுள்ளே புக்குய்ந்தனர். இந்நிகழ்ச்சிகளால் சுந்தரரும் சம்பந்தரும் பொன்னிலும் பெண்ணிலும் சார்ந்தும் பற்றற்றுயர்ந்துய்ந்த தெய்விகத் தேட்டுப் புலமைமணிகள் ஆயினமை மலையிலக்காக விளங்குகின்றதன்றே?

(2) பாட்டுப் புலமை: கேட்டுப் புலமையைக் காட்டிலும் பாட்டுப் புலமை சிறந்தது. பாட்டுப் புலமை என்பது இனிமை ஊற்றெடுத்தோடும் தெய்விகப் பாக்களினால் புத்திலக்கிய வளர்ச்சிக்கும் அருள் வளர்ச்சிக்கும் உதவும் புலமையாகும். இவ்வகையில் இந்திய கவிக்குயில் எனப் புகழ்பெற்று மிளிர்ந்த சரோஜினி தேவியாரும், கீதாஞ்சலி பாடி நோபல் பரிசு பெற்றுயர்ந்த வங்கக் கவிச்சிங்கமும் உலக மகா கவியுமாகிய இரவீந்திரநாத தாக்கூரும், செந்தமிழ்த் தேசிய கீதக் கவிமணியாகிய சுப்பிரமணிய பாரதியாரும் செழுந்தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறட் பெரும் பனுவலை உலகினுக்கே தந்தருளிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரும் ஈண்டு நினைவுகூர்தற்கு உரியராவார்கள். கம்பர் இராமாயணத்தைக் காப்பியமாகத் தந்ததும், திருமூலர் திருமந்திரத்தை வேதாகம சாரமாகத் தந்ததும் சேக்கிழார் பெரிய புராணத்தைச் சிவனடியாரின் மாட்சியாகத் தந்ததும் அன்ன பிறவும் பாட்டுப் புலமையின் விழுப் பயனன்றோ? புரவலர் போற்றும் அப்புலவர் திலகங்கள் தத்தம் பாட்டுப் புலமையினுல் பொன்னும் புகழும் பட்டமும் பதவியும் வீடுபேறும் ஒருமித்தோ தனித்தோ பெற்று வாழ்ந்த மாண்பினராவர்.

மற்றும், அருணகிரியார் யமகத்தொடையாகக் கந்தரந்தாதி பாடுதலும், வில்லிபுத்தூரார் அவ்வப்பொழுதே அவ்வரும்பெறற் பனுவலுக்கு உரைகூறி வந்தனர். பாதி கூறி மேற்பிரபந்தம் நடக்கையில் "திதத்தத்தத் தித்த" எனத் துவங்கி முடிந்த பாட்டுக்கு உரைகூற இயலாது வில்லிபுத்தூரார் தோல்வியுற்றனர். அருணகிரியார் அச்

செய்யுளுக்கு உரைகூறி முடித்தபின் மேற்கொண்டு செய்யுட்களையும் அவற்றிற்கு அரிய உரையினையும் கூறிப் பிரபந்தத்தை முடித்தருளினர். தோற்ற புலவரின் காதைக் கொய்யாமல் அருளினால் மன்னித்து விடுத்துத் தாம் பெற்றுக்கொண்ட வில்லிபுத்தூராரின் வாளினைப் பிரபுட தேவ மன்னவனிடங் கொடுத்துவிட்டு, வில்லிபுத்தூராரை நோக்கி, தன்னினமாகிய புலவருக்கு இனிக் காது கொய் யுங் கொடுமை செய்யவொண்ணாதென அறிவுரையும் அருளுரையும் பகர்ந்தனுப்பினர். அருணகிரியார் பாடி யருளிய யமகவந்தாதி, அதற்கு வில்லிபுத்தூராரும் அருணகிரி யாரும் முன்பின்னாக முறையே வகுத்தருளிய உரை ஆக விரண்டும் அருட்பெரும் பண்பினவே.

இதுவன்றி, அருணகிரிநாதர் சம்பந்தாண்டானுடன் பேசிய சபதத்தின்படி தமது (சந்தப்)பாட்டுப் புலமை யினால் கந்தக் கடவுளை நோக்கி, "ப்ரபுடதேவ மாராசன் உளமுமாட நீயாடி வரவேணும்" என வேண்டித் துதித் தனர். அக்கடவுளும் அவ்வாறே வந்து திருக்காட்சி வழங்கினர். அருணகிரியார் காட்டுதலும், வேந்தன் காணற்கரிய அற்புத தெய்வக் காட்சிகண்டு சொல் லொணாக் கழிபேரின்பம் அடைந்தனன். இச்செய்தி களால் பாட்டுப் புலமையின் பயன் அன்பும் அருளும் பெற்றுப் புலவர்கள், தமக்கும் பிறர்க்கும் அவ்விரண்டை யும் அனுகூலப்படுத்திக்கொண்டு இகபரம் இரண்டினிலும் இன்புற்று வாழ்தலேயாம் என்க.

இன்னுமொன்று கூறுவல் கேண்மோ. தேவரமிழ் தினும் தித்தித்திருப்பதாகிய நறுந்தமிழ்ப் பாட்டுப் புலமை யினாற் கிடைத்த அரும்பெருந் தேட்டுப் பொருள்களில்

நிராசையுற்ற குமரகுருபர அடிகள் செயலைக் காண்க. செந்தமிழ் இராசதானியாக விளங்கிய மதுராபுரியில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேற்றி முடிந்தவுடன் திருமலை நாயக்கர் பற்பல நற்பெரும் பரிசுகள் உதவினர். அப்பரிசுகள் அத்தனையும் தமக்கெனக் கொள்ளாமல் குமரகுருபரர், தமது குரு திருமுன் சேர்ப்பிக்கக் கட்டளையிட்டுச் சோழ மண்டலத்திலுள்ள வேளூருக்குச் சென்றனர். இந்நிகழ்ச்சியினால் அடிகளார் உள்ளத்திலுள்ள அடிமைத் திறத்தின் தன்மையும் நிராசையின் தன்மையும் துலங்குவது காண்க.

(3) ஆட்டுப் புலமை: பாட்டுப் புலமைக்கு ஆட்டுப் புலமை உயர்தரத்தினது. வாக்குச் சித்திப் புலமை என்பதுதான் ஆட்டுப் புலமை என்பது. ஒண்டமிழ் முனியரசாகிய அகத்தியர், வாக்கினால் அரிய பெரிய பற்பல அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளார். ஔவைப் பிராட்டியார் அங்கவை சிங்கவை என்னும் பெண்களுக்குத் திருமணம் செய்விக்கக் கருதி விநாயகக் கடவுளை நேரில் வரவழைத்ததும், அவரைக்கொண்டு தமது அழைப்புப் பாடல்களை மணவோலையாக எழுதுவித்ததும், காட்டிலுள்ள பூதத்தை யழைத்து அதன் மூலம் ஐம்பத்தாறு தேயத்தரையர்களுக்கும் திருமண அழைப்பிதழ் வழங்கியதும், திருமணத்திற்கு வந்த விருந்தினர்களுக்கு ஆற்றைப் பாலாகவும், தயிராகவும், நெய்யாகவும் பெருகச் செய்தலாதியவற்றால் விருந்தினரைப் பசியாற்றி உபசரித்ததும்; சேர சோழ பாண்டிய மன்னர் மூவரும் வேண்டியபடியே நுங்குப் பருவமல்லாத அத்திருமணக் காலத்திலே அங்குலர்ந்து கிடந்த பனைமரத் துண்டத்தைப் "பங்குக்கு

மூன்று பழந்தரச்" செய்ததும் பிறவும், ஆட்டுப் புலமையின் கீட்டுப் பெருமையினுல் நிகழ்ந்த செயல்களாவன. வசைகவி யாண்டானைப்போல் வாக்குச் சித்தி (ஆட்டுப் புலமையினுல்) ப் புலமையினுல் பல்லோரைக் கொல்லாமல் ஔவைப் பிராட்டியாரைப்போல் எல்லோரையும் நல் வழிப்படுத்தி உய்வித்தலே மேலென அறிதற்பாலது. மேலும், புலவர் பெருமக்கள் தத்தம் ஆட்டுப் புலமையினுல் தாமும் உலகினரும் இகபர இன்பங்களெய்தி உய்தி கூடச் செய்தலே சிறப்புக் கடனென்க.

(4) வீட்டுப் புலமை: பேரின்ப வீடடையச் செய்விக்கும் புலமை வீட்டுப் புலமையாகும். இப்புலமை பிறப் பிறப் பறுத்தலினுல் ஆட்டுப் புலமையினும் உயரியது. 'பரலோகத்தில் இந்திரபதம் வரையுள்ளவை சொர்க்க முத்தி யென்றும், சாலோக முதற் சாரூபம் வரையுள்ளவை பத முத்தி யென்றும் இவ்வுலகத்திற்றுனே வெளி ஒளி விக்கிரகம் என்னும் மூன்றில் ஒன்றில் தூலசரீரத்துடன் கலப்பது ஐக்க முத்தி யென்றும் பெரியோர்கள் சொல்வார்கள்' என்பது சத்திய வாசகம். இக்கருத்துப்பற்றியே "கல்வி ஞானங் கானசுர ஞான, முதற்பல நிகழினு மூவா முதலொடு, கலக்குமெஞ் ஞானங் கடுப்ப தின்றே" எனக் கிளந்து கூறுவதாகும் சத்திய சூத்திரம். அல்லாமாப் பிரபுவும், மாணிக்கவாசகரும் வெளியிற் கலந்தனர். சம்பந்தரும் சடகோபரும் ஒளியிற் கலந்தனர். அப்பரடிகளும் திருப்பாணுழ்வாரும் தத்தம் வழிபடு கடவுளராகிய விக்கிரகத்திற் கலந்தனர். பிற்காலத்தில் பரவெளியிற் கலந்துய்ந்த புலவர் சிகாமணிகள் கீர்த்தனம் பாடிய முத்துத் தாண்டவரும் திருவருட்பாப் பாடிய இராம

லிங்கரும் ஆவார்கள். புலமையின் முற்ற முடிந்த முழுப் பயன் திரும்பாத வீட்டினிற்போய்ச் சேருவதேயாகும். "பெத்தான்சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்தி யளிக்கை முறை" என்ற சிவபெருமானது திருப் பாட்டும், அதன்படி நிகழ்ந்த நிகழ்ச்சியும் வீட்டுப் புலமைக்கு விளக்கனையன. மேற்காட்டப்பெற்ற அரும் பெருஞ் செயல்கள் வீட்டுப் புலமைப் பயனுக்குச் செவ்விய எடுத்துக்காட்டுகள் ஆவனவல்லவோ?

V. அறுவகைப் புலமை.

இப்புலமை எழுத்துப் புலமை வழுத்துப் புலமை, பேச்சுப் புலமை, மூச்சுப் புலமை, அறிவுப் புலமை, செறிவுப் புலமை என ஆறு வகைப்படும். இவற்றுள்:—

(1) எழுத்துப் புலமை: எழுத்துப் புலமை யென்பது இங்கு நூலெழுதும் புலமையினையும் உரை எழுதும் புலமையினையும் குறிக்கும். நூலெழுதும் புலமைக்கு முற்காலப் புலவர்களில் அகத்தியமாமுனிவர், தொல்காப்பியர் நக்கீரர் முதலியோர்களையும், இடைக்காலப் புலவர்களில் திருவள்ளுவர், ஔவையார், திருமூலர், சைவ நால்வர், சந்தான குரவர் முதலியோர்களையும், பிற்காலப் புலவர்களில் அருணகிரியார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், திருவருட் பிரகாச வள்ளலாராகிய இராமலிங்கர், திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகள், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், சாந்தலிங்க சுவாமிகள், குமாரதேவர் முதலியோர்களையும் எடுத்துக் காட்டலாம். உரை வரையும் புலமைக்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர்,

பரிமேலழகர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர், பண்டித நாவல ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலியோர்களையும் உரை நடை நூல் இயற்றிய ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள், செல்வகேசவராய முதலியா ரவர்கள் M. A., L. T., யோகி சுத்தானந்த பாரதியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தூய தனிச் செந்தமிழ் நடை நூல்கள் ஆக்குவதில் தலைசிறந்த மறைத் திரு. மறைமலையடிகளார் முதலியோர்களையும் எடுத்துக் காட்டத்தகும். இப்புலவர் கோமக்கள் நல்ல எழுத்துப் புலமையிலே கைதேர்ந்தவர்கள். இவர்கள் தீட்டியுதவிய நூல்கள் இகபர வீட்டின்ப நறுஞ்சாற்றுப் பிழிவு களாகும்.

(**2**) வழுத்துப் புலமை: இப்புலமை எழுத்துப் புலமையிலும் உயர்ந்தது. நூலெழுதுவதிலும் சுய கவி பாடும் புலமை பெரியது. வழுத்துப் புலமை யென்பது தெய்வத்தை நோக்கி நம்பியிறைஞ்சித் துதிபாடும் புலமையைக் குறிக்கும். இத்துறையிற் பேர்போனவர்கள் தேவாரம் பாடிய மூவர், திருவாசகம் திருக்கோவையும் பாடிய மாணிக்கவாசகர், திவ்யப் பிரபந்தங்கள் பாடிய பத்தாழ்வார், காரைக்காலம்மையார், ஒளவையார், நக்கீரர், திருப்புகழ் திருவகுப்பும் பாடிய அருணகிரியார், துறைமங்கலம் சிவப்பிரகாசர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், வடலூர் இராமலிங்க சுவாமிகள், திருவா மாத்தூர் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலியோராவர். இச்சான்றோர்கள் வழுத்துப் புலமை யினால் தத்தம் வழிபடு கடவுளரின் திருவருட் பயன்

பெற்றுய்ந்தவராவர். வழுத்துப் பாக்களில் திருவாசகமும், குட்டித் திருவாசகம் என்ற பேர்வாங்கிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தாந்தி, கட்டளைக் கலித்துறையந்தாதி, வெண்பாவந்தாதி என்ற முப்பிரபந்தங்களும், திருவருட் பாவும் கல்நெஞ்சையும் கரைக்கும் தன்மையிலும் வன்மை யிலும் நிகரற்று விளங்குவன.

(3) பேச்சுப் புலமை: இப்புலமை வழுத்துப் புலமை யினும் பெரியது. எழுதுவதிலும் கேட்டார்ப் பிணிக்குந் தன்மையோடு கூடிய பேச்சுப் பேசுதல் அரியது. இது உலகியல் அருளியல் என இருவகைப்படும். அவற்றுள் உலகியற் பேச்சுப் புலமையில் நல்ல பேரெடுத்தவர்கள் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி ஐயர், சர். C. P. இராமசாமி ஐயர், சர். A. இராமசாமி முதலியார், சர். R. K. சண்முகம் செட்டியார், வாசாலகப் பெரும் புலவி சரோஜினி தேவி முதலியோராவர். இன்னவர்தம் சொற் பொழிவாற்றல் தலைசிறந்தது. இவர்கள் தம் சொற் பெருக்கால் உலக மக்களின் மனதைக் கவர்தலாயினர். அருளியற் பேச்சுத் துறையில் விளங்கியவர்களில் வடலூர் இராமலிங்க அடிகள், திருவாமாத்தூர் தண்டபாணி அடிகள், திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் இம்மூவரும் தலைசிறந்தவர்கள். ஐந்தவித்த ஆற்றலினோரான இவ்வான்றோர்கள் ஆடாமல், அசையாமல், அபிநயிக்காமல், இடையீடில்லாமல் பல சமயங்களிலும், பல மணிநேரங்களிலும், அல்லும் பகலுங் கூட ஆற்றியுள்ள சொற்பொழிவுகளைக் கேட்டின்புற்ற நல்வினையாளர்கள் பற்பலர் பற்பலர் ஆவார்கள். இம் முப்பெரும் பேச்சுப் புலமைப் புரவலர்களும் சமரச சுத்த

சன்மார்க்க நோக்கினரும் வாக்கினரும் போக்கினரும் தேக்கினரும் ஆகலின் எம்மதத்தினரும் சம்மதத்தினராய் இவர்களின் சொற்பெருக்கிலே ஈடுபட்டீடுபட்டுப் பெரும் பயன் அடைதலாயினர். இம்மூவருள் பிற்பட்டவரான ஞானியாரடிகள் சொற் பொழிவுகளைப் பன்முறையும் நேரிற் கேட்ட வாய்ப்பினருள் அளவிலா இன்பமடையா தவர் ஒருவரேனும் இலராவர். இப்பெரியாரைத் தமிழுலகம் பிரசங்கமூர்த்தியெனக் கொண்டாடி வரலா யிற்று.

> "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
> இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்று திருக்குறள் சொல்வன்மையைப்பற்றி புகழ்தலா யிற்று.

சோல்வன்மை விளக்கம்: 1. கசடறக் கற்றுணர்ந் தோர் தாம் அரிதினுணர்ந்த மெய்ப் பொருள்களைக் கேட் போர் மனங்கொள்ளுமாறு எளியனவாகச் சொல்லுதல் 2. பயனுள்ள சொற்களைச் சுருக்கமும் விளக்கமும் இனிமையும் பொதுள வழுவின்றிச் சொல்லுதல் 3. தமக் கும் கேட்போர்க்கும் உள்ள தகுதி வேறுபாடுகளை அறிந்து அவற்றிற் கேற்பச் சொல்லுதல் 4. முன்னும் பின்னும் சொல்வனவற்றை நன்கறிந்து நிரல்படக் கோத்துச் சொல்லுதல் 5. எடுத்துக்கொண்ட பொருளுக் கேற்ப எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேறுபாடமை யவும், மெய்ப்பாடு தோன்றவும் சொல்லுதல் 6. நிமிர்ந்த நிலையும், மலர்ந்த முகமும், தெளிந்த குரலும் உடையராய்த் தடுமாற்றமின்றிச் சொல்லுதல். 7. எம்மதத்தினரும்,

எச்சமயத்தினரும், எத்துறையினரும் கொண்டாடும் வண்ணம் பொதுமைப் பண்புகள் பொங்கி வழிந்தோடும் படியும், இனிமையூறித் ததும்பும்படியும் சொல்லுதல்: முதலிய இப்படிப்பட்ட பண்புகளின் தொகுதியே சொல் வன்மை எனப்படும். இங்ஙனம் சொல்லின், கேட்போர் பின்னும் பின்னும் விரும்புவர்; விரும்பி யேற்றுக் கொள்வர்; ஏற்றுக்கொண்டு அவ்வழி ஒழுக முயல்வர்.

சொல்வன்மை என்பது சொற் பெருக்காற்றுநர்க்கு மட்டுமன்றி நூல் கற்பிக்கும் ஆசிரியர்க்கும், முறை மன்றத்தில் வாது செய்யும் வழக்குரைஞர்கட்டும், அமைச்சர், தூதர் முதலினோர்க்கும் இன்றியமையாத ஒரு செல்வமன்னது. இக்கூறிய பண்புகள் தோய்ந்த நூல் களும் உரைகளுமே பொன்றியழியாமல் என்றும் நின்று அவற்றுட் பயில்வார்க்கு அன்பும் இன்பும் அறனும் திறனும் பயப்பனவாம். இச்சொல்வன்மையும் வளமை மிக்க அரும்பெறற் செல்வங்களில் ஒன்றெனற்கு, "சொல்வளம் மல்லல் வெறுக்கை" என்னுங் குமரகுருபர அடிகள் திருவாக்கே சான்றாகும். இதனாலன்றே "ஆர்த்த சபை நூற்றொருவர்" என ஔவைப்பிராட்டியாரும் இதன் அருமை தோன்றப் புகழலாயினர். இதனால் பேச்சாளர் நூற்றுவருள் அவையினரை அதாவது வினவுநரைத் தம் பேச்சினால் கட்டுப்படுத்த வல்லவர் ஒருவர்தான் அருமை யாக வாய்ப்பர் என அறியலாகும். இவ்வகையில் தலை சிறந்த பிற்காலத்தவர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளும் அவர்களின் மாணவ மணிகளிற் சிறந்தவரும் அடுக்குமொழிப் பேச்சில் வல்லுநருமான குமாரசாமிப்

பிள்ளையவர்களுமாவர். இவ்விரு பெரியாரது பிரிவும் தமிழ்ச் சொற்பொழிவுலகினுக்கு ஈடுகொணாத பேரிழப்பாகும். தற்போழ்து மிளிரும் பேச்சுப் புலவருள் "திருப்புகழமிர்தம்" ஆசிரியர் கிருபானந்த வாரியாரும், முத்தமிழ்ப் பெருஞ் சொற்கொண்டல் புரிசை முருகேச முதலியாரும் "தொண்டன்" பத்திரிகையாசிரியர் ஆறுமுக நாவலரும், திருவாசகமணி தஞ்சை கே. எம். பாலசுப்பிரமணியமும் தலைசிறந்தவர்களாவர்.

(4) மூச்சுப் புலமை: பேச்சையும் மூச்சையும் அடக்கியாளவல்லது மூச்சுப் புலமையாதலால், பேச்சுப் புலமையிலும் பெரியது மூச்சுப் புலமையே மூச்சையடக்குதல் யோகு சாதனையாகும்; மனத்தையடக்குதல் யோகு சாதித்தலாகும். எனவே யோகு சாத்தியத்திற்கு மூச்சையடக்குதல் ஒரு கருவியாமெனத்தகும். யோகு சாதனைகளில் பழம் பிறவிகளிலே தேர்ந்த புலவர்க்கன்றி ஏனையோர்க்கு இம்முயற்சி எளிதிற் கைகூடுதல் அரிதாகும். சாந்தலிங்க சுவாமிகள் இதன் அருமை தோன்றத் தாம் அருளிய வைராக்கிய தீபம் ருக-வது கவியில்:

"உள்ளதுண் டாமற் றில்லதின் றெனவெண் காடரோ
திடுதலி னுறுமூழ், தள்ளொணா மையினெவ் விதத்தினு நுழைந்து
தவம்புரி காலையூனுயிரை, விள்ளல்செய் திடினு ஞானசா தகனுண்
மேவுமவ்-வாதனை யொடும்போய்த் தெள்ளிய போக மூண்டுமீண்
டடைவன் சிவமதுற் பவமதொன் றிரண்டில்"

எனக் கிளர்ந்துரைத்தல் காண்க. இத்துடன் பின்வரும் கவிதையை ஒப்பு நோக்குக.

தண்டபாணி சுவாமிகள்—நானிலைச் சதகம் ருடு-ஆம் செய்யுள்.

"மேனிலையி னின்றவன்கீழ் நிலையோர் தம்மை
வெறுத்திகழக் கூடாது மெய்ம்மை யாயே
தானியன்ற மட்டில்வழி படலு மாகுந்
தகுகிரியை முடிவினின்று சரீரம் விட்டால்
ஆனிபிலா யோகநிலைக் கருக னுவான்
அவன்சரியை கிரியையினு மதுவூ டாடும்
வானிடத்திற் சாமீப பதவி நீங்கி
வந்தவனு மவனளவின் மகிமை யோனே."

இக்கருத்தை அறிவுறுத்தும் அருணகிரிநாத சுவாமிகள்

"காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே"

என்ற கந்தரலங்காரச் செய்யுளை வெகு அழகாகப் பாடியுள்ளவாற்றை உய்த்துணர்க. இக்கவிதையால் ஆசிரியர் யோக சாத்தியத்தின் கஷ்ட சாத்தியத்தையும், அன்பு நெறியின் சுலப சாத்தியத்தையும் இதனுல் வாய்க்கும் வீடுபேருகிய நிகரற்ற பயனையும் அழுத்தமாகக் கூறியிருத்தல் காண்மினே. மூக்கின் வழியே வெளியே செல்லும் காற்றைப் பிடித்து அதாவது இரேசித்தும் பூரித்தும் கும்பித்தும் கட்டிவைத்துப் பயிலும் அடயோக சாதனத்தினுலே இளம் பக்குவிகளில் சாத்திய நிலையடையாதவர் பலராவர்; சாத்திய நிலைக்கேறிச் சென்றுகொண்டிருப்பவர்களில் எதிர்பாராதவகையில் அம்மூச்சுத் திடீரென வயிற்றையோ மண்டையோட்டையோ பிளந்து கொண்டு வெளியேறிச் சென்றதனுல் இறந்துபோயினர் ஒரு சிலராவர்; அன்னுருள், தப்பியோடும் அம்மூச்சு

திடீரென மூளையைத் தாக்கியதனால் பித்துப் பிடித்து வாணாளை வீணாளாக்கியவரும் ஓரிருவராவர். பிற்கூறிய வகையில் எனதண்டையூரினரும் உறவினரும் நல்லறிஞரு மான ஒருவரை நான் நேரில் அறிவேன். அவர் அவ் வகையில் உன்மத்தராய்க் காலங்கழித்து வருதலையும் அன்னவர் பெண்டுபிள்ளைகளின் அனுதாரவையும் நினைக்குந்தோறும் ஒரொருகால் காணுந்தோறும் அகமிக வருந்துதலுண்டு. ஆகலின், சத்திய சூத்திரத்தார்— உபாசனை—சூத்திரம் ௩-ல்;

"தெய்வசிந் தனையே திருக்கிளர் தவமாம்
எழுத்தை நாட லியம்பன்மட் டாதல்
காற்றொடு முரண லாகிய கடையே".

எனக் கருணையினால் அறிவுறுத்தியிருத்தலும் ஓர்தற்பாற்றே இக்கருத்துடன் நானிலைச் சதகம் ௩கூ-ஆம் செய்யுளின் ஈற்றடியாகிய

"பாரதனி லடையோகஞ் சாதித் தூறு
பட்டவர்க ளளப்பரும்பற் பலபே ருண்டே"

என்ற இதனை ஒப்பு நோக்குக. ஆனபடியினாலே, கீழ் வரும் அறிவுரைகளும் சிந்திக்கத்தக்கன.

நானிலைச் சதகம் ௩எ-ஆம் செய்யுளின் பிற்பகுதி

"மூலமதி னின்றெழும்பும் மூச்சைப் பற்றி
மூயலுகின்ற யோகமெல்லா முரட்டுத் தன்மை
நீலகண்ட னாதிமுதலா மூர்த்தத் தொன்றை
நினைத்தசையா திருப்பதுநன் னிலையா மன்றே"

நானிலைச் சதகம் ருங-வது செய்யுள்

அருந்ததியா தியமடவார் வசிட்ட னாதி
யவர்தொழும்பி லமைந்திடல்போ லாசான்

[றெண்டில்

பொருந்தியவர்க் கெய்தரிய பயனின் றேனும்
புந்தியமை வரிதாமாற் போதத் துண்மை
திருந்தவுபா சனைபுரித லலமா மன்னோன்
றிருவுருவை மூர்த்தியொன்றைச் சிந்தி யாமல்
வருந்திவெளி வாசியெழுத் தாதி தொட்டு
மாழ்கவொண்ணு தலைசடமாம் வசனி யாவே"

மற்றும் வரும் திருப்புகழ்ப் பகுதியும் ஒப்பு நோக்கலாம்:

"காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
*காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காய மொறுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சீவ னொடுக்கம் பூத வொடுக்கந்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண வெனக்குன்
சீதள பத்மந் தருவாயே."

இவ்வண்ணம் சொற்றுளதனாலே யோகு புரிதல் கூடாதென்பது கருத்தெனக் கொள்ளற்க. கனிந்த பக்குவத்தினருக்கு மட்டும் மூச்சுப் புலமை மிக எளிதிற் கைவரப்பெறத் தக்கதென்பது கருத்தாகும். மூச்சுப் புலமையிற் பழுத்த பிற்காலத்தவர் திருவாரூர் தட்சிணா மூர்த்தி சுவாமிகளும் திருவண்ணாமலை இரமணரிஷிகளு மாவர். முற்கால மூச்சுப் புலவருள் திருமூல நாயனார், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், தாயுமானவர் முதலியோராவர். இவர்களுக்குள் திருமூலர் ஆண்டுதோறும் இடையறாமல் யோகு புரிந்து அவ்வாண்டின் இறுதியிலே கண்விழித்தவுடன் ஒவ்வொரு திருப்பாடல் பாடியருளினார். இவ்வாறாக மூவாயிரம் ஆண்டுகளில் மூவாயிரம் திருமந்திரத் திருப்பாடல்களை வேதாந்த சித்தாந்த சமரச சாரமாகவும் மெய்ஞ்ஞான

மோன நெறிமுறைகளாகவும், வடிகட்டிய அநுபூதிப் பேரறிவுக் களஞ்சியமாகவும் பாடியுதவியுள்ளார். தாயுமான அடிகள் ஆழ்ந்த நிட்டையில் அழுந்தியழுந்திக் கைவரப்பெற்ற சிவாநுபூதியாகத் தெவிட்டாத தீஞ் சுவைச் செழுந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றை நம்மனோர் உய்யும் வண்ணம் நன்கொடையாக வழங்கியுள்ளார். இராமகிருஷ்ண பரமஹம்சர் சரியை, கிரியை, யோகம், ஞானம், மோனம், நிருவிகற்ப சமாதி இவற்றையும், புத்தி, சத்தி, பத்தி, சித்தி, முத்தி இவற்றைப்பற்றியும் யாவரும் எளிதில் உணர்ந்து இன்புறும்பொருட்டுத் தக்க உதாரணங்களினால் உற்சாகப்படுத்தியும், திருட்டாந்தங் களினால் திருத்திப்படுத்தியும் செழும் பசும்பொன்னினும் மிக அதிகமாக மாற்றேறிய உபதேசத் திருமொழிகளால் விளக்கிக் காட்டியிருத்தல் தமது மெய்ம்மறந்த அழுந்திய யோக (சமாதி) நிலையிலேவாய்த்த அநுபூதியுண்மை களினால் என்பது அறிஞரறிந்த உண்மையாகும். அவரது மாணவமணியாகிய விவேகானந்தரது அரிய நிட்டையை அக்குருமூர்த்தியே வலிதிற் கலைத்து அவரைக்கொண்டு இந்துமதத்தின் அடிப்படையான உண்மைக் கொள்கை களைக் கிழக்குலகமும் மேற்குலகமும் ஒருங்கே அறிந் துய்யும்படி செய்தது எதனால்? நிட்டையின் அநுபூதி வல்லபத்தினாலெனச் சொல்லவும் வேண்டுமா? திருவாரூர் யோக தட்சிணாமூர்த்தி சுவாமிகள் பிறவியிலேயே யோகி யாக விளங்கினர். அவ்வியோகாநுபூதி வல்லபத்தினால் பற்பல பக்குவர்க்கும் தக்கபடி பத்தி சித்தி முத்தி நெறிகளையும், யோக ஞான மோனங்களையும், அறம் பொருளின்ப நெறிமுறைகளையும் தம் வாழ்நாட்களில் அவ்வப்போழ்து வடித்தும் பிடித்தும், இடித்தும், நடித்தும்

காட்டி அன்பர்களேயன்றி இரண்டொரு வன்பர்களையும் ஈடேற்றியருளியுள்ளனரல்லரோ? எதனால் அது? அவ் வடிகளாரது தியாக யோக ஞான மோன அநுபூதிச் செல்வத்தினாலேதான். இதுகாறும் விளக்கியவாற்றால் மூச்சுப் புலமையானது இளம் பக்குவர்க்கு அரியதெனவும் பெரியதெனவும் முதிர் பக்குவர்க்கு எளியதெனவும் உரிய தெனவும், யோக வல்லபம் இம்மை மறுமை எம்மை வாழ்க்கையையும் இன்பமயம் ஆக்கத்தக்கதெனவும் தெளியத்தக்கதென்க.

(5) அறிவுப் புலமை: உயிர் கடவுளோடு இரண் டறக்கலந்து நுகரும் கலவியின்ப நுகர்ச்சியை அறிந் திருத்தலே அறிவுப் புலமையாகும். மூச்சுப் புலமை பேரின்ப சாதனமும் அறிவுப் புலமை பேரின்ப சாத் தியமும் ஆனபடியினாலே மூச்சுப் புலமையைவிட அறிவுப் புலமையே மேலானது. இதன் அருமையை நோக்கியே "அறிவை யறிவது பொருள்" எனவும்; "நீவேறெனா திருக்க நான்வேறெனாதிருக்க நேரான ஞானமுத்தி தரவேணும்" எனவும்; அருணகிரியார் திருப்புகழ் முழக்குகின்றது. "அறிவுடையார் எல்லா முடையார்' எனத் திருக்குறள் கட்டுரைக்கின்றது. இவ்வுண்மை நிலையை வெறும் கலையறிவினால் அறியவொண்ணாது; மற்றிதனைக் கடவுள் அல்லது குருவுடன் கலந்து கலந்து இன்புற்றுணரும் மெய்யறிவாகிய உணர்வறிவினால் மட்டும் அறிதல் கூடும். இக்கருத்துப்பற்றியே "அவ்வா றறிவா ரறிகின் றதலால், எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே" எனத் திட்டவட்டமாக முழக்குகின்றது கந்தரநுபூதி.

அறிவுப் புலமைபற்றி மற்றும் பின்வரும் திருப் பாடல் மேற்கோள்களும் காண்க.

சாந்தலிங்கசுவாமிகள்—அவிரோத உந்தியார் கவி ௬௪.

"ஆங்கறி யாமையும் சாரா தறிவொடுந்
தூங்குவாய் நாளுமென் றுந்தீ பற
தோன்றும் பரம்பொரு ளுந்தீ பற"

திருமூலநாயனார்—திருமந்திரம்.

"அறிவறி யாமை யிரண்டு மகற்றிச்
செறியறி வாலெங்கு நின்ற சிவனைப்
பிறிவறி யாத பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கோனறி யாரே"

கந்தரநுபூதி—சஉ-வது செய்யுள்.

"அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே"

(6) செறிவுப் புலமை: இந்நிலை வாக்கு மன மிறந்த முழு மோன நிலையாதலின் இதனை ஞானவரம் பாகிய மோன முகடென்னலாம். அறிவுப் புலமை அறிவை அறிவால் அறியும் நிலையினது. இந்நிலையிலே போதமுனைப்புள்ளது. செறிவுப் புலமையோ உயிரும் இறையும் பேரின்பத்தில் பின்னியழுந்திக்கிடக்கும் அறிவு மயத்தினதாகலின் தற்போதங் கழன்ற நிலையினது. ஆகலின் அறிவுப் புலமைக்குச் செறிவுப் புலமை மிக மிக மேம்பட்டதென்க. சுட்டறிவுக்கு அப்பாற்பட்டதாதலினால் இச்செறிவுப் புலமை நிலையினைச் சிவபாஞ்சுடரே யோக

மூர்த்தங்கொண்டு சனகாதி நால்வர்க்கு யோகமுத்திரை யென்னும் சின்முத்திரை பிடித்துக்காட்டி அம் முனிவரர்க்கு மனோலயத்தை வாய்ப்பித்தருளியுள்ளார். இதனை அருணகிரியார் "பார்க்கு மிடத்துப் பரமா யிருக்கு மதீதத்திலே" எனவும் "தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன் வசத்தே, ஆக்கு மறுமுக வா சொல்லொணாதிந்த வானந்தமே" எனவும் கந்தரலங்காரத் தில் கூறியவர்: "சும்மா விருசொல் லறவென் றலுமே, அம்மா பொருளொன் றுமறிந் திலனே" எனக் கந்த ரநுபூதியிலும்; "உளமவிழ உரையவிழ உணர்வவிழ உயிரவிழ உளபடியை புணருமவ ரநுபூதி யானதும்" எனத் திருவகுப்பிலும் கூறியருளினர். இந்நிலையினை நிரதிசயானந்தம் எனவும், நிருவிகற்ப சமாதி எனவும், அத்துவிதம் எனவும், துவிதம் எனவும், விசிட்டாத்துவிதம் எனவும் பலபடக் கூறுவாருமுளர். எவ்வெக் கொள்கை யினரும் ஒப்புமாறு "ஒழிவிலொடுக்கம்" எனக் கண் ணுடைய வள்ளலார் சுவாநுபூதியிற் கண்டுகொண்டு சொற்றருளினர். இம்முடிபினைச் சிவாநுபூதியினரும், தவாநுபூதியினரும், சுவானுபூதியென ஏற்றுக்கொள்ளும் வகையில் அவ்வள்ளலார் தமது "ஒழிவிலொடுக்கம்" என்னும் நூலினுள் வகுத்துக் காட்டியுள்ளார். ஆகவின் "பார்க்குமிட மெங்கும் பரமன்கா ணம்மானே" என்ற அறிவுமயச் செறிவுப் புலமையாகிய இந்நிலையின் அருமை பெருமைகளை மனவொருமைக்கே வாசகர்களை இட்டுச் செல்லும் வாய்ப்பினையுடைய ஞான மோனச் செல்வக் கருவூலமாகிய "ஒழிவிலொடுக்கம்" என்னும் அந் நூலினுட் கண்டு தெளிவு கொண்டு உய்யத் தக்கது. சுருங்கக் கூறின் தற்போத நீக்கமே "செறிவுப் புலமை"யின்

கருத்து. இதனையே தற்போத ஒழிவில் ஒடுக்கம் என "ஒழிவிலொடுக்க" நூல் கூறுதலினால் அதற்கு "ஒழிவிலொடுக்கம்" என்ற அருமைத் திருப்பேர் இடப்பெற்றது.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய், எல்லாமா யல்லவுமா யிருந்தபடி யிருந்ததனை யிருந்து காட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாம லினைந்துபவத் தொடக்கை வெல்வாம்"

என்ற இத் திருப்பாட்டிற் பொதிந்த கருத்தே செறிவுப் புலமையின் தெளிபொருளாகும். மற்றும் பின்வரும் அநுபூதிப் பாடல்களாலும் காண்க.

காண்பானுங் காட்சியுமின்றி வேறறக் கலந்து நிற்கும் நிலையே செறிவுப் புலமை அல்லது பரவீடு. இதனை வருமாறு தெளியலாம்.

சாந்தலிங்கசுவாமிகள்—அவிரோத உந்தியார்: கவி-௯

"அந்தப் பரத்தோ டிரண்டற் றமிக்கமா
மந்தனன் னிட்டையே யுந்தீ பற
அத்து விதவிடென் றுந்தீ பற"

திருமூலநாயனார்—திருமந்திரம்.

"குறியாக் குறியினிற் கூடாத கூடத்
தறியா வறிவி லுகந்தேக சித்த
நெறியாம் பரானந்தி நீடரு டோன்றிச்
செறியாச் செறிவைச் சிவமென லாமே."

கந்தரலங்காரம்—௭௩-ஆம் கவி.

"போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல்லொ ணாதிந்த வானந்தமே"

கந்தரநுபூதி.

"ஆறு வமுதே அயில்வே லரசே
ஞானு கரனே நவிலத் தகுமோ
யாறு கியவென் னைவிழுங் கிவெறுந்
தாறுய் நிலைநின் றதுதற் பரமே." (உஅ)

"வானே புனல்பார் கனன்மா ருதமோ
ஞானே தயமோ நவினுன் மறையோ
யானே மனமோ வெனையாண் டவிடந்
தானே பொருளா வதுசண் முகனே" (௩)

"குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலும்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே." (௪உ)

புலமையியல் முற்றிற்று.

இரண்டாம் பகுதி — புலமையிலக்கணவியல்.

புலமை வாய்ப்பினுக்கு இலக்கணப் பயிற்சியும் இலக்கியப் பயிற்சியும் இன்றியமையாதன. நீராடை சூழ்ந்திலகும் இந்நிலவுலகினிலே நிலவும் ஒள்ளிய இலக்கணங்கள் சிலவாம். அவற்றுள் அகப்பொருள் இலக்கணமே சிறந்து தனித் தலைமை பூண்டு விளங்குவது. தெய்வச் செந்தமிழ் மொழி ஒன்றே ஒன்றில் மட்டுந்தான் அவ்விலக்கணம் உளது. நந்தம் தாய்மொழியின்கண் அகத்தியம் என்ற முத்தமிழ் இலக்கணம் இருந்ததாக அறியப்படுகின்றது. அதன்பின் தொல்காப்பியம் வாய்ந்துளது. தொல்காப்பியத்திலும் தொல்காப்பியத்தின் உரைவழி அறிவிக்கப்படும் அகத்தியத்திலும் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என மூவகையிலக்கணம் உளதாகத் தெரிகின்றோம். தொல்காப்பியப் பொருளிலக்கணத்தில் யாப்பிலக்கணமும், உவமையணியிலக்கணமும் வகுக்கப்பட்டுளதாயினும், பண்டைத் தண்டமிழ் மொழியினிடத்து வழங்கிவந்த இலக்கணங்கள் எழுத்து, சொல், பொருள் என மூன்றுமேயாகும். முதுதமிழிலக்கண நூலாசிரியர் யாப்பும் அணியும் பொருளிலக்கணத்தில் அடங்குமாற்றானும், பழங்கால இலக்கிய நூலாசிரியர் உள்ளதை உள்ளவாறும், கண்டதைக் கண்டவாறும் கொண்டுரைத்தமையுங் குறிக்கோளினராதலானும், அவ்வாறு பகர்தற்கு உவமையணி ஒன்றே சாலும்; இல்லாதவற்றைக் கூட்டிச் சொல்லும் உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகள் வேண்டாதன; எனப் புறக்கணித்துவரப்பட்டதாலும் அம்மூன்றிலக்கணங்களே வகுக்கப்பட்டன.

பிற்காலத் தமிழாசிரியர்கள் வடமொழிப் பயிற்சியில் இறங்கியுழைத்து வடமொழியின்படியே எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐந்திலக்கணம் தொகுத்தனர். அதனால் தமிழில் முன் மூன்றுடன் பின்னிரண்டும் தனித்தனியே புகுந்து அதிலும் அணியிலக்கணம் வடமொழிப் பாணியில் மிக விரிந்துபோய் மொத்தம் இலக்கணம் ஐந்தாயிற்று.

இந்திரன் ஐந்திலக்கணத்தோன். அதனால் அவ்விலக்கணத்தின் பேர் ஐந்திரம் என்பர். இடைக்காலத் தமிழிலக்கணங்கள் நன்னூல், யாப்பருங்கலம் முதலனவாம். வண்ணச்சரப தண்டபாணி யடிகள் எழுத்து முதல் அணியீருகவுள்ள ஐவகை யிலக்கணம் சொற்றுளதுடன் மேற்கொண்டு வண்டமிழ் வளர்ச்சிக்கே இரு கண்கள் போன்ற "புலமை இலக்கணம்" எனப் பெயரிய ஆருவதிலக்கணமும், அதனையடுத்து ஏழாமிலக்கணமும் வகுத்தருளியுள்ளார். அவற்றுள் புலமையிலக்கணம் தேற்ற வியல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை யியல்பு என நான்கு பகுதிகளான் இயன்றுளது. எழுத்து முதல் புலமை வரையுள்ள ஆறுவகை யிலக்கணங்களும் கூறப்பட்டிருக்கும் அந்நூல் அறுவகை யிலக்கணம் என்ற பெயரால் இலங்குகின்றது. ஏழாமிலக்கணம் புணர்ப்பியல்பு, சொன்னிலை யியல்பு, பெயர்ச்சொல்லியல்பு, விபத்தியியல்பு. ஒற்றுமையியல்பு, வினைச்சொல்லியல்பு, இடைச்சொல்லியல்பு, உரிச்சொல்லியல்பு, பொருளியல்பு, யாப்பியல்பு, அணியியல்பு, புலமையியல்பு, தவவியல்பு என்னும் பதின்மூன்று பகுதிகளான்

இயன்றுள்து. புலமை யிலக்கணம், ஏழாமிலக்கணம் என்ற இவ்விரு நூல்களின் அருமையும் பெருமையும் இவற்றினுட் பயின்றறியத் தகுவனவே. மற்றும், நவ வியாகரணமும் உளதென்ப. அதனை வாயு புத்திரனை அநுமார்க்குச் சூரியமூர்த்தி அறிவுறுத்தருளினரென்பர். இவ்விருவரே யன்றி ஒன்பதிலக்கணமுடையார் வாணித் தாய், ஆதிசேடன், அகத்திய முனிவர் அன்னருமென்பர். முழுதுணர் புலவனை முருகப்பெருமான் முப்பத்திரண் டிலக்கணமுடையார் என்பர். இச்செய்தியை, முன்னே சொன்ன ஏழாமிலக்கணம், நான்காம் பாயிரச் செய்யு ளால் அறியலாகும். அது வருமாறு:—

"எஃகவேன் முருகன் முப்பத் திரண்டிலக் கணத்தோன் வாணி
அஃகலி லெல்லோன் சேட னகத்திய னனுமனன்னர்
வெஃகவை யொன்ப துள்ளார் வியன்கொளா றுரைத்தேழ் [சொல்வேன்
கஃகஃகென் காகம் போலுங் கவிஞருக் கினியா தன்றே"

இப் பொதுவாராய்ச்சியினால் இலக்கணம் 5, 9, 32: உண்டென்பதோடு அருமருந்தன்ன திருந்து பண்டைச் செந்தமிழில் எழுத்து, சொல், பொருள் (யாப்பு, அணி உட்பட) என்னும் முப்பொருள் பற்றியது தொல் காப்பிய இலக்கணமும், பிற்காலத்தில் புலமையிலக்கணத் துடன் கூடிய அறுவகையிலக்கணமும், ஏழாமிலக் கணமும் உளதெனத் தெளியலாகும்.

புலமை யிலக்கணம் பின்வருமாறு பயிற்சிமுறை, தேர்ச்சி முறை, தொழின் முறை என்னும் முப்பிரிவு களினடியாக ஆராயப்படுகின்றது. அவற்றுட் பயிற்சி முறை வருமாறு:

1. பயிற்சி முறை.

முன்னே கண்ட ஆராய்ச்சியினால் தமிழ் மொழியில் எழுவகை யிலக்கணம் உண்டெனக் கொண்டோம். அவ்விலக்கணங்களை எழுத்து முதலாகக் கற்கை புலமைத் துறையிற் படிந்தின்புறும் விருப்பினர்க்கு முதற் பெருங் கடனாம். ஐவகை யிலக்கணப் பயிற்சி முடிந்தபின் ஆறுவதாகிய புலமை யிலக்கணப் பயிற்சியில் இறங்குதல் முறை.

புலமையென்பது அறிவுமயமானது. வாக்கும் மனமுந் தாண்டிச் செல்லும் அஃது அறிவைக்கொண்டு ஆராய்ந்து எவ்வளவு சொல்லினும் முற்றுறாது விரிந்து கொண்டே செல்லும் பெட்பினது. ஆனதினால் "புலமை யிலக்கணம் புகலுதுஞ் சிறிதே" என்றனர் புலமை யிலக்கணத்தார். அன்னவர் புலமை யிலக்கணத் தொடக்கத்தில் அறியுந் தன்மையைப் புலமை யென்றனர். அறிவறிந்த பெரியோர்களது நூற்பொருள்களை ஐயந் திரிபறத் தெரிந்துகொள்ளுந் தகுதியே புலமையின் கொழுந்தாகும். கற்றறிந்த கலையறிவையே பற்பலர் புலமையென்பர். ஆனால் ஆன்றோர்கள் கலையறிவினுக்கும் அப்பாற்பட்ட நிலையறிவாகிய உண்மையுணர்ச்சி ஒன்றையே புலமையெனக் கூறியுள்ளனர். ஆதலின் கற்றுணர்ந்தடங்கிய புலமைச் சான்றோரைக் குருவெனக் கண்டுங் கொண்டும் வணங்கியும் இணங்கியும் அவர்பாற் கற்பன கற்றும் கேட்பன கேட்டும் தெளிதல், மாணவர் கடனாகும். புலமை விரும்பும் மாணவன் மெய்ப்புலமைக் குருவின் திருமுன் மனவமைதியுடனிருந்து இலக்கண இலக்கிய தருக்க சாத்திர அநுபூதி நூல்களை முறையாகக்

கசடறக் கற்றறிதலும் அதற்குத்தக நின்றுயர்தலும் வேண்டும். கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் இவற்றை முறையே புரிந்திடின் மெய்யுணர்தலாகிய பேரறிவு நிலை கைவரப்பெறு நிற்பர். இம்முறை தவறி வெறுங் கலையளவிலே நிற்பவருக்கு அநுபூதி நிலையாகிய உண்மைப் புலமை கைகூடுவது மலடி மகவும் முயற்கொம்புமேயாம்.

புலமைப் பேறடைய விழைகுநர் பெரும் புலவர்க்காளாதல் வேண்டும். அப்புலவோர் முத்தமிழும் நாற்கவியும் சந்தவண்ணமும் வல்லவராயின் தம்மைப் புகலடைந்த மாணவர்க்கும் "தமிழடியாகும் எழுத்துருவும் சந்தமாமுடியும் இமிழ்திரைப் பாரில்" ஈய வல்லவராவர். அதன்மேல், "இன்ப வெள்ளத் தமிழ்பவர் வேண்டுந் தியானுநுபூதியும் ஆங்களித்"திட வல்லவராவர். அப்பால் அவ்வாசிரியர் அம்மாணவரை அருட்பெரும் புலமை நிலைக்கும் ஏற்றிவிடுவர். அரும் பெரும் புலவர்களை யடுத்தடுத்துப் பழகுதலால் விழுப்பம் தருவதும் உயிரினும் ஓம்பப்படுவதுமாகிய நல்லொழுக்கம் அமையும். நான்கு நூலின்படி "பன்னூற் பகுப்பிற் பதர்களையும் பக்குவத்தோர்" ஆவர். பன்னூற் பொருள்களின் முடிபும், உலகானுபவ நுட்பங்களும் அவர்களது திருவாய்மொழிகளால் கேட்டு உளந்தெளியலாம். அத்தகைக் கேள்வி கற்றலினும் பன்மடங்கு பயன்பெறும். தெய்வப் பொதுமறையாகிய திருக்குறள் "பல கற்றும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லாதார் அறிவிலாதார்" என்றும்; "கற்றலில் கேட்டலே நன்று" என்றும்; "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும்

வாழினும் என்" என்றும்; ஔவையார் "கேள்வி முயல்" என்றும் கிளந்துரைத்தலை எண்ணத்தகும்.

ஆசிரியரின்றிப் பயிலும் கல்வி மேம்படாது. இக் காலத்தில் உலகின் பன்மொழிகளினுமுள்ள உயர்தர நூல்கள் ஆங்கிலம் முதலிய மொழிகளிற் பெயர்க்கப்பட்டு அச்சுவாகனமேறி நூல் நிலையங்களில் உலவுகின்றன. அவற்றின் துணை கொண்டு கற்றால் பன்மொழியறிவும், பல்கலையறிவும் எளிதில் அடையப்பெறுதலாகும்; ஆசான் துணை வேண்டுவதில்லை என்பவர் பலராவர். அக்கூற்று அறியாமையின்பாற்படும். ஆசிரியன் மாணவன் மனத்தின் ஒட்பந் திட்பங்களுக்கேற்பவும், விருப்பு வெறுப்புகளுக்கேற்பவும், வாங்கிக்கொள்ளும் வன்மைக்கேற்பவும் நேர்முகமாக இருந்தாலன்றி அவ்வளவு அழுத்தமாகவும் திருத்தமாகவும் அறிவிக்கவும் இயலாது; (மாணவன்) அறியவும் இயலாது. குருமூர்த்தியின் நேரில் அமைந்திருப்பின் அவ்வப்போழ்து எழும் ஐயங்களை இலகுவிலே களைந்தெறிந்து தெளிந்துகொள்ளலாம். அவ்வாறு தெளிந்து மேற்படியிலேறி, ஆங்கு நிலவும் அறிஞருடன் பல்காற் பயின்று, கல்விப் போட்டியிலே முனைந்து நின்று வென்று, முன்னே தெளிந்தவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாய்ப்புக்கள் குருவில்லாமலும், ஒருசாலை மாணவரில்லாமலும் கற்கவல்லார்க்கு இல்லாமற் போய்விடும். ஆதலால் ஆசிரியர்பாலும், மேல் வகுப்பு மாணவர்பாலும் அறிவறிந்தோர் குழுவிலும் பயின்றறியும் அறிவு தன்னந்தனியே பயின்றறியும் நூற்றுணையறிவிலும் நூறுபங்கதிகமாகும். இதுபற்றியே "அநேகவித நூல்களிருப்பினும் அவற்றுள் உத்தம பாகம்

இன்னதெனத் தெரியவேண்டுவது பெரியோர்கள் சகாயத் தாலாம்." என்ற சத்திய வாசகமும்; "உத்தமோத்தம மாகிய பாகத்தை இகழ்வோரும், அதமாதமமாகிய பாகத்தைப் புகழ்வோருங்கூடச் சிலர் இருப்பார்; ஆதலினுல், சற்குரு வாக்கியப்படி என்றமாத்திரம் முயற்சித்து மற்றைத் தொழிலற நிற்பதே விவேகிகளுக் கேற்ற நன்னிலையாம்" என்ற சத்திய வாசகமும் இங்கு ஆய்ந்து பார்க்கத்தகும். இவற்றுடன், "புலமையி னுசை பொலிந்தோ ரொருவன், அத்தொழிற் பெரியோர்க் காட்பட னலமே" எனவும்; "அக்கர முதற்கொண் டணியீ ருகப், பகரு நூலும் பாவலர் முன்பிற், கற்கை நலமெனக் காண்பது கடனே" எனவும்; உண்மைப் புலவோ ருரைசெயு முபாயம், நண்ணிக் கொள்வது நலமிகத் தருமே" எனவும் வரும் புலமையிலக்கணம்—தேற்றவியல்புச் சூத்திரங்கள் ஒப்பு நோக்கத்தகுவன. மேலும், குருவில்லா வித்தை குட்டிவித்தை என்ற மொழியும், "குருவிலான் கற்ற வித்தை குமரியைக் குமரி கூடி, மருவிய வின்ப மொக்கும்" என்ற மொழியும் இங்கு சிந்தித்தற்பாலன. அப்படியிருக்கத் திருஞான சம்பந்தர், சடகோபாழ்வார், மெய்கண்டார், குமர குருபரர் முதலிய சான்ருேர்கள் குருவில்லாமலே தெய்வப் பெரும்புலமை அடையவில்லையா? திருவிளையாடல்கள் இயற்றவில்லையா? என வினவுதிராயின் அங்ஙனம் அப் பெரியார்கள் பாடிய பாடல்களும் ஆடிய ஆடல்களும் திரு வருள் இயக்கத்தினுலன்றிச் சீவ போதத்தினுல் அன்று. ஏனையோர் குருவை வழிபட்டுப் பெற்ற கல்விப் பயிற்சி யின் வழியாகவே பாடலும் ஆடலும்இயற்றியுள்ளார்கள். வண்ணச்சரப தண்டபாணி சுவாமிகள் பாடியருளிய

தியானுநுபூதியின்படி "வானிற் புலவர்பிரா னுதியராய்ப் புவியில் வந்தோர் மெய்த் தெய்வமே குருவர் யறிவினின்று விளக்குவதா லளவிலின்ப மேவு வோரே". தெய்வமாகிய குருவருளால் பாட்டுப் புலமை, ஆட்டுப் புலமை, வீட்டுப் புலமையுங்கூடப் பெற்றுய்ந்தனரென்றால் ஏனையோர் குருவின் துணையின்றி இகபர சாதன சாத்தியங்கள் அடைதற்கியலாதென்க. நாத்திகருங் கூடக் குருவை ஒப்புக்கொள்ளுகின்றனர். சாமானியரான ஆத்திகருட் சிலர்மட்டும் குரு துணையின்றியே வித்தை லாபம் கிட்டுமென்ற விதண்டா வாதம் பேசி நாத்தழும் பேறித் திரிவானேன்? அன்னுர் முற்குறித்த பெரும் புலவர்களைப் போன்றே யாமும் ஞானுசிரியரின்றிப் புத்தகமாகிய ஆசிரியர்துணை ஒன்றினுலேயே கல்வி நலம் கைவரப் பெறுதற்கு இயலுமென நாக்கடிப்பாக வாய்ப்பறை அறிவானேன்? அத்திரிபு மயக்கப் படுகுழியினின்றும் மெய்யுணர்ச்சி யென்னும் புலமைத் தடப்பெருங்கரையேற விழைகுநராயின் சான்ற புலவோரை என்றமட்டும் துணைக் கொண்டு அடுத்தடுத்துப் பழகி ஆன்ற புலமை அடையப் பெறுவார்களாக.

ஆசிரியரையும் மாணவர்களையும் பின்வருமாறு தரம் பிரிக்கலாம். போதகாசிரியர், சாதனுசிரியர், சாத்தியாசிரியர் என்னும் இவர்களுள் போதகாசிரியர் பல்கலை போதிக்கும் ஆசிரியர்; சாதனுசிரியர் தற்போதங் கழலப் பெறுதவர்; சாத்தியாசிரியர் எழுத்துக்களின் நிறபேதங் களும் தற்போதமுங் கழலப்பெற்ற மெய்ஞ்ஞானுசிரியர். சத்திய வாசகத்தின்படி "தெரிசன மாத்திரத்திற் சர்வாபீஷ்ட சித்தியுங் கொடுப்பவரும், தபோ மார்க்கத்தைத்

தெரிவிப்பவரும், கல்வியறிவு தோற்றப் பேர்திப்பேர்ருமாகிய மூவிதவாசிரியரும் முறையே தரம் பிரிக்கப்படுவார்கள்." மற்றும், "உலகத்திற் பொருளன்னதானம் முதலிய நற்காரியங்களுக்கு, மது மாமிசபட்சணம் முதலிய தீய காரியங்களுக்கும் சகாயமாயிருப்பதுபோல் அருள் சித்தி முத்திகளைக்கொடுக்கும் உத்தம குருவுக்கும், அவகீர்த்தியும் நரகமுங் கொடுக்கும் அதம குருவுக்கும் சகாயமாயிருக்கும்." என்ற சத்திய வாசகமும்; "தெய்வமில்லையென்னும் சுபாவவாதி முதலோர்களும் குருவையொப்புதலால் தெய்வத்தைப் பார்க்கிலும் குரு உயர்ந்த பொருளென்று உணர்ந்தவர்கள் பெருமை அளவுபடாதென்பது சத்தியம்." என்னும் சத்திய வாசகமும் இங்கே ஊன்றி நோக்கத்தக்கன.

குருவைப் போலவே மாணவர்களையும் தரம் பிரிக்கலாம். முதல்தர மாணவர் கடலினிடத்துள்ள சிப்பியினிடத்தில் விழும் மழைத்துளி முத்தாக மாறி விலை மதிப்பில் உயர்வதுபோலவே குரு போதனையை ஏற்றுக் கொண்டு அதனை வளம்படுத்தி அறிவுச்சுடர்க் கதிர் விரித்து வீறி நிற்பர். இடைத்தர மாணவர் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட வித்தினைப்போன்று நல்லாசிரியன் போதனையினால் அறிவு செழித்து வளர்ந்து பெரும் பயன் விளைப்பர். கீழ்த்தர மாணவர் சிறிது கீழே கல்லையுடைய நிலத்தின்மேல் விழுந்த விதையானது ஓரளவு முளைத்து வளர்ந்து அக்கல்லின் கீழே வேர் செல்லமாட்டாமல் பயிர் வாடியுலர்தல் போலவே குரு போதனையை மேற்கொண்டு பயன்படுத்த இயலாத சோம்பராவர். கடைத்தர மாணவர் கல்லின்மேல் விழுந்த விதை முளையாமல்

விணுவதுபோலவே அறிவறிந்த ஆசிரியரது அறிவுறுத்தலை மதித்தேற்றுக்கொண்டு அதன்படி ஒழுக இயலாத வீண ராவர். பலதரப்பட்டு இவ்வாறுள்ள குரவரும் மாணவரும் தத்தம் தரத்திற்கேற்றவர்களையே கொள்ளக் கடவர்.

வளப்பம் பொருந்திய பசுந்தமிழ்க் கல்விப் புலமையைக் காதலிப்பானுக்கு இலக்கண இலக்கிய நூற்பயிற்சியினும் தெய்வோபாசனையால் வாய்க்கும் திருவருட்டுணையே ஒப்பற்ற துணையாயிருந்து நலம்பல கொழிக்கும். ஆகவே நூற்பயிற்சியைப் புறத்துணை யாகவும் கடவுள் வழிபாட்டினை அகத்துணையாகவும் பூண்டு புலமையை மாற்றேற்றிக்கொள்க. வெறுங் கலைப் பயிற்சியைவிடக் கடவுளின் திருவருள் வாய்ப்பானது நனி பெரும் பயன் விளைப்பதாகும். திருவருள் வாய்ப்பிலாக் கல்வி நன்மணமில்லா முருக்கம் பூவனையது. அதனுல் "தெய்வ பத்தியிற் றிளையா வொருவன், கல்வி நலமெணிற் கள்ளிப் பாலே" என ஏழாமிலக்கணம்—புலமையியல்பு—ச-ஆம் சூத்திரம் கூறுகின்றது. "நூலின் றுணையினு நூறுபங் கதிகம், "தெய்வத் துணையாஞ் செந்தமிழ்க் கவிக்கே" எனவும் "தெய்வத் துதிவழி தேருப் புலமை, நைவுஞ் சிறுமையு நாணமுந் தருமே" எனவும்; "கருதிய தெய்வங் கண்முற் றேன்றிப், பேசி னல்லது பெருந் தகைப் புலமை, எய்தா தென்றிட வியல்பா மன்றே" எனவும் வரும் புலமை யிலக்கணம்—தேற்றவியல்புச் சூத்திரங்களை இங்கே நினைவு கூர்க. கல்வி நலமுந் தெய்வ பலமும் பொருந்திஞல் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்றற்கு இணையாகும். இக்கருத்துப் பற்றியே "கல்வி

யென்பது சருவ சாஸ்திரங்களையும் கற்றுப் பிரசிங்கிப்ப தல்ல. தெய்வ நிச்சயமுந் திருவருட் பிரசாத வாஞ்சையும் அதற்குத் தக்க முயற்சியும் ஏற்படப் பெறுதலேயாம்.'' எனவும், ''தெய்வ நம்பிக்கையாகிய ஞானமும் விற்பத்திப் பெருக்கமாகிய கல்வியும் பொருந்தினால் பொன் மலரில் வாசமும் பொருந்தியதற்கொப்பாகும்'' எனவும் முழக்குவதாயிற்று சத்திய வாசகம். முற்பிறப்பிலே கடவுளருளால் கல்வி நலம் கைவரப் பெற்றோர்க்கே உயரிய இனிய புகழ்த்துதி வாக்குதிக்கும்; ஏனோர்க்கு அவ்வண்ணம் வாக்கினருள் வாய்க்காது. இதனாலன்றோ ''மேனாட் பூசித் துய்வணுப்போன் றாயினும் பெற்றிருந் தோர்க் கன்றி, உயர் புகழ்த்தீஞ் சுவைத்துதிவாக் குதித்தி டாதே.'' என்று தியாநுபூதியும் எழுவதாயிற்று. இங்கு,

> ''நல்லு பாசனை யின்றிய நாவலர்
> சொல்லு நாண விருண்டுள சூழல்வாய்
> வில்லு டன்புகும் வேடரும் வேறுயிர்க்
> கொல்லு நீர்மை தவிர்ந்ததக் குன்றமே''

என்ற புலவர் புராணம்-பொதியாசலப் படலம்-உஎ-ஆம் கவி ஆயத்தக்கது. இக்கவி தெய்வ உபாசனையின்வழித் தேறும் புலமையின் சிறப்பையும் அப்படிக்கின்றி வெறுங் கலையறிவளவில்மட்டும் தேர்ந்த நாவலர்களது புலமையின் சிறுமையையும் நன்கழுத்திக் காட்டுகின்றது. இக்கவிக்கு வாய்த்துள்ள கருத்துரையைப் பின் வருமாறு கண்டு மகிழ்க. ''கொலை, புலை, இம்சை, அசத்தியம் முதலிய தீங்கு நீங்கி, கணபதி, முருகன் முதலிய உத்தம தெய்வ வழிபாடு செய்தலின்றி, அகங்கார முனைப்பால், தாமே பல நூல் கற்றுப் பாடும் புலவர்களது கவிச் சொற்கள்

இருள் மிகுந்து விளங்குவனவாகும். பொதியமலையி லுள்ள சோலைகளில் நிறைந்துள்ள இருள் அதனினும் அதிகரித்துள்ளது என்பதை விளக்கிய முறையில் உபாசனையின் அவசியத் தன்மையைக் குறிப்பித்தது காண்க." இவ்வுரையாசிரியர் ஷை புலவர் புராண நூலாசிரிய தண்டபாணி சுவாமிகளின் குமாரரும் மாணவருமான தி. மு. செந்திநாயகம் பிள்ளையவர்களாவர்.

புலமைக் கல்வி பயிலும் மாணவனுக்கு, அறிவு நுட்பம் அமைந்த அரும் பெரும் புலவர்களது பகை சிறிதுமாகாது. மற்று, அவன், அன்னோருக்குத் தொண்டு புரிந்து பயன்பெறல் வேண்டும்; அல்லது அவர்களிடத்து மட்டு மரியாதைகளுடனாவது நடந்து கொள்ளக் கடவனாகை. அங்ஙனமின்றி அப்பெரியா ரிடத்துப் பகைமை பாராட்டத் துணிதல் விபரீதமாக முடியும். இதன் சார்பாக "தன்னை அநுசரிக்கின்றவர் களைப் பாதுகாக்கின்றதும் எதிர்ப்போரைக் கெடுப்பதும் வித்துவான்களுக்கும் அரசர்களுக்கும் உரிய குணமே யாம்" என்ற சத்திய வாசகம் நினைந்துகொள்ளத் தகுவது. புலமையாகிய பெருங் கடலாடும் மாணவர்க்குப் புலவர் பகை, பேருறக்கம், ஈருடல் முயங்கும் ஆசை, மடி, மிடி இவ்வைந்தும் இடையூறுகளாம். இத்தடைகளுக் கெல்லாம் தீவிர பக்குவ மாணவன் இலக்காகாமல் மன வமைதியுடன் கூடிக் குரு முன்னிலையில் கற்றுங் கேட்டும் புலமைச் செழும் பயிரை வளர்த்து வருவானாயின் அவனது புலமை, இகபரவின்பங்களாகிய ஆதாயங்களுடன் கூடி வீடுபேற்றுக் களஞ்சியத்திற் கொண்டுபோய் அவனை உய்ப்பதற்கு யாதும் ஐயுறவில்லையே.

கவிதை பாடும் புலமைத் திறத்தில் புகுவோனது பாடல்களைக் கண்டபோழ்து சிறு புலவோர் பொறுமை கொண்டு அவன் மனம் கலங்கும்படி சொல், பொருள், யாப்பு முதலியவற்றிலே பல குற்றங்களைக் காட்டிப் பல விதமாகப் பேசுவர். அது கண்டு அவன் இந்தத் தொல்லை நமக்கேனென அஞ்சித் தான் கவிபாடும் முயற்சியைக் கைவிடுதல் கூடாது. இக்கருத்தையொட்டியே, "குறை படும் புலவோர் கூறுங் குற்றம், அஞ்சிப் பாடா தயப்பது பிழையே" என்றனர் புலமையிலக்கணத்தார். அவ்வகை யஞ்சும் கவிஞர் தமது பாடற் புலமையில் இளைப்புறாது ஊக்கத்துடன் மேற் செல்லும்படி சத்திய வாசகம் அழுத்தந் திருத்தமாகக் கூறுதல் பின்வருமாறு காண்க. "மகப்பெற்றாளருமை மலடியறியாதவாறு போலப் பாவலனருமை பண்டிதனறியான் என்பதுண்மையாம்." "பல சாஸ்திர விற்பத்தியுற்றும் பாடல் செய்யுந் திறமை யுறாதவர்கள் பாடுவோரைக் காணுந்தோறும் முன்னூல்கள் கற்றுணர்ந்தாற் போதாதா; என் வீணைப் பாடுகிறீரென மறுப்பதுண்டு." "பூர்வ காலத்திற் பாவலர் களாற் பாடப்பட்ட நூல்களே தற்காலத்திற் பண்டிதர் களுக் காதாரமாய் விளங்குகின்றன." "சர்வ சாஸ்திரங் களுக்கும் பாவலர் பெற்ற தாயும் பண்டிதர் வளர்க்குந் தாயும் போலாவார்கள்." "ஒருவன் பாவலத்தன்மை பண்டிதத்தன்மை இரண்டு மடைந்திருந்தால் உத்தமோத் தமமாகும்." (சத்திய வாசகம் கூ௫—கூ௬) என்றறிக. பல நூற் பயிற்சி விற்பத்திகளாலும் ஆன்றோர் மொழிக் கேள்வியாலும், தம் அனுபவத்தாலும் தெரிந்த விவரங்கள் அனைத்தையும், மெய்யறிவமைந்த அரும் பெரும் புலவர்கள் கூறுவார்கள். அவற்றால் மிக்க நன்மைகள் அடையலா

மாகலின் புறக்கணித்தல் கூடாது. அம்மதிநுட்பங்களை நன்குணர்ந்து புலமைப் பெருவாழ்வில் திருந்துதலே கடனெனக் கொள்க.

புலமைப் பயிற்சியில் புகுந்த ஒருவன் தன்து குரவன் கடைவரி கொடுப்பக் கொண்டு தான் ஏனை வரிகள் மூன்றையும் பாடி முடித்தலும், குரவன் திருத்தி வழி காட்டக் காண்பதும், அவ்வழி முயலலும், மனத்தெளிவும் நாப்பழக்கமும் பூணுதலும் வேண்டும். இந்நெறியிற் பயின்றறிந்தபின் தன் வழிபடு கடவுளைப் பலபடப் புகழ்ந்து பாடி, குருமூர்த்தியின் அங்கீகார முத்திரை பெற்றின்புறுதல் மேல். தெய்வத் துதிவழித் தேறும் புலமை தான் முட்டனைத்து மறுத்து முழுப் பேரின்பம் பெய்ய வல்லது. ஆதலால், அல்லாத புலமை வெல்லாத புலமை, பொல்லாத புலமையுமாகலாம். துன்பத்தையும், தாழ்ச்சியையும், அவமானத்தையும் விளைக்கும் அல்வழிப் புலமைப் பயிற்சியை விலக்கி, இன்பத்தையும், உயர்ச்சியையும், பெருமையையும் தந்துவப்பிக்கும் நல்வழிப் புலமைப் பயிற்சியைத் தனதுரிமைக்குரிய தெய்வத்தின் திருவடிப் புகழ்ச்சியின்மூலம் அடையக்கடவன். "இருள்சே ரிருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" அன்றோ? இவற்றால் நன்கு புலமைப் பயிற்சியடைந்தவர்தான் சமயமும் இடமும் நோக்கி அகப்பொருள் வருணனைகள், புறப்பொருள் வருணனைகள் முதலனவும் பாடத்தக்கவராவர்.

இராட்டை வேலையில் தேறியவனே தேர் வேலையில் பயின்றிடும் தகுதியுடையவனுவான். அப்படியே ஒரு இளம் புலவன் தன் மனத்தின்கணுள்ள ஐயமுந் திரிபுந் தீர்ந்து சொல், பொருள், யாப்பு, சந்தி, அணி முதலிய

பகுதிகளில் தெளிவு பிறந்தபின்புதான் யமகம், திரிபு, மடக்கு, சிலேடை, ஏகபாதம் முதலிய சித்திர கவிகள் பாடுந் தொழிலில் நுழைதல் வேண்டும். அவ்விதம் வாக்கு நயம் முதிருமுன் சித்திர கவிகள் பாடுவோனாகின், தான் ஆவலுடன் துவக்கிய சித்திர கவியும் செவ்வனே முடியாது நிற்கும்; ஏனைய செய்யுள் வகைகளும் முறையே நயங்கெட்டும், சுவை குன்றியும்போம். எனவே, சித்திர கவிகள் பாடுதற்குரியவர் வாக்குத் தெளிவு பூண்ட பெரும் புலவர்களேயன்றி வாக்கு நயந் தேருத இளம் புலவர்களல்லர்; எனத் தேறற்பாற்று.

புலமையிற் பயில்வோன் தனது ஆசிரியனுல் முதலில் கடைவரியும், அடுத்து முதல் வரியும், பின்னே பொருட் தலைப்பும் கொடுக்கப்பெற்று முறையே அவ்வக்கவிதைகளை யாத்துக் கொடுத்து ஆசானுல் திருத்திக் கொடுக்கப் பெற்றுத் தெளிவுறல் நலமாகும். ஆசான் கொடுத்த அடிகட்கிணங்குமாறும் பொருளுக்கேற்றவாறும் எதுகை, மோனை, சீர், தளை முதலிய யாப்புறுப்புக்களும், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முதலிய பொருள்களும் அமையக் கவிதையைத் தான் பாடி முடித்துக் காட்டுதல் வேண்டும். குரவன் அதிலுள்ள வழுஉக்களைத் தனது எழுதுகோலால் களைந்தும் திருத்தியமைத்துங் கொடுப்ப அவ்விவரங்களைக் கண்டு தெளிந்துகோடலே நெறிமுறை. அந்நெறிமுறைகளிலே தேர்ச்சியுறுகின்ற தலை மாணவனது கவிதைகளே சொற்சுவை பொருட் சுவைகள் உடையனவாம். அப்படியின்றிச் சில கவிகளைப் படித்தும், கேட்டும் தெரிந்து தன் மனச் சேட்டையினுல் பாடுவோனது கவிகள் நயமின்றி வீண்படும்.

கவிதை பாடும் நெறிமுறைகளில் ஈடுபடத் துணிந்த ஆரம்பிகள் அவ்வவர் விருப்பத்திற்கேற்பக் கீர்த்தனை, பதம், சிந்து முதலிய இசைத்தமிழ்ப் பாக்களும், கொச்சகம், கலிப்பா, அகவற்பா முதலிய எளிய இயற்றமிழ்ச் செய்யுட்களும் முதலில் துவக்கிப் பாடிப் பயில்வது பொருத்தமாகும். பின், விருத்தப்பாக்கள் இயற்றும் பயிற்சியில் ஈடுபடல்வேண்டும். விருத்தயாப்பில் தேர்ச்சி பெற்ற பின்னரே கட்டளைக் கலித்துறை பாடுதல்முறை. கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், ஆசிரிய விருத்தம் முதலிய கவிகளின் யாப்புத்தன்மை செவ்விதிற் பயின்று தெளிவுறு முன்னர் கட்டளைக் கலித்துறை முதலிய வெண்டளைச் செய்யுட்கள் பாடுதல் தவறுடைத்தாகும். நேரிசையென்றும் நிலைமண்டிலமென்றும் இருவகைப் பிரிவினவான ஆசிரியப் பாக்களின் தன்மை தெரிந்து பயின்ற பின்பே வெண்டளைக் கலிப்பா, வெண்பா என்னும் பாக்கள் பாடுவது தகுதியாகும். மா, விளம், காய் என்னும் சீர்களின் நெறிகளும், காசு, நாள், மலர், பிறப்பு என்னும் வாய்பாடு முதலிய முறைகளும், நேரிசை, இன்னிசை என்னும் பெயரிய அவ்வவ் வெண்பாக்களின் கண் நன்கு பழகித் தேர்ந்தபின்பன்றி வண்ணக் கவிகள் பாடத் துவக்குதல் முறையன்று. "எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி" என்ற மாபெரும் ஞான பண்டிதையின் வாக்கை நோக்கின் பிற கவிகளினும் வெண்பா மிகுந்த நியமமுடைத்தென்றறியலாம். ஆதலின் குறள் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா ஆகிய பாவினம் பாடித் தேர்ந்த பின்னரே அவற்றினும் பன்மடங்கு நியதியுடைய எட்டு வகைச் சந்தயாப்பில் பாடுந்தகுதி வாய்க்குமென்க. வெண்பாவின் பெருமையையும், சந்தயாப்பின் அருமையையும் கீழ்வரும் சூத்திரங்களால் அறிக.

அறுவகை யிலக்கணம் — கருவியியல்பு — சூத்திரம் ௯.

"வண்ணம் வெண்பா வென்னு மிருவகைச்
செய்யுளும் புலமைத் திறல்காட் டுபவே"

ஏழாமிலக்கணம் — யாப்பியல்பு — சூத்திரங்கள் ௩-ரு;எ.

"ஒண்டமைப் புலமைக் குரியா னெனினும்
வெண்டளை யறிவது மிகுபெருங் கடனே" (௩)

"இளமைப் புலவோர்க் கிசையா திகலி
மூதியோர் சிலர்க்கு முன்னுமுன் னுதவல்
வெண்பாப் போலும் வேறொன் றின்றே" (௪)

"சுத்தம் பொலிந்து தோமற வொழுகலின்
வெண்பா விற்கிணை வேதியப் பெண்ணே" (ரு)

"வெண்பாக் கட்டளைக் கலித்துறை யென்னு
மிவற்றின் றளையிடை யேக தேசம்
வண்ணப் பாவிற் றப்ப தன்னவே
தனவாஞ் சொல்லி னேர்நேர் நிரையா
வருமவை யுணரா மருண்மனப் புலவோர்
வல்லொற் றெருகியும் வகுப்பார் பிழையே" (எ)

சத்திய சூத்திரம் — பொது ஞாயம் — சூத்திரம் ரு.

"வண்டமிழ்க் கவிகளில் வண்ணம் போலும்
ஒண்டகை யினதின் றென்ப துறுதியே"

மற்றும், "தமிழடியாகு மெழுத்துருவுஞ் சந்தமா முடியும், இமிழ்திரைப் பாரி லெனக்கீந்த வெண்டிரு" எனவரும் தியானுநுபூதிப் பாயிரச் செய்யுட் பகுதியினாலும், அன்றியும்,

"எண்வகைச் சந்தமும் பாடுந் திறமு மிகலவரை
விண்வழிற் செல்ல விடுகின்ற சத்திய மெய்யருளும்
கண்வரு காட்சியுந் தோயும் பெருமைக் கவிஞர்வென்றி
தண்வளிச் சாரற் பொதிகையுமுன் னீன்ற தமிழ்க்கழகே"

எனவரும் தமிழலங்காரம் ஈற்று (கய்ய-வது)க் கவியாலும் சந்தவண்ணக் கவியின் அருமை பெருமைகள் தெற்றென் அறிதற் பாலனவாம்.

பஞ்சகம், பதிகம், மஞ்சரி, மாலை, சதகம், அந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடித் தெளிந்தபின் சரித்திரங்களை விளக்குதற்குரிய காவிய புராண வகைகள் பாடினால் நலமாகும். பிரபந்த வகைகள் பாடித் தேர்ந்த புலவர் கட்கே பல்பொருட் செறிவுதரும் கவியும் வாக்குத் தெளிவும் அமையும். அவை அமைந்தவர்க்கே பல்வகைப் பொருள்கள் விரவிய புராண இதிகாசங்கள் பாடுந் தகுதி தானே வந்து வாய்க்கும். சரித விளக்கம் புரிவதான காவிய நடையில் நன்கு தேர்ந்த பின்னரே, பூர்வபட்சம் சித்தாந்தம் என்ற முடிபுகளுடன் கூடிய விதிநூல்கள் பாடப் புகுவது நெறியாகும். வாக்கு வலிமையும், தெளி பொருட் செறிவும், மனத்தெளிவும் காப்பியப் புலமையிற் பயின்றுயர்ந்த பின்புதான் அமைவனவாதலின், அவை யமைந்த பின்னரே அறிவும் அடக்கமும் மிகுந்த சான்றோர் கொண்டாடத்தக்க சாத்திர நூல்கள் பாடும் இருந்திறற் புலமை வாய்ப்பதாகும். அத்தகுதியுற்ற பின்னர் இயற்றப்பெறும் சாத்திரங்களே உலகில் மிகச் சிறந்து விளங்கும்.

புலவனெனவன் சிலவிதக் கவிகள் மட்டும் பாடவந்தும் சிலவகையின பாட முடியாமலுமிருக்கும் நிலைதாண்டி, விதிநூலிற் கூறப்படும் இலக்கணத்தினவான எவ்விதக் கவிகளையும் தங்கு தடையின்றிப் பாடவல்ல புலமை தன்னிடம் அமைந்த காலத்தும் திருத்தியுறலாகாது.

திருத்தியுற்றால் அம்மட்டிலே அவனது புலமை குறை பாடுடைத்தாகும். ஆதலினால் தனது கவி நூல்களை மறு முறை திருத்தல் செய்து பெயர்த்தெழுதாமல் பழம்பாடல் (மனப்பாடம்) எழுதுவான்போன்று நேராக விரைந்து பாடும் வெற்றியை விரும்புதல் வேண்டும். அத்தகுதி யடையினும், மறு பிரதியில்லாமல் ஒரே பிரதியில் மற்றொருவன் எழுதுவதற்கு இடையீடு அல்லது தங்கு தடையின்றிப் புதுக் கவிகளை விரைந்து கூறுதல் அரிது. அப்படிக்கூறும் தகுதி வரையில் அறிவுத் தன்மைப் புலமை என்று சொல்வது ஞாயம் என்றியம்பும் புலமை யிலக்கணம். மற்றும், புலவர் புராணம், தெய்வத் திறமின்றி அறிவு நுட்பத்தால் ஆடலியற்றிய சிலரைத் தொகுத்து, அறிவுத் தன்மைப் புலவர் சருக்கமென்று, சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபெறக் கூறியுள்ளமை மிக்க சிறப்பாம். இவ்வரையறையால் அறிவுத் தன்மைப் புலமைக்கு எல்லை காணப்பட்டது.

கார்காலத்துப் பெருமழைபோன்று நூதனமான பாடல்களை ஒருவரால் எழுதமுடியாதபடி அவ்வளவு விரைவாக எவ்வளவு கவிகளேனும் பாடுதலும், வாக்கினாற் கூறியவாறு பலிதமுறக் காண்பதும், இன்ன அற்புதச் செயல்கள் பலவும் தெய்வத் தன்மைப் புலமையின் பாற் படுமென்பர். இது தெய்வத் தன்மைப் புலமையின் ஏக தேச இலக்கணமாகும். தனது வழிபடு கடவுள் வடிவ மானது, நேரே கண்காண விளங்கி அருள்பெற்றாலல்லது மேற்சொன்ன பெருமையினதான தெய்வப் புலமை எய்தாது. சுருங்கக் கூறின், கல்வி முயற்சி ஒன்றிலேயே காலங் கழித்தால் அறிவுத் தன்மைப் புலமை மட்டும்

அமையும். அத்துடன் நிலைத்த தெய்வோபாசனை புரியின் சொற்பலித சித்தி முத்தி தரும் அற்புத தெய்வப் புலமை கைவந்துறும்.

தனது காதற்குரிய கடவுளைக் கண்ணாரக் கண்டு பேசி அதனருளைப் பெற்ற ஒருவன் உலக நன்மைக்குரிய அருட் சித்திகளையும் ஆன்மலாபமாகிய ஐக்க முத்தியினையும் பெற்று ஈடேறல் வேண்டும். அப்படிக்கில்லாமல் அரசன் செல்வர் முதலோரையடுத்து அற்ப சொற்ப பலித சித்திகளைக் காட்டி அவர்களால் உதவப்பெறும் உண்டி யுடை அணிகலன்கள், வண்டி வாகனம் மனை மாளிகைகள் ஆகிய சிறுபயன்களைச் சிலநாள் நுகர்ந்து இருவினைக்கீடாக எடுத்தவுடலை நீத்தபின் சுவர்க்காதி பதமுத்திகளிலே தங்கியிருந்து எஞ்சி நின்ற வினைப்போகம் நுகர்வான் மற்றொரு தாயின் வயிற்றினும் சென்று உடலெடுக்கத் துணிதல் அறியாமை என்ப. அல்லாமலும் தெய்வப் புலமை தன்பால் அமைந்ததுணர்ந்தபின் அருளின் தன்மையைத் துலக்கி உலகத்தை வயப்படுத்திச் சீர்திருத்திக் காக்கும் பொருட்டு வேந்தராதியோரிடம் செல்வதைக் குறித்துப் பேரறிஞர் குறைகூற மாட்டார்கள். பொருட் செல்வரைப் பிரபுக்களாகக் கருதிப் புகழ்ந்து பாடி அவரிடம் பரிசில்களைப் பெற விரும்பிப் போவதைத்தான் இழிவென்பர்.

தக்க புலவனானவன் தனது செழுந்தமிழ்க் கவிகளிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை உணரமாட்டாத அரசனைக் காட்டிலும் அவற்றை அறிந்தின்புறும் ஒரு சாதாரண மனிதனே உயர்தரத்தினனென்னும் உறுதி

பூண்டவனுயிருப்பன். எனவே, கவிச்சுவை அறியாத வனை அரசனெனமதித்தும் கவிச்சுவையறியும் அறிவாளி களைச் சாமானியரென எண்ணியுமிருப்பவன், புலமைக்குத் தகுதிவாய்ந்தவன் அல்லனென்றுணர்க. அன்பர்களது துதிப்பாடல்களுக்கு வேண்டும் பயன்களையெல்லாம் கொடாது வாளா இருக்கும் அநீதி தெய்வத்தினிடம் இரா. அப்படி ஒரு தெய்வம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அதனைத் தெய்வமெனத் துதிக்காமல் பேயினுந் தாழ்ந்ததெனக் கூறும் புலமையின் ஆண்மைத் தன்மையைப் புகழ்வதல்லது ஒருகாலும் இகழமாட்டவே மாட்டார் மெய்ப்புலவோர்.

புலமையிலக்கணம்—தேற்றவியல்பு—சூத்திரம்.

"சொற்சுவை யுணரான் றோள்வலிச் சுடர்வாள்
மன்ன னாயினு மஃதுணர் மாந்தரிற்
றாழ்வென வுணர்வான் றக்க புலவனே" (உக)

"தமிழ்ச்சுவை யறியாத் தெய்வ முளதெனி
லஃதுண ரலகையிற் றாழ்வென லறமே" (உ௨)

பாவினத்திற் சிறந்த சந்தவண்ணம் பலவும் அகப் பொருட்டுறைகளை யமைத்துப் பாடத்தக்க புலவனாயினும் அவனது வாக்கினிடத்து அருள் வலிமையாகிய பலிதத் தன்மை இலதாயின் அப்புலவன் பலவகைத் துன்பங்களால் வருந்துவன். இக்கருத்தின் சார்பாக "அருட் பிரசாத சித்தியடையாத வித்துவானும், தவசியும் எவ்வித மேம்பா டுற்றிருப்பினும் பலரால் அவமதிக்கப்பட்டு வருந்துவார்க ளென்பது சித்தம்." என்ற சத்திய வாசகமும் பின்வரும் ஏழாமிலக்கணம் – புலமையியல்புச் சூத்திரங்களும் உன்னற் பாலன..

"வண்ணப் பாநுவல் வாயின னேனும்
சொற்படி நடவுந் தொழிலில னயிற்
பல்லில்பாம் பென்னப் பாதலிப் பானே" (ரு)

"வாய்வலி பெறினும் மாதவ மில்லாப்
புலவர்மெய்ப் புகழ்ச்சீர் புனையா ரன்றே" (அ)

"பாவலர் புகழ்ந்தும் பாமர ரிகழக்
கண்டு வாடுறுங் கவிஞர்சிற் சிலரே" (கூ)

"மூடர் போற்ற முத்தமிழ்ப் புலவோர்
பேடில னென்னப் பிழைக்குனர் பலரே" (கய)

ஆதலால் புலவர்கட்குத் தெய்வ பத்தியில் ஊக்கம் மிகுந்த வரைக்கும் தமிழ்ப் புலமையோடு தவப் பெருமையும் அமையப்பெற்று மேம்பாடுறுவர். ஒண்டமிழ்ப் புலமைப் பேறும் மாதவப்பேறும் பெற்றவர் அருட்பெருஞ் சித்திக ளியற்றுவர். அனைவோரும் அவற்றைக் கண்டஞ்சித் தம்மைப் புகழக் கேட்டு அப்புலவர் மகிழ்வர். சாதாரண மான சிறுபாடல் ஒன்றேனும் பாடவியலாத ஒரு சிலர் கேவலமான பேய்வழிபாடுஞற்றி, அற்ப சித்திகளியற்றி அரசரையும் நடுங்கச் செய்து உலகில் பெருமதிப் படைகின்றனர். அது கண்டு புலவனொருவன் அன்னவரைப் பின்பற்றி அன்பு நெறிக்கு மாறுன கள்ளும் ஊனும் படைத்துக் காளி கூளி முதலிய சிறு தெய்வ வழிபா டியற்றி அவ்விழி வழியால் வாக்குச் சித்திபெற முயல்கை பெருந் தவறு. இங்கே.

"சுத்த பூசை தோய்தரு மாகிற்
பேயுந் தெய்வமாம் பிணப்பலி யேற்கிற்
றெய்வமும் பேயா மெனுமிது திறமே"

என்ற வாள்வெட்டுப் போன்ற சத்திய சூத்திரத்தை ஓர்க. அல்லாமலும் ;

"அறிவரிய தெய்வத்துக் குருவஞ் சொல்லி
    ணண்பெணெனு மிரண்டுகுறி யன்றி வேறு
குறியிலையாற் குகன்வாலை யென்ன நாலோர்
    கூறுமிவற் றொன்றைநம்பிக் கும்பிட் டுய்வீர்
பொறிமயிலாங் குடிலைமிசை ஞான சத்தி
    புனைந்தசெங்கைக் குரவனெனப் போற்று கின்றேன்
வெறிகமழ்மென் மலர்ப்பூசை பலநாட் செய்து
    வியன்றமிழான் மிகத்துதித்தில் விரகுற் றேனே"

என்ற நியானுநுபூதியின்படி நறுமணமிக்க புதுமலர் கொண்டு நம்பிக்கைக்குகந்த உயர்தரத் தெய்வ மொன்றை மனவுறுதியுடன் பூசனை இயற்றிக் கும்பிட் டுய்யும் நன்னெறியாளர்க்கே வியன்றமிழ்ப் புலமை எளிதிலே கைவரும். இதனால் புலமைக்கு உறுப்புக்கள் சொல் நயம் பொருள் நயம் பொருந்தக் கவிபாடுந் திறமும், வாக்குப் பலித சித்தியும், இவற்றைத் தரவல்ல தெய்வ உபாசனையும், அன்பருள் ஒழுக்கமும் ஆமெனத் தெளிக. மற்றும், வேண்டும் வரங்கள் தந்தருளும் கடவுள் வணக்கமும் ஆசிரிய வணக்கமும், ஒள்ளிய புலவர் வணக்கமும் கல்வி முதிர்ந்து கவிபாடும் புலவனுக்கு ஒப்புயர்வற்ற வழிகாட்டிகளாம். இவ்வணக்கங்கள் ஒருங்கே அமையப்பெற்ற புலவருக்கே சொற் பொருட் சுவைகள் நிரப்பிய நறிய இனிய கவிதை பாடும் வாக்கு வளமும், இறந்தோரை உயிர்ப்பித்தல் முதலிய அருட் சித்திச் செயல்களும் ஒருங்கே வாய்க்கும். இக்கருத்துப் பற்றியே,

"வாக்குச் சுவையுட னருட்டிற மன்னும்
புலமைத் தேற்றம் பொதிய மால்வரைக்
கடவுண்மா முனிவனைக் கைதொழில் வருமே"

எனக் கிளந்தோதும் புலமையிலக்கணத் திருநூல். இச் சூத்திரத்துடன், நூல் வகுத்துரைக்கும் புலவர், பாயிரத் துறுப்பாக,

"தெய்வத் துதியொடு செப்புநூற் பெயர்மட்
டாயினும் பகர்ந்திட லழகா மன்றே" எனவும்

"பாயிரத் துறுவநிற் பனுவன் முகத்துறு
நுண்ணியர் வணக்க நாறுபங் கினிதே"

எனவும் வரும் அறுவகையிலக்கணம் பனுவலியல்பு—சூத்திரம் கக, கயி இவற்றை ஒப்பு நோக்குக.

2. தேர்ச்சி முறை.

புலமையின் பயிற்சி முறையை ஒருவாறு மேலே கண்டோம். இனியதன் தேர்ச்சி முறையைக் கீழ் வருமாறு காண்போமாக. இப்பகுதியில் புலமை பயின் றறிந்த கவிஞர் புலமை நெறியில் நேரத்தக்க குற்றங்களி னின்றும் விலகிக் குணமென்னுங் குன்றேறி நிற்கும் பொருட்டுத் தள்ளுவன இவை; கொள்ளுவன இவை; என அறிதல் வேண்டும். அவ்வாறறிந்து ஒழுகும் முறைமையே இங்கு தேர்ச்சி முறை எனப்படும். விலக் கறிந்து விலகி இலக்கறிந்திலகி நின்றொழுகின் புலமை தடையற்று மேலோங்கும். குற்றம் நீங்கக் குண முதிக்கும். குணமுதிக்கப் புலமை சுடர்விட்டொளிரும். அதன்பொருட்டுத் தேர்ச்சி முறை தெரிந்தொழுகல் கடன்.

நல்லாசிரியனை அடுத்துக் கல்வி கேள்வி நடைமுறைப் புலமைகளில் ஈடுபடும் ஒருவன், தனது வாக்கினுல் ஒரு பொருளைக் குறித்துக் கவிபாடியதும் அது அப்படியே பலித்துத் தொழில்படக் காணுத நிலைமையில், தனது

புலமை தெய்வீக முடையதெனக் கொண்டு செருக் கடைதல் பெருந் தவறாகும். பவிதத்தன்மையின்றி வெறும் வாக்குத் தாட்டிகத்துடன் கூடிய புலமை அறிவுத் தன்மைப் புலமையென முன்னே ஆராய்ந்து கண்டோம். அப்படிக் கண்டுங்கூட அறிவுத்தன்மைப் புலமையைத் தெய்வத்தன்மைப் புலமையெனக் கொள்ளுதல் கூடாது. ஒன்றை மற்ருென்ருக் கொள்ளும் திரிபுக் கொள்கை தவறுடையதே. ஆனபடியினுல் சிறு புலமையைப் பெரும் புலமையெனக்கொண்டு செருக்குருமல் மேலே எய்தற் பாலதான வலிமை பொருந்திய வாக்கினருள் வாய்ப்பு என்ற தெய்வத்தன்மைப் புலமைக்குப் பாடுபட்டுத் தேறுதல் சால்புடைத்தாகும்.

உறவு மிகுதியினுற் காகத்தைப் போன்று தன்னின மாகிய புலவர்களிடம் மனமாரக் கலந்து பழகாமல், அழுக்காற்று மிகுதியினுல், நாயைப்போல, காரணமின்றிப் பகைமை பாராட்டுதல் புலவர்க்குத் தவருூம். அன்பு, அடக்கம், நிறை, பொறை முதலிய நல்லியல்புகளைப் பயத்தற்குரிய நூல்களிற் பயிலாமையும், தெய்வோ பாசனை வலியின்மையும், அறிஞர் திருக்கூட்டத்திற் கலந்து நல்லொழுக்கம் அடையாமையும், சில நூல்களை அஞசாரியனிடத்திலோ அல்லது சொந்த மனப்பான்மை கொண்டோ கற்றடைந்த சிற்றுணர்வு அல்லது சிறு புலமையும் புலவரைப் புலவர் பகைத்தற்கு முக்கிய காரணங்களாம். உண்மைப் புலமையடைய முயனும் ஒருவன் "கல்விக் கடலைக் கடந்த புலவனுக்கும் செல்வக் கடலைக் கடந்த அரசனுக்கும் நாய்போன்று இனத்தைப் பகைக்கின்ற துர்க்குணம் உண்டாகாது"

என்ற சத்திய வாசகத்தை ஊன்றிப் பார்க்கக்கடவன். ஞாயம் இவ்வாறிருத்தலின் புலவர் தம் இனமாகிய புலவரைப் பகைத்தலும் அன்னவர்பால் அழுக்காறடைதலும் குற்றமெனக் கருதக் கடவர்; அத் தீக்குணச் செயல்களுக்கு ஆளாகாமல் தம்மைத் தாம் காத்துக் கொள்ளக் கடவர்.

வான்றமிழ்க் கவிநயமுணராத அரசர், செல்வர் முதலியோரது முக நட்புக்குத் தெவிட்டாத தீஞ்சுவைத் தமிழ் மொழியின் சாரத்தைச் செவ்விதின் நுகர்ந்தறிந்த பாவலர் பண்டிதர்களது அக நட்பானது எவ்விதத்திலும் ஒவ்வாதென்றெண்ணும் புலவனனவன், விளக்கமான பல நூல்களிலும் வல்லோனாகினும், அறிஞரால் சாமானிய அறிவுடையவனாகவே மதிக்கப்படுவான். புலமைப் பண்பு முற்றுறப்பெற்றவர் மற்ற புலவரைக் கண்டவுடனே மனமுவந்து வரவேற்றுபசரிப்பர்; அளவளாவுவர்; அவரது சொல் நயம் பொருள் நயங்களை வினவுவர்; இவ்வாற்றால் மகிழ்ச்சி மீதூரப்பெறுவர். ஆதலின் அதுவே மெய்யறிவாகும்.

> "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்"

என்ற திருக்குறட்கு இலக்காக ஒழுகி நிற்பர். சில புலவர் கவி பாடிப் பயின்றுவரும் இளம் புலவர்களைக் கண்ட போது அவர்களும் தம்மைப்போலப் புலமை தழைக்கப் பெறல் வேண்டுமென்னும் நல்லெண்ணங் கொள்ளாமல் அவர்களது கவிகளைப் பலவகையிலும் பழித்துரைத்து அன்னார் மனம் புண்ணுகும்படி அச்சுறுத்துவர். அத் தன்மையினர் புலமையென்னும் பசிய பயிர்களை வளர

வொட்டாமல் தடுக்கும் களையனையரும், புலமை முதிர்ச்சி யென்ற நெற்கதிர் மணிகளிலுள்ள பதரனையருமாவர். ஆதலால் புலவர், இன விருத்திக்கு மனங்கொள்ளாமல், அவ்விருத்திக்குத் தடையாகக் கொள்ளும் அழுக்காறும் குற்றமுற்றதாகும். அத்தகையோர், தமது கல்வியினாற் பெறவேண்டிய உண்மைப் பயனையடையாது, வெளிப் பகட்டளவிலமைந்த போலிப் புலமையினரே.

பின்னும், பெரும் புலமையிற் சிறந்தோர்களது நூதன கவிகளிலுள்ள வள்ளிய, ஒள்ளிய, தெள்ளிய சொற்களையும் சொற்றொடர்களையும் திருடிக்கொண்டு தமது இழிந்த கவிகளில் இடைச் செருகலாக்கி வெளியிடும் சிறுமைப் புலவர் சிலர் உலகிலுளர். அப்படிப்பட்டவர் கவி நூல்கள் கோடங்கி போர்வைக் கொப்பாவனவாம். அவ்விடைச் செருகலால் நல்ல ஆடையின் இடையிடையே கந்தைத் துணிகளை வைத்துத் தைத்தால் அவ்வுடை பொலி விழத்தலைப்போலவே, அக்கலப்புக் கவிகளும் சொல் நயம் பொருள் நயம் முதலிய பொலிவுகள் குன்றியும் இழந்தும் வெறும் போலி நூலையே காட்டா நிற்பனவாம். ஆதலின் இளம் புலவர் தமது ஆசானிடம் பயிற்சியில் நன்கு தேர்ந்து பின் கவி நூல்கள் யாத்தற்குரியர். அங்ஙனமின்றி முன் சொன்னவாறு மேலோர் கவிகளின் பகுதிகளைக் கவர்தலும் தீது; கவர்ந்து தமது கவிப் பகுதிகளில் செருகு தலும் தீதினதேயாகுமென்க.

புலமைத் தகுதி பெறுக இளம் புலவர்கள் தங்குரவர் திருவருளை முழுதும் பெற்றுப் புலமையில் நன்கு ஈடு பட்டுத் தேர்தல் வேண்டும்; புலமையில் வளமையும், கொழுமையும் அடையாத சிறுபுன் புலவர்களது

கவிதைகள் நயங்குன்றியும் பயன் குன்றியும் இருக்கும். தேர்ச்சி பெருத புலவர் சுவை குன்றிய தமது பாடற் பனுவல்களை வெளியிடுதல் தவருகும். அத்தகையோர் புலமையின் தகுதியின்மையைக் கடிந்துரைக்கும் புலவர் புராணம்—அகத்திய மகாமுனிவர் சருக்கம் கஉ-ஆம் செய்யுள் "சொன்முடைந்திடு தொழிலுநன் கெய்துருத் தூர்த்தக், கன்மநாவலர்" .... எனத் தொடங்கி .... பொய்ச் செருக்கிலாழ் பவரே" என முடிகின்றது. தமிழ்க்கலை பயின்று புலமையடைந்தவர் அம்மட்டிலே திருத்தியுற்றுப் பாடிப் படித்துத் திரிதல் முறையன்று. பாடியபடி பலிக்கும் பெருமையை உபாசனு பலத்தால் அமையப்பெறல் வேண்டும். அவ்வாறில்லாதோர் பாடும் பாடல், ஓலையாற் பாய் முடைதல்போலச் சொல்லாற் கவி முடையும் தொழிலேயாமென விளக்குவர், "தொழிலும்" என இழிவுப் பொருளில் ஓதினர். அப்படிப் பாடுந் தொழிலும் சரிவரத் தெரியாத சிறு புலவராவோர் சங்கப் பலகையின்மீது அமர்தற்குரிய அருட் பெருமையை விரும்பிய அன்பர்கள் சொன்னுலும், இஃதென்னென்று எள்ளி நகையாடி இருட்கடல் போன்ற அசத்தியச் செருக்கில் அமிழ்வர் என்பது அப் பாட்டின் கருத்து. ஆகலின் கல்விப் புலமையோடு, நல்லுபாசனு பலமும் அதன் பயனுக வாக்குப் பலித சித்தியும், அருட்பெரும் புலமைப் பொலிவும் புலமைத் தேர்ச்சியவாவினர் பெற்றுய்தலே நன்று.

ஆணவத் திமிர்கொண்டும் கொடுந்தன்மை மிக்கும் விதண்டையும் தருக்கமும் பேசித் தகாத தீங்குகள் விளைத்துத் திரியும் வாக்குவாதப் போரினராம் துட்டப்

புலவரை அரசவையிற் கொண்டுபோய் நிறுத்தி முன்னோர் விதியின் வழி சோதித்து வாதித்து வென்றுயர்ந்த புலவர் தோற்றுப்போன புலவரின் தலைகொய்தலும் காதுகொய் தலும் அக்கால வழக்காம். ஆயினும் இக்கால அரசியற் சட்டம் அத்தகு கோரச் செயல்களுக்கு இடந்தராமை உயர்ந்த நாகரிகமேயாகும். குறும்புத்தனம் செய்யும் புலவர்களையும் வாதப்போரில் தோல்வியுற்ற புலவர்களையும் தக்கவாறு தண்டிக்காமல் வாளா இருக்கும் அரசியல் வீணானது. புலவர்கள் தம்முட்கொண்ட சபதத்தின்படி தண்டித்தலும் தண்டிக்கப்படுதலும் நீதியாயினும், தனது தோல்வியை ஒப்புக்கொண்டு வணங்கிநின்ற புலவர்களது தலைகளையும் செவிகளையும் இரக்கமின்றி அறுத்த செயல்கள் அறனன்று. தோற்ற வில்லிபுத்தூரரை, வென்ற அருணகிரியார் துன்புறுத்தாமல் செவிகளுடன் அறன்வலியுறுத்தனுப்பினர். எனவே, தோற்று நின்ற புலவனது வழிபாட்டுக்கும் உண்மைக்கும் வென்ற புலவர் உளமகிழ்ந்து, அரசியல் இடங்கொடுத்தும் செவிகொய் யாமல் விடுத்த மிகுந்த அறவினை புலவரும் அரசினரும் பாராட்டற்பாற்று; பின்பற்றற்பாற்று. இன்னுமொன்று கூறுவல் கேண்மோ. துட்டப் புலவரிழைக்கும் தீங்கு களைக்கண்டு கல்வியாற்றல் மிக்க பெரும் புலவனைவன் சாதக நிலையிலமைந்த தவசியைப்போல் முழுதும் பொறுத் தலும், அறிவிலா மூடனைப்போல் முழுதும் சினத்தலும் இன்றி, சிறு சிறு குற்றங்களைப் பொறுக்குமளவு பொறுத் தும், வரம்பு மீறியபோழ்து சினக்குமளவு சினந்தும் தொழிற்படுதலே சாலச் சிறப்பினதாகும். இதற்கு நாட்டு நடப்பும் அரசியலும் ஒத்துழைத்தற்குச் சட்ட மில்லைபோலும். இவற்றை ஆய்ந்தோய்ந்து பார்க்கு

மிடத்து, புலமைத் தோல்விக்குத் தலைகொய்தலும், செவி கவர்தலுமாகிய அக்கால வழக்கு கொடுமையிற் கொடுமையே; தோல்வி கண்டுபிடித்து நீதமான தண்டம் விதியாதிருத்தல் இக்காலக் கொடுமையிற் கொடுமையே. அக்குறித்த இருபாலும் கோடாமல், வென்ற புலவனுக்குப் புதிய பட்டம் விருதுகள் வழங்கலும் தோற்ற புலவனுக்கு முன்புள்ள பட்டம் விருதுகள் இழப்பித்தலும் நடுவுநிலைத் தீர்ப்பாகும். இதற்கு அரசியல் சட்டமும் நாட்டுத் திட்டமும் வேண்டுவதில்லை; மதுரை, கரந்தை, நெல்லை முதலானவற்றில் ஒளிரும் கல்விக் கழகங்கள் ஏற்ற சட்ட திட்டங்கள் வகுத்து அமுல் நடத்தல் சால்பினதாம்.

ஐம்புலவிடயமாயுள்ள காம நுகர்ச்சியையே தமதுரிமையாகக் கருதி ஒழுகுவோரது கவிப்புலமை நன்னலம் விளைக்கா. அன்னவன் பெண்வழிச் சேறலென்னும் பெருங் குற்றத்தினுக்குட்பட்டுத் தீவினைகளைப் புரியவும் நேரும். அப்படி நேரின் அவன் இகபர நலங்களிழந்து இருமையிடத்தும் பழியும் பாவமும், நாணமும் அச்சமும் உடையவனுவன்; புகழுடையமாட்டான். விடயபோக விருப்பம் சிறிதுமின்றி நீங்கித் தவசிகளைப்போல் மனவொடுக்கத்துடன் இருத்தலும், முழுமூடர்களைப்போல் முழுதும் அதனில் அழுந்திக் கிடத்தலுமின்றி, விதிக்கப் பட்ட இன்பத்துறையிலே அளவும் காலமும் அறிந்து தொழிற்படுதல் புலவனுக்குத் தகுதியென்பதை மக்கள் அறிவின் பக்குவ பேதவியலையும், மனோதத்துவ வியலையும், உடலுறுப்பியலையும் நுணுகியறிந்த மேலோர் மறுக்கவே மாட்டார்கள்.

மாசற்ற முத்தமிழ்ப் புலமையானது, அதனிற் பயில்வோர்க்கு, உயிர்க்குறுதி பயக்கும் உயரிய தீஞ்சுவைத் துதிவாக்கினையும், வாக்குப் பலித சித்தியையும் தேடித் தருமென உணராத புலவர்கள் சிற்றறிவினரே. தெய்வ வணக்கத்துடன் கூடிய துதிப்புலமையின் பொதுச் சிறப்பும், பலித சித்திப் புலமையின் தனிச் சிறப்பும் புன்மைப் புலவர் அறியமாட்டார். இவ்வுண்மை யுணராமையினால் பலவித வாக்குவாதங்களை மேற்கொண்டு பகையுறவுகளைப் பாராட்டியும், நிலையற்ற விடயபோகங்களைப் பொருட்படுத்தியும் நாத்திக வாதம் புரிதல், கருவெடுத்துச் சித்தி விளைத்தல் முதலிய தீமைகளிலே ஈடுபட்டும் உழலும் புலவர்களை அற்பரென இகழ்ந்தொதுக்குவர் அறிவறிந்த பெரியோர்.

புல்லறிவாளரைப் புகழ்ந்து இவ்வுலகில் பெறப்பட்ட பல்லக்கையும், ஊன்சொரிந்தாற்றிய வேள்விப் பயனாய்க் கிடைத்த பொன்னுலக போகச் சிவிகையையும்விட நித்திய மங்களப் பொருளாகிய தெய்வத்தைத் துதித்தின்புறும் இரவலன் கைக்கொண்ட மண்சட்டியும், அவனிடையிற் சுற்றியுள்ள கந்தைத்துணியும் சாலச் சிறந்தன என்றுணராமையும் புலவர்க்குக் கோது விளைத்திடுமே. கொலை, புலை, கட்குடி முதலிய மறச்செயல்களிலே ஊக்கம் விளைக்கத்தக்க பிரபந்தங்களையும், பிறநூல்களையும் விரிவு பெறப் பாடும் புலவர்களைக் கற்றுணர்ந்தடங்கிய சான்றோர் மக்களென மறந்தும் பேசார்; மற்று, இருகால் மாக்களென்றும், அலகைகளென்றும் ஏசுவர். எனவே அன்பு நெறிக்கும் அறநெறிக்கும் முரணான துன்புநெறி, மறநெறி முதலன பற்றிய நூல்களும் செயல்களும் புலமையின்

அடிப்படைக்கே ஊறு விளைத்தலால் அவை அடியோடு கடிந்து ஒதுக்கற்பாலனவென உணர்க.

"எட்டுச் சந்தமு மியைதரு புலமையுஞ்
சித்தியோ ரெட்டுஞ் சேரப் பெறுவான்
கருணையொன் றிலனேற் கடைப்படு வானே"

என்ற சத்திய சூத்திரமும்;

"கல்விப் பெரும்பயன் கருணை யென்னு
நல்விற் பனனே நாவலர்க் கிறையே"

என்ற ஏழாமிலக்கணம் — புலமையியல்பு — சூத்திரம் ஏழாவதும் ஈங்கெண்ணற்பாலன.

சிறு புலவராற் பாடமுடியாத அரிய பனுவல்களைப் பாடி முடித்த புலவன் பணமுட்டு முதலிய துன்பங்கள் நேர்ந்திடுங்கால் பொருள் வருவாய் கருதி அந்நூல்களைப் பிறர் பேரால் வழங்கும்படி பாத்தியப்படுத்துவது பெருந் தவறு. கலைமகளருளாகிய புலமைச் செல்வத்தினன், அலை (திரு)மகளருளாகிய பொருட் செல்வத்தினை அடையும் பொருட்டுப் பொருட் செல்வரைத் தொழுது கை கட்டிப் 'பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் காட்டி' அவர்பின் கெஞ்சித் திரிதலும் பெருந்தவறு. இன்னும், தனது தகுதியை ஒரு சிறிதும் அறியாத அரசர், செல்வர் முதலியோரது கோட்டியிற் சென்று தன்னைப் புகழ்வதும் தவறு; மனம் நொந்து இகழ்வதும் தவறு. தகுதியுணர்ந்த புலவர் அழுக்காறு முதலிய காரணங் களால் தம்மை அவமதிக்கும்பொழுது "தம்மைப் புகழ் வது தகும் புலவோர்க்கே." அத்தருணத்தில் தம்மைப் புகழ்ந்துகொள்ளாதிருத்தலும் தவறு.

பின்னும் வெற்றி தோல்விகளை முறையே தாக்கக்க ஆங்காலம் போங்காலங்களைத் தெரிந்து வினையாற்றுமை யும், புகையிலிருந்து நெருப்பின் உண்மையையும், நெருப் பிலிருந்து புகையின் வரவையும் கண்டுகொள்வது போன்றே காரியத்தினின்று காரணத்தையும், காரணத்தி னின்று காரியத்தையும் ஆராய்ந்தறிந்து கொள்ளாமையும், ஒழுக்கமும், நிறைவும் பூண்டு விளங்கும் கவிஞர் பெரு மக்களுக்குத் தவறே. தனது திருவருட் சத்தியால் எல்லாம் படைத்துக் காத்துத் துடைக்கும் முழுமுதற் கடவுளே காரணம்; அதன் முன்னிலையிலே தோன்றி நின்றொடுங்கும் தன்மைத்தான உலகம் காரியம்; என உணர்ந்து பற்றொழிவும் பதியுறவும் பெறுவோனது புலமையே நிறைவுடைத்தாம்; ஏனையோர் புலமையே குறைவுடைத்தாம். ஈண்டு, "ஊழ் தெய்வ வசத்ததாயும் முயற்சி சுவதந்திரமாயும் தோற்றியபோதும் நன்முயற்சி செய்தற்கேற்ற மெய்யுணர்வைக் கொடுத்தலும், அங்ஙனஞ் செய்யும்படி செலுத்துவதும் தெய்வத்தின் தொழில்களாயே இருக்கின்றன" என்ற சத்திய வாசக மும்; "மிகவுஞ் சிறந்த பெரியோர்களால் ஏற்பட்ட அவனசையாமல் அணுவசையாதென்ற வாக்கியம் விவேகி களின் நன்முயற்சியைக் கெடாது; மற்றையோர்களுக்குச் சோம்பன் முதலிய துர்க்குணங்களைக் கொடுத்துக் கெடுக் கும்" என்ற சத்திய வாசகமும் சிந்திக்கற்பாலன.

பின்னும் எடுத்துக்கொள்ளப்பட்ட பொருண்மொழி களை விளக்குதற்கேற்ற பகுதிகளை அமைத்துக் கூறுது, குன்றக்கூறல், கூறியது கூறல், மயங்கவைத்தல் முதலிய குற்றங்கள்பட நூலியற்றலும் கூடாது. சுருங்கச்

சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகள் தோற்று விக்குமிடத்தில் மிகைபடக் கூறலும் கூடாது. சுருங்கிய பொருண்மொழியைப் பல கவிகளால் மிக விரித்துரைத் தலும், மிக விரிவான பொருண்மொழியைச் சில கவி களால் மிகச் சுருக்கியுரைத்தலும், பொருத்தமில்லாத தீயொழுக்கங்களையும்,பொய் விசித்திரங்களையும் அழுத்திக் கூறுதலும் நூலின் பெருமைக்கும், மாட்சிமை தங்கிய பெரும் புலமைக்கும் இழுக்கமே பயக்கும். ஆதலின் அவ்வாறு பிழைபடக் கூறுராக; ஏனெனில் நெறிமுறை பிறழ்ந்து யாக்கப்பட்ட நூல்களையும் அப்பனுவல்கள் பாடிய புல்லிய புலவர்களையும் அருந்தவப் புலவர் பெரு மக்கள் தமது திருவுளத்தில் மதிக்கவே மாட்டார்கள். நாலடியாரின்படி "அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் மிகை மக்களான் மதிக்கற்பால" அல்லவோ?

கற்று வல்ல கவிஞன் வேற்றுப் புலவர்களது கவிதை களில் மிளிரும் இதைவுறுத அரிய எதுகைத் தொடை முற்று மோனைத் தொடைகளையும், பெரிய பொருளழகு களையும் பாராட்டாமல் அவற்றிலுள்ள ஏதோ ஒருவிதக் குற்றங் குறையின் காரணமாக அவற்றை இகழ்வது தகுதியன்று. "குணநாடிக் குற்றமு நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" வேண்டும். அன்னவன் அவை யறிதலும், அவையடக்கம் சொற்றலும், கல்வித் தவத்தினருக்குப் பணிவு காட்டலும் இன்றியமையாதன வாம். . அங்ஙனமின்றி இறுமாப்படைவனாயின் அவனது புலமை தன்மையிடத்தும், முன்னிலையிடத்தும், படர்க்கை யிடத்தும் ஒரு பயனுமின்றி வெறும் புலமையாய்க் கழிந்துபோம். எனவே, கல்விப் பெருக்கமாகிய விற்பத்

தியும், பாடும் திறமையும் கைவரப் பெற்ற புலவனானவன் தோன்றாத் துறை பல சொல்லி முடிப்பினும் புலவர் சபையை வணங்கி அவையடக்கம் கூறுவானாக; பலித வாக்குச் சித்தி, சொரூப சித்தி பெற்றுயர்ந்த தெய்வப் புலவரைக் கண்டவிடத்தும் கேட்டவிடத்தும் அவர்தமைத் தன்போல்வார் என்றெண்ணி இறுமாப்புறாமல் அஞ்சி யிறைஞ்சுதல் கடனே. அன்னவரை வணங்கலும் அவருடன் இணங்கலும் நன்று; வணங்காமையும் பிணங்குதலும் தீது.

சொல்விற்பனர் இடங்களுக்கேற்பப் பொருத்த முள்ள பாகமாகப் பாவினம் யாத்தலே நன்மையாம். அப்படிக்கின்றி எவ்வகை நூலையும் கடினமான யாப்பில் தொடுத்தல் புலமைக் கிழுக்கம் பெய்வதாகும். நாடகம், கீர்த்தனை, சிந்து, கும்மி முதலிய பனுவல்களை மகளிர் சிறுவர் முதலியோர்க்கும் எளிது விளங்கும்படி திராட்சை கதலிக்கனிப் பாகத்திலும் மடக்கு, திரிபு, யமகம், ஏக பாதம் முதலிய கரட்டு முரட்டுச் சித்திர கவிகளையும் விதி நூல்களுக்குரிய சூத்திரப் பாக்களையும் நாரிகேளமென் னும் தெங்கங்கனியின் பாகத்திலும் யாத்தல்முறை.

எல்லா முயற்சியும் தெய்வத்தின் அருளை முன் னிட்டே நிறைவேற்ற வேண்டுமென்னும் நிச்சயத்தை யும், தெய்வப் பெருமை, கடவுளர், அடியார் இவர்களது வழிபாடு முதலிய உயர்தரப் பொருண்மொழிகளையும் காட்டவும் ஊட்டவும் வல்ல கவிநடை நூல்களையும் உரை நடை நூல்களையும் தனது வழிபடு கடவுள், ஆட்கொண்ட குருபரன் இவர்களது வாழ்த்து வணக்கங்களாகிய கல்விப் பயன்களுடன் துவக்கி முடிக்கும் புலவனே ஆசிரியத்

தன்மையும் புலமைத் தன்மையும் உள்ளபடி பூண்டவனு வன். அப்படிக்கின்றி வேதங்களிலே அதமாதம பக்கு வர்க்கென மேலுக்கு மேலாக ஒப்புக்கொள்ளப்பட்ட வேள்விக் கொலை புலையாதிய அன்பு நெறிக்கு மாறான நெறிமுறைகளையும், ஏகான்ம வாதம் அல்லது அனீசுர வாதம் முதலிய விபரீதங்களையும் பூர்வபட்சப் படுத்தாமல் சித்தாந்தப்படுத்தும் நூல்களைப் பாடிப் பரப்புவோன், புலமை நெறியைத் தூர்க்க முயலும் இழுக்கினுக்கும் வழுக்கினுக்கும் மறச் செயலுக்கும் துணைபுரியும் புலவருட் பதடியே யாவனென்க. தீவினையாளர்கள் கடவுள் வழி பாடு, அடியார் வழிபாடு முதலிய ஆத்திகச் செயல்களை மறுத்துப் பேசியும் எழுதியும் அத்தீக்கொள்கைகளைப் பரப்பிவருங் காலத்திலுங்கூடத் தனது நூல் வழக்கு எவ்விதத்திலும் குன்றியோ அழிந்தொழிந்தோ போகாம லிருக்கும் வண்ணம் குற்றமற்ற நற்றமிழ்ப் புலவனானவன் இறை வழிபாடு, தொண்டர் வழிபாடு, குரு வழிபாடு இவற்றுடன் தனது நூல்களைத் தொடங்கியாத்தும், அந் நற்கொள்கைகளைப்பற்றிக் குறிப்பிட்ட பற்பல இடங் களில் சொற்பொழிவாற்றியும், சுதேச விதேச விருத் தாந்தப் பத்திரிகைகளிலே தொடர்ந்தெழுதியும், மறுப் பெழுந்தோறும் தனது உண்மைக் கொள்கைகளைத் திரு வருள் பெற்ற அநுபூதிமான்களின் சுருதியுத்தியநுபவங் களைக்கொண்டு நிலைநாட்டுவோனாகி அம்மறுப்புக்கு மறுப்பைத் தொடர்ந்தெழுதிப் பரப்பியும் ஒண்டமிழ் மொழிக்கும் புலமைத் தொழிலுக்கும் ஊக்கமும் ஆக்க மும் தேடுவானாகை. அவ்வண்ணம் தொழிலாற்றும் புலவன் ஆன்றோர் ஒப்புக்கொண்ட வேத விதிகளில் சமரசமான பாகங்களையும், ஆகம சாத்திர நெறிகளையும், புராண இதி

காசங்களின் அறிவுசான்ற உத்தமக் கொள்கைகளையும் விபரீத ஆராய்ச்சி யுணர்வால் மறுத்தொதுக்குதல் தனது புலமை யொழுக்கத்திற்கு இழுக்கந் தேடுவதாகும்.

எல்லா மொழிகளும் பரகாத அணுக்களால் அமைவனவேயாம்; வரிவடிவும், சொற்பொருள்களும் ஆசிரியனது உள்ளக் குறிப்பே எனவறிந்து காய்தல் உவத்தலின்றித் திகழும் மெய்யறிவினர், தமிழ் மொழியைவிட உயர்தர மொழி வேறொன்றுளதெனப் பிறனொருவன் சொல்லக் கேட்டபோழ்து வாளா விருத்தல் கூடும்: புலமைத் தேர்ச்சியிலே அமைந்தொழுகும் பாவலனே ஒரு உயர்தனிச் செம்மொழிக்குள்ள எல்லாச் சிறப்பும் உள்ளபடியே ஒருங்கமைந்து விளங்குவதும், தனக்குரிமையும் பயிற்சியில் அமைந்ததும் பயிலப் பயிலப் புத்தம் புதிய இன்பத்தை நுகர்விப்பதும் தமிழாதலின், எம்மொழிக்கு (எமது தாய் மொழிக்கு) எம் மொழியேனும் உயர்வுடைத்தென ஒப்புக்கொள்ளுதல் கூடாததே. அன்றியும் (வண்ணத்தியல்பில்) யாப்பிலக்கணத்தில் வரையறுக்கப் பெறும் கவியினங்களில் தலைமை பெற்றது அகப் பொருளின் துறைகளமைந்த வண்ணக் கவியே. இக் கருத்தினை யொட்டி,

"எண்ணப் படுபவற் றெவ்வகைக் கவிகளும்
வண்ணக் கவிபொரு மாண்பின தன்றென்
றிசையார் புலமைக் கிழுக்கு மிகுமே"

எனவரும் புலமையிலக்கணம் — தவறியல்பு — ௩௰-ஆம் சூத்திரம் இங்கு ஓர்தற்பாலது. வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தப்பா, ஆசிரியப்பா முதலாக யாக்கப் பெறுகிற பாவினங்களிலெல்லாம் சந்தவண்ணயாப்பே

உயர்வுடைத்தெனவும், வெண்பா, வண்ணத்தின் ஆபாச மெனவும் வண்ணக் கவிச் சரபர் கூறுவர். இவ் வுண்மையை அனுபவத்தால் தெளியாத புலவர்களே "தமிழ் மொழிக் குயர் மொழி தரணியிலுளது" என மறுத்துப் பிதற்றுவர். இம்மறுப்பினை ஒப்புக்கொள்ளுதல் தண்டமிழ்ப் புலமையில் தேர்ச்சி பெறாத தன்மையையே காட்டும்.

ஒட்டக்கூத்தரைப் போன்ற ஒரு புலவன் புகழேந் தியைப் போன்ற மற்றொரு புலவனது பாடல்களிலுள்ள சுவையின்பத்தை உள்ளபடி யறிந்து மனத்தினில் அநுபவிப்பவனாயினும், அதனை வெளிக்காட்டிப் பாராட் டாமல் வஞ்சகத்தால் அப்பாடல்களை இகழ்ந்து கூறுகின்ற கொடுமைக்குத் தக்க தண்டனையைத் தெய்வமே புரிவிக்கு மென்ப. வறுமை, இழிகுலம், அடிமை வாழ்வு, பல நூலாராய்ச்சியின்மை முதலிய குறைபாடுகள் உள்ளவ னேனும், நல்லொழுக்கத்திற் சிறந்தோனது புலமையே சிறந்தது. அறிவிற் பெரியார் தமது ஆராய்ச்சியநுபவங் களினால் கண்டுணர்ந்த உண்மை இதுவாயிருப்பவும் செல்வம், உயர்குடிப் பிறப்பு, அரசியற் பெருமை, அணி கலச் சிறப்பு, உடைப் பகட்டு, பன்னூலாய்வு முதலிய காரணம் பற்றியேனும் ஒருவனது புலமைக்குச் சிறப்புச் சொல்லுதல் வழுக்குடைத்தாம். நற்றமிழை வளர்த் தளித்த ஔவைத் தாயார் மயக்கவுணர்வினாற் புலமையில் ஓரம் பேசுவோரைக் குறித்து;

"விரக ரிருவர் புகழ்ந்துவர வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும் — அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று"

என்று புகழ்வார்போல் இகழ்வாராயினர். ஆதலால் கோடுதல் புலமைக் கிழுக்கமும், கோடாமை புலமைக் கொழுக்கமும் வளர்ப்பனவென உணரத்தகும்.

இதுகாறும் கூறியவாற்றால் விதிவிலக்கறிந்து ஒழுகுதலே புலமைத் தேர்ச்சிக்கு அழகென மதிக்கத்தகும். "தேனேர் செந்தமிழ்ச் சுவையுண் டணிமா வாதிச் சித்தி மிகச் செய்துமனத் திருத்தியெய்தி, மானேர்கண்ணார் கலவிச் சுகமுங் கைத்து மறுபிறப்பில் லாதொழிந்தால் மாண்பிஞேரே" என்றபடி இழுக்கத்தகன்று ஒழுக்கத்துயர்ந்த அருந்தவத் தமிழ்ப் பெரும் புலவரே நடுநிலை வழாத சான்றோராதலின், அன்னவர் விரும்பிக் கொள்ளுவன யாவும் விதிகளாகவும், வெறுத்துத் தள்ளுவன யாவும் விலக்குகளாகவும் கொண்டு, புலமையில் தேர்ந்தவர் ஒழுகற்பாலர்.

3. தொழின்முறை.

இதுவரை புலமையின் தேர்ச்சிமுறை பற்றி ஆராய்ந்தோம். இனிப் புலமையின் தொழின் முறை பற்றி ஆராய்வோமாக. அத்தொழின் முறை சிறப்பு — மரபுவகை, பொது — செயல்வகை என்ற தலைப்புக்களில் முறையே ஆராயப்படும்.

A. சிறப்பு — மரபுவகை.

புலமைத் தொழிலில் தேவர் முதல் மக்கள் ஈறாக ஈடுபட்டுள்ளனர். அன்னார் ஈடுபட்டுள்ளவாற்றைப் புலமைத் தொழிலின் சிறப்பு வகையிலே பார்ப்போமாக. புலமை நிலைமை அவாவுநர் அதனை யறிந்தொழுகல் கடனும்.

அகண்ட மயமாகிய தெய்வமுங்கூடப் புலமைத் தன்மையின் வடிவாய் விளங்குகின்றது. இவ் வுண்மையைச் சரிதங்களின் வாயிலாகப் பெரும்பாலார் அறிவர்; பெருமை மிக்க அநுபூதி வாயிலாகச் சிறுபாலார் அறிவர். முதல்தரத் தெய்வங்கள் புலமையிற் கலந்து பொலிந்தவாற்றை ஆய்வோம்.

பொதுவாக மக்கள் அறிவிக்க அறியும் இயல்பினரா யிருத்தல் பற்றிக் கல்வி கேள்விகளை ஆசான் அறிவுறுத்த அறியுந் தன்மையைப் புலமையென்பர். ஆனால் தேவர் யாவரும் அனைத்தும் தாமாக அறியும் இயற்கையறிவு படைத்தவராவர். இணையற்ற தமிழ் மொழியினாற் கவிதை பாடுந் திறமையில்லாத தேவர்களுங்கூட, "புலவர்" என்ற பெயரை விரும்பித் தமக்குரிய குறியாகத் தரித்துக் கொண்ட உண்மை அறிஞர் நன்குணர்வர். புலவர் என்னும் பலபொருள் ஒருசொல்லாகிய பண்புப் பெய ரானது அறிவின் மேம்பட்டோர் என்னும் பொருளின தாய்க் கல்வியொழுக்கம் மிக்கோர்க்கும்; ஓசை முதலிய ஐம்புல வயப்பட்டுப் போக பூமியாகிய சுவர்க்க புவனத்திலிருந்து அரம்பையாதியோர் கூட்டுறவில் மகிழ்ந்துள்ளவர்களென்னும் பொருளினதாய்த் தேவர் களுக்கும் வழங்கப்படுமாற்றை உணர்ந்துள்ள நாம் ஈண்டுப் புலம் என்னும் பெயரடியான் வந்தமைபற்றிப் புலவர் என்னுங் கொள்கை பெறப் புலமை (இலக்கணம்) என்னும் அதிகாரப் பகுதி நோக்கி ஒருங்கே வைத்து உபசரிக்கப் பட்டனரென்க. இனிப் பெரிய தெய்வங்கள் புலமையில் ஈடுபட்டிருத்தலைப்பற்றிச் சிறிதறிவோமாக.

சிவன்.

பாணபத்திரன் என்னும் ஓரன்பரும், தருமி என்னும் ஒரு வேதியரும், பெத்தான் சாம்பானும் பயன்பெற்றுய்யும் பொருட்டுப் பரமசிவன் அவ்வப்போது தமிழ் மொழியிற் கவிகள் பாடியருளினர். அன்றியும் செழித்து வளர்ந்த செந்தமிழ்ச் சங்கத் தலைவராய் வீறுகொண்டுயர்ந்த நக்கீரர் தம்முடன் முரண்கொண்டு வாதுபுரிந்த தறுவாயில் நெற்றிக்கட் பரமன் அவரை வெறுத்தும் சில பாடல்கள் புகன்றருளினர். இவ்விதம் புலமையில் ஈடுபட்டு விளையாடியருளிய காரணத்தினுல் சிவமாகிய முதற் பெருங் கடவுளை ஒரு புலவரே யென்பதும் பொருத்தமாம். கலையுணர்வுகொண்டு கவிகள் பாடும் சிற்றுணர்வின ராகிய புலவர்களோடு முற்றறிவினரான முழுமுதற் சிவபரஞ் சுடரையும் ஒரு புலவராக வைத்தொப்புமை கூறுதல் உபசாரமே. 'அலகிலா விளையாட்டுடையாரவர்' அன்பர் உய்யும் நிமித்தம் அருட்கவி கூறுதல் முதலிய புலமைத் தன்மைகளைக் காட்டியருளியமை தமது நிர்ஹேதுக கருணையினுலே என்க.

அம்பிகை.

இனி அம்பிகை, புலமையில் ஈடுபட்டவாற்றை அறிகுவோம். தேவி கொழுந்தமிழ்க் கவிதை பாடித் தனது உபாசகன் ஒருவனுக்கு, மிடிநோய்க்கு மருந்தான துண்டு. அவ்விவரம் வருமாறு:—

பாண்டி நன்னுட்டின் ஒரு பதியில் புரவலன் நகரி சோதனையின் பொருட்டு வேற்றுருக்கொண்டு இரவில் வெளியிடங்களில் சுற்றி வைகறைப் போதிலே மீண்டு

கொண்டிருந்தனன். அத்தருணம், அந்நகர்ப்புறத் தருகிலே ஒரு தாழைச் செடியின் அடியிலே சிறிது நேரத் திற்கு முன்புதான் பிறந்த ஒரு சிசுவானது, கை கால் உதறிக்கொண்டு அழுதுகொண்டிருப்பதையும், அதன்மீது படர்ந்திருந்த கருப்பை அழுக்காகிய அமிசத்தைக் கொத்த வரும் காகங்கள் அச்செயல்கண்டு ஒதுங்குதலையும் கண்டனன். கண்டு வியந்த அரசன்முன் ஓரிடைப்பெண் சந்தித்தனள். மன்னவன் அன்னவளிடம் அக் குழந்தையைப் பாதுகாக்குமாறும், தான் அரசனென்னும் விவரமுங் கூறி, சிறிது பொருளும் வழங்கி, நிகழ்ந்த செய்தியை வெளியிடாதிருக்கும்படி வற்புறுத்தி அரண்மனை சேர்ந்தனன். பின் தான்கண்ட அதிசயத்தை யறிந்து "கண்டசித்தி" பாடும் புலவர்களுக்குப் பொற் கிழிப் பரிசு நல்குவதாக நாடெங்கும் பறைசாற்றுவித் தனன். அரசன் ஏவலாளர் சாற்றிய அப்பறைச்சாற்று விவரம் தெரிந்த புலவர்கள் பலர், உண்மை நிகழ்ச்சியை அறியும் அருளாற்றலில்லாத தமது வெறும் புலமையை வெறுத்து முகவாட்டமும் அகவாட்டமும் கொண்டிருந் தனர்.

அத்தறுவாய், ஆங்கு, வறுமைப் பிணியும், சிறிது கல்வியும் உடையவனான அம்பிகை உபாசகன் ஒருவன் தனது தெய்வத்தை நோக்கிக் கற்றாவின் சிந்தையெனக் கசிந்துருகி நின்று, கண்டசித்தி சொல்லித் தருமாறு வேண்டிக்கொண்டனன். அப்போழ்தே நித்திய கன்னி யாகிய உமாதேவியானவள், பாண்டிய மன்னவனை முன்னிலையாக்கி, அசரீரியால் கீழ்க்கண்ட கவியைக் கூறினள் :—

"கண்டாயோ மீனவா! கானகத்தின் கள்ளியின்கீழ்
வெண்டாமரை பூத்து விளக்கெரிய — ஒண்டொடியாள்
வாழ்க்கைப் படுமுன்னே மைந்தனையும் பெற்றெடுத்தாள்
காக்கைகளை யோட்டுகின்ற கை"

என்னும் இக்கவியை எழுதிக்கொண்ட அன்பன், களங்கமில்லாது வெள்ளறிவினால், "கை" என்னும் ஈற்றுச் சீரோடு நிறுத்தாமல், "கை" யென்றாள் என்றெழுதிக் கொண்டான்.

அம்மையின் அடிகளை வணங்கி, அருளை வியந்து, அக் கவிச் சீட்டை அரசனிடம் கொடுத்தனன். பாண்டியன் அதனை வாங்கிப் படித்துப் பார்த்து, அது, பெரும்பாலும், முன் நிகழ்ச்சிக்கு ஒத்திருப்பது கண்டு மகிழ்ந்து பொற் கிழியை வழங்கி அவனை விடுத்தனன். அதுகண்ட அமைச்சன் அக்கவிதையை நன்கு படித்துப் பார்த்து, அரசன் கருத்தொத்திருப்பினும், கவி கூறியவர் பெண் ணொருத்தியேயென்றும், அவளை இன்னாளெனக் கண்டு பிடித்தபின்பு பரிசு கொடுத்தலே முறையென நவின்றனன்.

உடனே அரசன் ஏவலாளர், கிழிபெற்றேகும் அன்பனை அரசன்முன் அழைத்துவந்து விடுத்தலும், அரசன், இக்கவி சொல்லியவர் யாவரென்னலும், அன்பன் எனது அம்பிகைத் தாய் தான் கூறினள்; அதன்படி யான் எழுதிவந்தேன்; என்றுண்மையுரைத்து நின்றனன். அரசன் அவ்வுரையை நம்பாமல், தான் முன்பு கண்ட இடைப்பெண் கூறியிருப்பளென்ற விபரீத எண்ணங் கொண்டு அவனைத் தண்டிக்கச் சொல்லினன். ஏவலாளர், அவனைக் கம்பத்திற் கட்டி வளாரை யோங்கி அடிக்க முயன்ற அத்தருணத்திலேயே, இறைவி, தனது, வளைய

லணிந்து மஞ்சட் பூச்சமைந்த திருக்கரத்தை அரசன் காண நீட்டி, அடிக்குங் கையைத் தடுத்து, ஏனடா என் பிள்ளையை அடிக்கிறாய் என வினவினள். அதுகண்ட அரசன், அச்சமும் வியப்பும் மகிழ்வும் பூத்து, அம்மா! உனது திருக்கைக் காட்சியையும் திருவாய் மொழியையும் பெறுதற்குத் தானென்று ஓதி வணங்கி, அன்பனைக் கம்பத்தினின்றும் அவிழ்த்துவிட்டு, மேலும் பலவிதப் பரிசில்கள் வழங்கியனுப்பினன். இச்சரித உண்மை கண்டவர் அம்பிகையை ஞான பண்டிதை, ஞானப் பூங்கோதை, அருட் பெரும் புலவி; என்று கூறத் தயங்குவரோ!

முருகன்.

பொய்யாமொழிப் புலவர், பகழிக்கூத்தர் என்னும் இரண்டன்பர் முன்னிலையில், முறையே "விழுந்த துளி"; "பூமாது" என்ற தொடக்கமுள்ள இரண்டு தமிழ்க் கவிதைகளை இயற்றியவரும், ஒப்பற்ற பெருமை வாய்ந்த அருணகிரிநாதருடைய அநுபூதியில் "சும்மா இரு, சொல்லற" என்றும், "அறிவே நனவு" என்றும் கூறி, "முத்தைத் தரு பத்தித் திருநகை" என்ற அடியெடுத்துக் கொடுத்துப் பாடுமாறு பணித்தவரும், வண்ணச் சரப தண்டபாணி சுவாமிகள் மனவெளிக் கனவினிடத்துப் பல பாடல்கள் பாடி இனிமையுடன் அடிமைகொண்டருளியவருமான முருகக்கடவுளானவர் எல்லாமுணர்ந்த புலவரேயாவர். இதனை "பற்பல பாடற் பகர்ந்தினிதாண்ட முருகப் பெருமான் முழுதுணர் புலவனே" என்ற புலமையிலக்கணம்—மரபியல்பு—டு—ஆம் சூத்திரத்தின் பிற்பகுதியால் அறிக.

கலைமகள்.

வெண்டாமரையின்மீது விளங்கி, யாவரெக் கவிகள் கூறினும் அவையனைத்தும் தன்னதென்று கொண்டருளும் வாக்கின் கிழத்தியாகிய கலைமகளும், மதுராபுரிப் பொற் றாமரைக் குளத்தின் நடுவில், பொய்யாமொழித் திரு வள்ளுவ நாயனார் பொருட்டு "நாடா முதல்" என்ற தொடக்கமுள்ள திருக்கவியொன்றைக் கூறியருளினள். ஆகலின் வாக்கருள் வாணித்தாயும் பொருவரும் செந்தமிழ்ப் புலமையில் ஈடுபட்டருளியவாறு காண்க.

திருமகள்.

இயலிசை நாடகம் என்னும் முப்பிரிவினதாயுள்ள தமிழ் மொழிப் புலமையின் தலைமை வாய்ந்த அகத்திய மாமுனிவர் புரிந்த தமிழ்த் துதிக்காக இலக்குமிதேவி யானவள் அம்முனிவருடன் ஓர்கால் தொடர்ந்து செல்வதாயினள். எனவே இலக்குமியும் தமிழ்ப் புலமையில் ஈடுபட்டருளியவாறு அறிகிறோம். இச் செய்தியைப் புலமையிலக்கணம்—மரபியல்பு—௮-ஆம் சூத்திரம்,

> "முத்தமிழ்ப் புலமை முனிக்கோன் பாடலிற்
> பெய்வளைத் திருமகள் பின்றொடர்ந் தனளே"

எனக் குறிப்பிடுகின்றது. மற்றும், புலமையிலக்கணம்—தேற்றவியல்பு,

> "கணபதி முருகன் கலைமக ளுமையவள்
> பரமன் பரிபுகப் பகவ னென்னு
> மறுவகைத் தெய்வமு மருந்தமிழ்ப் புலமைக்
> குரிய வாமென் றுரைத்தன ருணர்ந்தோர்"

என்ற ௮-ம் சூத்திரம் ஆறுவகைத் தெய்வங்கள் தமிழ்ப் புலமைக்கு உரியனவென அறிவிக்கின்றது.

இதுவரை, தேவர்கள் புலமையில் ஈடுபட்டருளிய வாறு ஒரு சிறிதறிந்தோம். இனி மக்கள் உடம்பில் வந்தவருட் பலரும் தமிழ்ப் புலமையில் ஈடுபட்டுயர்ந்த வாற்றை ஒரு சிறிதறிவோம்.

முச்சங்கப் புலவர்.

முதல் இடை கடை என்னும் முறையின் அமைந் தொளிர்ந்த மூன்று செந்தமிழ்ச் சங்கங்களினிடத்து, மொத்தத்தில் ஐயாயிரத்து நானூற்று முப்பத்தொன்பது பெரும் புலமையாளர்கள் அமர்ந்து செந்தமிழ் ஆராய்ந்து வளர்த்து வந்தனர் என்ப. அம்மூன்று சங்கத்தில் முறையே நாலாயிரத்துத் தொள்ளாயிரம், நானூற்றுத் தொண்ணூறு, நாற்பத்தொன்பது என்னும் தொகையின ரான (5439) புலவர்கள் காலக்கிரமத்தில் இருந்து வந்தனர் என்பர் அறிஞர். அவர்கள் சிவபெருமான், முருகப்பெருமான், அகத்தியர், தொல்காப்பியர், நக்கீரர் முதலினராவர்.

புலமையிலக்கணம்—மரபியல்பு—சூத்திரம் கரு.

“மூவகைக் கழகத் தையா யிரத்து
நானூற்று முப்பத் தொன்பது புலவோர்
வாழ்ந்தன ரெனப்பகர் மாந்தர் பலரே”

காளமேகப் புலவர் வெண்பா.

(புலவர் தொகை வேறுபாடு)

“நாலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்கும்
கத்தன் மதுரையிற்சொக் கன்”

சைவ சமயத்திலும், வைணவ சமயத்திலும், கௌமார சமயத்திலும், சாத்தேய சமயத்திலும் ஈடு பட்டுப் பரசிவத்தின் பரத்துவத்தையும், விஷ்ணு மூர்த்தி யின் பரத்துவத்தையும், குமாரக் கடவுளின் பரத்து வத்தையும், சாத்தேய சமயத்தின் பரத்துவத்தையும் செவ்விதினறிந்த புலவர் பலர் புலமையில் ஈடுபட்டுப் பாடியுய்ந்தனர். வாக்கினருள் வாய்ந்துய்ந்த பிற மதத் தினரும் உளர்.

திருமழிசையாழ்வார்.

நாலாயிரப் பிரபந்தம் பாடியுய்ந்த பெரும் புலவர் களில் திருமழிசையாழ்வாரும் ஒருவராவர். காஞ்சி புரத்தில் கணிவண்ணன் என்னும் அரசன் தம்மை மதியாமையால் சினந்து, செந்நாப்புலவரென்னும் சிறப்புப் பெயரமைந்த திருமழிசையாழ்வார் ஒருநாள் கூறிய ஒரு வெண்பாவுக்காக ஆங்குள்ள மணிவண்ணப் பெருமாள் (விக்கிரகம்) எழுந்து அவருடன் சென்று, பின், அவருரைப்படி மீண்டு திருக்கோயிலடைந்தது. இப்புராண சரிதத்தால் விட்டுணு மூர்த்தியும் புலமைப்பான்மை யுடையவரென அறியலாகும்.

மாணிக்கவாசகர்.

சிவபிரான் "யான் பாண்டிநா டுடையேன்" எனக் கூறிவந்து, ஆர்வத்துடனே திருக்கையில் ஏடுபிடித் தெழுதும்படி, திருவாதவூரின்கண்ணே அவதரித்த பேரறிஞரான மாணிக்கவாசக சுவாமிகள் நிகரற்ற தமிழ் மொழியினல் அரிதினும் அரிதான துதிமாலையாகிய திருவாசகத்தைத் திருவாய்மலர்ந்தருளினர்.

திருநாவுக்கரசர்.

சமண மன்னவன் உரைப்படி ஏவலாளர்களால் பாடலிபுத்திரம் என்னும் பதியிலே அமைக்கப்பட்ட சுண்ணும்புக் குகையானது அருளால் வெப்பமின்றிக் குளிர்ச்சி செய்யவும், அவ்வரசனது கோபாசலம் என்னும் யானையானது தமது வடிவைக் கண்டு வெருட்சியடையவும், தம்முடன் பிணித்துக் கடலில் ஆழ்த்தப் பெற்ற கற்றூணனது மேலே மிதந்து கரை சேரவும் திருவருட் கடலில் முழுகியெழுந்துயர்ந்த திருநாவுக்கரசர் "என்னப்பன் என்னைப் பாடுவான்" என்று பரமசிவன் புகழ்ந்தேற்றுப் போற்ற இனிய தமிழால் திருக்கவிகள் பாடியருளினர்.

சம்பந்தர்.

திருமயிலைத் தலத்திலே பூம்பாவை என்னும் அம்மையாரது எலும்பு குடத்தினுள்ளிருந்து பெண் வடிவாய் உயிருடன் வரவும், மதுரைமாநகரிலே, சமணமுனிவர் பலர் ஒருங்கே வாதமிழந்து கழுமரத்தில் இறக்கவும், திருமறைக்காட்டில் அப்பமூர்த்திகளால் திறக்கப்பட்ட திருக்கதவு தானே அடைக்கும்படியும் சீர்காழிப்பதியில் அவதரித்த அருட்பெரும் புலமையாளராகிய திருஞான சம்பந்த மூர்த்திகள் பசுந்தமிழ்ப் பாடல்கள் கூறியருளினர்.

சுந்தரர்.

இணையேற்றமில்லாத சிவபெருமான் திருவாரூரிலே தமக்குத் தோழராகவும், முதலையினல் தின்னப்பட்ட வேதியக் குழந்தை மூன்றுண்டு சென்றபின் உரிய

வளர்ச்சியோடு ஆருயிர் பிழைத்து மீளவும், திருநாவலூரில் அவதரித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தெய்வத் தமிழ்ப் பதிகங்கள் மொழிந்தருளினர்.

திருவள்ளுவர்.

மதுரைக் கடைச் சங்கப் புலவர்களை வென்று செருக்கடக்குமாறு ஆங்குச் சென்று பொற்றாமரை என்னும் தீர்த்தத்தின்மீது மிதந்திருந்த தெய்விகச் சங்கப் பலகையின்கண் தம்மால் இயற்றப்பெற்ற பொதுமறையாகிய திருக்குறள் நூற் சுவடியை வைத்து வெற்றி பெற்றவராகிய திருவள்ளுவ நாயனாரது தெய்வப் புலமையானது, தமிழ்ப் பற்று மிக்க அறிஞர்கள் அனைவோருக்கும் பெருமையளிக்கும் தாயை நிகர்த்ததாம். இக்கருத்தினை,

"பொற்றா மரையிற் பொருவரும் பொதுநூல்
வைத்துவென் றனிகூர் வள்ளுவன் புலமை
தமிழுடைப் பலர்க்குந் தாயெனத் தகுமே"

எனப் புலமையிலக்கணமுடையார் விதந்தெடுத்துக் காட்டியுள்ளார்.

ஔவையார்.

வேடன் ஒருவனால் கோபத்துடன் வெட்டப்பட்டு உலர்ந்த பலாமரம், பெருமுத்தரையர்களாகிய மூவேந்தர்களது ஏவலாளர்களால் வெட்டப்பட்டு உருண்டு கிடந்த பனைமரத் துண்டமும், ஒவ்வோர் சமயத்தில், ஆரியன் காவிலும், முப்பந்தலிலும் தழைத்து அப்போழ்தே பழம் கொடுக்கும்படி தண்டமிழ்ப் பாடல்கள் சாற்றிய ஔவைப்பிராட்டியும் மேதகு பண்டிதையாம்.

இடைக்காடர்.

திரு ஆலவாய் என்னும் மதுரையில் விளங்கும் தடங் கருணைப் பெருங்கடற் பழம்பொருளான பரமசிவனை, தமது கவியைப் பாண்டியன் அவமதித்த காரணத்தினால் ஆங்குள்ள வையை நதியின் புற எல்லைக்கண் செல்லவும், அது கண்டு அவன் அஞ்சி வணங்கியபின், மீண்டு பழைய படி மதுரைத் திருக்கோயிலில் வந்தமரவும் அரிய தமிழ்ப் பாடல் சொற்றனர் இணையற்ற இடைக்காடர் என்னும் அருட்பெரும் புலவர்.

நக்கீரர்.

பேயினால் திருப்பரங்குன்றத்து அடைக்கப்பட்டிருந்தவர்களான தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது சிவனடியார்களுடன், தாமும் இறந்தொழிந்து போகாமல் பிழைத்தற்குரியதாக, "திருமுருகாற்றுப்படை" என்னும் அரிய செந்தமிழ்ப் பிரபந்தமொன்றைப் பாடியருளினர் நக்கீரர் என்னும் கடைச்சங்கப் புலவர் பெருமான்.

இரட்டையர்.

பம்பை என்னும் புண்ணிய நதிப் பிரவாகமானது மேற்புறத்தில் ஓடிய தன்மைமாறித் தென்புறமாகக் கிழக்குநோக்கி வந்து பின், வடதிசை நோக்கித் திருவாமாத்தூரில் ஓடும்படியும், குளக்கரையிலுள்ள அரசடி விநாயக விக்கிரகமானது, மற்றோரூரில் மனமகிழ்ந்து பொற்பணப் பரிசு வழங்கும்படியும், இரட்டைப் புலவர்கள் இனிய தமிழ்க் கவிகள் பாடினர்.

கவிராச பண்டிதர்.

ஒப்புயர்வில்லாத அருட்பெருந் தாயாகிய கௌரி யானவள், மகள் வடிவாய் வழிநடந்து அமுது சமைத்துப் படைக்கும்படி சிறந்த தமிழ்ப் பாவலராகிய கவிராச பண்டிதர் சௌந்தரிய லகிரி என்னும் பிரபந்தம் பாடிப் புகழும் பயனும் பெற்றனர்.

அருணகிரியார்.

பார்வதிதேவியின் தடையைக் கடந்து, கலியுக வரதனை முருகப்பெருமான், வள்ளி தெய்வயானையருடன் புள்ளிமயில் வாகனத்தின்மீது, தம்மாற் குறிக்கப் பெற்ற கல் மண்டபத்து வடகீழ்த் தூணிலே காட்சி தருமாறு, "வாக்கிற் கருணகிரி" என்னும் மாண்புகழ் பெற்ற நிகரற்ற பெரும் புலவரான அருணகிரிநாத சுவாமிகள் தமிழ் மொழியிலே அரிய திருப்புகழ், திருவகுப்பு முதலிய கௌமாரப் பனுவல்கள் பாடியருளினர்.

பொய்யாமொழியார்.

பாண்டிய வேந்தனவன், தம்மைப் பல்லக்கிலேற்றி மனைவியும் தானுமாகச் சுமந்து செல்லுமாறும், சங்கப் பலகை பலரறியப் பொற்றாமரைக் குளத்தின்மீது மிதந்து தெரியுமாறும், சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர்களது வடிவமைந்த கல் விக்கிரகங்கள் ஒருங்கு தலையசைக்குமாறும் பொய்யாமொழிப் புலவர் மதுராபுரியில் தமது வண்டமிழ்ப் புலமை நடாத்தினர்.

பகழிக்கூத்தர்.

ஞானசத்தி வேலாயுதபாணியான கந்தக் கடவுள் அழகிய செம்பொற் பதக்கமொன்றினைத் திருச்செந்தூரில் ஈடாகக் கொடுக்கும்வண்ணம் புலமைசான்ற பகழிக்

கூத்தர் என்னும் பாவலர் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிப் பனுவலை இயற்றினர். ஆண்டவர் "பூமாது போற்றும் புகழ்ப் பகழிக்கூத்தா" எனத் துவங்கும் திருவெண் பாவைப் பாடி அத்துடன் இலைத் திருநீறும் புலவருக்குக் கொடுத்து அவரிடம் அப் பிள்ளைப் பனுவல் பெற்றனர் என்னும் சரிதம் வழங்குகின்றது.

காளமேகக் கவிராயர்.

அறிவிலியாகிய திருமலைராயன் என்னும் வன்னிய குலத்துக் குறுகில மன்னவனொருவன் எழுபது புலவர் களைச் சிறைபுரிந்து வருத்திய குற்றம் தீர அவனிடம் எதிர்த்து "எமகண்டம்" பாடி அவர்களைச் சிறை மீட்டு, ஒரு திருவெண்பாவைப் பாடி அவனது நகரம் மண் மழையால் அழிந்துபோம்படி புரிந்தனர் எக்கவியும் பாட வல்லவரான காளமேகக் கவிராயர் என்னும் புகழ்ப் பெரும் புலவர்.

சிவப்பிரகாசர்.

கவிச்சிங்கமான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரூரில் வைகறைப் போழ்தில் ஓர் மாந் தோப்பின் வழியே சென்றனர். ஆண்டு, தம்மெதிரில் ஓர் செழுங்கனி விழக்கண்டு, தமதிட்ட லிங்க நிவேதனத் துக்கு உதவுமென்றெண்ணிக் கையில் எடுத்த தருணம், காவலாளன் பார்த்துக் கள்வனென்றிகழ்ந்து மடி பிடித் திழுத்தனன். அவர் உண்மை கூறியும் இசையாமையால் மனஞ் சினந்து, "மாங்கனிக்கா வென்னை மடி பிடித்த மாபாவி, சாங்கனிக்கா இத்தன்வரத் தான்" என்ற பிற் பாதியுடைய வெண்பா உரைத்தனர். பொழுது புலர்ந்த

தும் அக்கயவன் தலைபிளந்து இறந்தனன். கன்னிக்குச் சூரியன் வருங்காலம் — புரட்டாசித் திங்கள். அந் நிகழ்ச்சி அக்காலத்தினது.

குருகை வைணவ வேதியர்.

திருக்குருகூர் வைணவ வேதியராகிய ஒருவரிடம் முருகக் கடவுள் கனவிலே தோன்றித் திருச்செந்தூருக்குப் பிரபந்தம் பாடும்படி கேட்டும் அவர் மறுத்தமையால், பல நலங்களியற்றி முடிவில் வடமலையப்பனென்னும் வேளாண் குலச் சிற்றரசனைக் கொண்டு, வெள்ளியினால் அவருக்கு விலங்கிடுவித்தனர். அதன்பின், அவ்வேதியர் பதிற்றுப்பத்தந்தாதி பாடத் துவக்கித் துதித்தலும், ஏழாவது கவி கூறுந்தருணம் படீரென்று அவ்விலங்கு தெறித்து விழுந்தது. பின் அந்தாதியை முடித்தனர் என்பது சரிதம்.

கந்தசாமிப் புலவர்.

சிவகுருநாதனாகிய தண்டபாணிக் கடவுளைச் சேரனது நகரத்துக்குத் தூதாகச் செலுத்திப் பொற்குவியல் பெற்று மகிழ்ந்தார் கந்தசாமிப் புலவர்.

கச்சியப்பர்.

தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் ஒருங்கு குழீஇய பேரவையின்கண் கச்சியப்பக் குருக்கள் என்னும் ஆதி சைவப் பனவர், குமரகோட்டக் கடவுளருளால் தாமியற்றி முடித்த கந்த புராணத்தை அரங்கேற்றத் துவக்குங்கால், முதற்கவி முதலடி முதற் சீரிலே (திகழ் + தசம் = திகடசம் என்று புணராது என) இலக்கணச் சந்தி வழூஉக் கலப்பிருப்பதாக ஒரு சிலர் வாதித்தனர்.

அப்போது குருக்கள் அப்பதம் குமாரக் கடவுள் எடுத்தோதியதென ஓதியும் அன்னோர் அமைதியுற்றிலர். அத்தருணத்திலே முருகப்பிரான் தென்பாண்டி நாட்டுச் செந்தமிழ்ப் புலவராய் அச்சபையின் மத்தியிலே துலங்கி, அப்புணர்ச்சிக்குரிய விதி தம்மிடமுள்ள வீரசோழியம் என்னும் ஏட்டிலிருப்பதாக எடுத்துக் காட்டி அனைவரும் உடன்படச்செய்து தமது திருவுருக் கரந்தருளினர். அது கண்டு எல்லவரும் வணங்கி யிணங்கிப் புகழ்ந்து புராணம் முற்றும் வினவினர். இவ்விதமாக அக்குருக்கள் குகவேளருளால் தமது புலமைத் திறத்தினை நிலைநாட்டிக் கொண்டனர்.

வீரபாண்டியப் புலவர்.

உயரிய தெருட்கவி வல்லவரான வீரபாண்டியப் புலவர் ஒரு சமயம் திருமந்திரம் என்று வழங்கும் ஆத்துக்குடி நகரத்தின் சிவாலயத்துக் கொடிக் கம்பத்திலிருந்த மணிகளின் நாக்குகள் கீழே உதிரும்படியும், மற்றொரு சமயத்தில், திருச்செந்தூர்க் கந்தக் கடவுள் திருச்சந்நிதானத்தின் திரைக்கயிறற்றுத் திரை கீழே விழவும், தாம் தெரிசனம் பெறவும், தமிழ்க்கவி முழக்கி அவ்வண்ணமே பலிக்கக்கண்டு "மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

வசைகவியாண்டான்.

காளிதேவியைக் கண்ணாரக் கண்டு வேண்டி வசைகவியே பாடும் வரத்தினைப் பெற்றவனை ஆண்டான் என்னும் பெயரிய ஓர் பார்ப்பனன், தனது தவறான மனக்கோள் பற்றிப் பலவிதத்தினால் தனக்குக் கொடுமையாளரென்று எண்ணப்பட்டோர் பற்பலரும் தலை வெடித்தல் முதலிய சார்புகளினால் உடலழிந்து போகும்படி

பாக்கள் பகர்ந்து வாக்குச் சித்திகண்டு மாந்தரை நடுங்கச் செய்தான். அப்புலவன் வசைகவியே பாடிவந்த காரணத்தினால் வசைகவியாண்டான் என்னும் பெயர் பெற்றனன் என்ப.

சீநிவாசப் புலவர்.

சீநிவாசப் புலவன் என்பார் ஒருவர், மதுராபுரியின் சிவாலய மடைப்பள்ளியில் அட்டில் திருப்பணி இயற்றியிருந்து, மீனும்பிகை திருவருள் பெற்றனன். அதனால் பல உயர்ந்தோர் புகழும் பாவலராய் விளங்கினர். பின்னர், மிலேச்ச மகள் நண்பமைந்தானென்று இகழ்ந்து கூறிய மறையோர் பலரும், திருநெல்வேலியிலே துலுக்க மன்னன் ஆணையினால் வருந்தி வருண செபம் புரிந்திருக்கையில் அப்புலவர் இயல்பாக அங்கடைந்தனர். அவர்களிற் சிற்சிலர் இவரிடம் தங்கள் குறை முடித்துதவுமாறு வேண்டிக்கொண்டனர். அவ்வேண்டுகோளுக்கிணங்கிய கவிஞர் அம்பிகையை நோக்கி ஓர் கீர்த்தனே பாடினர். அப்போழ்தே பெருமழை பெய்து நாடு செழித்தது. மறையவர் அவரைப் புகழ்ந்தனர். இந்நிகழ்ச்சியினால் வருண (ஜாதி) சித்திப் புலமை பெரிதோ? அல்லது வருண (மழை) சித்திப் புலமை பெரிதோ? தெள்ளிதின் ஆராய்ந்து கொள்க.

ஆறுமுகப் புலவர்.

ஆறுமுகப் புலவர் என்னும் பெரியார் ஒருவர் தாம் பிறந்த ஈளுவ மரபை விளக்குவாராயினர். அவர் அபர ஞானமாகிய கல்வி நிறைந்து பரஞானத்தின் அங்கமான தவவேடம் பூண்டு குமரகுருபர மூர்த்தியை உபாசிக்கும் நியமத்துடன் திருச்செந்தூரில் இருந்தனர். ஒரு மாசித்

திருவிழாவின் ஏழாம் நாட் காலையிலே ஆறுமுகக் கடவுள் திருவுலா வருகையில் அப்புலவர் மூர்த்தியின் எதிரிலே அடியாருடன் கூடி ஆடிப்பாடி நாடி இன்புற்றனர். அது கண்ட அந்தணர் புலவரைப் பலவாறு நிந்தித்துப் பின்புறம் செல்லச் சொல்லினர். அவ்வாறே சென்ற கவிஞர் ஒரு கீர்த்தனைப் பல்லவி சொல்லலும், ஆறுமுக விக்கிரகம், சப்பரத்தில் இருந்தபடியே பின்புறம் நோக்கித் திரும்பிக் கவிஞருக்குக் காட்சி நல்கிற்று. அவ்வதிசய நிகழ்ச்சியைக் கண்ட அனைவோரும் புகழ்ந்து வணங்கி அவரை அன்புடன் உபசரித்தனர். புலமையின் அருமையும் அருளின் பெருமையும் இருந்தவாறு என்னே! என்னே!!

நமசிவாயப் புலவர்.

பாண்டிநாட்டின்கண் உள்ள செங்கோட்டைப் பதியிலே வேளாண் மரபிலே நமசிவாயப் புலவர் என்பவர் தோன்றினர். அவர் கல்வித் தேர்ச்சியில் மிக்கவராய்த் திருக்குற்றாலத்தின்கண்ணே மிளிரும் உலகாம்பிகையின் உபாசனையில் ஈடுபட்டு விளங்கினர். அவர்மீது பொறாமையும் பகையும் கொண்ட சிலர் அவருக்கு வாழையிலை கொடாதவாறு தடை நிகழ்த்தினர். அதனையறிந்த அவர் தமது வீட்டில் பட்டுப் போயிருந்த புரசமரத்தை உடனே தழையும்படி பாடினர். மரமும் அவ்வாறே பச்செனத் தழைத்திலங்கிற்று. அதன் இலையைப் பறித்துத் தையிலையாக்கி அதனில் உண்டியுமுண்டனர்; மகிழ்வுமுண்டனர். அஃதன்றியும், வயலுக்குத் தண்ணீர் விடாமல் இடர் புரிந்தபோழ்து, கவிபாடித் தமது வயலில் மட்டும் போதிய மழை பெய்யுமாறு புரிந்தனர். அவர் வயலும் குளிர்ந்தது;

மனமுங் குளிர்ந்தது. அந்நிகழ்ச்சியைக்கண்டு முன்னே பிணங்கிய பலரும் வணங்கி யிணங்கித் துதியாற்றினர்; புகழ் தூற்றினர்: அஃதன்றோ? புலமை!

ஒரு வயோதிகப் புலவர்.

ஒரூரிலே சிவகாமியம்மன் திருக்கோயில் வாசலின் கண் சிலரால் சோதனையாகக் கட்டித் தூக்கப்பட்ட பூமாலையைப் பல துண்டுகளாகக் கத்தரித்து விழும்படி ஒரு வயோதிகப் புலவர் இன்றமிழ்க் கவிதையிசைத்து அங்ஙனமே சித்திக்கக் கண்டு தமது புலமை யாற்றலை விளக்கினர்.

இவ்வாறு, தெய்வப் புலவரர் கதைகளையும் வாக்குப் பலித சித்திப் புலவரர் சரிதங்களையும் தெரிந்த மட்டில் மேலும் எடுத்துச் சொல்லின் புலமை யிலக்கணத்தின் தொலின் முறை — சிறப்பியல்பு மிக நீண்டு இவ்வேடு இடந்தராது. ஆதலின் அவற்றை வரலாற்று முறையிலே புலவர் புராணத்தூடும், சுருக்கமுறையிலே தமிழலங்காரப் பனுவலூடும் கண்டுகொள்க.

புலமைத் தொழிலின் நோக்கம்

உழவு, வாணிபம், சேவகம் முதலிய தொழில்களிலே உழைத்துப் பொருளீட்டி அருந்திப் பொருந்தி உழன்று திரியும் (a) சாமானிய உலகினர், புலமைத்திறம் பயனற்ற தென்று இகழ்ந்து கூறுதல் விடுத்து, உளம் நாணியடங் கவும், (b) புலமையைப்பெற விரும்பி முயலும் இள மாணவர் மனமகிழ்வு பூத்து ஊக்கத்தோடு பயிலும் பொருட்டும் இந்தப்படி புலமைத் தொழில் முறை — மரபு

வகையின் வழியே புலமைத் தொழிலின் ஆட்சியும் மாட்சியும் கூறப்பெற்றன ; இனிச் செயல் வகையின் வழியே புலமைத் தொழிலின் ஆட்சியும் மாட்சியும் பின்வருமாறு கூறப்பெறக் காண்க.

தொழின் முறை B. பொது — செயல் வகை.

புலமை யிலக்கணத்தின் தொழின் முறைப் பகுதியின் உட்பிரிவுகளில் ஒன்றாகிய பொது — செயல் வகைப் பகுதியானது, தொழினிலை, நடுநிலை, எதிர்நிலை, அருணிலை என்னும் தலைப்புக்களிலே பின்வருமாறு ஆராயப்படுதல் காண்க.

புலமை யிலக்கணம் செயல்வகையில் — சூத்திரம் உ.

"தமிழ்க்குந் தனக்குஞ் சார்தரு நெறிக்கும்
தன்னினத் தினர்க்குந் தவறுறா வண்ணம்
முயல்வோன் புலமை முதன்மைத் தாமே"

என்ற சூத்திரத்தின்படி புலமைத் தொழிலாளன் ஒழுகக் கடவன். தமிழ் மொழியினுக்கும், அதனைக் கைக்கொண்ட புலனாகிய தனக்கும், தான் மேற்கொண்ட புலமை நெறியினுக்கும், தன்னைச் சார்ந்த பரிசனர்களுக்கும் ஒருவிதத் தீங்கும் நேராதபடி முயல்பவன் புலமையே உத்தமமானது. தன்மை நிலையாகிய தனக்கும், முன்னிலையாகிய எதிர்ப்படும் புலவர்களுக்கும், படர்க்கை நிலையாகிய ஏனைப் புலவர்களுக்கும் ஆக மூன்றிடத்தும் தீங்கு நேராதியலும் புலமைத் தொழிலையும் இவ்வுட்பகுதி குறிக்குமென்க. எனவே, தன்பயன் ஒன்றையே கருதி மற்ற நலன்களைக் கவனியாதிருந்து விடுவதும், தனது நலத்தை எண்ணாமல் ஊருக்குழைப்பதும் புலமையாகாதென்பதாம். மற்று, தன்மை முதல் மூன்றிடத்தும் நலம் அமைய முயல்வதே முறையென்க.

(a) தொழில் நிலை.

உலகத்திலுள்ள மக்களால் வழங்கப்படுகிற சம்பிரதாயக் கதைகள், பழமொழிகள், மரூஉச் சொற்கள் முதலியவற்றைத் தனது நூல்களின் அங்கமாக முற்றுந் தழுவிக் கோடலும், அவை முற்றும் வீணென்றிகழ்ந்து விலக்குதலும் ஒருவனுடைய புலமைச் சிறப்புக்குத் தாழ்வாகும். எனவே, தனதுணர்வினால் ஆராய்ந்து பார்த்துப் பொருந்தியவற்றைத் தழுவுதலே முறை.

எண்வகைச் செயல்களை விரைவாக ஏககாலத்தில் தொடர்ச்சியாய் நடத்துவதாகிய அட்டாவதானமும், யானையின் தந்தங்களினிடை கண்டத்தை வைத்து நாற்புறம் வாள்கட்டி, காலிற் சதங்கை யொலிக்கத் தாளத்தோடு நடித்து, அருகிலுள்ளோர் பாடும் இசைப்பாடலுக்கேற்ற பொருளபிநயங் காட்டி, அவ்வியானையின் மீதமர்ந்துள்ள தலைவன் ஏனையரைக்கொண்டு கேட்கும் வினாக்களுக்குரிய பூர்த்தி விடையை அவன் புகழோடியைத்துச் செய்யுளாய்க் கூறுதலாகிய எமகண்டமும், பிறனொருவன் அகத்திலோ புறத்திலோ கண்ட பொருளை ஐயமறத் தெரிந்து தெய்விகத்தாற் கவியிற் கூறி மெய்ப்பித்தலாகிய கண்டசித்தியும் முதலிய செயற்கரிய செயல்களில் தனது உபாசனைத் தவம் சாத்தியப்படுவதன் முன், சாதக நிசையாகிய அப்பியாச காலத்தில் பாத்தியப்படுதல் கூடாது. எனவே, அத்தகைய பெருமையைப் பெற விரும்பும் புலவர்கள் குருவுபதேசவழி ஒரு தெய்வ வழிபாட்டில் முயன்று அருட் பயன்பெற்று எல்லாம் செய்யக்கடவர். இக்கருத்துள்ள,

"அட்டாவ தான மெமகண்ட மற்றேன்
கண்டகைப் பாட லாதியிற் கருதுந்
தவமுடி வதன்முன் சருவவொண் ணுதே"

என்ற புலமை யிலக்கணம்—செயல்வகை யியல்பு—தொழினிலே ச-ஆம் சூத்திரமும்; "எவ்விதப் பிரயாசம் எடுத்துக்கொண்டாவது ஒருவன் தெய்வ கிருபையைப் பெற்றுக்கொள்வானாகில், அவனிவ்வுலகத்தில் எது செய்தாலும் செய்யலாமென்பதே திண்ணம்" என்ற சத்திய வாசகமும் இங்கு கருதற்பாலன.

குமரகுருபர சுவாமிகள் செந்திற் குமரவேளின் திருவருட் சிறப்பால் ஊமை வாய் திறந்த உத்தமப் புலவராகியும், "ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்.... ....தோய்ந்து, பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து" எனக் கலிவெண்பாவில் விண்ணப்பித்தவாறும், திருமலைராயனென்னும் சிறு மன்னன் முன்னிலையில் காளமேகப் புலவர் பேசும்போது அவனது சபைப் புலவன், "எமகண்டந்தான் கழறவல்லாயோ" என வினவிய போது, "எது குறித்திடினுஞ் சொல்லித் திசைதாற் கென்றுயுள்ளாள்" என அவர் விடையிறுத்துக் கலைமகளருளால் அவ்வாறே முடித்தவாறும், இரட்டைப் புலவர்கள் சோழராசனிடத்திலும், கம்பர், அம்பிகாபதி இருவரும் ஒரே காலத்தில் குலோத்துங்க சோழனிடத்திலும், கந்தசாமிப் புலவர் சேரனிடத்திலும் இன்னும் பலர் பல இடங்களிலும் தெய்வோபாசனைப் பலத்தால் கண்டசித்தி பாடியவாறும் புலவர்கள் ஆராயக்கடவர்.

பல நூல்களை ஆராய்ந்து ஐயந்திரிபறக் கற்றறியாது உலகியலான உணர்ச்சி மாத்திரம் உள்ளோர் குழுமிய கூட்டத்தில் அரிய சுவை நிறைந்த கவிகளைப் பாடிப்

படித்தலினும் அத்தகைப் புலமையுடையோரது சபையில் அவர்கள் மகிழ்தற்கேற்ற வசனம் பேசுதல் எண்மடங்கு மேலாகும். எனவே, கல்லார் குழுவிற் கவியும் பயன் படாது; வல்லார் சபையில் வசனமும் பெருமையுறும் என்ற குறிப்பினுல், உரை நடையினும் செய்யுள் நடையே உயர்வுடைத் தென்பதும், இடமறிந்து புலவன் அதனை உபயோகிக்கவேண்டுமென்பதும் ஆயிற்று. முற்காலத்து அறிஞர் நிகண்டு முதலாக எல்லாம் செய்யுள் வடிவி லமைத்து ஆண்டு வந்ததும், இக்காலத்தினர் அவற்றை உவர்த்து, அகராதி என்ற அட்டவணையாயும், மற்றும் நூல்களையும் உரை நடையிலும் கையாளக் காண்பதும், வழங்கும் செய்யுள்களிலும் எழுத்துக்களின் சந்தியை விட்டு வரைந்து கொள்ள விரும்புவதும் அதற்குப் போதிய சான்ருய் விளங்குகின்றதென்க.

தனதுள்ளத்தில் எண்ணிய பொருளைத் தன்னிடத்து முன்னமே தெய்வோபாசனையினுல் அமைந்துள்ள அருள் வாக்கினுற் பாடி உடனே பலிதமுறக் காணும் புலவனை அறிவிற் சிறந்த ஆதிசேடனுக்கு இணையாவானென்று சொல்லி உலகினர் புகழ்வர் :—

தமிழ் விரகர் எலும்பைப் பூம்பாவை யாக்கல்; வாகீசர் நீற்றறை குளிர்வித்தல்; ஆரூரர் முதலையுண்ட மகவை யழைத்தல்; மணிவாசகர் பவுத்தர் வாயடைத்து, ஊமை மகளை உரை பகர்வித்தல்; ஔவையார் பனைமரத்துண்டு தழைத்துப் பழந்தரச் செய்தல்; வீரபாண்டியப் புலவர் தென்னை நெற்றுதிர்த்தல்; கம்பர் கலைமகள் காற்சிலம்பைப் பெற்று, அளித்தல் ஆதிய சரிதங்கள் அனைத்தும் ஈங்கு உதாரணமாகக் கவனிக்கற்பாலன.

பாடியவுடனே பலிதமுறக் காணவல்ல தெய்வப் புலமையின் ஆட்சியும், அதுகண்டு, இவர் தேவரனைய ரென்று உலகத்தோரால் சிறப்பித்து ஓதப்படும் கீர்த்தியும் விரும்பி அவ்விரண்டையும் பெறுதலே மனிதப் பிறவியின் பயனாகுமென்று மிகவும் நெஞ்சேக்கமுறும் புலவன், தனது பிறப்புக்குரிய முக்கியப் பயனாகிய விடத்தைப் பெறுதல் குறித்துச் சூரியனுக்கு எதிரில் படத்தை விரித் தாடுகின்ற நாகபாம்புக்கு இணையாவான் என்றறிவோர் ஏகதேசிகளே யாவர் என்பாரும் உள்ளார். முற்காலத்தில் இருந்த பெரும் புலவர்களது அருஞ் சரிதங்களைக் கேட்ட விடத்து, இவ்வித மகிமைகள் அக்காலத்துப் புலவர்க் கிருந்தன; இக்காலத்துப் புலவர்க்கு உண்டாகா என்று கூறுபவன் போலிப் புலவனாகையினால் பாம்பைப் போல வடிவமைந்து அக்குணமில்லாத மகர மீனுக்கே இணையா வான் என்ப. எனவே, பத்திஉபாசனை நெறியும், அந் நெறியில் நின்றோர் பெறும் பேறுகளும், அருள் புரியும் தெய்வமும் எக்காலத்திலும் உண்டென நம்பி, கல்விப் பயனாகிய தெய்வ பத்தியையும், அதன் பயனாகிய சொற் பலித சித்தியையும் பெற்று அழியாப் புகழும் ஐக்க முத்தியும் அடைதலே சிறப்பாகும் என்க.

> "நாய்போற் சினந்து நரிபோற் பயம்பெருக்கிப்
> பேய்போற் பறந்து பிணங்காமல் — தாய்போல்
> இரவுபக லற்றானை யெண்ணித் தினமும்
> பரவுவதே கல்விப் பயன்."

என்னும் நான்கு நூல் (விற்பனம் — பொருட்பால் கூ-வது கல்விப் பொருள் — கவி கம) வெண்பா, ஈண்டோர்தற் பாலது.

இவ்வுலகினிடத்து எக்குடியிற் பிறந்த யாவரேயா யினும், கல்விச் சிறப்பாகிய புலமையும், நல்லொழுக்க மும் அமையப்பெற்றால் அவ்வுலகத்துத் தேவருக்கு இணையான பெருமையுறுவார்கள். எனவே, கல்வியறி வடையாதார் பிறப்பு, செல்வம், அழகு முதலியன முழுப் பயன் ஆகா: என்பது பின்வரும் திருக்குறட்கருத்தாம்.

"நுண்மாண் நுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று"

அன்றியும், புலமையிலக்கணம், செயல்வகையியல்பு, தொழினிலையின்:

"புலமைத் தொழிலின் புகழெலாம் புலவோர்
தாமே யறிவது சாத மாமே"

என்ற ம-ஆம் சூத்திரம் இங்கு ஆய்தற்பாலது. மெய் யுணர்வின் சிறப்பாகிய புலமையின் பெருமை முழுவதை யும் அதனைப் பெற்ற புலவோர்களே அறியும் தகுதியினார் என்பதாம். எனவே ஏனையர் அறிவது ஏகதேச அறிவே யன்றி நிறையுணர்வன்றென்பது அருத்தாபத்தி.

(b) நடுநிலை.

"சுருதியும் புலவோர் சொல்லே யென்றிடல்
நடுநிலை யாமென நவில்வார் பெரியோர்"

என்ற புலமையிலக்கணம்—நடுநிலை என்ற பகுதியின் க-ஆம் சூத்திரத்தின்படி பொருள்:—

கேட்டறியுந் தன்மை பற்றிச் சுருதி என்று பெயர் பெற்ற வேதங்களும் புலமை மிக்கோரால் பூர்வம் சொல் லப்பட்டவைகளே என்பது பாரபட்சமற்ற உண்மை யெனக் கூறுதல் அறிவிற் சிறந்த பெரியோர் கொள்கை யாகும் என்பதாம்.

வேதங்களுக்கும் எழுத்தும் சொல்லுமே ஆதாரமா யிருப்பினும் அம்மட்டோடமையாது அவற்றை ஓதுதற் குரிய ஒலிக்குறிப்பாகிய சுரபேதங்களும், அவை நீட்டு தற்குரிய காலக்குறிப்பாகிய மாத்திரை பேதங்களும் விதிக்கப்பட்டிருத்தலாலும், அவையும் செய்யுள் நடையில் இன்றிப் பல்வேறு வகைப்படுதலால் அப்பேதங்களை எழுதிக்கொள்ளுதல் இயலாதாதலாலும், போதகாசிரியன் வழியே செவியுணர்ச்சிகொண்டே பெறுவது மரபா யிற்று. அபக்குவர் தம் மனப்போக்கிற் பயில்வது விபரீதமாய் முடியுமாதலின் அந்நியமம் அமைந்தது போலும். அம்முறை பயில்வோரும் ஓதுதலன்றி அதன் பொருளறிதல் இன்று. பொருளறியும் கல்வியுடையோர் ஏகதேசிகளே வேத ஆராய்ச்சியிற் புகுவோராதல் உண்மை.

அத்தகைய வேதத்தை இயற்றினோர் யாவரென்று ஆராயுமிடத்து அது சுயம்பாய்த் தோன்றிற்றென்பாரும், இடையிலுள்ளோர் சிலராற் சொல்லப்பட்டதென்பாரும் ஆகிய பலரும் நிற்க, ஈங்கு ஆசிரியர் புலலோர் சோல்லே என்று முடித்தார் என்க.

> "வினையின் நீங்கி விளங்கிய வறிவின்
> முனைவன் கண்டது முதனூ லென்ப"

என்பதாயிற்று தொல்காப்பிய இலக்கண முழுமுதல் வேதமும்.

ஈண்டுப் புலவோர் என்னும் பதம் ஐம்புலபோக விருப்பம் கடந்த மேல் நிலையில் அமைந்து அதுவே தான்; தானே அது: என்று கலந்த பரஞானாதிகாரமுற்ற

சொரூப சித்தர்களாய்க் கருமம், பத்தி, ஞானம் என்னும் பகுதிகளின் சாரமான பல்வேறு பொருள்களைப் பகுத்துக் கூறிய பரமாசாரியர்களையே குறித்து நின்றது. அதை விடுத்து அபரஞானமாகிய கலையுணர்ச்சிகொண்டு நூல்கள் வரையும் பாவலர் பண்டிதர் நாவலர்கள் மீதேற்றி இடர்ப்படுதல் தவறும்.

"குருவடி வாதியாகப் புலவர் செய் தியானம்" என்றும்; "ஆனைகண்ட குருடரைத் தேற்றுங் கவிதை பாடும் புலவருக்கே மூர்த்தி யுபாசனைச் சீராகும்." என்றும் தியானுநுபூதி நூலின் கண்ணும் பிறவிடங்களிலும் புலமையிலக்கணத்தாரே கூறியிருத்தல் கருதற்பாலன.

ஐம்புலவுணர்ச்சி, ஐந்திலக்கண விற்பத்தி, அநுபூதி ஞானமான பரஞான விளக்கம் என்ற மூவகைக்கும் புலமை என்னும் பெயர் வழங்கப்படும் என்பதும், அவற்றுள் முன்னையதை முற்றும் நீக்கி, இடையதை முக்கியமாகக்கொண்டு, பின்னையதை ஏகதேசச் சிறப்பாக இந்நூல் கொண்டுள்ளதென்பதும் நினைவு கூர்க.

நடுநிலையென்னும் இப்பகுதியை மேற்கொண்டு ஆய்வோமாக. நன்மையென்று ஓதப்படுபவற்றில் அதற்கு மாறுபாடான தீமையும், தீமையென்று சொல்லப்படுபவற்றில் அதற்கு மாறான நன்மையும் விரவியுள்ள உண்மையை ஆராய்ந்தறியவல்ல புலவர் ஏகதேசம் உளராவர் என்ப.

உலகிலுள்ள இயற்கைப் பொருள்களைப் பற்றி வியந்து பேசியும், சமய வாதத்தில் விடத்தக்க புராண சரித்திர விற்பத்தியில் உழன்றும், பந்தமோட்ச நிலைகளைப் பற்றிப் பலவாறு முடிவு கூறும் சாத்திர வாசனை

முதிர்ந்தும் திரியும் அபரஞான நிலையில் அமைந்த புலமை தாண்டி, அநுபூதி ஞானம் பிறந்தபின், பூர்வம் ஞான மென்றும், இன்பமென்றும் எண்ணப்பட்டவை படிப்படி குற்றமென்றும் துன்பமென்றும், துன்பமென்றும் குற்றமென்றும் எண்ணப்பட்டவை இன்பமென்றும் ஞாயமென்றும் மாறும் விதம் அறிவானென்பதும், அஃது மிக்க மேல்நிலை என்பதும் உணர்த்துவார் ஒவ்வோர் புலவனே எனக் குறித்தனர் :

> "நன்றிடை தீதும் தீதிடை நன்மையு
> மொன்றுமா றுணர்வா னெவ்வோர் புலவனே"

என்ற ௨-ஆம் சூத்திரத்தில்.

உயிர்களால் இகத்திலும் பரத்திலும் நுகரப்படுவன வான இன்பதுன்பங்களும், அவற்றை இருவினையளவு கண்டு ஊட்டுகின்ற நீதியுள்ள தெய்வமும் இடைநிலைப் பொருளெனல் சிறிதும் ஓரம் சாரா உயர்வான நடுநிலையி லுள்ள பொருள்களாவன : என்னும் விடயத்தைப் பிடிவாதம் அமைந்த சிறு புலவர்களது வாய் கூறுதென்பர் புலமை மிக்கோர். இன்பதுன்பங்கள் என்பன இறைவ னால் உயிர்களுக்கு ஊட்டப்படுவனவாகும். அவை, ஒருயிர் விரும்பியடையவும் வெறுத்தொதுக்கவும் இல்லா மல் அவரவர் வினையளவுக்கேற்ப நேர்வதால். நடுநிலையின ஊட்டும் தெய்வமும் உண்ணப்படும் பயன்களும்: என்னும் நிச்சய வார்த்தை சிற்றறிஞர் கூறுர். எனவே, பதிநிலை, பாசநிலை அறியாதாராய் உலகிலுள்ள தம்போன்ற பரதந்திரர்களான உயிர்களிடம் பகையுறவு பாராட்டியும், தெய்வம் பாரபட்சமானதென்றும் பலவாறு பேசியுழல்வார்கள்.

தான் எடுத்துக்கொண்ட விடயமானது எதிர்த்து வந்தவனது வாதத்தினால் அழிக்கப்படினும் அதனை ஒப்புக் கொண்டு சொல்பவனே உண்மையறிவுள்ள புலவனாவான். எனவே, தோல்வியை ஒப்பாமல் மறுத்துப் புடைவாதம் இயற்றிப் பொழுது போக்குதல் மூடத்தனமாகும். உதாரணம்:—முன்னொரு காலத்திலே அருணகிரிநாதரிடம் வாதிட்ட வில்லிபுத்தூரார், கந்தரந்தாதியின் கவியொன்றுக்கு உரை கூற இயலாதபோது, "தெருட்சீரோ னுதலினாற் றேல்வி யேற்றுச்—சிரங் குனிந்தா னப்பெருமை சிறிதன் றம்மா" என்று அருணகிரியார் புராணங் கூறுகின்றது. அருணகிரியாரிடம் ஒரு நாள் உபாசனை வாதம்புரிந்த சம்பந்தாண்டான் கிரமப்படி அம்மையை அரசன் கண்முன் காட்ட இயலாது சோர்ந்தபோதும் ஒப்பாமல், "நன்று விண்ணூர்த் தருமலரைக் கொணர்தி யென்றான்" என்றது புடைவாதமென்க.

தம்முட் பகை கொண்டு வாதிடத் துவக்கிய புலவர் இருபக்கத்தினருக்கும் நடுநிலையாய் அமைந்து நிற்கும் புலவன், தனது மனச்சாட்சிக்கும் உண்மைக்கும் விரோதமாக வஞ்சகங்கொண்டு தீர்ப்புச் சொல்வானாகில், திங்கள் ஞாயிறுள்ள அளவும் நிரயத்தில் விழுந்து வருந்துவன். நடுவுநிலை தவறாமையும், நடுநின்று பிறருடைய விடயங்களைச் சீர்படுத்தும் தகுதியும் புலவருக்கு முக்கியம் வேண்டப்படுவனவாம்.

கவிகள் பாடும் பயிற்சியில்லாத பண்டிதர் இருவர் தமது கல்விச் செருக்கினால் சாதாரண உலகினர் புகழும் பெருமையை விரும்பி வாதம் புரியுந் தருணத்தில், மத்தியில்

வந்து அதைக் காணும் பாவலனாகிய புலவன் இடிமுழக்கம் போல் இகழ்வு தோன்ற நகைத்தியம்புவது நன்மையாம். புலவனுக்குக் கல்விப் பெருக்கத்திறைற் குறித்த விடயங் களைத் தடையறக் கவிகளாற் பாடுந் தகுதியே சிறந்த தாதலின், அஃதின்றி விவகார தருக்கமிடுவோரை இகழ்தல் நலமென அறிக.

"வாதுக் காதார மாகிய வண்ணமும்
விருதுக் காதார மாயவெண் பாவும்
அறியாப் புலவருக் கமர்விளைந் திடுங்கால்
அவ்விரு புலவரு மறிந்த பாடற்
றொகையிலொன் றுயர்வது குறித்துக் காட்டிப்
பாடுந் திறமையிற் பழுதுபட் டோனை
மற்றவன் புடைக்கச் செய்து மகிழ்வது
தக்க பான்மையென் றுரைப்பது தரமே"

என்ற புலமையிலக்கணம்—செயல்வகையியல்பு—நடுநிலைப் பகுதியின் எ-ஆம் சூத்திரத்தின்படி; தருக்கமிடும் பாவலர்கட்குரிய சிறப்பினதாய வண்ண யாப்புக் கவி களும் வென்றித்திறல் காட்டுதற்குரிய தகுதியினதான வெண்பாக்களும் பாடுந்தன்மையில்லாத இரு புலவர் களுக்குள் வாதம் நேரிட்ட காலத்தில், நடுத்தீர்க்க அமைபவன் இருவருக்கும் எளிது பாடும் பழக்கமுள்ள வேறொரு விதக் கவியைப் பாடச்சொல்லி அந்நிலையில் தவறுபட்டவனை மற்றையனைக்கொண்டு தண்டிக்கச் செய்வது தகுதியென்று சொல்வது முறை. அமர் விளைந் திடுங்கால் என்றமையால் விளையாதிருத்தலே சால் பென்பதும், விளைதற்குக் காரணம் உண்மையறிவின் மையே என்பதும், தெய்வோபாசனை வழியில் முயலின் அஃதமையும் என்பதும் குறிப்பாயிற்றெனத் தெளிக.

வெண்டளைக் கவிவாதத்தில் தோல்வியுற்றோர் வென்றிக் குறியையும், வண்ணப் பாக்கள் பாடும் வாதத்தில் தோற்றோர் தமது செவியையும் பறிகொடுப்பது தொன்றுதொட்டுவரும் பழக்கமென்பது பலருக்கும் உடன்பாடாகும். ஆயினும், தோற்றவர் செவி கொய்தல் அநாகரிகமும் கொடுமையும் ஆமென விடுத்து, வென்றவனைக் கொண்டு தோற்றவனது விருது பட்டம் பதவிகளை அவையறிய இறக்கிவிடச் செய்வது மேன்மை. நடுநிலையில்லாத அற்பப் புலவர் கூடிய சபையில் பெரிய புலவனைச் சிறிய புலவன் வெல்வதுமுண்டு. நறுஞ்சுவைப் பலாக்கனி போன்ற செழிப்பமைந்த பெரும்புலவனைச் சுண்டைக்காய் போன்ற சிறிய புலவர்களுங்கூட எளிதில் வென்றிருப்பது சரிதவுண்மையாகும். ஒட்டக்கூத்தப் பெரும்புலவரைச் சிறிய புலவர்களான குயவன், கொல்லன், அம்பட்டன் முதலியோர் கவி வாதினிற் சுடச்சுட விடையிறுத்து மடக்கியவாற்றை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி இங்கே குறிப்பிட்ட அளவிலே நிறுத்திக் கொள்ளுகின்றேன். நடுநிலை தவறும் அற்பப்புலவர் கூடிய அவைக்களத்தின்கண் மேற்குறித்தபடி வாதம் நிகழுமிடத்து, வாணித்தாய் போன்ற பெரும் புலவர்களது தூய திருவுளத்தில் நடுநிலைத்தன்மை முழுவதும் விளங்கிநிற்கும்.

புலமையிலக்கணம்—செயல்வகையியல்பு—நடுநிலை—

சூத்திரம் ய.

"நடுநிலை யணைத்து நாமகள் போலுங்
கவிஞர்தம் முளத்திற் கவின்ற ருமன்றே"

ஆகலின், "கோடாமை சான்றோர்க் கணி" என்ற தேவர் திருவாக்கும், "தன்னுடைநாக் கோடாமை கோடியுறும்" என்ற ஔவையார் திருவாக்கும் ஈண்டு நினைந்து பின்பற்றத்தக்கன.

(c) எதிர் நிலை.

வாக்கின் அருளைப் பலித சித்தியினாற் காண்பது போலவே வாக்கின் தெளிவையறிவதற்குக் கருவியாயிருப்பது இரட்டை யாசிரிய விருத்தமாகும். சொற்செட்டும் பொருட்கட்டும் வாக்குத் தெளிவும் பழுத்த புலமையாளருக்கே வாய்க்கும் அது. பாடற் புலமையில் தேறியவன் வாக்கே தெள்ளிமையோடு கூடிய ஒள்ளிமை பூண்டிருக்கும். ஆனபடியினாலே தமிழ்ப் புலமையுள்ளான் ஒருவனுக்குத் தனது முன்னிலையில் நேர்ந்த மற்றொரு புலவனது தமிழ் வாக்கின் தெளிவானது அவனாற் கூறப்படும் இரட்டை யாசிரியக் கவியினால் விளங்கக் காணப்படும் என்பது "எத்தெடுக்கும் பெருவாழ்வில்" ஈடுபட்டுயர்ந்த பாவலர்களால் ஒப்புக்கொள்ளப்படும் உண்மையாகும்.

அபயகுலச் சோழன் என்பான் ஆதியில் நம்பியாண்டார் நம்பிகளின் துணைக்கொண்டு தேவாரத் திருமுறைகளைச் சிதம்பரத் திருமாளிகை மதிலினுட் கண்டெடுத்தபோது அவற்றுட் சிதல்மூடி அழிக்கப்பட்ட பகுதிகள் பல என்று வழங்கும் வாய்பாடுண்மையால், அவற்றை ஓர் அன்பன் உபாசனையால் சிவபிரான் கூறப்பெற்று உலகில் பரவச் செய்தல் ஆகாதென்று மறுப்பவர் சைவர்களிற் பதராவார்.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியார்
செயற்கரிய செய்கலா தார்"

என்ற திருக்குறளின்படி, முன்னாள் கடலினிடத்தில் சிந்திய திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதையும் அருட்தன்மையால் மீள வரவழைத்துப் பார்த்து மகிழவல்ல

கௌமாரப் பெரும் புலவரான அருணகிரிநாத சுவாமி களும், மதுராபுரிச் சிவாலயத்தின்கண் உள்ள திருக்குளத் தின்கண் முன்னொரு காலத்தில் அமிழ்ந்த சங்கப் பலகை யானது, பின் இடைக்காலத்தில் பாண்டிய மன்னன் காணும்படி அரிய செந்தமிழ்க் கவிபாடி வரவழைத்த பொய்யாமொழிப் புலவரும் அனைவோரும் போற்றுதற்குரிய செயற்கரிய செய்யும் பெரியோராவர். சங்கப் பலகையை மீண்டும் வரவழைத்தது போலவே எதிர்காலத்திலும் அதனைப்பெற்று மகிழ விரும்பித் தவமுயலும் புலவன் பெறுதல் கூடும். முற்காலத்து அறிஞர் கதைகளை நம்பி உளூற்றுவோரது நம்பிக்கைத் தவம் நிறைந்த தறுவாயில் அவ்வண்ணமே சித்தியடையலாம். ஆனல் அக்கோட்பாடு முழுப் பொய்யென்று பிதற்றித் திரியும் அறிவிலிகளது கொள்கையை ஆன்ற புலமையாளர் பொருட்படுத்த மாட்டார்கள்.

அன்றியும், கொலை புலைகளாகிய இரண்டு தீவினை களும் அடியோடு நீங்கி இவ்வுலகினர் நன்கு வாழுமாறு இரக்கமாகிய அறக்கருணை கொண்டும், நீதியாகிய மறக் கருணை கொண்டும் அருட் புலமை நடாத்துகின்ற புலவனை யும், தமக்கோ பிறர்க்கோ எதிர்காலத்தில் நிகழப்போகிற பண்டை வினைப்பயன் இத்தகையதென முன்னரே தனது அருள்வலியால் உணர்ந்து, அதற்குத் தக்கவாறு நடாத்தும் புலமையாளனையும், அறிவுள்ளவர் சாதாரண மக்க ளென்று உணரமாட்டார்கள்; மற்று, மனித வடிவமும் தெய்வ உணர்ச்சியும் விரவிமிளிரும் குருவென்றும், சித்த னென்றும், முத்தனென்றும் மதித்து, வணங்கித் துதித்து இன்புறுவார்கள். இவ்வாற்ருல் அறியத்தக்கது

யாதெனில், மாசற்ற புலமையாளர், தமது வழிபடு கடவுளின் திருவுருவக் காட்சியைக் கண்ணாரக்கண்டு, வாயாரத் துதித்து, மனமாரக் கசிந்துருகி எவ்வுயிர்க்கும் அன்பும் அருளும் பூண்டு விளங்குதல் கடனென்றுணர்க. அத்தகுதி கைவரப் பெறாதவர், தெய்வத் திருவருள் பெறாத கவிஞர்களின் சிறுபுலமையின் வியாபகத்தைக் கண்டேனும், அந்நிலைக்கு மேற்பட்டதும் மூடர்களும் அஞ்சிப் பணியத்தக்கதுமான வாக்குப் பலித சித்தியை விரும்பி முயன்றடைதல் புலமைக்குச் சிறப்பும் அழகு மாம் என்றறிக.

(d) அருள் நிலை.

பற்பல புலவர்களிடம் வண்ணயாப்பில் வாதிட்டு வெற்றிபெற்று அவர்களது செவிகளைக் கொய்த வில்லி புத்தூராழ்வார் திருவருணைத் தலத்தின் கோபுரத்தருகில் அருணகிரிநாத சுவாமிகளிடம் வாதம்புரிந்து தோல்வி யுற்றதனால் தமது வென்றிவாளை யிழந்து சுவாமிகளை வணங்கி நின்றனர். வாளைப் பெற்ற சுவாமிகள் சபதத் தின்படி வில்லிபுத்தூராரின் செவிகளைக் கொய்திலர். மற்று, இரக்கம் மீதூரப்பெற்று வில்லிபுத்தூராருக்குக் காதுகளை அளித்தனர். அந்நிகழ்ச்சி அருள் நிலையாம்.

இருள் நிலை, மருள் நிலை, தெருள் நிலை, அருள் நிலை யென நான்கு நிலைகள் உள. அவற்றுள் எழுத்துருவமும் தெரியாமல் உலகத்திலிருப்பது (1) இருள் நிலை. சில வகைக் கல்வி கற்றமட்டில் இறுமாந்து பிறர்மீது அழுக் காறுற்றும், பொருளாசை மிக்கும் உழல்வது (2) மருள் நிலை. உத்தம நூல்களை ஐயந்திரிபறக் குருமுகமாய்க் கற்றறிந்து அதன்படி நடந்து அடங்கி நிற்றல்

(3) தெருள் நிலை. தெய்வ அருள்பெற்றுச் சித்திகள் இயற்றல், கருணைமிக்கு விளங்கல் (4) அருள் நிலை என்க. சாமானியமான இருள் நிலை நீங்குதற் பொருட்டுப் பயிற்சி நெறியும், சமட்டியான மருள் நிலை நீங்குதற் பொருட்டுத் தேர்ச்சி நெறியும், வியட்டியான தெருள் நிலை முதிர்ந்து காரியப்படுதற் பொருட்டுத் தொழின் முறை A. சிறப்பு — மரபு வகையும், சாத்திய திசை யமைந்த பின் நிகழ்தற்குரிய விஷயங்களை அறிவித்தற் பொருட்டு B. பொது — செயல் வகையும் அமைத்து இப்புலமை யிலக்கணப் பகுதி முடிக்கப்பெற்றிருத்தில் காண்க.

உண்டியுடை உறையுள் முதலிய நலன்களும், வண்டி வாகனம் முதலிய வசதிகளும், கவிச் சக்கரவர்த்தி, ஆஸ்தானப் புலமை முதலிய பட்டம் விருது பதவிகளும் அன்புடன் அளித்துத் தம்மைப் பாதுகாத்து வந்த சோழ மன்னவனது அரிய குலக்கொழுந்தான (மகனை) ஒரு காரணம்பற்றி நேர்ந்த மனக்கலக்கத்தால் எழுத்தாணியால் குத்திக் கொன்ற பெரும் பாவலரான கம்பர் மார்பிலே அவ்வரசன் ஏவலரால் சூட்சமாகச் செய்து வைக்கப்பட்ட வில்லின் அம்பானது புகுந்து ஊடுருவி ஓடிற்று. அஃது அருள் நிலை.

சோழ வேந்தன் அம்பிகாபதியை நோக்கி, "நீவிர் சிங்கார ரசக் கலப்பென்பது சிறிதுமின்றிப் பத்திரசம் ததும்பும் வண்ணம் நூறு பாடல்கள் கூறுக" என்று ஒருகால் ஒரு காரணத்தை முன்னிட்டுக் கட்டளையிட்டனன். அப்புலவர் அந் நியதியைத் தவறி நூறுவது கவியில் அரசகுமாரியின் அவயவ வருணனை யமைத்து, "தலையலங்காரம் புறப்பட்டதே" என்று பாடி முடித்தனர்.

"சக்கர நெறி நில்"லாதபடியால், தெய்வப் புலமை வாய்க்கப் பெற்றிருந்துங்கூட அக்கவிஞர் கழுமரத்தில் இடப்பெற்றுத் துடிதுடித்து அந்தோ! உயிர் துறந்தனர். அதுவும் அருள் நிலையே.

கவிப் பெரியரான கம்பரால் பாடப்பெற்ற "பார்த்திபா! நின் குலத்தைச் சுட்டதடா என் வாயிற் சொல்" என்று முடியும் ஒரு பாடலால் சூரிய குலத்து மன்னரின் சோழ வமிசம் முழுதும் அழிந்தொழிந்தது. அதன் விவரம் வருமாறு:—

கம்பர் இரண்டாவது குலோத்துங்க சோழ வேந்தனிடம் ஆஸ்தானப் புலமைத் தொழில் நடாத்தி இனிது வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் தமது புதல்வரான அம்பிகாபதி என்னும் பாவலர் அரச குமாரியைக் களவியல் ஒழுக்கத்தில் கலந்த குற்றங் காரணமாக அரசன் அவரைக் கவிகூறச் சொல்லினன். நியமந் தவறிப் பாடிய காரணத்தை முன்னிட்டு, அரசன் அம்பிகாபதியைக் கழுவிலிட்டுக் கொன்றனன். அதுபற்றி நேர்ந்த புத்திர சோகத்தில் கம்பர் மூழ்கியிருந்தனர். அக்காலத்தில் அவ்வரசனது குமாரன் வீதியில் வந்து யானையைக் கண்டஞ்சி ஓடிவந்து கம்பர் வீட்டில் நுழைந்தனன். அவ்வாறு நுழைந்த வேந்தர் குலக் குருந்தினைக் கம்பர் தமது எழுத்தாணியினால் குத்தி வதைத்தனர். அது கண்ட சோழ வேந்தன் கம்பரைக் கொல்லப் பல முறை முயன்றும் முடியாமல் ஒரு வில்லும் அம்பும் ஒரு பெட்டியினுள் சூட்சமாக அமைத்து அதனைத் திறக்குமாறு அவரை ஏவினன். அங்ஙனமே

திறத்தலும் அம்பு கம்பர் மார்பை ஊடுருவிச் சென்றது. அப்போழ்து, அஃது அரசன் சூழ்ச்சியென்று அறிந்து கொண்ட கம்பர் வேந்தனை நோக்கி ;

"வில்லம்பு சொல்லம்பு மேதினியி லம்பிரண்டாம்
வில்லம்பிற் சொல்லம்பே வெய்யதாம்—வில்லம்பு
பட்டதடா என்மார்பிற் பார்த்திபா! நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல்"

என்று ஒரு வெண்பாவைக் கூறிவிட்டுத் தமது யாக்கையை விடுத்தனர். அக்கவியின் பயனாகச் சோழர் பரம்பரை அற்றுப்போயிற்று. இக்கவிதையுடன்,

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

என்னும் திருக்குறட் பாவை ஒப்பு நோக்குக. இக் காரண காரியங்களாலே அருட்பேறு கைவரப் பெற்றும் தீயொழுக்கங்களில் ஈடுபடுதல், நன்றி மறத்தல், மன வமைதி சிதறுதல், குரூரச் செய்கை இவை கூடா தென்பதும், பொருட்பேறு மிக்க வேந்தராயினும் செருக்கு, கொடுஞ் செயல், கரவொழுக்கம், உட்பகை இவை கூடாதன என்பதும் விளக்கித் தான் விளங்கும் அருளின் பெருமை அறிதற்பாற்று.

இறந்துபோன சினையாட்டினை உயிர்ப்பித்துக் குட்டிகளை ஈனச் செய்தலாகிய அருட் புலமையின் பெருமை யாவராற் சொல்லி முடியும்? அதன் வரலாறு :—

அருணசலம் என்னும் திருப்பதியிலே குகை நமசிவாயர் என்னும் பேரறிஞர் இருந்து வந்தனர். அவர் அவ்வூரில் வாழ்ந்த செங்குந்த மரபினரை ஊணுண்ணல்

ஆகாதெனத் திருத்தினர். பலர் திருந்தினர். திருந்தா திருந்தவருள் ஒரு கொடியன் ஒரு நாள் தெருவில் உயிர் துறந்துபோன சினையாட்டுக்கு விலை கூறிவந்த ஓர் இடையனைக் கண்டனன். கண்ட இடையனை, இம் மலையின்மேலுள்ள தவசியிடம் போனால் இவ்வாட்டை வாங்கிக்கொள்வாரென்று கூறியனுப்பினன். இடையனும் அவ்வாறே சென்று, வந்த காரியத்தைச் சொல்லினன். அப்பெரியார் அதனைப் பெற்றுக்கொண்டு அடுத்த நாள் விலைப்பொருள் தருவதாகப் பகர்ந்தனுப்பி விட்டு ஒரு கவிதை கழறினர். அருள் வலத்தினால், உடனே ஆடு உயிர் பெற்றது; இரண்டு குட்டிகளை ஈன்றது. மறுநாள் விலை கொள்ளவந்த இடையன் நிகழ்ந்தது கண்டு மகிழ்ந்து, தவப்பெரும் புலவரைப் பணிந்தெழுந்து ஆட்டையும் குட்டிகளையும் பெற்றுக் கொண்டு போனான். அத்தகைச் சித்தியியற்றும் அருள் நிலை மிகவும் அரிது!

அளவிலாப் புலமையாற்றல் ஒருவனிடத்திருப்பினும், திருவருட்பேறு இல்லாவிடின் மிடிவாய்ப்பட்டு மதியாதார் தலைவாயில்களிலே வலிதிற் சென்று இரந்துண்டு திரியும் துன்பில் அமிழ்வன். தெய்வ வழிபாட்டுத் திறத்தினால் அருட்பேறு பெறில், அவன் வாயாற் சொன்னவை முற்றும் பலிக்கும். அது கண்டு அரசர், செல்வர், பகைவர் முதல் அனைவோரும் பணிந்து புகழ்வரெனக் கூறத்தகும். அச் செயல் அருளின் பெருமையை விளக்குமன்றோ?

அரசன் முதல் ஆண்டிவரை எல்லோரும் கண்டும் கேட்டும் வியந்திருக்கும்படி அருட்கவி பாடி அழகிய பல்லக்கில் கம்பர் ஏறிச் சென்றனர். அக்கம்பரே பின்னொரு

காலத்திலே அந்தோ! அப்பதவியிழந்தனர்; கால் நோக நெடுந் தொலைவு நடந்தனர்; தமது தாய்த் தமிழறியாத வேற்று நாட்டிலே வேலியென்பவளிடம் நெற்கூலி பெறும் பொருட்டு மண் சுவர் வைத்து வருந்தினர். அலகிலா அன்பும் அருளும் பூண்ட தெய்வத் திருவருட்பேறில்லாதார் துன்பமுறுதல் முறையே. அருள் பெற்றுள்ள பெற்றியினால் அரசர் பலரும் மதிக்க வாழ்ந்த கம்பரும் வருந்தலாமோ? என வினவுவோர்க்கு விடையிறுத்தலும் முறையே.

தேகாபிமானம் நீங்காத மனத்தினரிடம் திருவருள் அழுத்தமாகப் பற்றாது. ஆதலின் கம்பரிடம் கலைமகளின் அருள் அமைந்திருந்தும் வினைப்புசிப்பின் பொருட்டு இடையிடையே இன்னல் பல அடையுமாறு செய்ததென்பதே தீர்மானம். மனைவி மக்கள்மீது வாஞ்சை, அரசர் முதலியோர் வழங்கும் கொடை விருப்பம், காய்தலுவத்தல் முதலியன ஒழிந்தாலொழிய; குரு வழிபாடு, திருத்தொண்டர் சார்பு, இன்ப துன்பங்களில் நடுவு நிலை முதலிய சாதனங்கள் தோய்ந்தாலொழிய அருளானது ஒருவர்மாட்டு முழுதும் பதியமாட்டாது. எனவே, அச் சாதனங்கள் இல்லாதார்க்கு விருப்பு வெறுப்பு, அருந்தல் பொருந்தல் ஆகியவற்றால் இடர்கள் வருதலும் போதலும் வினைச்செயலின் நெறியும் முறையும் ஆமென்க. நிற்க.

சிறு ஊமைக் குழந்தையாயிருந்த குமரகுருபர சுவாமிகள், திருச்செந்தூர்க் கந்தசாமியின் திருவருட் செயலால் வாய் திறந்து கந்தர் கலிவெண்பா முதலிய அருஞ்சுவை தோய்ந்த கவி நூல்கள் இயற்றியமை தெய்வீகத்தின் உண்மைத் தன்மையைப் புலப்படுத்துகின்றது.

குழந்தை அடிகள் தமது திருவாய் திறந்து பாடியமையும் அருட் பண்பு: எல்லா அறிவுக் கலைகளின் தெளிபொருளும், சரித்திர தத்துவ அநுபவங்கள் அனைத்தும் விளங்கப் பெற்ற தும் அருட் பண்பே. அத்தகைய தடையற்ற வாக்குப்பெரும் புலவரேரும் விளங்கிய குமரகுருபரருக்கும் ஒரு சமயம் வாக்குத் தடைபட்டது; திருப்பனந்தாள் மடத்தின் ஆதீன குருபரன் திருநோக்கால் அத்தடை நீங்கி முன்னிலும் எத்துணையோ மடங்கு வாக்குமாற்றேறி ஓங்கிக் குருவருள் என்ற அநுபூதிச் செல்வத்துடன் ஒளிர்ந்தது. இவையும் அருட் பண்பு அல்லது அருள்நிலை எனத்தகும்.

அவ்வண்ணமே அருட்பெரும் புலவரான திருப் போரூர் சிதம்பர சுவாமிகள் "வேதாக மப்பவுரி வீசுங் களாச நிலை" என்ற திருப்பாடலுக்கு உரை விரித்து வருங்கால் "களாசம்" என்ற சொல்லுக்குப் பொருள் விளங்காமல் தடையுறக் கண்டு தமது காதற் கடவுளாகிய குமரகுருபரமூர்த்தியின் அருளால் அச் சொற் பொருள் "பிரம்பு" எனக் கண்டுகொண்டு அவ்வுரை வகுக்கும் அரும்பெருந் தமிழ்த் திருத்தொண்டினை இடையீடின்றி மேற்சென்று இனிதாற்றி முடித்தனர் என்பது உண்மைச் சரிதம்.

அக்குறித்த குமரகுருபர அடிகள் செயலாலும் இக்குறித்த சிதம்பர அடிகள் செயலாலும் "தேசுவிர் தெய்வந் தன்னிற் றேசிகன் சிறந்தோன்" என்பதும், "அருபரத் தொருவன் அவனியில் வந்து, குருபர னாகி யருளிய கொள்கை"யும் விளக்கமுறுகின்றன. ஈண்டு பின்வரும் புலமை அநுபூதிக் கவிதைகள் ஒப்பு நோக்கி உணர்ந்தின்புறற்பாலன.

புலவர் புராணம்—அறிவுத்தன்மைப் புலவர் சருக்கம்
சகூ-ஆம் கவி.

"மூடனை யடக்கற் குபாசனைத் திறத்தான் மொழிப் பலிப் பியற்றலே யாகும், பாடலின் றிறமை காட்டலே கல்வி பயின்றவர்ப் பணித்தற்கா மிரண்டும், கூடலுத் தமமா மொன்றுபெற் றொன்றைக் குறித்திடா துழல்வது கொடிதே, ஏடலர் தவளக் கமலமீ திருப்பா ளீந்திடா விடிலேது மிலையே"

ஏழாமிலக்கணம்—யாப்பியல்பு—சூத்திரம் கசு.

"யாப்பியல் புணரினு மெடுத்த வண்ணம்
பாடுமா றருள்வது பாரதி கடனே"

ஏழாமிலக்கணம்—புலமையியல்பு—சூத்திரம் கக.

"உலகொடு கழகமு மொத்துப் பரவும்
புலமை போலும் புகழ்பிறி திலையே"

முன்னொரு காலத்தில் வாதவூர் அடிகளுக்கும் பௌத்தமத ஆசிரியர் இருபானொருவருக்கும் அரசன் எதிரில் மதவாதம் நிகழ்ந்தது. அடிகள் தமது திருநோக்கம் செய்தலும் அவ்வாசிரியர்கள் அனைவோரும் வாய்பேச நாவின்றி ஊமைகளாகவும், அறிவு விளக்கம் மறைந்து சடத்தன்மை உற்றிருக்கும்படியும் செய்தது அருள் நிலை. அரசன் புதல்வியின்மீது அடிகள் திருநோக்கம் அமைந்த போழ்தும் வினைப் பாடல்கள் பாய்ந்தபோதும் ஊமையா யிருந்த அப் பெண்பாவை வாய்திறந்து விடைப் பாடல்கள் உடனுக்குடன் யாவரும் வியக்கும் வண்ணம் பாடினள். அதுவும் அருள் நிலை. இச் சரிதங்களால் பேச்சில்லாத ஊமையைப் பேசவைக்கவும், பேசிய வாய்களைப் பேசா

ஊமைகளாக்கவும் வல்லது ஒரே அருள் என்பதும், அவ்வருளும் அதனைப் பெறுவோரது தகுதிக்கேற்பத் தோழிற்படும் என்பதும் வெள்ளிடை மலைபோலத் தெள்ளிதின் விளங்கா நிற்கின்றதன்றோ?

பிறந்து வளர்ந்து பல நாள் ஓடியாடித் திரிந்து உரிய வயதில் பாடசாலையில் கல்வி பயின்று பின்பு புலமைக் கல்வியும் பயின்று அடையத்தக்க பாடுந் தன்மையை, இந்நிலவுலகத்திலே பிறந்தவுடனே ஒரு சிலர்க்கு அமையச்செய்தது அருள் நிலையே. இதற்கு எடுத்துக் காட்டு வருமாறு :—

ஆதியென்பாள் வயிற்றில் பகவன் என்பவருக்கு ஆணும் பெண்ணுமாக ஏழு குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் ஔவை, உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் என்னும் பெயரினராம். அவ்வெழுவரும் தமது தாயின் கருப்பத்தினின்று பூமியின் மீது அவதரித்த சமயத்திலேயே அருள் விளக்கத்தால் உலகத்தவர்க்கு மெய்யறிவுச் சுடர் கொளுத்தும் இன்றமிழ் வெண்பாக்கள் பாடினர். அவ்வருந் தமிழ்ப் பாடல்கள் மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் நிறைந்து புகழ் மலிந்து கிடக்கின்றனவல்லவோ? அருள் நிலையை எவரே அறுதியிட்டுக் கூறி முடிக்கவல்லார்?

"பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" என்னும் ஆன்றோர் வாக்கின்படி நோக்கின், பொருள் என்னும் செல்வத்தின் செல்வாக்கானது விவகாரத்தில் எல்லையின்றி விரிந்து செல்கின்றது. "கல்வி கரையில" என்ற நாலடியின்படியும், "கற்றது கைம்மண்ணளவு

கல்லா துலகளவு" எனச் செல்லும் மூதாட்டியார் வெண் பாட்டடியின்படியும் நோக்குங்கால் தெருள் என்னும் புலமையும் அளவற்றுப் பரந்தவிர்கின்றது. பொருளும் தெருளும் அவ்வாருயின், கங்குகரையின்றிப் பொங்கி வழிந்தோடும் அருளின் நிலே "உளபடியை யுணருமவ ரநுபூதி யானதுவும்" என்றபடி அளந்தறியத் தக்கதாமோ? ஆகா. ஏனெனில் உயிருணர்வு கரைந்து சான்று மாத்திரமாக நிற்கக் கடவுளுணர்வு பரந்து நிற்கும் பென்னம் பெருந் தகுதியிலே அருள் ஊன்றி நிற்ப தாகும். அதன்மேல் "சான்ருரு மற்ற தனிவழிக்கே வந்து சந்திப்பதே" என்ற கந்தரலங்காரத்தின்படி அருள் அதீதப்பட்டு மேலோங்கிப் பொங்கி வழிந்தோடும். அத்தகைய அருள் நிலேயை அநுபூதியிற் பெற்ருேர், வேருய் நின்று சொல்வதற்கின்றி அதனிற் கலந்தொடுங் குவர். அன்றியும், அந்நிலேயை அபரஞானத்தால் அறிந்து கூறுவோர் ஐயம் நீங்கிடார். இப் பெற்றித்தான காரணங்களினுல்; கந்தரலங்காரத்தார் "யான்ரு னெனுஞ் சொலிரண்டுங் கெட்டாலன்றி யாவருக்கும், தோன்ருது சத்தியம்" என்றும், புலமையிலக்கண முடையார் "அருள் நிலே முடித்தற் காரா லாகும்" என்றும் புகன்றனர். அப் புலமையிலக்கணத்தாரே ஏழாமிலக்கணம் புலமையியல்பு கஉ-ஆம் சூத்திரத்தில்,

"இன்னு மொருக்கா லெழுத்துரு வொருவன்
காட்ட வுணராக் கதிபெற நாடி
முயலவல் லானே முழுப்புல மையனே"

என்றும், அப்பால், கச-ஆம் சூத்திரத்தில்,

"புலமைத் தொழிலாற் பொருந்து மெய்ப்பயன்
மலமறக் களேயு மாதவ நிலேயே"

என்றும் கூறியாங்கு புலமையிலக்கணத்தின் ஈற்றுச் சூத்திரத்தின் ஈற்றடியிலே, "கருதிய பயனிற் கருத் தமைந் ததுவே" என மொழிந்தருளினர். இவ்வாற்ருல், அருட்பேருகிய வாக்குச் சித்தியினுல் உலகத்தைச் சீர் திருத்தி, தற்போத ஒழிவில், ஒடுக்கமாகிய பரமுத்தி யுறுதற்குரிய மாதவத்தில் முயல்வதே புலமைத் தொழி லாற் பூணும் உயர் பயனென அறியத்தக்கது.

கருத்துரை: அபரஞான விரிவாகிய தமிழறிவும், ஆருதாரங்கட்கும் மேற்பட்ட பரவெளிமயமான திரு வருள் அநுபூதியான பரஞானமும் முறையே சாதக திசையிலும் சாத்திய திசையிலும் பக்குவ மாணவரைக் கலந்துகொள்ளும். எனவே, அன்னவர், அபரஞான பரஞான இன்பங்களில் அமைந்து, பின், திரும்பாத வீடு பெறுவர் என்க.

புலமையிலக்கணம்—தேற்றவியல்பு—சூத்திரம் உஉ.

"சொன்னிறந் நன்னெஞ் சறியத் தோன்று
மளவும் புலமையி னவாவடங் காதே"

என்றபடி ஒவ்வொரு சொற்களையும் கவனிக்கும்போது அவற்றிற்குரிய நிறபேதங்கள் மனச்சாட்சியாய் நன்கு தெரிகின்ற நிலைமையுறுங்காறும் புலமையின் மீதுள்ள விருப்பமானது ஒருவனுக்கு மாருது. அதாவது: கல்விப் பயனுகிய அபரஞானம் முதிர்ந்து அநுபவ உணர்வாகிய பரஞானம் நேருங்கால் நிற பேதங்கள் நீங்கி எல்லாம் ஒரே பொருளின் விரிவாகக் கண்டு நிற்பன். அப்போழ்து தான் தூங்குவோன் கைப்பொருளைப் போலச் சொற் சுவைப் புலமை நழுவிவிடும்.

புலமையிலக்கணவியல் முற்றிற்று.

மூன்றும் பகுதி — புலமை இலக்கியவியல்.

இதுகாறும் புலமையிலக்கண ஆராய்ச்சியிற் புகுந்திருந்தோம். இப்போது புலமை இலக்கியவியலைச் சிறிதாராய்வோமாக. அது பின்வருமாறு நூற்பிறப்பு, கட்டுரைப் பொருள், செய்யுள் நடை, உரைநடை, புது வகை உரைநடை நூல்கள், நூல் மதிப்பீடு என்னும் அறுவகைப் பகுதிகளில் ஆராயப்படும்.

1. நூற்பிறப்பு.

புலமையிலக்கணம்—செயல்வகையியல்பு—எதிர்நிலை—

சூத்திரம் உ.

"அளப்பரும் பனுவ லகண்ட மாய
நாதச் சத்தியி னனந்தலை கிடந்து
பகர்வார் வரவு பார்க்கின் றனவெனப்
பெரியோர் பற்பலர் பேசின ரன்றே"

என்றபடி இத்தனையென்று அறுதியிட்டுரைத்தற்கரிய பல நூல்கள் வியாபக நிறைவான நாத தத்துவத்தின் இடத்திலமைந்து எதிர் காலத்தில் யாத்தற்குரிய நூலாசிரியத் தன்மை தோய்ந்த புலவர்களின் வருகையைக் குறித்துக் காத்திருக்கின்றனவென்று பல பெரியோர்கள் கண்டு சொன்னார்கள். சொற் செறிவும் விடயத் தொடர்புங் கொண்டு புலவர்களால் முக்காலத்திலும் இயற்றப்படும் பனுவல்கள் அனைத்தும் திருவருள் ஆணையினால் அநாதியே நாத அணுக்களாய் அமைந்து உரிய காலங்களில் அவர்களது கருவி கரணங்களின் வழியே பிறர் அறியத் தோழிற்படும் உண்மை, பெரியோரே நாத விளக்கத்தால் அறிந்து ஓதினர் என்பதாயிற்று.

களங்கமற்ற ஞான சொரூபியான கலைமகள் அக்கர வடிவினள். அதனால் "அக்கரி" என்பது அவள் பெயர்களில் ஒன்றாகும். அவள் சொல்லும் பொருளும் கொண்டமையும் அளவிலா வேதாகமங்களுக்கு ஆதாரமானவள். சருவசமய உடன்பாடான குருத்துவமுடைய குமரக் கடவுள் அக் கலைவாணிக்கும், அவளது கொழுநனும் மறைக் கடவுளுமான பிரமனுக்கும், பரமசிவனுக்கும், அகத்திய முனிவருக்கும், அருணகிரிநாதருக்கும் அன்ன பிறர்க்கும் தமது திருவருளினால் அருளிலக்கணம் உபதேசித்தருளுவர். அவ்வுபதேசத் துணைபற்றி உலகில் அறிவியல் அருளியல் துறைகளெல்லாம் விரிந்து பரந்து இருமையின்ப வாழ்க்கைக்கு அடிகோலுவனவாம். இதனால் ஒரே பெரிய பொருளாயிருக்கும் பரத்துவமானது குருத்துவ வடிவு பூண்ட நிமித்த காரணத்தினால் துணைக் காரணமாகிய தக்க மாணக்கரின் வழியே கலைத்துறை அருட்டுறைக் காரியங்களாக விரிந்தொளிருமென்க. இவ்வுண்மைபற்றியே கந்தரநுபூதிக்காரரும்,

"யாமோ தியகல் வியுமெம் மறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனால்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே"

என்றருளிப் போந்தனர். நூற்பிறப்பின் உண்மை நெறி இதுவாகும்.

நூலின் இன்றியமையாமை: மக்கள் இகபர வாழ்க்கைக்கு நூல் இன்றியமையாதது. உடம்பின் வளர்ச்சிக்கும் கிளர்ச்சிக்கும் உண்டி, உடை, உறையுள் இம்மூன்றும் எத்துணை வேண்டப்படுவனவோ அத்துணையும் உணர்வின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் கல்வி,

கேள்வி, ஆராய்ச்சி இம்மூன்றும் வேண்டப்படுவனவாம். உணவில்லாமல் உடல் நிலைபேறடைதல் இல்லை. அவ்வாறே கல்வியறிவில்லாமல் வாழ்க்கை பயன்படுதலும் இல்லை. மக்கள் வாழ்க்கை உடம்போம்புதல் மட்டில் நிற்பதில்லை; உண்டி நால்வகை, சுவை ஆறுவகை கொண்டு உடலையூட்டிப் பேணுதற்கொப்ப முத்தமிழ் நவரசம் என்னும் நல்ல சொற்சுவை பொருட்சுவைகளைக் கொண்டு உணர்வைப் பேணிக்கொள்ளுதலும் இயற்கையே. உண்டியின்றி உடலம் இளைத்து வாடி உயிர் ஒடுங்கும் வண்ணமே, அறம்பொருளின்பம் வீடுமின்றி வாழ்க்கை பீடழிந்து வீணிற் கழிந்திடும்.

"உடம்பா ரழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்றார் திருமூல நாயனாரும். ஆகலின் உடல் நலத்திற்கு நல்ல உண்டியின் இன்றியமையாமையைப் போலவே, உயிர் நலத்திற்கு நல்ல நூற்கருத்துக்கள் இன்றியமையாதனவே. உலக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் தெளிவாக எடுத்துச் சொல்லும் திருக்குறள் "இருவேறுலகத் தியற்கை; திருவேறு, தெள்ளிய ராதலும் வேறு" என்றபடி வாழ்க்கையில் உடலோம்புதல், உணர்வோம்புதல் என்னும் இருவகை இயற்கைக் கட்டாயங்கள் திகழ்கின்றன. இவற்றின்படி உடலோம்புதலையே தலைமையாகக் கருதி வாழ்வோர் உணர்வோம்புதலை முதன்மையாகக் கருதிக்கொள்ளாமையினால், நல்ல நூற்கருத்துக்களைப் புறக்கணித்து வருகின்றனர். அன்னார் அறிவுக்கண் இல்லாமையின் பயனாக உடலோம்புதலினின்றும் வழுவு

கின்றனர். ஆகலின், "திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்" ஆகின்றனர். அவர்தம்மைத் திருத்திப் படிப்படியாக உணர்வு நலத்தில் ஏற்றுவித்தற்பொருட்டே தெள்ளியர் எனப்படும் கல்விப் பெரியர் மிகப் பெரிதும் முயல்கின்றனர். இக்கருத்துப்பற்றியே;

"என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே"

என்றும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றும் புகன்றருளினர் திருமூல நாயனர்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்றார் தேவரும். மேலும்; "காக முறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ, போகமென்னும் புத்தமுதம் ....உண்ணச் சேர வாரும் செகத்தீரே!" என்று தாயுமானப் பெருந்தகையாரும் பாடியருளினர்.

2. கட்டுரைப் பொருள்.

கட்டுரை என்பதன் பொருள் கூரிய அறவுரை அல்லது கூரிய அறிவுரையாகும். கம்பர் "வில்லம்பிற் சொல்லம்பே வெய்யது" எனத் தம் வாழ்நாள் இறுதியிலே மெய்ப் பித்தனர். திருவள்ளுவர் வில்லேர் உழவரினும் சொல்லேர் உழவர் வலியர் என்றனர். இன்னும் இவ்வுண்மை இவ்விரு பெரும் புலவர் பெருமக்களும் இயற்றிய தனிப் பாடல்களாலும், கம்பராமாயணம், திருக்குறள் என்னும் அரிய பெரிய நூல்களாலும் நனி விளங்கும். இவை போன்ற ஆற்றல் பூண்ட சொல்லையே கட்டுரை என்று

கொண்டாடினர் அறிஞர். ஆகலின் கட்டுரை என்பது கூரிய பொருள் பொதிந்த சொல் என்ப. கட்டுரை செய்யுள் நடையிலும் அமையலாம்; உரை நடையிலும் அமையலாம்.

3. செய்யுள் நடை.

கற்று வல்ல புலவரால் பொருள் பொதிந்த சொற்களைக்கொண்டு அணிபெறக் கட்டப்படுவதே பாட்டு. விழுமிய பொருளும் கெழுகிய ஓசையும் பெற யாக்கப் படும் பாட்டு நடையே செய்யுள் நடையாகும். தமிழகத்தில் பாட்டு வடிவத்தில் அமைந்த கட்டுரைகள் பற்பல. அவற்றுள் பழைமையும், பொதுமையும், செப்பமும், திட்பமும், பண்பும், பயனும் வாய்ந்து துலங்குவன தொல்காப்பியம், திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், திருமந்திரம் என்பனவாம். இவற்றுள் தொல் காப்பியமும் திருக்குறளும் முதலிடம் பெற்ற பெற்றியின. அந்நூல்கள் உயர்தர இருமையின்ப வாழ்க்கைக்கும் இன்றியமையாத எல்லாத் துறைகளையும் சொல்லின்பம் பொருளின்பம் துளும்பக் கற்போர், கேட்போர், எண்ணுவோர் மனத்திலே பசுமரத்தாணிபோல் பதிக்கின்றன. இக்காரணத்தால் தமிழறிஞர் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம் என்றும்,

> "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகுத்துக்
> குறுகத் தரித்த குறள்"

என்றும், "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்றும், "தமிழ்க்குக் கதி, கம்பரும் திருவள்ளுவரும்" என்றும் போற்றிப் புகழலாயினர்.

பனுவல் வகை: அறுவகை யிலக்கணத்தார் யாப்பிலக்கணப் பனுவலியல்பிலும், அணியிலக்கண உடைமை யியல்பிலும் பனுவல்பற்றிக் கூறியுள்ளார். பனுவல் என்பது இலக்கியம். பனுவலானது நூல், பிரபந்தம், காப்பியம் என மூன்று வகைப்படும். இலக்கணம், இலக்கியம், சோதிடம், நீதி, மருத்துவம், சிற்பம், ஓவியம் முதலிய பொருள்கள்பற்றி வகுக்கும் பனுவலெல்லாம் நூல் என்ப. கடவுள், அரசன், வள்ளல், சொற்பொருட் சுவையறிந்து மகிழ்வோர் முதலியோரைப் போற்றிப் புகழும் பனுவலனைத்தும் பிரபந்தம் என்ப. மலை, ஆறு, நாடு, நகர் இவற்றின் வளமும், திருவருட் செயலும், மிகுபெரும் போரும், செங்கோற் சிறப்பும், உயர்ந்தோர் தன்மையும் இவைபோன்ற பிறவும் விரித்துக் கூறும் பனுவல் யாவும் காப்பியம், புராணம் என்ப.

பனுவலுக்குப் பாயிரம் இன்றியமையாதது. இதனை, "பனுவலின் முகத்துத் திலகம் போல்வது, பாயிர மாமெனப் பகரத் தகுமே" என்றும், "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவ லன்றே" என்றும் அறிஞர் சூத்திரங்கள் அறிவிக்கின்றன. பாயிரப் பகுதியில் கடவுள் வணக்கம், ஆசிரிய வணக்கம், நூற்பெயர்க் காரண விளக்கம், ஆசிரியரின் பெயர், அவையடக்கம் என்னும் ஐந்தும் இன்றியமையாதன. கொலை புலைகளை மறுத்திடல் நூற்கும், வெற்றி, பெருங் கொடை எனுமிவை பிரபந்தத்தினுக்கும், கடவுளுந் தொண்டரும் காப்பியத்தினுக்கும் உரிய மெய்ப்பொருள்கள் என்பர் மெய்யறிவுடையோர். அந்தணர், அரசர், வாணிகர், வேளாளர், முதலிய மரபியல்புகளும், கலைப்

பயிற்சி, இல்லறம், துறவறம், அருளறம் என்னும் நிலைகளும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களும் நூல்களுக்கு உரிமைப் பொருள்களாம். நூலின் பிரிவுக்கு அதிகாரமென்றும், இயல்பென்றும் இசைப்பர். கோவை, உலா, தசாங்கம், பவனி, தூது முதலியன பிரபந்தப் பொருட் பிரிவு என்பர். காண்டம், சருக்கம், படலம், கதி முதலன காவிய புராணங்களின் பொருட்பகுப் பென்பர் புலவோர்.

மெய்யிலே பொய்யும் பொய்யிலே மெய்யும் கலந்து கூறும் உரிமை பனுவலுக்கில்லை. முற்காலத்து ஆன்றோர் வழக்கப்படி உள்ளதை உள்ளவாறே கூறுதல் முறை. ஆயினும், பொய்யைப் பொருந்தவும் மெய்யை விளங்கவும் கூறுவது காப்பிய புராணப் பனுவல்களுக்கு இயற்கையாய் விட்டன. பனுவல்கள் முத்தமிழிலும், முத்தமிழ் இலக்கண இலக்கியத்திலும், இலக்கண இலக்கியங்கள் இலக்கியத்திலும் அடங்கும். இலக்கியங்கள் கடவுள் ஒருவரிடத்திலே அடங்கி அவரது திருவருள் வெளி ஒன்றிலே நின்று விரிந்து பக்குவ ஆசிரியரின் வாக்கை நோக்கிய வண்ணம் உலவி வெளிவருகின்ற உண்மையை இங்கு மீண்டும் நினைவுகூரத்தகும்.

முத்தமிழ் யாப்பு: முத்தமிழ் யாப்பென்பது இலக்கியச் செயுள்கட்குக் கல்வித் தவப் புலவர்;

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினில்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்று செய்யுளிலக்கணம் சொற்றனர்: அதாவது கற்று வல்ல புலவரால் பொருள் பொதிந்த சொற்களைக்கொண்டு

அணிபெற யாக்கப்படுவதே செய்யுள். இலக்கியம் முத்தமிழாகப் பொலிதலின் இங்கு இயலிசை நாடகத் தமிழ் யாப்பினம் பற்றிப் பொதுவாக ஒரு சிறிது குறிப்பல்.

சங்ககால நூல்கள்: அகவற்பா (ஆசிரியப்பா), நூற்பா (சூத்திரப்பா), வெண்பா முதலிய யாப்புக்களான் இயன்றுள. பல நூல்கள் அகவற்பாவினத்திலும் சூத்திரப் பாவினத்திலும் கட்டப்பட்டுள்ளன. இடைக்காலத்தில் ஒரு சில நூற்கள் வெண்பா முதலிய வெண்டளைப் பாக்களான் யாக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் பற்பல நூல்கள் விருத்தப் பாவினங்களாலும், ஒரு சில சந்தப்பா வினங்களாலும் சமைந்துள. அவற்றுள், நூற்பா வென்பது சூத்திரப்பாவென்றும், ஆசிரியப்பாவென்பது அகவலென்றும், வண்ணம் வெண்பாவென்னும் இரு வகைச் செய்யுளும் புலமைத் திறங்காட்டும் இயல்பின வென்றும் கூறுவர். இனித் தமிழ்நூற் பெருக்கம் வருமாறு காண்க.

முச்சங்கம் முதத்தமிழ்த் துறையின் முற்றப் போகிய சிவன், முருகன் என்னும் கடவுளராலும், அகத்தியனார், தொல்காப்பியனார், நக்கீரனார், பெருந்தேவனார், திருவள்ளுவனார் முதலிய முது புலவர் பெருமக்களாலும் முற்காலத்தில் வளர்க்கப்பட்டது. நல்லிசைப் புலவர்கள் வறுமையால் நலியாது வள்ளல்கள் வரையாதளித்த நன்கொடைப் பொருள் பலகொண்டு தம் வாழ்க்கையினை முட்டின்றி நடாத்தினர். அதனால் அவர்தம் ஆயுள் முழுதும் அரும்பெரும் நூல்கள் ஆக்குவதிலேயே செலுத்தினர். நாள் செல்லச் செல்ல நயமிக்க நல்ல நூல்கள் உண்டாயின ; இயலிசை நாடகத் தமிழ் நூல்கள் பிறந்து

பிறங்கின; மருத்துவ நூல்கள், சிற்ப நூல்கள், ஓவிய நூல்கள், கோள் நூல்கள், வான நூல்கள், பொருள் நூல்கள், காப்பியங்கள், உலக புராணங்கள் தோன்றி நின்றன. இங்ஙனம் பெருக்கெடுத்துப் போந்த தமிழ் நூற் கடலைக் கொடுங்கடல் கொள்ளை கொண்டது. அகத்தியம் முதலிய நூல்களும் பிறவும் அக்கடல் கோளால் அழிந்துபோயின. அகத்தியம், பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், இந்திர காவியம் முதலிய நூல்கள் தம் புகழுடம்பை நிறுத்திப் பூதவுடம்பைப் போக்கிக்கொண்டன: அதாவது ஒரு சில சங்க நூல்களில் மேற்கோள்களாக இங்குமங்கும் காணப்படலால் தம் பெயரளவில் உள்ளன. மீந்தின சிலவும் தீயாலும் செல்லாலும், பிற காரணங்களாலும் அழிந்துகொண்டே வந்தன. இப்போழ்து நமது கைக்குக் கிடைத்திருப்பன இடைச்சங்க காலத்து நூலான சூத்திரப் பாக்களால் இயங்கும் தொல்காப்பியமும், கடைச்சங்க நூல்களாகிய அன்பினைந்திணைக் களவினைக் கூறும் களவியல்; கீழ்க் கணக்கு நூல்கள், அருங்காவியங்களாகிய பாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலனவுமே. மேற்கணக்கு நூல்கள் ஐவகைப் பாக்களாலும், அகப்புறப் பொருட்டுறைகள் பற்றித் தொடுக்கப்பட்டவை. கீழ்க் கணக்கு நூல்கள் அறம் பொருளின்பம் விரவத் திறம்பட வெண்பாவால் யாக்கப்பட்டன. பாரதம் வெண்பாவும், அகவலும், உரையும் விரவித் திருந்திய இருங்கலைப் புலமைப் பெருந்தேவனாராலும், சிலப்பதிகாரம் அகவலால் அரசிளம் புலவராகிய இளங்கோவடிகளாலும், மணிமேகலை அகவலால் ஒண்டமிழ்ச் சாத்தனாராலும் இயற்றப்பட்டன. இவை அறம் முதலிய நாற்பொருள்களையும் புகலும் காப்பியங்

களாம். பிற்காலத்துதித்த சிறந்த காவியங்களாகிய சிந்தாமணி, இராமாயணம், சூளாமணி, நைடதம் முதலனவும், புராணங்களும் பிறவும், சங்க காலத்தில் இலங்காத விருத்தப்பா வகைகளாலும், திருப்புகழ் முதலிய நூல்கள் சந்தபேத யாப்புகளாலும் திருந்திய முறையில் இயற்றப்பட்டன.

செய்யுள் நூல் வளர்ச்சியை நடுநிலையினின்று ஆராயின், விருத்தங்களால் பனுவல்களைப் பண்புறப் பாடுதல் எளியதென்பதும், அகவலால் அழகுற ஆக்குதல் சிறிது கடினமானதென்பதும், வெண்பாவால் ஒண்பாக யாத்தல் அரிதென்பதும், சந்தவண்ண யாப்பில் தகவுற அமைத்தல் அரிதினும் அரிதென்பதும் தெற்றெனை விளங்கும். பொதுவாக எந்த யாப்பிலும் பாட வல்லவரே புலவராயினும், சிறப்பாக ஒவ்வொரு புலவர் ஒவ்வொரு யாப்பில் சிறந்து விளங்குதல் இயல்பே. வெண்பாவில் புகழேந்தி புகழேந்தினர்; பரணியில் சயங்கொண்டான் சயங்கொண்டனர்; விருத்தத்தில் கம்பர் விளங்கினர். கோவை உலா அந்தாதிகளில் ஒட்டக்கூத்தர் பிறங்கினர்; கலம்பகத்தில் இரட்டைப்புலவர் சிறந்தனர்; ஆசுகவியிலும் வசைப் பாட்டிலும் காளமேகப் புலவர் வயங்கினர்; சந்தச் செய்யுளில் படிக்காசுப் புலவர் சான்றனர்: இதற்கு:—

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்த மென்னும், ஒண்பாவி லுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன், கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காள மேகம், பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே" என்ற தனிப் பாடலே சான்றும்.

அன்றியும், இன்ன பிரபந்தத்தில் இன்ன பகுதி யமைத்தல் அருமைப்பாடென்றும், நியமம் மிக்கதாகலின் வெண்பா எல்லாப் புலவர்க்கும் அமைதல் அரிதென்றும்,

"காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசு முலாவிற் பெரும்பைபுலி — ஆசு
வலவர்க்கும் வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி"

என்ற ஔவைப் பிராட்டியார் பாடல் வலியுறுத்தும். இக்கவியால் எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி (சிறப்பு) என (வெண்பாப் புலமையின் பெருமை) விளங்குகிறதன்றோ? வெண்பாவைக் காட்டிலும் சந்த வண்ணம் மிகுந்த நியமமுடைத்தாகலின் "சந்த மாமுடி" எனவும், "தமிழ்க்கவி யனைத்தினும் தலை யென்றுள்ள — வண்ணம்" எனவும், "களிறே புரையுங் களிப்புடைக் கவிஞர்க்—கரியே றன்னோர்க் காவி யாய—சந்த நிலை" எனவும், தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ளனர். இந்தச் சுவாமிகள் சந்தப் புலமையில் தலைசிறந்து விளங்கினமையின், "திருப்புகழ்ச் சுவாமிகள்" என்றும், "வண்ணச் சரபம்" என்றும்; திருப்புகழ் திருவகுப்பு என்னும் சந்தக் கவியினம் பாடுதலில் வல்ல அருணகிரிநாத சுவாமிகளை "வாக்கிற் கருணகிரி" என்றும் தமிழறிஞர் புகழலாயினர்.

"வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
நாக்கிற் றிருஞான சம்பந்தர் — நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்"

என்ற பாடலினால் அருணகிரியார் வாக்கும், மாணிக்க வாசகர் கனிவும், திருஞானசம்பந்தர் தாக்கும், சுந்தர மூர்த்திகள் நோக்கும், திருநாவுக்கரசர் சொற்குறுதியும்

பொலிகின்றன. முன் ஆராய்ச்சியினால் அவ்வக் கவிஞரது யாப்பின் தனிச்சிறப்பியல்புகளையும், சொற்பொருள் நயங்களின் பொதுச் சிறப்பியல்புகளையும் தெள்ளத் தெளியக் காண்கின்றோம் அல்லமோ?

முத்தமிழ்ப் பனுவலும் எதுகை, மோனை, திரிபு, சந்தம் முதலிய தொடை நயங்களுடனும், உவமை முதலிய அணியழகுகளுடனும், ஒன்பான் சுவையாகிய பொருள் நயங்களுடனும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பயன்களுடனும் கூடிவருமாறு தொடுத்தலே அழகு. அப்படிக்கில்லாதன—அதாவது, யாப்பியல்பின் வரம்பு மீறிப் பாடும் பனுவல்கள்—கொங்கணி மங்கணிப் பாக்களென்றும், கன்னை பின்னைப் பாடல்களென்றும் புலவர் வெறுத்து விலக்குவர். ஆதலினாலே யாப்பியல்பின் வரம்பு கடவாமல் அதனுக்குட்பட்டு உறுதியாய் நின்று சுவை மிகத் தொடுக்கப்படும் பனுவல்களே கொள்ளற்பாலன என்க.

இயற்றமிழை அறிவுப் பொருள் சிறந்திலகும்படியும் இசைத் தமிழை அத்துடன் பண்ணும் தாளமும் பொருந்தி மிளிருமாறும், நாடகத் தமிழை பாவராக தாளங்கள் துளும்பி ஒளிருமாறும் யாத்தலே முறை. தேவாரம், திருவாய்மொழி, திருப்புகழ் முதலிய பாக்கள் பொதுவாக இயற்றமிழாகவும், அவை பண்ணும் திறமும் சேர்ந்தாங்கு இசைத் தமிழாகவும், பதம், சிந்து, கீர்த்தனை முதலிய யாப்பு வகைகள் இசையும் தாளமும் கூடிய வழியே சிறத்தலின் அவை சிறப்பாக இசைத் தமிழாகவும், இயலிசையுடன் உரையாடலும் அபிநயமும் தோய்ந்த போழ்து நாடகத் தமிழாகவும் கொள்வர் சீரியர்.

இசைத் தமிழும் நாடகத் தமிழும்: அநு பல்லவியும் சரணமும் பல்லவியை நேராகத் தொடும்படி சொற் பொருளிசை இன்பங்கள் பொதுள இசைப் பாடல்கள் யாக்கப்படல் வேண்டும். பல்லவிக்கு இருமடங்கதிகம் அநுபல்லவியும், அநுபல்லவிக்கு இருமடங்கதிகம் சரணமும் அமைவன கீர்த்தனம். இவற்றுடன் பேரின்பமும் தாளமும் இல்லாதன பதம் என்பர். அநு பல்லவியும் சரணமும் அளவொத்து வரினும் தாளம் கெடாமலும், எவரும் எளிதில் உணரும் பொருளமைந்தும் வருதல் நன்று. கீர்த்தனங்களில் பல்லவியைப்போல அநு பல்லவி ஒன்றி வருதலும் சரணம் ஒன்றல்லாமல் மூன்றும் வருதலும், அதனிலும் மிகுந்து ஐந்து, எழு, ஒன்பது, பதினொன்று வருதலும் உண்டு. இவ்வாறு வரும் அநு பல்லவியும் சரணமும் இவற்றின் இறுதிகள் பல்லவியின் தலையைப் பொருந்தித் தொடும்படி தொடுத்தலே கீர்த்தனைத் தொடைக்கு அழகென்ப.

இசைப் பாவாணரும் நாடகப் பாவாணரும் இவ்விரு வகைப்பட்ட பல்லவியின்றி ஆட்டியலுக்கேற்றபடி தனித் தனி இரண்டடி நான்கடி காட்டிக் குறித்த ஒரு பொருளைப் பொருந்தக் கூறித் தொடுக்கும் தொடையைச் சிந்து என்பது யாப்பின் வழக்கு.

தோல் கருவி துளைக் கருவி நரம்புக் கருவிகளில் தேர்ந்த இசைப் புலவர்கள் காட்டும் வழியை முழுதுமே தழுவின் நாடகச் சுவை குன்றும். எனவே, பொருட் சுவையழியினும், இயலிசைச் சொற்கள் பெரிதும் பயிலினும் நடிப்பியல்பு சோர்வுபடும். ஆகலின் அவற்றுள் வேண்டிய அளவே கொள்ளத்தகும். சீர் மலிந்தியங்கும்

நாடகத் தமிழில் இசைத் தமிழ்ச் சொற்கள் புணர்ந் திலகுதலும் தகுமென்க. சிறப்பாக இயற்றமிழுக்குத் தளைதட்டலொண்ணாது. இசைத் தமிழுக்கு அத்துடன் இசையுந் தாளமுங் குழம்பக்கூடாது. நாடகத் தமிழுக்கு அவற்றுடன் நடிப்புத் திறன் மெலியப்படாது. பொதுவாக முத்தமிழ்க்கும் அணி கெடல், குதித்தல் முதலிய யாப்புப் பிறழ்ச்சிகளும், சொற் பொருட்சுவைச் சோர்வும் மிக்க இழுக்காகும்.

சொல்லாட்சி: ஒரு மொழி உலக வழக்கில் ஒருவாறு திரிதலும் உண்டு. உதாரணம்:— வருகிறவன் என்பது வாறவன் எனவும், கொண்டுவந்து என்பது கொணர்ந்து எனவும், எனடி என்பது ஏண்டி எனவும், (கும்மி) அடியுங்களடி என்பது அடியுங்கடி எனவும், வைத்து என்பது வச்சு எனவும், ஆயிற்று என்பது ஆச்சு எனவும், பாய்கிறது என்பது பாயுது எனவும் வழங்கி வருகின்றன. இவ்வாறு நூல் வழக்குச் சொற்கள் பேச்சு வழக்கில் ஏராளமாக ஆளப்பட்டு வருகின்றன. உலக வழக்குச் சொற்களை வாசகப் பகுதியிலும், வண்ணப் பகுதியிலும், நாடகப் பகுதியிலும் ஒரோவழி எடுத்தாளினும் ஆளலாமே யொழிய ஏனை இயலிசைப் பகுதிகளில் அவ்வளவாக ஆளவொண்ணாதே.

அன்றியும், கந்தரலங்காரச் செய்யுளொன்றில் அருணகிரியார் கின்னம் என்ற சொல்லையும், இராமாயணச் செய்யுளொன்றில் கம்பர் திமிதம் என்ற சொல்லையும் எதுகைநோக்கின்றியமையாமைபற்றி எடுத்தாண்டுள்ளனர். ஒரு திருப்புகழில் அருணகிரியார் "உலகமுவப்ப" என்ற சொற்றொடரை, 'உலகாமுவப்ப' என்றும்

மற்றொரு திருப்புகழில் தமிழ் தமிழ் என்பதனைத் தமீழ் தமீழ் என்றும், கம்பரின் முற்குறிப்பிட்ட கவிதையில் துளி என்பதைத் துமி என்றும் சந்த நோக்கின்றியமையாமை பற்றி ஆண்டுள்ளமையை ஏனைப் புலவர்கள் பின்பற்று திருக்கக்கடவர். இத்தகைய சொல்லாட்சிகள் சந்தயாப் புக்கும் அருட் புலமைக்குமே இன்றியமையாமையை முன்னிட்டுப் பொருந்துவனவன்றி ஏனை யாப்பியலுக்கும் புலமை யியலுக்கும் பொருந்துவன அல்லவேயல்ல. பொருந்துமென வாதமிடுவோர் புலமை புன்மைப் புலமையே என்க. குதிரைக்குக் குர்ரம் என்றதனால் ஆனைக்கு அர்ரம் என்பதும் பொருந்துமென விதண்டை பேசும் புலவருட் பதடிகளைப் புலமைப் பெருவாழ்வில் ஈடுபட்டுய்ய விரும்பும் நல்லோர் பின்பற்றுவரோ? சொல்லாட்சிகள் யாப்பிலக்கண வரம்புக்கு உட்பட்டன வாயிருத்தலே சீரும் சிறப்புமாம் என்க. மற்றும் ஒரு பொருட் பன்மொழி, பல்பொருள் ஒருமொழி முதலிய சொற்களின் ஆட்சி முறைமையையும், முத்தமிழ் யாப் பியல்பதனையும் அறுவகை யிலக்கணம், ஏழா மிலக்கணம் இவற்றுட் காண்க.

பிறவியிலேயே புலவராய் வந்துள்ளவர்க்கு இம் முத்தமிழ் யாப்பியல்பு அறிவுறுத்தல் மீன் குஞ்சுக்கு நீச்சுப் பயிற்றல் போலாகும். ஆகலின் அவர்க்கு இதுவேண்டா. எருமை போன்ற மந்த அறிவினோர்க்கு எத்துணை அழுத்தியழுத்திக் கூறினும் பயன்படாது. ஆகலின் அவர்க்கும் இது வேண்டா. மற்று, இது, இடைப்பட்ட அதிகாரிக்கே வேண்டுவது. அன்னார் இதனை ஊசியினைக் காந்தம் இழுப்பது போலக் கவர்ந்துகொள்வர். சீரும்

தனையும் தெருண்ட மேலோர் வடலூர் இராமலிங்க அடிகள் திருவருட்பாப் போன்ற செம்பாகமான பாத் தொடை யாத்திடல் வேண்டும். பாரதியார் தேசிய கீதங்களை யொத்த புதுமைக் கவிதைப் புலமைக் கடலில் புகுதல் முழுகல் வேண்டும்.

நாற்கவி விளக்கம் : ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பன நாற்கவியாகும். ஆசு என்பது முன்பின் எண்ணுதலாதிய தங்கு தடையின்றிக் குறித்த யாப்பில் பாடும் பாடல். மதுரம் என்பது இனிமை பொங்கி வழி யத் தொடுக்குந் தொடை. சித்திரம் என்பது சொற் பொருள் நுணுக்கங்கள் துருவி ஒரு சொல்லோ, சீரோ, அடியோ மீண்டும் வந்து பொருள் வேறுபடுதல் முதலாக யாக்கும் பல்வகை யாப்பு. வித்தாரம் என்பது ஓராயிரம் முதல் நூறுயிரம் வரையுள்ள செய்யுள் தொகைபடப் பல்பொருள்பட விரித்துக் கட்டும் கட்டு. இவற்றை நாற்கவி யென்ப. இனி இவற்றினுக்கு எடுத்துக்காட்டு எடுத்துக் காட்டுவல். பட்டினத்தடிகள் 'என்செய லாவது' எனத் தொடங்கி 'மூண்டதுவே' என முடித்துக் கழுமரம் எரியப் பாடிய பாடலும், காளமேகப் புலவர் பாடிய எமகண்டமும் ஆசு கவிகளாம். மதுரைக் குல சேகர பாண்டிய வேந்தன் தொடுத்த அம்பிகைமாலை முதலிய பனுவல்கள் மதுர கவியினத்தன. அருணகிரியார் அருளிச் செய்த "கந்தரந்தாதி" என்னும் யமகத்தொடை நூலும், சிவப்பிரகாசர் யாத்த நிரோட்டக யமகவந்தாதியும் சித்திர கவிகளாம். பஞ்ச காவியம், பாரதம், கம்ப இராமாயணம், பெரிய புராணம், புலவர் புராணம் முதலிய காப்பிய புராணங்களும், அகவற் பஃறொடை வெண்பா,

32; 64 முதலிய கலைகள் கொண்ட வகுப்பு நூல் முதலிய நூல்களும் வித்தார கவிகளாம். ஆசு கவியின் அமைதியையும், மதுரகவியின் கனிவையும், சித்திர கவியின் திரிவு மாருட்டமும், வித்தார கவியின் விளக்கமும் புலவர் குழுவினில் புகுந்து பழகியறிந்தினன்றி விளங்கா. குளகம் என்பது யாது? பொருள் மிகுதியை முன்னிட்டு ஒன்றை யொன்று பின்னிட்டுத் தொடர்ந்து தொடர்ந்து வரும் கவிகள் குளகக் கவிகள் எனப்படும்.

துறைப் பொருள்: அகப்பொருள்—அகத்தில் நிகழ்வது; காதல் நிகழ்ச்சி;புறப்பொருள்—புறத்தில் நிகழ்வது; போர், வென்றி, வீரம், கல்விப்பொருள், செல்வப் பொருள் முதலன என்றும்; அகப்பொருள் உயிர், புறப்பொருள் உலகம், அகப்புறப் பொதுப்பொருள் கடவுள் என்றும் கூறுவர் மேலோர். "பூவின் மணமெனப் புனிதத் தமிழினுக், காவி யாகு மகப்பொரு ளியல்பே" என்றும்; "இன்ப வெள்ளத் திசைவுறு மெவ்வோர், நிகழ்ச்சியுந் துறைக ளாமென னெறியே" என்றும்; "துய்ப்பார் சொல்லெனச் சூட்டுநர் மொழியென, இருவகைத் துறைகளீண் டிலங்குகின் றனவே" என்றும்; "நாடகந் தொட்டு வண்ணமீ ருய, கவிதொறுந் துறைநலங் காட்டலுண் டாயினும், கட்டளைக் கவித்துறை கடலுறழ் சந்தம், என்னுமிவ் விரண்டா லியம்பிடன் மிகையே" என்றும்; வண்ணம் புகுபவு மாட்டா தனவும், துறைகளிலுளவெனச் சொல்வது துணிவே" என்றும் துறையியல்பு கூறினர் தண்டபாணி சுவாமிகள். மற்றும் துறையமைத்துப்பாடும் சந்தப் புலவர் வண்ணப் பாட்டின் முற்பகுதியை ஆண்கலை யென்றும், பிற்பகுதியைப் பெண்கலை

யென்றும் சொல்லல் வழக்கம். அடிகளின் ஈற்றுக் குழிப்புச் சிதைந்துபோன சந்தப்பாக்களும் வண்ணக் கவிதைகளும் உண்டு எனினும் அது சிதையாது அமைத்தலே சிறப்பினுட் சிறப்பென்பர். ஓசை நிலை தேர்ந்து, சுவைமிகும் சந்தம், வண்ணம், முத்தமிழும் யாத்தல் புலவர் கடன். "இலகுமுத் தமிழும் பாடார்க் கிலக்கண நிலை தோன்றுதே" என்றது புலவர் புராணம், அகத்திய மகாமுனிவர்சருக்கம்; உ௪-ஆம் கவியின் ஈற்றடி.

சொல் நிறங்கள்: சொல்லின் நிறம் ஐந்தென்ப. திருவருட்பா ஒத்த, எழுத்துப் பயிற்சி இல்லாதவரும் அறிந்து கொள்ளத்தக்க அத்துணை எளிய சொல் லெல்லாம் (1) வெண்ணிறச் சொற்களேயாம். தெய்வத் திருக்குறள் போல அறிவார் அறியும் அறிவுக்கேற்பப் பொருள் விளக்கிக்கொண்டே போகும் வளப்பம் மிகுந்த சொற்கள் (2) பளிங்கு நிறம் போன்றன. நக்கீர தேவர் அருளிய திருமுருகாற்றுப்படை ஒத்த வன்பாகத்தினவாகிய சொற்கள் (3) கறுத்த நிறத்தின. அருணகிரிநாதர் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரநுபூதி, ஔவையார் அருளிய விநாயகரகவல் இவை மானிய மென்பகத்தினவாகிய சொற்கள் (4) செந்நிறத்தன (செஞ்சொற்கள்). தேவார திருவாசகங்களும், திருவாய்மொழிகளும் நேரும் இடைப்பாகத்தினவாகிய சொற்கள் (5) பொன்னிறத்தன.

புலவன், சொற்களின் நிறப்பகுதியை இம்முறையில் அறிந்து கோடலுடன், புணர்ச்சிபற்றி அவற்றின் ஐவகை நிறத்தையும் உணர்ந்துகொள்வானாகில் அவன் முத்தமிழ் யாத்தற்குரியவனாவன். உலகத்தவர் உணவு வகையில் உயர்ந்த ஒரு பொருளைச் சோறு என்பது

வெண்சோல் ; அன்னம் என்பது பளிங்கு நிறச்சோல் ; பதம் என்பது கருஞ்சோல்; அமுது என்பது செஞ்சோல் ; அடிசில் என்பது பொன்னிறச் சோல்.

முத்தமிழ்ச் சொற்கள் முறையே கறுப்பு, சிவப்பு, வெண்மை நிறத்தன வாதலால் அவற்றை முறையே மலைமக ளெனவும், அலைமகளெனவும், கலைமகளெனவும் புகழ்வர் புலமைத்துறை முற்றியவர். மேலும் இயற்றமிழ் பளிங்கு நிறத்தையும், இசைத் தமிழ் பொன்னிறத்தையும், நாடகத் தமிழ் இயலிசை விரவியதொன்றாகலின் வெண்மை, செம்மை நிறங்களையும் கூடித் திகழ்தல் பற்றி முத்தமிழ் ஆயிற்றெனப் புலமை முதிர்ந்தோர் மொழிந்தனர். தாயைத் தல்லி யென்னும் தெலுங்கு மொழி திசைச் சொல்லாகும். அவ்வண்ணமே சோல்லு என்னுந் தமிழ்ச் சொல்லைத் தெலுங்கில் சேப்பு என்பராதலின் அதனையும் சிலர் திசைச் சொல் என்பது மயக்கவுணர்ச்சியே. கல்வியுந் தவமும் புலமையும் ஒருங்கே கைவரப் பெற்றோர் மயக்கத்துட்பட மாட்டார். மேற்கொண்டு மொழி நூல் (Phylology) வல்லார் மாட்டு வினவித் தெளிதல் மேன்மை.

செய்யுட் சுவை : சுவை சொற் சுவை, பொருட் சுவை யென இருவகைப்படும். சொற் சுவை கல்வி கேள்வி களாலும், பொருட் சுவை ஒன்பான் சுவைகளாலும் நிகழும். மற்றும் சுவையெனினும் மெய்ப்பாடெனினும் பொருந்தும். அகத்துணர்வே புறத்து வெளிப்படுதலின் சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயர் தகுவதே. தொல் காப்பியத்தில் மெய்ப்பாடு செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாகக் குறிக்கப்பெற்றும், தனியாக ஓர் இயலில் விரித்துரைக்கப்பட்டும் உளது. பிற்காலத்தில் இதனை

விரித்துரைக்க வந்த வடமொழியாளர் சுவையை ரஸம் என்றும், சொற் சுவை பொருட் சுவைகளை முறையே குண அலங்காரங்கள் என்றும், நவ ரஸம் என்றும் கூறலாயினர். உண்டி நால்வகைக்குச் சுவை ஆறென்பர். நாவால் அறுசுவை நுகரப்படுகின்றன. சுவையாறும் தொண்டை மட்டுமே நின்று பின் நீங்கிவிடும். செவியினால் சுவைத்துண்டவை உள்ளத்தில் எப்பொழுதும் நிலைபெற்று நின்று இன்பம் பயக்கும். இதனை "உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே" என்ற திருச்செந்தூர்த் திருப்புகழ்ப் பகுதியான் அறிக. திருவள்ளுவர் செவிச் செல்வத்தைத் தலைசிறந்த தென்றவர்:

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்"

என்று அதன் விடற்கரும் திறத்தினை அழுத்திக் கூறினர். அன்றியும், அவர் "சமயம் வரின் இடித்துரைப்பர்" என்ற குசேலோபாக்கியானத்தின்படி, செவியினால் நுகரும் சொற் சுவையை உணராது வாயினால் நுகரும் அறுசுவையை மட்டும் உணர்வாரை, "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினும் என்"? எனமிக்க உரத்துடன் கடிந்துரைத்தது ஆயத் தக்கது.

ஒரு குறளில் பல சுவைகள்: சில சொற்களிற் சுவை மலிந்த பலவகைப் பொருளை உள்ளடக்கித் திட்பம் நுட்பம் மிக்கதாய்த் தனக்கு ஒப்புயர்வில்லாச் செப்பமுடையதாய்த் திகழ்வது திருக்குறளே. கல்வியைப் பற்றித் திருவள்ளுவர்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்று நயம் பொதியக் கூறுகின்றார். இக் குறளின் பொருள் :— ஒருவர் கற்கத் தகுந்த நூல்களை ஐயந்திரிபறக் கற்கவேண்டும்; பின் அந்நூல்களில் சொல்லிய வண்ணம் நடத்தல் வேண்டும் என்பது. கற்க நிற்க என்ற இரண்டு பயனிலைகளினால், படித்தால் அதன்படி நடக்கவேண்டும் என்று எவ்வளவு சுருக்கமாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். கற்பவை கசடறக் கற்க என்பதில் கற்கத் தகாதன பலவுள; அவற்றை வீணாகக் கற்க வேண்டாம்; கற்றும் பயனில்லை; உங்கள் வாழ்நாளும் போதா; என்று இப்படிப்பட்டவற்றை எல்லாம் உள்ளடக்கியே "கற்கக் கசடறக் கற்பவை" என்றார். அக் குறித்த திருக்குறள் ஈரடியால் அளந்த நயங்களைப் பின் வரும் நாலடியார், நாலடியால் ஏகதேசமாக அளத்தல் காண்க.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

இப்பாடல்களிரண்டும் பன்னூற் குப்பையிலே பதர்களையும் பக்குவம், ஒழுகலாறு முதலிய நன்னெறிகளைக் கடைப்பிடித்துய்யும்படி பல நயம்படத் தெருட்டவில்லையா? இன்னும் திருக்குறளும் நாலடியாரும் செய்யுள்தோறும் இங்ஙனமே பல நயங்கள் ததும்பக் கூறும். தொடுந்தோறும் தொடுந் தோறும் மணற்கேணி நீர் சுரத்தல் போலவும் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் பண்புடை

யாளர் தொடர்பு புதிய அன்பைப் பெருக்குதல் போலவும் திருக்குறளும் நாலடியாரும் நவிலுந்தோறும் நவிலுந் தோறும் (நூல்) நயங்களைத் தெள்ளிக் கொழித்துக் கொண்டே இருக்கும் இயல்பின.

இனி, புகழேந்தியார் கம்பர் கவி நயங்களிலே ஒவ்வொன்று காண்போம். தமயந்தியைப் பலபடத் தீட்டிக் காட்டும் நளவெண்பாவிலே, "அழகு சுமந் திளைத்த ஆகத்தாள்" என்ற தொடர் விஞ்சிய நய முடையது. இஃது சீதையை வருணிக்கும் "அழகெனும் அதுவுமோர் அழகு பெற்றதே" என்ற கம்பர் செய்யுளை நினைப் பூட்டுகின்றது.

சொற்சுவை இம்மட்டிலே நிற்க. இனிப் பொருட் சுவை பற்றிச் சிறிது குறிப்போமாக. நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமநிலை எனப் பொருட்சுவை ஒன்பதாவன. இச்சுவை யுணர்வுகள் மேற்குறித்த சொற்சுவைக் கேள்வி வாயி லாக அன்றிக் காட்சி வாயிலாகவும் நிகழா நிற்கும். பித்தன் ஒருவனது பேச்சும், செயலும் கூத்திலே நடிக் கும் கோமாளி ஒருவனது பேச்சும், செயலும், கோலமும் கேட்குந்தோறும் பார்க்குந்தோறும் நகை என்னும் சுவை யுண்டாம். மேலும் அவ்விருவரது இயல்புகளை யமைத் துப் புலவனே ஒருவன் பாடிய பாட்டைக் கேட்டாலும் நகைச்சுவை நிகழும். பிறசுவைகளும் இவ்வாறே கண் ணாலும் காதாலும் சுவைக்கப்படுவனவாகும். கண்டும் கேட்டும் நுகரும் இவ்வொன்பான் சுவைகள் கண்டுங் காணாத கண்ணுடையார்க்கும், கேட்டும் கேளாத

காதுடையார்க்கும் உணர்தற்கரியன; இவ்விரு பொறி களாலும் திட்பமுற உணரும் நுட்பமுடையார்க்கே உணர்தற் கெளியன.

காப்பியப் பண்பு: "பாவிகமென்பது காப்பியப் பண்பே". என்ற தண்டியலங்கார சூத்திரம், காவியத் திற்குப் பாவிகத்தை இன்றியமையாப் பண்பாக அமைக் கின்றது. பாவிகம் என்பது "உலகியலில் சில பெருமைக் குணங்களும் சில சிறுமைக் குணங்களும், கவி கருதி யாங்கு, காவியம் முழுவதிலுமே அமைந்து தோன்று வதே" என்றும், "ஒரு காவியத்தின் பெருமைக்கும் சிறு மைக்கும் கட்டளைக்கல் பாவிகமே" என்றுங் கூறுப. இராமாயணத்தால் பிறனில் விழையாமை, பாரதத்தால் பொறுமை, அரிச்சந்திர புராணத்தால் வாய்மை என்னும் பாவிகங்கள் சிறப்பாகவும் பிற பண்புகள் பொதுவாகவும் விளங்குகின்றன அன்றே?

சுவை ஒன்பதுட் சமநிலையாவது சாந்தம். அதாவது ஐந்தவித்த ஆற்றலினோர் விருப்பு வெறுப்பற்று நிற்கும் நிலை. அஃது உலகியலின் நீங்கி, அருளியலின் ஓங்கி, நனவே அறிவாகப்பெற்ற பெற்றியோரது நிலையாகலின் பிற எட்டுமே காப்பியங்களில் பயின்று வருவன வாகும். காப்பியங்கள் அகத்தும் புறத்தும் நிகழும் நிகழ்ச்சிகளை அழுத்தமாகவும் விரிவாகவும் நீதிகள் ததும்ப எடுத்தி சைக்கும். பின்வரும் சிலப்பதிகாரச் செய்யுளடிகள் இதற்குத்தக்க எடுத்துக்காட்டாகும்.

"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்"

ஆகிய இம்மூன்று நீதிகளையும் ஆசிரியர் சிலப்பதிகாரத் திற்கு உள்ளுறையாகக்கொண்டனர். ஆயினும் நடுவண தாகிய "பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்" என்பதிலேயே அவர் அழுத்தமுடையார் என்று தோன்றுகின்றது. கண் ணகியின் கற்புடைமையையும் தெய்வத் தன்மையையும், காவியம் முழுதுமே ஊடுருவிச் செல்லும் ஒரு பாவிகமாக ஆசிரியர் அமைத்துள்ளமை விளங்குகின்றது. கண்ணகி யின் செயல்களும், அவள் கற்புடைமையைப்பற்றிக் கவுந்தியடிகள், கோவலன், ஐயை, தேவந்தி முதலியோர் உயர்த்திப் பேசுதலாகிய சான்றுகளும் கண்ணகியின் வீர முழக்கத்தில் போந்த மொழிகளும், தமிழ்நாட்டர சரும், கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னனும் அவளைத் தெய்வமாகச் சிறப்பித்தலும் பிறவும் இப்பாவி கத்தைப் புலப்படுத்துகின்றன.

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்னும் தொல்காப்பிய இலக்கணத்திற்கு இலக்கியமாகக் கண்ணகி அமைக்கப்பட்டுள்ளாள்.

பாவியல் ஓவியம்: கலையழகுகள் பலவகையின. அவையாவன:— இசைக் கலைஞன் பண்ணும் தாளமும் பொருந்திய சொற்களைப் பெய்து இனிய ஓசையை எழுப்புகின்றான். அது இசைக் கலைக்கு அழகாகின்றது. சிற்பக் கலைஞன் கல், மரம் முதலிய பொருள்களை இங்கு மங்குமாகக் கொத்தியோ, செதுக்கியோ அழகிய விக் கிரகங்களை உண்டுபண்ணுகின்றான். அவை சிற்பக் கலைக்கு அழகு செய்கின்றன. ஓவியக் கலைஞன் சில பல நிறங்களில் இப்படியும் அப்படியுமாகச் சில கோடுகளைத்

தீட்டுகின்றான். அவை ஓவியக் கலைக்கு அழகு பெய்கின்றன. அங்ஙனமே கவிக் கலைஞன் சீரும் தளையும் அடியும் அணியும் கொண்டு கவி ஓவியம் இயற்றுகின்றான். அது கவிக் கலைக்கு அழகுமிழ்கின்றது.

இக்கலையழகுகள் அரிய பெரிய உணர்ச்சிகளை உண்டுபண்ணுகின்றன. இவற்றுள் இரண்டொரு உணர்ச்சிகளையும் ஒரு சுவையையும் மட்டும் புலப்படுத்த வல்ல ஏனைக் கலையழகுகளைக் காட்டினும் பல உணர்ச்சிகளைப் புலப்படுத்தவல்ல கவி ஓவியமே சாலச்சிறந்தது. மலர்ச்சி, கலக்கம், உயர்ச்சி, தாழ்ச்சி, அயர்ச்சி, அசைவு முதலிய உள்ள உணர்ச்சிகளை ஒன்றுக்கு மேற்படச் சிலை ஓவியமும், திரை ஓவியமும் காட்டுதல் அரிதாயினும், அவற்றைக் கவி ஓவியத்தில் பலபடக் காட்டுதல் இயல்வதே. கவிஞர் ஒரு கவியிலேயே பல உணர்ச்சிகள் நிரம்பி வழியும்படி அமைக்கவல்லவர். வரம்பு கடந்த அழகுகளாகிய எழுதொணு ஓவியங்களுள் மிகச் சிறந்த உருவ அழகைப் பாடலில் அமைத்துள்ளவர் பாவலரே. அவற்றுட் சிலவற்றைக் குறிப்பிடுவேனாக.

மாணிக்கவாசகர்: திருக்கோவையாரில் பாங்கன் வினவியபோழ்து தலைவன் பெண்ணின் அழகை எடுத்துரைக்க இயலாது போகின்றான். "காணிற் கழறலை கண்டிலை மென்றோட் கரும்பினையே" என்றதனால் அவ்வுருவம் தலைவனால் வருணிக்க முடியாது வரைதுறந்த அழகாகத் திகழ்கின்றதைக் காணலாகும்.

திருநாவுக்கரசர்: முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது சிறந்த அழகுருவத்தைப் படம் பிடிக்க இயலாதவராகி, "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்

இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்று தம் மனத்தகத்திலேயே ஒரு சித்திர ஓவியம் அமைத்துக் கொண்டார். மற்றும் அவர் இறைவனை மனக்கண்ணை கருவியாய்க் காணினல்லது காணொணாதெனவும் கூறுவாராவர்.

நக்கீரர்: நெடுநல் வாடையில் மெல்லியல் மகளிரை, "புனையா ஓவியங் கடுப்ப" என்று வருணித்தனர். அதாவது, அவர்களின் உருவம் பலநிறப் பூச்சுக்களால் அமைத்துத் தீட்டவொண்ணாதது என்பது கருத்து.

கம்பர்: "எழுதரு மெழிலாளே" என்று இராமர் வாயிலாகச் சீதையின் வடிவழகு எழுதொணா இயல்பினதென்று காட்டுகின்றார். அன்றியும் அவர், "இருங் கடகக் கரதலத்தில் எழுதரிய திருமேனிக், கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்" என்னுமிடத்து இராமனின் எழிலுருவம் எழுதொணா ஓவியத்தின் காட்சியெனக் காட்டுகின்றார். இவ்வாறே அழகுக்கு வரம்பாக நிற்கும் உருவங்களையே எழுதொணா ஓவியங்களெனப் பாவாணர் பாடியுள்ளனர். இவ் வெடுத்துக் காட்டுக்களால் பாவிலும் ஓவியம் தீட்ட இயலுமெனக் காண்கின்றோம்.

செய்யுள் அணி: ஒரு சிலர் அணி பாட்டுக்குச் சிறப்பியல்பினது அன்றென்பர். வேறு சிலர் உவமையுங்கூடப் பாட்டுக்கு அணி செய்யாது என்பர். அன்னார் புலமை வாழ்வில் ஈடுபடாதவராவர். உவமையாலும் அடையாலும் அறியவேண்டுவன உளவாகலின், அவை ஒதுக்கற்பாலனவன்று; வேண்டற்பாலன என்பது ஒருதலையே.

'அடையால் ஓதப்படும் பொருள் சிறப்பினை எய்தல் வேண்டும். சிறப்பிலாப் பொருட்குச் சீரிய அடையோ அல்லது மிகைச் சொல்லோ தந்தோதுவது பெரும் புலவர்பால் காண்டல் அரிது. "விதப்புக் கிளவி வேண்டுவது கிளக்கும்" என்றார் தொல்காப்பியனார். உவமை கூறப்படும் பொருள்களைத் தெளிவுறுத்தற்குக் கருவியாய் உதவுவது. ஆதலினால், உவமையும் உயர்ந்த பாக்களில் தனிச் சிறப்புடைத்தெனப் புலவர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. "உவமப் பொருளி னுற்ற துணரும், தெளிமருங் குளவே திறத்திய லான" (தொல். உவ. 295.) என்பது தொல்காப்பியமாதலின் உவமம் யாப்பியலுக்கு இன்றியமையாச் சிறப்பினதென்று துணிந்து கோடல் தகும்.

பிற்காலத்தவர் பலர் உவமையென்ற பெயரால் மனத்தில் கொண்டதெல்லாம் கொட்டிக் கூட்டி அணியிலக்கணம் என்ற பெரியதொரு நூலாக்கினர். இவ்வாற்றால் தமிழின் தூய்மைக்கும் இனிமைக்கும் கேடு சூழ்ந்தனர். தோல்காப்பியம் உவமவியல் என்றொரு சிறு பகுதி வகுத்து அங்கே உவமை ஒன்றேதான் கூறுகிறது. பிற அணிகள் பலவும் உவமைத் தாய் பெற்ற சேய்களே என்ற உண்மை முதனூலால் விளங்கும். "உவமை யதனி லுள்ள பல் விகற்பம், ஒன்றே யணியென வுணங்குனர் பலரே" என்பது ஏழாமிலக்கணம். "அணி நிலை யளப்பரி தாயினு முவமை, உடைமை கற்பனை நிகழ்ச்சி யாக்கமென், றைவகை வாய்பா டறைகுது மன்றே" என்பது அறுவகை யிலக்கணம் — அணியிலக்கணம்.

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"
"அரம்போலும் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட் பண் பில்லா தவர்"
"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்"
"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்ற திருக்குறட் பாக்களில் குறிக்கப்படும் சாக்காடு, பிறப்பு, மக்கட் பண்பு, அறமுடையார் பெற்ற செல்வம், கல்வி என்னும் பொருள்களைத் தெளிந்துகோடற்கு அப் பாக்களிலுள்ள உவமைகள் எத்துணைப் பெருங் கருவி களாய் உதவுகின்றன என்பது ஈங்கு ஊன்றி நோக்கத் தக்கது. இம்மேற்கோள்களால் உவமையும் அடையும் சீரிய செந்தமிழ்ச் செய்யுட்கு இன்றியமையாச் சிறப்புக்க ளெனத் தெளியலாம். "அணியிலா தனமுற் றுகா தனவே" என்ற எழாமிலக்கணச் சூத்திரத்தாலும் உவமை யணி குன்றின், குறையுடைலே யன்றி அழகும் பொலிவும் மிளிரும் நிறையுடல் ஆகாதெனக் காண்கின்றோம்.

4. உரைநடை.

சென்ற இருநூறாண்டுகளாகத் தமிழ் உரைநடை பல துறைகளிலும் வளர்ந்தோங்கி வருகின்றது. இவ் வளர்ச்சிக்கு ஆங்கிலக் கல்விப் பயிற்சி, பத்திரிகைத் தொழில், இவற்றிற்கு அனுகூலமான அச்சு (இயந்திர)த் தொழில் இம்மூன்றும் அடிப்படைக் காரணங்களாம். தமிழ் உரைநடை நூல்கள் ஆங்கில இலக்கிய வகைகளைப் பின்பற்றி எழுதப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளிலும்

கல்லூரிகளிலும் பயில்விக்கும் பாடங்களில் வியாசம் வரைதல் ஒரு பாடமாகப் பயிற்றப்பட்டு வருகின்றது. வியாசம் என்னும் இலக்கிய வகை ஆங்கிலத்தில் (Essay) "எஸ்ஸே" எனப்படும். ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னே மாந்தேன் என்னும் பிரெஞ்சு அறிஞர் தாம் எழுதிவைத்த குறிப்புக்களை "எஸ்ஸே" என்னும் பேரால் வெளியிட்டார் என்பர் அறிஞர் R. P. சேதுப்பிள்ளையவர்கள். அறிஞர் மாந்தேனைப் பின்பற்றி அப்பெயரை எடுத்தாளத் தொடங்கிய ஆங்கில அறிஞருள் பேகன் எனும் பெரும் புலவரும் ஒருவராவர். பேகன் எழுதிய உரைநடைக்கு அவர் வழங்கிய வியாசம் என்ற பெயர் தகாது; கட்டுரை என்ற பெயரே தகும். வியாசத்திற்கும் கட்டுரைக்கும் வேற்றுமை உண்டு. மாந்தேன் வியாசமும், புதிய புதிய கருத்துக்களும் இனிய நடையும் அமைந்த தேசீய கீதம் பாடிய பாரதியார் எழுதிய வியாசமும் வியாச இனத்தைச் சேர்ந்தன. இவற்றில் அறிதற்கரிய கருத்துக்கள் இல்லை; கட்டமைந்த நடை இல்லை; செப்பமுற்ற பாகுபாட்டு முறை இல்லை. பேகன் வரைந்த வியாசமும் பல்லாவரம் மறைமலையடிகள் இயற்றிய வியாசமும் கட்டுரை இனத்தைச் சேர்ந்தன. இவற்றில் சொற் கட்டும், பொருட் பொதிவும், பாகுபாட்டு முறைச் செவ்வியும் உள. முற்குறித்தோர் வியாசங்களை இங்கு மங்கும் அள்ளி யெறியப்பட்ட மலர்களுக்கும் பிற்குறித்தோர் வியாசங்களை முறையுறக் கட்டப்பட்ட நறுமலர் மாலைகளுக்கும் ஒப்பிடலாம் என்பர். ஆகவே, முன்னையவற்றை வியாசங்கள் எனவும், பின்னையவற்றைக் கட்டுரைகள் எனவும் வழங்கலாம்.

உரைநடை வகை: பல திறப்பட்ட உரை நடைகள் உண்டு. உரைநடையின் பலவகையும் பொருண் மொழிக்கும் சுவைக்கும் தகுந்தபடி காட்டப்படும் முறையே சாலச் சிறந்தது. உரைநடை (1) தார்க்கிக (Polemical) நடை, (2) வருணனை (Descriptive) நடை, (3) பகுத்துக் கூறும் (Analytical) நடை, (4) இலக்கிய (Literary) நடை, (5) எச்சு அல்லது வசை (Satirical) நடை, (6) வெளிப்பாட்டு (Expositary) நடை, (7) ஆராய்ச்சி (Critical) நடை, (8) வரலாற்று (Narrative) நடை, (9) நியாய விவரண (Argumentative) நடை, (10) ஜம்ப (Pedantic) நடை, (11) வாய்சாலக (Oratorical) நடை எனப் பதினொரு வகைப்படும்.

கட்டுரை வகை: கட்டுரை பலவகைப்படும். அவற்றுட் சிறந்தன (1) ஆராய்ச்சிக் கட்டுரை, (2) சிந்தனைக் கட்டுரை, (3) கலைபயில் கட்டுரை, (4) அறிவியற் கட்டுரை, (5) தனித்தமிழ்க் கட்டுரை, (6) மணிப்பிரவாளக் கட்டுரை என்பனவாம்.

முற்காலத்தில் அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் கட்டுரை என்ற சொற்றொடரை ஆற்றல் வாய்ந்த அல்லது பொருள் பொதிந்த உரை என்னும் பொருளில் வழங்கியுள்ளார்கள். தற்காலத்தில் கட்டுரை என்னும் சொல் மிக விரிந்த பொருளில் வழங்கக் காண்கிறோம். ஆங்கிலத்தில் எஸ்ஸே என்ற சொல் பொதுவாக எல்லா வகையான வியாசங்களையும் இன்று உணர்த்துகின்றது. தமிழிலோ உரைநடையில் எழுதப்படும் வியாசங்கள் எல்லாம் பெரும்பான்மையும் கட்டுரை என்றே

கொள்ளப்படுகின்றன. அது கூடாது. தமிழில் சொற்கட்டு, பொருட் கட்டு, முறைப்பாடு என்பவை பொதிந்தது வியாசம் என்றும், சொல்லாற்றல், பொருளாற்றல், நெறி முறைப்பாடுகள் இவை நிரம்பியவை கட்டுரை என்றும் வரையறுத்து வழங்குதலே நன்று.

கட்டுரையும் அமைச்சரும்: உலகியலில் மிகுந்த நன்மைகளை விளைக்கக்கூடிய வகையில் தமிழ்ச் செய்யுள் நடையைக் காட்டிலும் உரைநடையே எளிதில் உதவுவ தாகும். மேல்நாட்டு அறிஞர்களாகிய மில்டன், மெக்காலே, மார்லி, பேகன் முதலியோர் இலக்கியத்தில் சிறந்த பயிற்சியுடையவர்களாய், அரசாங்கத்தில் பெரும் பதவிகளை வகித்து நாட்டிற்கு நலர் பல புரிந்துள்ளார்கள். நமது தமிழ் நாட்டை அரசாண்ட சேர சோழ பாண்டியருட் பலரும், அவர்களிடம் அமைச்சுத் தொழில் நடாத்திய தாயுமானவர், சேக்கிழார், மாணிக்கவாசகர் முதலியோ ரெல்லாம் சிறந்த இலக்கியப் பயிற்சியுடையோராய் இருந்தமையினலன்றோ தமிழ்நாடு வான்புகழ் பூண்டு துலங்கியது? அத்தகைய இலக்கியப் பயிற்சியுள்ள வேந்தர்கள் அறிஞர்கள் அல்லது அமைச்சர்கள் இக் காலத்தில் இல்லாது போனதினுல் அல்லவா நம்நாடு பல துறைகளிலும் பின்னேற்றத்தில் முன்னேற்றமுற்று நிற்கின்றது? ஆயினும் இக்குறையை நீக்கத்தக்க அமைச்சர் பெருமானுக நாம் பண்டித ஜவஹர்லால் நேரு வையும், சி. இராஜகோபாலாசாரியாரவர்களையும் பெற்றேம் அல்லமோ? அவர்கள் உள்நாட்டில் அரசியல் அவைக் களத்திலும் வெளிநாடுகளிலும் செய்துள்ள அரிய பெரிய சொற்பொழிவுகளாலும், கட்டுரைகளாலும் பல

நன்மைகள் விளைந்துள்ளன. பண்டித நேரு சொந்த வரலாறெழுதியும், இந்திய நாட்டைப்பற்றிய நூல்கள் எழுதியும் இலக்கியத் தொண்டாற்றியுள்ளார். இராஜாஜியும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகள் வரைந்தும், மதுவிலக்கு (பத்திரிகை) நடத்தியும் இலக்கியத் தொண்டாற்றியுள்ளார்; அருந்தமிழ்த் தொண்டு பல செய்துள்ளார். அன்றியும், அமைச்சுத் தலைவர் என்ற முறையில் இவ்விரு பெருந் தலைவர்களும் இன்றியமையாத சட்டங்கள் பல இயற்றி மக்கள் முன்னேற்றத்திற்கு அரும் பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள்.

திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் ஆற்றிய தொண்டு களில் தமிழ்த் தொண்டும் ஒன்றாகும். அவர் தமிழில் சில நல்ல கட்டுரைகளும் எழுதியுள்ளார். தமிழ்க்கு ஆக்கம் தரும் வகையில் அவர் வசன நடை, பேச்சுத் தமிழ் முதலிய புதியமுறைக் கட்டுரைகள் வரைந்துள்ளார். அவற்றில் அவர் தமிழ்ப் பேச்சும் நடையும் கெட்டுப்போயிருப்பதற்கு மூன்று காரணங்கள் காட்டுகின்றார். முதலாவது கொச்சைச் சொற்களுக்கு அளவுக்கு மிஞ்சி இடங் கொடுப்பது. இரண்டாவது ஆங்கில மொழிகளைத் தயக்க மின்றி எல்லாக் காரியங்களுக்கும், எல்லாச் சமயங் களிலும் கலந்து பேசுவது. மூன்றாவது பேசும்பொழுது பேச்சுக்குப் பதிலாக அடிக்கடி அபிநயித்துக் காட்டி உரையாடுவது. இம்மூன்றும் தமிழ் மொழிக் கொலை என்று கடிந்துள்ளார். மற்றும் இவை நமது இலக்கிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாய் இருத்தலினால், இவற்றை நீக்கிப் பேச்சு நடையையும் எழுத்து நடையையும் தனித் தமிழால் இயக்கித் தமிழை வளர்க்கும்படி அறிவுறுத்தி

யுள்ளார். இங்கு தமிழர் ஒன்றை நினைவில் வைக்கத்தக்கது. அதாவது ஆங்கிலம், ஆரியம் முதலிய எம்மொழிச் சொற் கலப்பாலும் தமிழ் மொழிக்குத் தீங்குண்டு. பிறமொழிப் பொருட் கலப்பால் ஒரு மொழி வளருமே ஒழியத் தீங்கடை யாது; வேற்றுமொழிச் சொற்கலப்பால் ஒரு போதும் வளரவும் மாட்டாது; தீங்கடையாமலும் இருக்கமுடியாது. ஆகலின் தமிழ் வளர்ச்சிக்குப் பிறமொழிச் சொற் கலப்பினுல் கெடுதலுண்டென்பதே சரி. எனவே, இன்றியமையாத அமயத்தன்றிப் பிறமொழிச் சொற் கலப்பானது தமிழின் தூய்மைக்குக் கேடு சூழ்வதாகும் என முடிக்க.

உரைநடை வளர்ச்சி: பல்கலைக் கழகங்களும், முத் தமிழும், பத்திரிகைத் தொழிலும், நவீனக் கதைகளும், பல்வகை உரைநடை நூல்களும் உரைநடைப் பாட புத்தகங்களும் உரைநடை வளர்ச்சிக்குக் காரணங் களாயின.

(a) கல்விக் கழகங்கள்: பல்கலைக் கழகங்கள் நிறுவத் தொடங்கிய காலத்தில் நாட்டுமொழி வளர்ச்சி ஏற்றவாறு கண்காணிக்கப்பட்டுவந்தது உண்மையே. ஆயினும், அந்நற்கொள்கை வர வரக் கைவிடப்பட்டு நாட்டு மொழிப் பயிற்சி என்பதே எடுப்பாரும் பிடிப் பாரும் இன்றிப் புறக்கணிக்கப்பட்டு வருவதாயிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மட்டும் தொடக்கத்தி லிருந்தே தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் வளர்க்கும் சிறப்பியல்பை உணர்ந்துகொண்டது அவ்வாறே ஆங்கு தமிழுக்கென்றே ஒரு தனித்துறை வகுக்கப்பட்டு

அதன்கண் ஆராய்ச்சிக்கெனப் பல வசதிகளும் அளிக்கப் பட்டுள்ளன. தமிழ் மொழியிலும், தமிழிலக்கியத்திலும் தேர்ச்சியுற்ற திறமையாளர்க்கு "வித்வான்" என்ற பட்டமும் வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் தமிழிசைக்கும் ஆதரவு தரப்பட்டு வருகிறது. இதற்கு முன்பிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கமும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் முறையே பல பண்டிதர்களையும், புலவர்களையும் ஈன்றெடுத்துத் தேர்ச்சியின் தகுதிக்குத் தக்க பரிசுகளையும் வழங்கி வருகின்றன. மற்றும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் முதலிய கழகங்களும் தோன்றி நின்று தமிழை வளர்க்கின்றன. இன்னும் இவ்வாறு சிறுகச் சிறுகத் தமிழ்ப் புலவர்களும் தோன்றி வருதலின் அவர்களால் பல அரிய செந்தமிழ்க் கட்டுரைகளும், பல ஆசிரியர்களால் பல்வகை நூல்களும் எழுதி வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் நாட்டின் குறைகளையுணர்ந்து முன்னேற்றத்திற்குரிய முறையில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களையும் பல துறைகளிலும் புகுந்து வரைந்து வெளியிட்டு வருகின்றனர். "செந்தமிழ்ச் செல்வி" என்னும் திங்கள் வெளியீட்டில் நல்ல கட்டுரைகள் வெளிவருகின்றன. அவ்வெழுத்தோவியங்கள் மக்கள் புதிய புதிய துறைகளில் இறங்கிப் பாடுபடுவதற்கு ஏற்ற கருவிகளாகவும், இகபர வாழ்க்கைக்கு ஊன்றுகோல் போன்ற இலக்கிய உறவுகொண்டு எழுதப்பட்டனவாகவும் மிளிர்கின்றன. நம் தென்னாட்டில் தமிழ் வளர்ச்சிக் கழகம் தோன்றித் தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்குப் பாடுபட்டு வருகின்றது. அன்றி அக்கழகம் ஆண்டுதோறும் எழுதப்பட்டுவரும் தமிழ், தெலுங்கு, மலையாள

உரைநடை நூல்களில் முதல்தரமானவற்றிற்குப் பரிசுகள் வழங்கும் முறையில் (செந்தமிழ்) மொழி வளர்ச்சித் தொண்டாற்றி வருதல் மகிழ்ச்சியூட்டுகின்றது.

(b) முத்தமிழ்: வேதாந்த சித்தாந்த யோகாந்த நாதாந்த நீதி நூல்களுக்கு அவ்வப்போது ஒரு சில ஆசிரியர்கள் எழுதிவரும் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விருத்தியுரை, ஆராய்ச்சியுரை, இலக்கணக் குறிப்புரை முதலனவும், இசைக் கச்சேரியில் கதை செய்தல் என்னும் முறையில் இசைத் தமிழுடன் இடையிடையே கதையின் அமயத்தையொட்டிய கருத்தை விரித்துவரும் உரைகளும், நாடகம் படக்கலைகளில் வரும் கதைச் சுருக்கம் உரையாடல்களும் அன்ன பிறவும் உரை நடையை வளர்க்கும் கருவிகளாக இலங்குகின்றன.

(c) பத்திரிகைத் தொழில்: பத்திரிகைகளில் வெளி வரும் செய்திகள் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பகுதி களின் நிகழ்ச்சியேயாகும். அந்நிகழ்ச்சிகள் எளிய உரைநடையில் வடித்தெடுக்கப்பட்ட தலையங்கம், உப தலையங்கம், நிருபங்கள், தந்திகள், இலக்கியப் பகுதி, கதைப் பகுதி, மதிப்புரைப் பகுதி, மகளிர் பகுதி, சிறுவர் பகுதி, வேடிக்கைப் பகுதி, விளையாட்டுப் பகுதி, வேளாண்மைப் பகுதி, வியாபாரப்பகுதி, விவகாரப் பகுதி, வெப்பதட்பநிலைப் பகுதி, விளம்பரப் பகுதி முதலிய வடிவங்களில் செய்திவிடாய் தணிப்பதற்காக உலகமெல்லாம் பேய்போலப் போயுலாவுகின்றன. தற்கால உலகம் பத்திரிகை உலகம் எனினும் தகும். அத்துணை வகை வகையான செய்திகளும் உரைநடையிலே தீட்டப்பட்டு வெளியிடப்படுதலினால் பத்திரிகைத்

தொழில் உரைநடை வளர்ச்சிக்குப் பேருதவி புரிகின்றது. உலகப்பத்திரிகைத் தொழில் ஏறக்குறைய **2000** ஆண்டு களாகவும், இந்தியப் பத்திரிகைத் தொழில் **170** ஆண்டு கட்கு மேலும் செய்திகளின் வழியாக உரைநடை வளர்ச்சியிலே ஈடுபட்டு உழைத்துவரும் உண்மை ஆராய்ச்சி யினால் அறியக்கிடக்கின்றது.

(d) நவீனக் கதை: நாவல் என்பது தமிழ் மொழி யன்று; அது புதுவது புனைந்த கதை என்னும் பொருளில் ஆங்கிலத்தில் வழங்கி வருகின்றது. இப்புதுமைக் கதைகள் பலவகைப்படும். அவற்றுள் Sensational Novels என்பன ஒரு வகை. இவை காதற் கதைகள் எனப்படும். இவை கேவலம் பொறி புலன்களுக்கு உற்சாகத்தைக் கிளப்பிக் காமாதிகளை ஊட்டும் பெற்றியின. இவ்வகைக் கதைகள்தான் இக்காலத்தில் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வளர்ந்து வரு கின்றன. இதில் பெண் வருணனை அதிகம் பேசப்படும். அன்றியும், உலகானுபவங்களில் இச்சை ஊறும்படியான பொருள்களும் அதிகம் காணப்படும். Detective Novels என்பன மற்றொரு வகை. இவ்வகை, துப்பறியும் கதைகள் எனப்படும். இவைகளும் தற்காலம் மக்களின் ஆவலைக் கொள்ளைகொண்டு வருகின்றன. எங்கேனும் ஒரு பெருங்கொலை அல்லது பணத் திருட்டு அல்லது மணித் திருட்டு அல்லது திடீரென்ற (ரிவால்வர் என்ற) துப்பாக்கிப் பிரயோகம் போன்ற நிகழ்ச்சிகளுடனே இவைகள் துவங்கும். அதன் உட்கிடை ஆருக்கும் விளங்காது. கதைப்போக்கில் அல்லது முடிவில் வீரனான கதாநாயகன் இதனை அருமையாய்க் கண்டுபிடிப்பான்.

Historical Novels என்பன வேறொரு வகை. இவை சரித்திரக் கதைகள் எனப்படும். பழைய சரித்திர உண்மை நிகழ்ச்சி ஒன்றை ஆதரவாக வைத்துக்கொண்டு பெரும்பாலும் காதல் அல்லது வீரத்தன்மையை விளக்கும் பொருட்டுக் கதையைப் பெருக்கிச் சொல்வார்கள். Biographical Novels என்பன பின்னுமோர் வகை. இவை வேறொருவர் வரலாற்றைக்கூறும் தன்மையன. Auto Biographical Novels என்பன இன்னுமோர் வகை. இவை சுய சரிதம்பற்றிச் சொல்வன. அதாவது ஒருவன் தன் வரலாறுபற்றித் தானே எழுதும் கதைவகையைச் சேர்ந்தன. மேலும், Homely Novels என்ற குடும்ப வாழ்க்கைக் கதைகள் முதலாகச் சொல்லும் ஒரு சில வகை நவீனக் கதைகளுமுண்டு. இப்பல்வகைக் கதைகளின் வடிவாகவும் உரை நடை வளர்ந்துள்ளது. இப்புது வகைக் கதைகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது காலஞ் சென்ற வேதநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய "பிரதாப முதலியார் சரித்திரம்". அக்காலம் முதல் இக்காலம் வரை புற்றீசல்போல நாளுக்கு நாள் மிகுதியாக இந் நவீனக் கதைகள் தமிழில் வெளிவந்துகொண் டிருக்கின்றன. அக்குறிப்பிட்ட பல்வகைக் கதைகளும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு வருகின்றன. இத்தனை கதைகளும் தமிழ் உரை நடையை வளர்க்க எத்தனை உதவி செய்கின்றன என்பது என்னால் வரம்புகட்ட இயலாது.

(c) உரைநடை நூல்கள்: தமிழ் உரைநடைச் சரித்திரத்தில் ஒல்காத் தனிப் பெரும் புகழ் முதன் முதல் படைத்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள். இவரது உரைநடை சொல்லின்பம் துளும்புவது; பொரு

னின்பம் பொதுளுவது; பண்பட்ட செந்தமிழான் இயல்வது; இளைஞர் முதல் முதியோர்வரை யாவரும் எளிதில் உணரத்தக்க இலக்கியச் செவ்வியினது. இவரால் இயற்றப்பட்ட உரைநடை நூல்கள், பால பாடங்கள், சைவ வினாவிடை, திருவிளையாடல் வசனம், பெரிய புராண வசனம், கந்த புராண வசனம் முதலனவாம். வசன நடை கைவந்த வள்ளலார் என. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரால் பாராட்டப்பட்ட பெருமையினர். அன்றியும், இவர் எழுதிய பால பாடங்களை உரைநடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக்கொள்ளத்தக்க நடை வண்டி யென்று சொல்லலாமென்றும், பெரிய புராண வசனத்தை வசனமும் கதையும் எழுத முற்படும் பெரியார்களும் விரும்பிப் பார்க்கத்தக்க வழிகாட்டி யென்று கூறலாமென்றும் திருமணம் செல்வகேசவராய முதலியார் M. A., இயம்பியுள்ளார். மற்றும், நாவலரவர்கள் நன்னூற் காண்டிகையுரை, கோயிற் புராணவுரை, சிவதருமோத்திரவுரை ஆகியவற்றை இயற்றிய புகழாளர். மேலும், நன்னூல் விருத்தியுரை, திருக்குறள் பரிமேலழகருரை திருக்கோவையாருரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக்கொத்து ஆகியவற்றைப் பிழையறப் பதிப்பித்துத் தமிழுலகத்திற்கு உதவிய வள்ளலார். பின்னும், "வார்த்தை நூறுயிரத்தோருவர்" என்று தமிழகம் புகழும்படி, பல பொருள்கள்பற்றிப் பலமணி நேரம் ஆடாமல் அசையாமல் கல்வித்தவர் பெருங்குழு ஒருங்கே புகழும்படி சொற் சுவை பொருட் சுவைகள் நனி சொட்டச் சொட்ட மிகச் சிறந்த சொற் பொழிவுகள் ஆற்றிய ஆற்றலினர். இவர் 1823-ஆம் ஆண்டில் பிறந்து சைவ உலகுக்கும், தமிழ் உரைநடைக்கும் சீரிய கூரிய பணிகள்

ஆற்றியும், அழுத்தமான நன்னெறிக்கும் தூய ஒழுக்கத் திற்கும் வழிகாட்டியும் தமது புகழுடம்பை நிலைநிறுத்திப் பருவுடம்பை விடுத்துப்போய் அறுபதாண்டுகளுக்குமேல் ஆகியும் அவர் செந்தமிழ்த் தாய்க்குப் புரிந்த திருத் தொண்டினை மறக்க நம்மால் இயலவில்லை.

உயரிய தூய செந்தமிழ் உரைநடை நூல்கள் பல துறை களிலும் நுணுகி எழுதுவதில் தம்மை ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கியவர் பல்லாவரம் மறைத்திரு. மறைமலை யடிகளாராவர். இவர் இயற்றிய கட்டுரை நூல்கள் அறிவியற் கட்டுரைகள், சிந்தனைக் கட்டுரைகள் என்பன; அரிய பெரிய ஆராய்ச்சி நூல்கள் "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்" முதலன. இன்னம் பலப்பல தனித் தமிழ் நூல்கள் பல துறைகளிலும் எழுதியுள்ளார். பின்னும் இவர் 'ஞான சாகரம்' (அறிவுக்கடல்) பத்திரிகை ஆசிரியராகவும், ஒப்பற்ற தனித் தமிழ் நூலாசிரியராகவும் செய்துவந்த தமிழ்த் தொண்டுகளும் சிவத் தொண்டுகளும் பற்பலவாகும். இவர் தனித் தமிழ்க்கு ஆற்றிய தொண்டு மற்றெவராலும் இதுகாறும் செயற்கரிய அருட் பெருந் தொண்டாகும். அடிகளின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். ஆங்கிலம், ஆரியம், தமிழ் என்ற மும்மொழிப் பெரும் புலமையினால் இவர் புரிந்த அரிய தனிச் செந்தமிழ்ச் சேவை, தமிழ் மக்களால் என்றென் றும் மறக்க இயலாதது.

நல்ல உரைநடை நூல்களைத் தமிழில் எழுதியும் வெளி யிட்டும் பற்பல அவைகளில் பேசியும் தாமாக ஒழுகியும் காட்டிய ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர் களாவார். உயரிய தமிழ் நடையில் இவர் பல நூல்கள்

எழுதி வெளியிட்டுள்ளார். "நவசக்தி" பத்திரிகாசிரியராக மிளிர்ந்து பத்திரிகைத் தமிழைத் தூய்மைப்படு த்திய பெருமை இவருக்கே தனிப்பட்ட பெருமையாகும். "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற திருக்குறள் வாசகத்தற்கு வாச்சியமாகத் திகழும் தமிழாசிரியர்களில் இவர் ஆறுமுக நாவலருக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்றவர் என்பது மிகையாகாது.

தமிழில் உயரிய உரைநடை வகுக்கும் விருப்பினர் பொதுவாக ஆறுமுக நாவலர், மறைமலையடிகள், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் என்னும் முப்பேராசிரியர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றக் கடவர். சிறப்பாக நாவலரது செம்பாகமான உரைநடையையும், முதலியாரது பத்திரிகைத் தமிழ் நடையினையும், பல்லாவரம் அடிகளது தூய தனித் தமிழ் நடையினையும் பின் பற்றுநராக. இம் மூன்றாசிரியர்களாலும் தமிழ் உரைநடை தூய்மையும், எழிலும், வளப்பமும் பொருந்தி வளர்கின்றது.

5. புதுவகை உரைநடை நூல்கள்.

தமிழில் செய்யுள் நடை நூல்கள் மலிந்துள. உயரிய உரைநடை நூல்கள் அவ்வளவிலே பெருகவில்லை. புதுவதாக வேண்டப்படும் எவ்வகை நூலினையும் வேண்டிய அளவு இயற்றிக்கொள்வதற்குச் செந்தமிழ் நூல்கள் வழி காட்டுகின்றன. தொல்காப்பியத்தில் கூறப்படும் நூல் வகைகளுள் "விருந்து" என்பதொன்றாகும். "விருந்து" என்பதற்குப் புதுவகையான நூல்கள் என்பது பொருளாகும்.

ஏழாமிலக்கணம் - யாப்பியல்பு.

"பழையயாப் பெனினும் பண்பில தாயிற்
களையவும் புதிய கட்டே யாயினும்
இனிய தாயி னேற்கவுந் துணிபும்
கல்வி யாளரென் கண்ணனை யாரே"

ஏழாமிலக்கணம் - புலமை யியல்பு.

"வேதன் விதியினும் விலக்குவ விலக்கும்
போத முடையான் புலவரிற் றலையே"

நன்னூல்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

நான்கு நூல் - சிறப்பு நூல் ௩-வது கல்வியுருவகம் ௪-ஆம் கவி.

"பன்னூற் பகுப்பிற் பதர்களையும் பக்குவத்தோர்
தொன்னூலென் றஞ்சார் தொகைக் கெல்லாம் —
பின்னூலென்
றெள்ளார் நலங்கண் டெடுப்பா ரிழிவுகண்டு
கொள்ளாரென் றோதல்கற்றோர் கோள்"

நூற்றேகை விளக்கம் - சூத்திரம் ௨.

"அறிவுபே றறிவுசிற் றறிபுல னறிவென
மூவகை யதனுன் முறையே நூலும்
மநம்பொது கலையென வகைமூன் றுமே"

பாரதியார் - தமிழில் புதிய சாத்திரம் வேண்டுதல்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும், மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை யில்லை, திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின் வாக்கினிலே ஒளியுண் டாகும், வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப் பெருக் கும் கவிப் பெருக்கும் மேவு மாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவி கொள்வார், தெள்ளுற்ற தமிழ முதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்."

"புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்

மொத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினி லில்லை"

"சென்றிடு விரெட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

நூல் என்பதற்கு ஒன்பது வகைப் பொருள் காணப் பட்டிருக்கின்றது. (1) பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூல் (2) தச்சன் வழங்கும் அளவு நூல் (3) பார்ப்பனர் பூணூல் (4) மணம் நிகழும்போது அணியும் நூல் (5) ஆராய்தல் (6) இலக்கியம் (7) அறிவியல் (8) ஞானப் பயிற்சி (9) வேதங்கள். (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 16, பரல் 5, பக்கம் உசங) இப் பல் பொருள் வழங்கினும் ஈண்டு நூல் என்பதற்குத் தனிப் பெருஞ் சிறப்புப் பொருள், அறிவினை விளக்கும் கருவி என்பதே.

கலைநூல் ஆசிரியர் P. சுந்தரம் பிள்ளையவர்கள் பேரறிவினைப் பற்றிய சமய நூலை மத நூல் என்றும், இயற்கையறிவாகிய தற்போத அறிவினைக் குறித்த நூலைப் பொதுநூல் என்றும், தற்போதத்திற்குக் கீழ்ப்பட்டுக் கருவிகளின் பழக்க வடிவாய் நிற்கும் புலனறிவை முன்னிட்ட நூலைக் கலை நூல் என்றும்

முப்பெரும் பிரிவாக்கி ஒவ்வொரு பிரிவினையும் சேர்ந்த கிளை நூல்கள் இன்னின்னவை என்றும் குறிப்பிட்டுள்ளார். அவ்விவரம் அவர் இயற்றிய நூற்றொகை விளக்கம் முதலாம் அநுபந்தத்தில் காண்க. புதிய உரைநடை நூல்கள் இயற்றுவோர்க்கு அந்நூலின் வகுப்பு நெறிமுறைக் குறிப்புக்கள் திசையறி கருவி போன்ற சீர்த்தியுடையனவே. கல்லாதன பல கற்று உலகத்தோடு ஒட்ட ஒழுகல், கற்றறிந்த மாந்தர் கடமை. அவ்வாறு கற்பதற்குத் தமிழில் போதிய உரைநடை நூல்கள் இல. இல்லாத நூல்களை இயற்றிக்கொள்வதற்கு நூலினம் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் நூற்றொகை விளக்கம் கூறிச் செல்கின்றது. அதனைத் துணைக்கொண்டு புதிய நூலினம் வகுத்தல் முறை.

இனி நமக்கு வேண்டப்படும் புத்தம் புதிய நூல்களைப் பற்றிச் சிறிது குறிப்பிடுவேனாக. தமிழ், தலை நிமிர்ந்து இயங்கத்தக்க ஆக்க வேலைகள் புதிய முறையில் இயற்றும் உரைநடை நூல்களேயாம்.

நூல்கள் முதல் முதல் எல்லா மொழிகளிலும் செய்யுள் வடிவமாகவே எழுதப்பட்டன. நாளடைவில் இலக்கிய நூல்கள் பெரும்பான்மையும், வரலாற்று நூல்கள் சிறுபான்மையும் செய்யுள் நடையிலும் வரையப் பட்டன. இக்காலத்திலோ இலக்கிய நூல்கள் சிறு பான்மை செய்யுள் நடையிலும் பெரும்பான்மை உரை நடையிலும், வரலாற்று நூல்கள் அடியோடு உரை நடையிலுமே இயற்றப்பட்டு வெளிவருகின்றன. எக் காலத்திலும் சாத்திர நூல்களையும், தோத்திரப் பிரபந்தங் களையும் சொற்பொருட் கட்டமைந்த செய்யுள் நடையில்

அமைப்பதையும் அவற்றுக்குத் தகுந்த செப்பம் வாய்ந்த உரைகள் அமைப்பதையும் அறிஞர் வரவேற்பர். அங்ஙனமே செய்யுள் வடிவில் அமைந்த இசை நூல்களையும் நாடக நூல்களையும் அறிவுடையோர் கொண்டாடுவர். இயற்றமிழ் நூல்களில் பெரும்பாலான வற்றையும் காலத்திற்கேற்ற கோலமாக உரைநடை வடிவில் அமைந்து வெளி வருவதனையும் அறிவு சான்றவர் நன்கு வரவேற்பர். ஆகலின், செய்யுள் நடை நூல்களைவிட உரைநடை நூல்களே இனி மிகுதியாக வேண்டப்படுவன. விறுவிறுப்புடன் முன்னேறும் தமிழகத்திற்குப் புதிய முறை உரைநடை நூல்கள் எவ்வகையினதாக இருத்தல் வேண்டும்?

(a) பழந்தமிழ் நூல்களில் உரையில்லாதவைகட்கு உரை எழுதல் வேண்டும். உரையாசிரியர் தத்தம் கொள்கைக்கு ஏற்றபடியும் ஆராய்ச்சிப் போக்குக்கு ஏற்றபடியும் மூல பாடத்தைச் சிதைத்துப் பாட வேறு பாடாக்காமல் உள்ளதை உள்ளபடியே வைத்து அதற்குப் பொருந்திய திருந்திய பொருள், கூர்ந்து கண்டு எழுதல் வேண்டும்.

(b) சிறந்த தமிழ் நூல்களுக்குத் தமிழ்ப் பண்பு துலக்கும் ஆராய்ச்சி முறையில் உரைகண்டு வெளியிடுவதற்குத் தமிழகம் பெருந்துணை செய்தல்வேண்டும். தமிழ் நாகரிகக் கண்ணாடிகளான தொல்காப்பியத்திற்கும் திருக்குறளுக்கும் தமிழ் நலம் காட்டும் புத்துரை இனியே அமைதல் வேண்டும். ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்த மனு முதலிய வடநூல் ஒளியினில் உரை வகுக்கப்படாமல் தமிழ் நிறத்தில் வகுக்கப்படல் வேண்டும், அதனால், மறைந்துவரும் தமிழாது

பண்டைப் பொது நெறி விளக்கமுறும்; மதிப்புற்றுக் காழ்ப்பேறிவரும் வருணக் கொள்கை தேய்ந்திறும். தமிழர் மனப்பான்மையைத் தெள்ளிதின் இயம்பும் தெளிவுரைகள் சங்க நூல்களுக்கெல்லாம் ஏற்படல்வேண்டும்.

(c) ஒண்டமிழ்க் காப்பிய நலங்களை நன்கு விளக்கும் செந்தமிழ் வாசக நூல்கள் நவ நவமாக மிக மிகவாகப் பரவுதல் வேண்டும்.

(d) பொய்யும் புளுகும் புனைந்து கட்டிய புராணக் கதைகளுக்குப் பெரும்பாலும் ஆக்கம் தேடக்கூடாது. தேடினும் புராண நூல்கள் ஆராய்ச்சியில் புடைக்கப்படுதல் வேண்டும். மெய்யாராய்ச்சியில் நிலைபெறுவனவே கொள்ளத் தகுவன; பிற தள்ளத் தகுவன.

(e) சரித்திரம்: சரித்திரம் செம்மை பெறுதல் வேண்டும். சரித்திர நூல்கள் தக்க ஆதாரங்களுடன் ஆராய்ச்சி முறையில் உருவாக்கப்படல்வேண்டும். சரித்திர நூலாசிரியர் ஒரு சார்பினராய்ப் பொய்யும் வழுவும் புகுத்தல் அழகன்று; மற்று அவர்கள் "கோடாமை சான்றோர்க்கணி" என்னும் வாசகத்திற்கு வாச்சியராதல் வேண்டும். நமது நாட்டுச் சரித்திரம் குடியரசாட்சி வாய்த்திருத்தலின் இனியாவது உண்மை வடிவிலே தீட்டப்படுதல் இன்றியமையாதது.

(f) வரலாற்று நூல்கள்: வரலாறு திரலாறு பெறுதல் வேண்டும். முத்தமிழ் வரலாறு, தேச வரலாறு, அரசியல் வரலாறு, தொழில் வரலாறு, புலவர் வரலாறு, அடியவர் வரலாறு முதலிய வரலாறுகள் அழுத்தமாக ஆராய்ந்து எழுதப்படல் வேண்டும்.

வரலாறு ஒரு கண்ணுடி போன்றது; இலக்கியம் ஒரு உருப்பெருக்கிக் கண்ணுடி போன்றது. வரலாறு என்பது உள்ளதை உள்ளவாறே கூறும் இயற்கை நூல்; இலக்கியம் அங்ஙனம் இல்லாத செயற்கை நூல். வரலாறு பொதுவாக நாடு, மொழி முதலியவற்றின் பண்டை நிகழ்ச்சிகளை வரிசை முறையாகக் கூறும் நூல். அது போலவே இலக்கியம் ஒரு நல்லாசிரியனுல் பலதிறச் செய்திகளையும் கற்பித்து அறிவு நுணுக்கமாகச் சொற் பொருட் சுவைகள் நிரம்பக் கூறுவது. இவ்வாறு வரலாற்றுக்கும் இலக்கியத்திற்கும் ஒற்றுமையில் வேற்றுமையும் வேற்றுமையில் ஒற்றுமையும் காணலாகும்.

வரலாறுகள் பல உள. அவை தனித் தனி ஒவ்வொரு பொருளையும் பற்றியன. ஒரு மனிதன், விலங்கு, பறவை அல்லது நாடு, மொழி, கலை என்பன போன்ற யாதேனும் ஒரு பொருள் பற்றியும் வரலாறு எழுதல் உண்டு. வரலாறும் இலக்கியமும் ஓதியுணர்வதனுல் இயற்கையறிவும் செயற்கையறிவும் ஒன்ருேடொன்று பிணைந்து நின்று, வேலை செய்யும் ஆற்றல் ஏற்படும்.

(g) சித்தர் நூல் ஆராய்ச்சி: சித்தர் நூல்களுக்கு ஆராய்ச்சி செவ்விதின் வெளிப்போந்து ஒளிர்தல் வேண்டும். அங்ஙனமே மருத்துவ சோதிட மந்திரயோக போத நூல் முறைகளை நன்கு விளக்கும் தெளிவு நூல்கள் பற்பல ஆக்கப்படல் வேண்டும்.

(h) ஓவிய நூல்களும் சிற்ப நூல்களும் ஓங்கு தமிழ் முறையில் பாங்குபெற அமைத்தல் வேண்டும்.

(i) முத்தமிழ் நூல்கள்: இன்றமிழ் முறையில் துன்றுறும்படி இயலிசை நாடக நூல்களை ஆராய்ந்து வெளியிடல்வேண்டும். வண்டமிழ் இசைகளே ஒண்டமிழ் மக்களால் போற்றற்குரியன. தமிழரில் இசைவலார் தண்டமிழ்ப் பாட்டே பாடுதல் வேண்டும். நாடகக் கலைகளுக்கும் படக்கலைகளுக்கும் நறுந்தமிழ்க் கீர்த்தியை நாட்டுதல் வேண்டும். பழந்தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிறப்பும், ஆடல் பாடல் கூடல் வனப்பும், உலகியல் அருளியல் நெறிமுறைகளும், ஒன்பான் சுவை உயர்வும் நாடக மேடைதோறும், படக்கலைச் சாலைதோறும் பொங்கி வழியும்படி அமைத்தல்வேண்டும்.

(j) அறிவியல் நூல்கள்: அறிவியல் நூல்களை ஆங்கிலர் "சைன்ஸ்" என்றும் வடவர் "விஞ்ஞானம்" என்றும் சொல்வர். ஆங்கில மொழியின் அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்வேண்டும் மொழி பெயர்க்கும் முன், பரிபாஷைகளுக்கு ஏற்ற தூய தமிழ்ச் சொற்களை இருமொழிப் புலமை சான்றவர்கள் ஆக்கிக் கொடுத்து உதவல் வேண்டும். இன்றியமையாத இடத்திலன்றி ஆங்கிலச் சொற்களை மொழி பெயர்ப்பிலே புகுத்தலொண்ணாது. மொழி பெயர்ப்பாசிரியர் பிற மொழிச் சொற்கலப்பினை முக்காலே மூன்று வீசமும் நுழைக்காமல் வேற்றுமொழிப் பொருட்கலப்பினையே மதிர்து வரைதல்வேண்டும். அவ்வாறே தமிழின் விழுமிய கருத்தும் நூலும் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் பெருக்குதல்வேண்டும். மேனாட்டு அறிவியல் நூல்கள் பலவும் தமிழில் பாங்குற அமைத்தல் ஆங்கிலம் வல்லாரின் முதற் பெருங் கடமை ஆதல் போன்றே நயமிக்க வடநூல் பிற

நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படுதல் அவ்வம் மொழியிலே வல்லுநர் கடமை. தமிழ் மொழிக்குச் சொற்செட்டு, உயிர்ப்புச் செட்டுகள் இல்லையென வாய்ப் பறை அறைந்துவரும் பிறமொழிக் கல்வியாளர் அல்லது மயக்கினர் நாணித் தலைகுனியும் வண்ணமும் நல்லுணர்ச்சி அடையும் வண்ணமும் தெளிவான உரைநடை வரைதல் வேண்டும். பிறமொழிச் சொற்களை அப்படியே எடுத்து அடிக்கடி யமைத்துத் தமிழின் வளர்ச்சிக்குத் தடையாக உரை நடைகளில் வரையாது தூய தமிழ்ச் சொற்களையே ஆய்ந்து வரைதல் வேண்டும் என்பதை மொழிபெயர்ப் பாளருக்கு நினைவுறுத்துகின்றேன்.

(k) கலைத்துறை நூல்கள்: மக்கள் பயின்று தேர்ந் தறியும் ஒவ்வொரு அறிவுத் திறனும் கலை எனப்படும். இத னைப் போதவறிவோடு சிலகாலம் பழகிய வாசனை வைப வத்தால் விளையும் தொழில் யாவையும் "கலை" எனக் கூறலாம் என்றது "நூற்ரேகை விளக்கம்".

கலைத் துறை: கலைத்துறை அறுபத்துநாலென்ப. பழக்க முதிர்ச்சியாலாகும் கலைகளை நம்முன்னோர் எழுத் திலக்கணம் முதல் மனவோடுக்கம் வரை **64** ஆக வகுத் துள்ளனர். இவற்றிற் சில கூடுதல் குறைதல் உண் டென்பர். ஆதலின் கலைத்துறை அளவுபடாதது எனத் தகும். கலைகள் போது, போதுச் சிறப்பு தனிச் சிறப்பு என்னும் முப்பெரும் பிரிவின. அவற்றுள் புறக்கரணங்களின் பழக்க முதிர்ச்சியால் மாண்படைவனவெல்லாம் போதுக் கலை. தச்சுத் தொழில், கம்மியத் தொழில், தையல், பின்னல், நெய்தல், ஓவியம், ஆடல், பாடல் முதலன பொதுவாகக் கலைகள் எனப்படும். இவற்றுட் சிறந்தன போதுச் சிறப்புக்

கலைகள். அவை இன்னிசை, ஓவியம், நாடகம், பாட்டியற்றல் முதலன. போதுக் கலைகள் தன்மையிடத்து மட்டும் மிகுதியான இன்பம் பயப்பன. போதுச் சிறப்புக் கலைகளோ தன்மையிடத்தும் முன்னிலையிடத்தும் இன்பம் விளைவிப்பன. இசை பாடுவோன் அவ்விசையினால் தானும் இன்புறுகின்றான்; கேட்போரையும் இன்புறுத்துகின்றான். பொதுச் சிறப்புக் கலைகள் இவ்வாறு நேரே இன்பம் தருதலால் அவற்றை நற் கலை என அடைகொடுத்துப் புகழ்வர் அறிஞர். அந்நற்கலைகளின் பெரும் பயன் இன்னொன்றுளது. அது அவற்றை எத்துணைப் பேர் திரண்டு கண்ணாலும் காதாலும் நுகரினும் குறைவு படாத நீர்மையினது. ஆதலின் அழகு என நுகரப்படும் அனைத்தும் நற்கலையினின்றும் பிறப்பனவே. தனிச் சிறப்புக் கலைகளோ முற்குறித்த இருவகைக் கலைகளினும் உயர்தரமானவை. அவை பொதுவாக யோக கலை எனவும், பொதுச்சிறப்பாக அட்டாங்க யோகம் எனவும், தனிச்சிறப்பாக ஞான யோகம் எனவும் வகுக்கப்படும். யோக கலை புறவறிவை அகவறிவினுள் ஒடுக்குவது. அட்டாங்க யோகம் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண் வகைப் பயிற்சி முறைகளினால் யோக நிலையில் அமைதலைக் குறிக்கும். ஞான யோகம் விழித்த கண் குருடாக அல்லது செத்தாரைப்போலே திரியும் வீரதீர சூரத்துவம் கைவரப்பெற்ற நிலை. ஞான யோகுவினால் அணிமா முதல் வசித்துவம் ஈறாகச் சொல்லப்படும் சித்தியோர் எட்டுமட்டுமன்றி அதனால் ஆகாதன ஒன்றுமில்லையென்று எல்லையில்லா எல்லை கட்டிக் கூறுதல் மிகை ஆகவே யாகாது. இதன் உண்மையை, ஐந்தவித்தான் ஆற்றலை,

இந்திரனே சாலும் கரி என்று சுட்டிக்காட்டும் திருக்குற ளாலும், அகலிகையைக் கல்லாக்கிப் பண்டுபோல் அரிவையாக்கியதாலும் விசுவாமித்திரர் முத்தொழில் வானவரும் அஞ்சும்படி திரிசங்கு சுவர்க்கம் உண்டு பண்ணியதாலும் தெற்றென உணரலாம். இந்நிலை கைவரப்பெறும் ஞான யோகம், யோக கலையில் நற்கலை யாகும்.

கலை நூல்கள் : கலைகள் இடைவிடாப் பழக்கத்தால் கைகூடுவன ஆயினும் பயிற்சி முறைகளையும், தேர்ச்சி யடைகின்ற பயனுக்கும் பயிற்சி முறைக்கும் உள்ள தொடர்புகளையும் காரிய காரண வகையில் இயன்றமட்டும் ஆராய்தல் இயல்வதாகும். இவ்வகை ஆராய்ச்சிகளைக் கலை நூல் என்பர் ஆன்றோர். ஆதலின், கலை நூலாவது புலன் முதலியவற்றின் பழக்கத்தால் தேர்வுறும் தொழிலை ஆராய்ந்து, அது இடையறாது நடந்தேறும் முறைமையை விளக்கும் நூல் எனத்தகும். நற்கலை நூலாவது அவ்வந் நற்கலைத் தொழில்கள் கைகூடும் நெறிமுறைகளை எடுத் தியம்பும் தகுதியினது. அண்மை, சேய்மை, இன்பம், வீரம் முதலான சுவைகள் இன்ன வழிவகைகளால் தீட்டப்படுகின்றன என்பது குறிப்பது ஓவியக் கலை நூல். எழுத்தேழின் ஆரோகண அவரோகணம் ஆகிய கமகம் அல்லது ஒலிகள் இன்ன இன்ன நெறி முறைகளால் மாறுபட்டுப் புணர்ந்து பண்ணுதல் முதலன குறிப்பது இசை நூல். அசையும், சீரும், தளையும், தொடையும், அடியும், பாவும் இன்னவாற்றால் பிறக்கின்றன என்பது குறிப்பது யாப்பு நூல். இவற்றைப் பற்றிய கலை நூல் கலைக்குரிய வரன்முறை ஆயும். இக் கலைகளின நூலறிவு

வேறு; தொழிலறிவு வேறு. இவற்றைக் கற்ருர் அனைவரும் தொழிலாற்றுவார் அல்லார்; கல்லார் தம்முள்ளும் தொழிலாற்றுநர் சிலர் உளர். ஆனபடியினுலே அவ்வக் கலைகளுக்குத் தக்க அறிவியல் வினையியல் நுணுக்கமும் திறமையுமே இன்றியமையாதனவாம். யோக கலைகைவரப் பெறுதலுக்கு மட்டும் அறிவியல் வினையியல் நுணுக்கம் திறமைகளுடன் அருளியல் ஊடுருவி நிலாவுதல் மிக இன்றியமையாமையினதாகும். ஞானயோக சித்தியின் அருமை நோக்கியே "திரிவித வுலகத் தரிதொரு ஞானி" என்றருளினர் மாதவ ஞான வள்ளலாராகிய சாந்தலிங்க சுவாமிகள்.

"நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லையில் லாத சிவம்"

என்றருளினர் திருவள்ளுவ நாயனரும்.

(b) எண்ணெழுத்துக் கலைகள். உணர்வோம்பு நூல்கள் எண், எழுத்து என இருவகைப்படும். எண் இலக்கணம் அல்லது அளவை நூல்; எழுத்து இலக்கியம் அல்லது சுவை நூல். கணக்கு, மருத்துவம், கோள்நூல் முதலிய நூல்களெல்லாம் எண் என்னும் பகுதியிலே அடங்கும். இவற்றுக்கு இன்பம் ஊட்டும் நூல்களெல்லாம் எழுத்து என்னும் பகுதியிலே அடங்கும். வெறும் கலை நூல்களெல்லாம் கருத்துக்களை உணர்வுக்கு ஊட்டும் வகையினுல் இலக்கண நூல்களே. அக் கலைக் கருத்துக்களை உணர்வுக்கு இன்பம் தோன்றும் முறையில் ஊட்டுவன எல்லாம் இலக்கிய நூல்களே. தமிழின் அருமைப்பாடு எழுத்துக்கும் சொல்லுக்கும் அளவைகள் (இலக்கணம்) கூறுவதோடு மட்டும் அமையாது

இவ்விரண்டுக்கும் வேருக இவற்ருல் உணரப்படும் பொருள்களுக்கு அளவைகள் கூறுவதும் இலக்கணம் எனக் கருதி ஆன்ருேர் அப்பொருள்களுக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர். அப்பொருளிலக்கணங்களின் விரிவே முத்தமிழ்க் கலை நூல்களாம். இம் முத்தமிழ்ப் பொருளிலக் கணங்களுள் எல்லாக் கலை நூல் விரிவுகளும் அடங்கியுள. ஆகவே, எல்லா வகையான நூல்களும் இலக்கணம் இலக்கியம் என்னும் இரு பிரிவினுள் அடங்கக் காண் கின்ருேம். அல்லமோ? இவ்விருமைப் பகுப்பினையே ''எண்ணெழுத் திகழேல்''; ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'': என்று ஔவையாரும்; ''எண் ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும் – கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்று திருவள்ளுவரும் இனிது பகுத்துரைத்துள்ளார்கள். எனவே இலக்கண நூல் களில் உள நூல், உயிர் நூல், இசை நூல் முதலிய கலை நூல்கள் எல்லாம் அடங்குமாறு, நூல்கள் பொதுவாக இலக்கணம் இலக்கியம் என்னும் இரு பகுப்புகளாக இயற்றப்பட்டுள. இலக்கண நூல்களைக் கலை நுட்பங்கள் கனிய மாணவர்களுக்குக் கற்பிக்கத் தமிழ்க் கல்லூரி களும், தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் முதன்மை யாகக் கருத்தூன்றிவரின் தமிழ் மட்டும் பயில்வோருங் கூட இயன்ற மட்டும் கலையறிஞர்களாக விளங்குவர்.

அனைத்துமே கலைமயம்: இனி இலக்கணம் கலை யாமாறும், இலக்கியம் இன் கலை யாமாறும் காண்போ மாக கலையில் இன்கலை யில்லை? அதாவது: இலக் கணங்கள் வகுக்கும் கலை நூல்கள் வெறும் கருத்துக்களை

மட்டும் கூறுதலினுல் அவற்றுள் இலக்கியச் சுவை என்னும் இன்சுவை முறையில்லை. ஆனல் இன் கலையில் கலை அடங்கியிருக்கிறது. அதாவது : இலக்கியம் என்னும் இன்கலை நூல்களுள் கருத்துக்களும் கருத்துக்களை இன் சுவையாக ஊட்டும் முறைகளும் இருக்கின்றன. ஆகலின், இசை, பாட்டு, ஓவியம், சிற்பம் முதலான இன்கலைகள் இலக்கியம் என்னும் இன்கலையின் பிரிவுகளே என்பர் கலைப் புலவோர். எனவே இலக்கியம் என்பது வெறும் நூல் அன்று; என ஏற்படுகின்றது. நம் அறிவையும் உணர்வையும் கொள்ளை கொள்ளத்தக்க இனிமைகள் அனைத்தும் இலக்கியங்களே. அவ்வினிமைகளை இனிமை தோன்றக் கூறும் நூல்களும் இலக்கியங்கள் என்பர்.

அனைத்தும் இலக்கியம் என்னும் கலைமயமாக விளங்கு கின்றது. அருட்பெரும் புலவரேருகிய திருஞானசம்பந்தப் பெருமானுக்கு உலகமெல்லாம் இலக்கிய மயமாகத் தோன்றிற்று. தோன்றினும், அனைத்தும் ஆகியும் ஆகாத இறைவனே அவருக்குத் தனிப்பெருஞ் சிறப்பிலக்கியமாக இலங்கினர். இவ்வுண்மை அவரது திருமணக் காட்சி கண்டுய்ந்தவருள் . சூதக விழுப்புற்றிருந்த ஒருத்தியும் தகுந்த இலக்கியமெனக் கருதி அன்னவளையும் பற்பல பக்குவிகளுடனே சிவபெருஞ்சோதியினுள்ளே புகுந் துய்யச் செய்ததனுலும், உடனுக்குடன் தமது மனை வாட்டியுடன் தாமும் அவ்வருட்பெருஞ் சோதியினுள்ளே புகுந்து இரண்டறக் கலந்துகொண்டதனுலும் தெளிந்து கோடலாம். இதனுலன்றே? எழுத்து, சொல், பொருள், புலமை முதலிய இலக்கணங்களுக்கெல்லாம் இலக்கியமாக

விளங்கும் கலைமகளைத் தெய்வமாக வாழ்த்தி வணங்கி வாழ்கை நந்தம் தமிழ் மக்களுக்கு முதற்பெருங் கடமை யாக நிலவி வரலாயிற்று.

சீர்கள் மூலமாகப் புலவோரிடம் பாக்கள் அரும்பி மலர்கின்றன. அங்ஙனமே பல நிறங்கள் மூலமாக ஓவியப் புலவர்கள் வயினும், உருவங்கள் மூலமாகச் சிற்ப வினைஞர்கள்பாலும், ஒழுக்கங்கள் மூலமாகச் சான்றோர்கள் மாட்டும் அப்பாடல்கள் அரும்பி மலர் கின்றன.

எல்லாக் கலைச்சுவைகளும் அல்லது இனிமைகளும் கடவுள் என்னும் ஒரு பேரின்பப் பெரும் பொருளின் இனிமைகளாம். இவ்வுண்மைக்குத் திருநாவுக்கரசுகள் அருளிய "பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி" "எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி" என்னும் தேவாரத் திருமொழிகள் தக்க சான்றுகளாதல் காண்க.

இவ்வண்ணமெல்லாம் பார்க்குமிடமெங்கும் காட்சிப் பொருளாயும், நினைக்குமிடமெங்கும் கருத்துப் பொருளாயும் புறத்தும் அகத்தும் நீக்கமற நிறைந் திலங்கும் இலக்கியத்தை—குறியை—அடைதலே உயிர் களின் நோக்கமாகும். ஆதலினால், இவ்வினிமைகளும், இவற்றைச் சுவையுணர்வோடு உரைக்கும் எழுத்துக் களும், நிறங்களும், உருவங்களும், சமயங்களும், நல் லொழுக்கங்களும், இன்ன செயற் பழக்கங்களும் எல்லாம் இலக்கியம்; அல்லது கலை, இன்கலை எனப் பெயர் பெற லாயின.

6. நூல் மதிப்பீடு.

(a) மதிப்பீட்டு விளக்கம்—பொது: முற்காலத்தில் நூலரங்கேற்றம் என்பது இக்காலத்தில் நூல் மதிப்பீடு எனப் பெரும்பாலும் மாறிவருகிறது. காரணம், அக்காலத்தில் சங்கப் புலவர்களது அங்கீகாரமே நூலரங்கேற்றம் என மதிக்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் அவ்வழக்கம் சிறுபான்மையாகக் குறுகித் தனிப்பட்ட ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் வகுக்கும் மதிப்புரையில் வந்து பெருகி நிற்கின்றது. நூலரங்கேற்றம் என்பது அவையில் கூடிய புலவர்களின் நன்மதிப்பை அக்காலத்தில் பாட்டாகவும் இக்காலத்தில் பாட்டாகவோ உரைநடையாகவோ ஒரு நூல் பெறுதலேயாம். இம்முறையால் பண்டைக் காலத்தில் நன்னூல்கள் தலைநிமிர்ந்து வளர்ந்தன; புன்னூல்கள் தலைகுனிந்து மறைந்தன. நூலாசிரியர்களுக்கும் புலவர்களுக்கும் புலவிகளுக்கும் ஆதரவுகள் பெருகின. நிகழ் காலத்திலோ நூல் மதிப்பீட்டில் வரைதுறையில்லாதபடியால் நூல்கள் சரியாக மதிக்கப்படுவதில்லை. காரணம் கூறின் மதிப்பீட்டாளர் அல்லது மதிப்புரையாளர் பலர் வருந்துவர். நூல்கள் சரியாக மதிப்பிடப்படாமையினால் நன்னூல் வளர்ச்சி தேக்கமடைகின்றது; புன்னூல் வளர்ச்சி ஊக்கமடைகின்றது. நல்லாசிரியர்கள் அனுதரவு பெறுகின்றனர்; புல்லாசிரியர்கள் ஆதரவு பெறுகின்றனர். அரசினரும், தமிழ் வளர்ச்சிக் கழகமும், செந்தமிழ்க் கழகங்களும் இக்குறைபாட்டினை நீக்குவதற்கு ஒத்துழைப்பின், ஒள்ளிய புத்திலக்கியக்கொடி பற்றிப் படர்ந்து வளர்வதற்கு அஃது ஒரு கொழுகொம்பு போன்றுதவும்.

நூல்கள் நாத தத்துவ எல்லைவரைக்கும் நன்கு பேச வல்லன. நாத தத்துவத்தினுக்கு அப்புறம் நண்ணூறும் அருளாசிரியனது நிலை கடந்த பாத தாமரைகளைப் பற்றற்ற பற்றினேரே மெய்யறிவொன்றினால் "மாற்றறியாத செழும் பசும் பொன்னே! மாணிக்கமே! சுடர் வன்னக் கொழுந்தே!" என்றும், "புலவரெலாம் புகழ் கண்ணியனே!" என்றும் மற்றும் பலபடியாக வருணித்தும், துதித்தும், நினைத்தும் வற்றாத முற்றாத இன்பினில் ஊறித் தழைக்க வல்லவராவர். நாத தத்துவம் வரைக்கும் தொழிற்படும் அறிவே மாற்றறியத்தக்க செழும்பசும் பொன் என்னலாம். அத்தகு நிலையினரே அறிவு நூல்களைத் தக்கபடி நடுநின்றாராய்ந்து மாற்றின் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டுபிடித்து முடிவுகட்ட வல்லவராவர். உயர்தர நூல்களெல்லாம் அறிவென்னும் செம்பொன்னால் ஆக்கப்பட்டு இயல்பான உரையாணியால் ஒளிவீசப்படுவன. நூலின் மாற்றினைக் காண்பதற்கு நல்லாசிரியர்கள் உரைகல் வேண்டினர். அவ்வுரைகல்லே தமிழில் மதிப்பீடு அல்லது மதிப்புரை எனப்படுகின்றது.

நூல்களின் தரத்தை அளக்கும் முறையை ஆங்கிலத்தில் Criticism என்பர். இம்மதிப்பீட்டுமுறை ஆங்கில நாட்டில் பதினேந்தாம் நூற்றாண்டில் தலை நிமிரத் துவங்கிற்று. நமது நாட்டில் அதனிலும் பல நூற்றாண்டுகட்கு முன்னே அம்முறை தலைதூக்கி வளர்ந்தது. ஆங்கில மதிப்பீட்டு முறை விரைந்து வளர்ந்து இன்றைக்கு அது உச்சநிலை அடைந்துளது. ஆனால் தமிழ் மதிப்பீட்டு முறை அவ்வளவு செப்பமுறவில்லை. ஆங்கில மதிப்பீட்டு முறை

ஓடும் நீர் நிலையைப்போன்ற செவ்வியினது. தமிழ் மதிப்பீட்டு முறையோ, தேங்கி நிற்கும் நீர் நிலையினைப் போன்று செவ்வியற்ற வளர்ச்சியினது.

B. மதிப்பீட்டு விளக்கம்—பொதுச் சிறப்பு.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கடைச்சங்க காலத்தில் செய்யுள் நூல்கள் அரங்கேற்றப்படும் (மதிப்பீடு செய்யப்படும்) வழக்கம் இருந்து வந்தது. நல்லிசைப் புலவர்கள் அவைக்கு வரும் நூல்களை நுணுகி யாராய்ந்து அவற்றின் சொற்பொருட் செவ்விகளைத் தம் அறிவென்னும் துலாக்கோலில் இட்டு மதிப்பிட்டனர். அன்னார் தத்தம் நுண் மாண் நுழை புலத் தகுதிக்கேற்ப மதிக்கப்பட்டனர். அறிவு மாட்சி மிக்கார் அனைவரும் சங்கப் புலவராக வீற்றிருந்து தமிழாராய்ச்சியில் தலை சிறந்து ஒளிர்ந்தனர். நக்கீரர், புலவர் தலைமணியாய் விளங்கினர். பாடற் புலமை, ஆடற் புலமைத் துறைபோகியவர், பலவாறு பாராட்டப்பட்டனர். முதற் சங்கத்தில் முத்தமிழ்ப் புலமைத்துறை முற்றிய அகத்தியனார் முதலானவர்களும், இடைச் சங்கத்தில் அகத்தியனார், தொல்காப்பியனார் முதலானவர்களும், கடைச் சங்கத்தில் நக்கீரனார் முதலானவர்களும் செந்தமிழ் நூலியற்றிய பாவலராகவும், உரை வகுத்த பண்டிதராகவும், நூல் மதிப்பீடு செய்த நாவலராகவும், தமிழ் வளர்த்த அன்னையராகவும் பரிமளித்தனர். அதனால் அகத்தியம், தொல்காப்பியம், இசை நுணுக்கம் முதலிய சங்கம் மருவிய நூல்களே மதிக்கப்பட்டு வந்தன. அத்தகைய நூல்களின் மாற்றனது விலை மதிக்க முடியாத உயர்வினதாக மிளிர்ந்தது. இவ்வுண்மைக்கு எடுத்துக்

காட்டாகத் தெய்வச் சங்கப்பலகை ஏற்றுக்கொண்ட திருக்குறளையும் திருவள்ளுவரையும் திருவள்ளுவ மாலை யென்னும் திருக்குறட் சிறப்புக் கவிதைகளையும் கூற லாம். தொல்காப்பியம் திருக்குறளுக்கு முற்பட்ட சிறப் பினது. தொல்காப்பியமும் திருக்குறளும் முறையே இலக்கணச் சிறப்புப் பெருமறையாகவும் இலக்கியப் பொதுப்பெருமறையாகவும் ஒளிர்தலினால் அவ்விரு பெரும் நூல்களையும் நிகரற்ற முதல்தர நூல்களாகப் போற்றாத தமிழறிஞர் இலர்.

C. மதிப்பீட்டு விளக்கம் — சிறப்பு — நூலாராய்ச்சி முறை.

கடைச் சங்கம்: சங்கப் புலவர் எடுத்த எடுப்பில் நூல்களை ஏற்றுக்கொண்டதில்லை. சொற்செறிவு, பொருட்செறிவுள்ள நூல்களும் உரைகளுங்கூட நன்கு ஆராயப்பட்ட பின்னரே புலவர் அரங்கில் ஏறின. சொற்பொருட் சோர்வுகள்பட்ட நூல்கள், உரைகள், நுணுகிய ஆராய்ச்சியின் பின் அரங்கில் இடம் பெறாது போயின. இதற்குச் சான்றுகள் வருமாறு:—

(1) சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் சொற் சோர்வும் பொருட்சோர்வும் கொண்ட பாடல்களைக் கண்டபோழ்தும் கேட்டபோழ்தும் தம் தலையில் குத்திக் கொண்டதனால் தலையில் புண்ணாகிச் சீழ் வடியத் தொடங் கியது. அதனால் அவர் அப்பெயர் பெற்றார் என்ப.

(2) கடவுளால் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தெய்வத்தன்மை பொருந்திய பலகை அளிக்கப்பட்டது. சங்கத்திற்கு வந்த புதிய நூல்களை அப்பலகையின் மீது வைப்பது வழக்கம்; சீரிய நூல்களுக்கும் ஒள்ளிய

புலவர்களுக்கும் அப்பலகை விரிந்து இடங் கொடுத்தது; அல்லாத நூல்களையும் புலவர்களையும் இடங் கொள்ளுங் கால் அப்பலகை சுருங்கியும் வீழ்த்தியும் வந்தது. இவ் வாறு சங்கப் பலகை, நூல் தராதரமும் புலவர் தராதரமும் தெரித்து வந்தது.

(3) இறையனார் களவியலுரை சிவபிரான் பாண்டியன் பொருட்டு "அன்பினைந்திணை" என்பது முதலிய அறுபது சூத்திரங்களினால் அகப்பொருள் நூல் ஒன்று செய்தருளினார். அதனைக் களவியலெனவும், இறையனார் அகப்பொருளெனவும் கூறுவர் ஆன்றோர். அந்நூலுக்குக் கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்ப தின்மரும் உரை செய்தனர். அவர் தத்தம் உரையே சிறந்ததெனத் தருக்கமிட்டுத் தம்முள் மாறுபட்டனர். மாறுகொண்டு சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவனார் குறிப்பிட்ட முருகக் கடவுள் அவதாரமாக வந்த உருத்திரசன்மரால் ஆராயப்பட்ட அவ்வுரைகளில் நக்கீரர் உரையே முற்றிலும் சிறந்ததெனக் கோள்ளப்பட்டது.

(4) இறையனார் களவியல் நூலின் அரங்கேற்றத்தால் நூல்களை நுணுகி ஆராயும் முறைமையும், சிறந்த பகுதிகள் இவை, சிறவாத பகுதிகள் இவை எனப் பகுத்துக் காட்டும் நெறியும், நூலின் முழுத் தகுதியும் காணும் நல்ல ஆராய்ச்சி நெறிமுறையும் செவ்விதின் நாட்டப்பெற்றன. பின்னர் இவ்வரங்கேற்ற வழிவகைகளால் நூல்கள் நுணுகி ஆராயப்பட்டன; நல்லன விரும்பிக் கொள்ளப் பட்டன; அல்லன வெறுத்துத் தள்ளப்பட்டன. கடவுள் காட்டிய நெறிமுறைகளில் நூல்களை மதிப்பிட்டுங்கூடப்

புலவர்களுக்குள் ஊக்கம் ஆக்கம் குன்றி ஒற்றுமை பற்றுமை குலையத் தலைபட்டன; புலமைச் செருக்கும் பொருமையும் நஞ்சுபோல் தலைக்கேறின. இவ்வாற்ருல் திருக்குறளையும் திருவள்ளுவனுரையுங்கூடக் கடைச் சங்கப் புலவர் உவர்த்தனர். ஆனல் திருவருட் செயல் வேறு விதமாக இலங்கியது. அசரீரியின்படி சங்கப் பலகை திருக்குறளையும் திருவள்ளுவரையும் விரும்பி முழம் வளர்ந்து இடங்கொடுத்து ஏற்றுக்கொண்டது; போலிப் புலவர்களைத் தள்ளிவிட்டது. இச்செயலின் பின்புதான் குறளும் அதன் ஆசிரியரும் மதிக்கப்பட்டு நூலரங்கேற்றம் செவ்விதின் நிறைவேறியது. களவிய லுரைகளை மதிப்பிட்ட உருத்திரசன்மரையும் சங்கப் பலகை இனிதேற்றுத் தன்னிடத் தமர்த்திக்கொண்டது.

(5) நுல்களை மதிப்பிடும்போழ்து உள்ளதை உள்ள வாறே மறைக்காமல் நடுங்காமல் உறுதியுடன் உரைத்தலே நெறியென்பதை முழுதுணர் புலவனுகிய முருகப்பிரானும் நக்கீரனும் நிலைநாட்டியுள்ளார்கள். பொய்யாமொழிப் புலவர் பாடிய "பொன் போலுங் கள்ளி" எனத்துவங்கும் வெண்பா ஒன்றில் பொருட் குற்றம் காட்டி அதனைத் திருத்தி வேறு வெண்பா "விழுந்ததுளி யந்தரத்தே" எனத்துவங்கிப் பாடிக் காட்டி மெய்ப்பித்தனர் முருகவேள். மற்றும், சிவனுர் அருளிய "கொங்குதேர் வாழ்க்கை" எனத் துவங்கும் திருப்பாடல் பொருட்குற்றம் உளதென வாதாடினர் நக்கீரனுர்; நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்றனர். பிற்காலத்தவரான வண்ணச் சரப தண்டபாணி சுவாமிகள் ஒரு நூலுக்கு மதிப்புக் கவி பாடியளித்தனர்; அதில் அந்நூல் இலக்கணப்

புலவர்க்கு உவர்ப்பாகவும், ஏனைப் புலவோர்க்கு இனிப்பாகவும் இருக்கும் என்ற கருத்தமைத்திருந்தனர்; என்பர். இவ்வாற்ருல் ஒரு நூலை முழுதும் இகழ்ந் தொதுக்காமல், அதன் நற்பகுதியைப் போற்றியும், அல்லாத பகுதியில் உள்ள குற்றத்தை வெளிப்படுத்தியும், தம் நடுநிலை அறிவுத் தராசினை ஆண்மையுடன் தொழிற்படுத்தியும் வருவதே சிறந்த மதிப்பீட்டு முறை. இதுவே (Method of Criticism) மதிப்பீட்டு முறையின் அடிவரி அல்லது அடி மட்டம். அல்லாத முறையோ அவமதிப்பீட்டு முறையே என்க.

இனி, மதிப்பீட்டுமுறை என்னும் கட்டிடத்தின் மேல் மட்டம் பற்றி ஒரு சிறிது குறிப்பேனுக. நாள் செல்லச் செல்ல உண்மையான மதிப்பீட்டுமுறையில் களங்கம் படிந்து வந்தது. அதற்குக் காரணம் சங்கப் புலவர்க்குள் வளர்ந்த அழுக்காறு, செருக்கு, புறக்கணிப்பு, தன்னலம் முதலன. இவற்ருல் பேரறிவுக் களஞ்சியம் போன்ற பெரு நூல்களையும் இகழ்ந்தொதுக்கத் தொடங்கினர். அப்புலவர் குழுவினிடை அகப்பட்ட திருக்குறள் அதன் தெய்வத் தன்மையின் பெருமிதத்திஞல் அரங்கேறி மீண்டு வெளி வந்துலாவிற்றல்லவா? ஔவையார் தமது கைக்குறிப்புக் கிணங்கப் புலவரைப் பாடுமாறு செய்தனர். அவ்வாறு பாடமாட்டாமல் விழித்த அப்புலவர்கள் அம் மூதாட்டியார் முன்பு செருக்கடங்கி அமைந்தனர். ஆயினும், அவர்தம் பொருமையும் புறக்கணிப்பும் சங்கத்தின் வளர்ச்சிக்கும், நல்லாசிரியர் தோற்றத்திற்கும், அருநூல்களின் வெளிப்பாட்டுக்கும் மாருத இடையூறு களாய் நின்றன.

இடைக் காலத்தில் சமய நூல்களும்: அவற்றினுக்கு மதிப்புரைகளும் தோன்றின. அந் நூல்கள் ஒன்றோடொன்று மாறுபட்ட கொள்கையுடன் ஒன்றையொன்று மறுத்துரைத்துளவேயன்றி நடுநின்று மதிப்புரைத்தில. ஒளவையார், கம்பர், புகழேந்தியார், ஒட்டக்கூத்தர் ஆகிய பெரும் புலவர்களுங்கூட ஒருவர் நூலுக்கு அல்லது புலமைக்கு மதிப்புரை வழங்க மனம் பற்றுமல் மறுப்புரை வழங்கத் துணிந்தனர் என்பது அவரவர் சரிதத்தால் புலனுகின்றது. பிற்காலப் புலவர்களில் இம் முறையல்லா முறையில் முனைந்து நின்றவர்கள் வில்லிபுத்தூராரும், காளமேகப் புலவரின் பகைப் புலவர் அதிமதுர கவிராயரும் ஆவர். இதனை இவர்தம் சரிதத்தால் அறிமின். இவ்வாறு இப்பாவலர் காலத்தும் மதிப்பீட்டு முறையில் மாசு படிந்திருந்தது. இக்கருத்தினுல் எழுந்த ஒளவையாரின் வெண்பா "விரகர்" எனத்தொடங்கி அவர் கவிதை நஞ்சேனும் வேம்பேனு நன்று" என இடித்துரைத்துளது அல்லவோ?

(d) மதிப்பீட்டு விளக்கம்—சீர்திருத்தம். அப் பாவலர்க்கு முன்னும் பின்னும் தோன்றிய உரையாசிரியர் பொருமை, புறக்கணிப்பு முதலனவற்றைக் காட்டினும் மதிப்பீட்டு முறையில் மிக மேம்பாடுற்றனர். அன்னுர் பயில்வோர்க்குத் தத்தம் கருத்துக்களை அறிவியலாக வடிகட்டியளித்தும், பல்வேறு கருத்துக்களில் துணிவான கருத்துக்களைக் கூர்ந்தறியும் நெறிமுறைகளைச் சுட்டிக் காட்டியும் மதிப்பீட்டுக் கோட்பாடுகளை (Principles of Criticism) உலகறிந் துவக்கச் செய்தனர்.

நச்சினார்க்கினியர் காலத்திலேதான் மதிப்பீட்டுத் துறையில் அருமை பெருமைகள் செழித்தோங்கி வளர்ந்தன. தமிழ் உரைநடை அவர் காலத்திலே சிறந்து வளர்ந்தபடியால் ஒருவருடைய கலையறிவும் உலகிய லறிவும் மதிப்புரை வழங்குவதில் புலனாயின. செய்யுள் நடையைவிட உரை நடையிலேதான் கருத்துக்கள் நன்கு தெளிவாகும் என்பது உரையாசிரியர்களின் உரையைவிட மதிப்புரை களால் நன்கு புலனாயிற்று. தமிழ் மொழியின் சொல் வளமும் பொருளாழமும் மதிப்புரைகளாலேயே மிக நன்றாக வெளிச்சமாயின. மதிப்பீடு செய்வதற்கு நூலறிவினும் உலகியலறிவோடு கலந்த நுண்ணறிவு மிகுதியாக வேண்டும். நடுவு நிலையுடன் ஆராய்ந்து நன்முடிவு கூறுதல் அல்லது தீர்ப்பளித்தல் ஆகிய மதிப்பீட்டு முறை பேரறிவினர்க்கே கைவரும் பெருந் தொழிலாகுமன்றிச் சிறுதொழிலாகா. மதிப்பீட்டின் அருமை பெருமைகள் சொல்லிலடங்கா.

தொல்காப்பிய உரையாசிரியர்கள்: இளம்பூரணர் முதலியோராவர். உரையாசிரியர்கள் பல்திறக் கருத்துக்களைத் தம் கருத்தோடு ஒப்பிட்டு அவற்றின் ஏற்றத் தாழ்வுகளை ஆங்காங்கு தெளித்துச் செல்வாராயினர். இம்முறை இறையனார் களவியலுரையிலேயே இடம் பெறக் கண்டோம் அல்லேமோ? உரையாசிரியர்களின் மதிப்பீட்டுமுறை பலதிறப்பட்டன. ஆசிரியர் பேராசிரியர் அழகொழுக மதிப்புரைப்பர். பரிமேலழகர் அமயம் நோக்கி நயந்தும் இகழ்ந்தும் கூறுவர். சேனாவரையர் பணிவும் தருக்கமுறையும் காட்டுவர். சிலர் உரையாசிரியர்களின் பெயர் கூறாது மதிப்பிட்டனர். ஆசிரியர்

சிவஞான முனிவர், நச்சினார்க்கினியர் முதலிய சிலர், பெயர் கூறாமல் ஆசிரியர் கூற்றைச் சீர்தூக்கி உரைப்பது பெரு வழக்கு.

முற்கால உரையாசிரியர்களுள் கருத்துக்களைச் சீர் தூக்கும் மதிப்பாளரில் (Critics) நச்சினார்க்கினியர் தலை சிறந்தவர். இப்பெற்றியினரான இவ்வாசிரியரை "உச்சி மேற் புலவர் கொள்ளும் நச்சினார்க்கினியர்" என அறிஞர் உலகம் நச்சி மெச்சி வருவதாயிற்று. பிற்காலத் தவருள் அவஞானம் போக்கும் சிவஞான முனிவர் ஒருவரே மதிப்பாளர் உலகில் உச்ச நிலை அடைந்தவராவர். இவர் ஏனையோர் கருத்தை மறுத்துத் தம் கருத்தையே நிலை நாட்டுவதில் வல்லவர். தமிழ் மொழி இலக்கணமும் வட மொழி இலக்கணமும் ஒன்றே என்றே கூறித் தடுமாற்றம் விளைத்த ஈசான தேசிகர், புத்தமித்திரனார் முதலிய சிலரது கூற்றுக்களுக்குக் கூற்றுக்களாக மறுத்துரைத்த ஆண்மை யாளர் சிவஞான முனிவரேயாவர். இவர் மதிப்புரைக்கும் நடைத்திறம் பாராட்டற்குரியதாயினும் அது பெரிதும் சுடு சொற்களையுடையது. இந்நூற்றாண்டு உரையாசிரியர் களுள் இவரது உரைநடைத் திறனும், மறுப்புரை வன்மை முறையும், தனித் தமிழ்ப் பொருள் வளனும் பின்னர் சிலரால் கையாளப்பட்டு வரலாயின. சுடுகணை உரை பெய்யும் சிவஞான முனிவருக்கு அடுத்த நிலையில் உள்ள வரும் உரையாசிரியப் புலவருள் முதல்வரும் பல்லாவரம் மறைமலையடிகளாவர். நூலாசிரியர் உலகிலும், ஆராய்ச்சி யுரை யாசிரியர் உலகிலும், தூய தனித் தமிழ் நடையில் கட்டுரைக்கும் புகழாளர் மறைமலையடிகளார் ஒருவரே யாவர். இவர் தமது ஆராய்ச்சியுரையிலே சில ஆசிரியர்

களது உரைகள் பொருந்தாமை காட்டும் ஒரு சில இடங்களில் இவ்வாறு இழுக்கினர்; இவ்வாறு வழுக்கினர்; என மறுத்துரைத்தும், தமது உரை பொருந்துமாறு விளக்கி நிலைநாட்டியும், உரைகள் பொருந்தும் பல இடங்களில் அவ்வுரைகளைப் புகழ்ந்தும் கூறும் இயல்பினர். இதனை மறைமலையடிகள் தீட்டிய பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையிலே காணலாம். இன்னணம் ஒட்டுமிடத்தில் ஒட்டியும் வெட்டுமிடத்தில் வெட்டியும், அவ்வெட்டுதலுக்குத் திருத்தமுறை பொருத்தமுறை கட்டியும் தெள்ளியுரைக்கும் முறையே திருத்தமுறை. ஏனைமுறை வருத்தமுறை என்க.

அரங்கேற்றும் முறை.

பழங்காலத்தில் புது நூல்களை அவற்றின், ஆசிரியர் புலவர் கூடிய அவைக்களத்தில் படித்தலும், உரை கூறுங்கால் அமயம் நேர்ந்துழிப் புலவர்கள் கடாக்கள் விடுத்தலும், நூலாசிரியர் அக்கடாக்களுக்குத் தக்க விடையிறுத்தலும் போன்ற நிகழ்ச்சிகள் நிகழும். அவைப் புலவோர் ஏற்றுக்கொண்ட நூல்கள் அன்னாரின் சாற்றுக் கொண்ட நூல்களேயாம். அத்தகு நூல்களே சிறந்தன வெனப் பலராலும் கொண்டாடப்படும். இங்ஙனம் புலவர் கூட்டத்தில் வடிகட்டப்பெற்று வெளிவந்த நூல்களே நீடு நின்று நிலவின.

பாண்டியருள் ஒருவனாகிய சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான். தொல்காப்பியம் அப்பாண்டியன் அவைக்களத்தில் அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேறின

தாக அதன் பாயிரத்தில் தெரிகிறது. இந்நாளிலும் பல நூல்கள் அங்ஙனம் அவைகளில் அரங்கேறி வருகின்றன. இவ்வாற்றால் அன்று முதல் இன்று வரை நூல்களை மதிப்பிடும் முறை தமிழகத்தில் இருந்திருக்கின்றது என்பது விளங்குகின்றது.

இந்நூற்றாண்டில் நூல்களை மதிப்பிடும் முறை மிகவும் முன்னேறி வளர்ந்து வரினும், தற்காலத்தில் நூல்களை ஆராய்ந்து முடிவு காணுதலுக்கு மொழிப் பூசலும் வகுப்புப் பூசலும் ஒருவாறு குறுக்கிடுகின்றன. ஆனபடியினால் மதிப்பீட்டு முறை செப்பம் செய்யப்படாமல் சில சமயம் நல்வழியிலும், சில சமயம் அல்வழியிலும் நடைபெற்று வருகின்றது. அல்வழி தூர்ந்து நல்வழி பிறங்கல் வேண்டும். சிறந்த மதிப்பாளர் திட்பம் நுட்பம் சான்ற நெறி முறைகளில் நூல்களை மதிப்பிடல் வேண்டும். தக்கோரின் வாய்ப்பும் அதாவது பன்னூற் பகுப்பில் பதர்களையும் பக்குவரின் வாய்ப்பும், நன்னூல்கள் சீர்தூக்கப்பட்டு அரங்கேறுதலும் இன்றேல், பொய்யும் வழுவும் கிராமிய நூற்பதர்கள் பெருகி ஒண்டமிழ் நூற்களஞ்சியத்திலே இடம்பெற்று இலக்கிய வளர்ச்சிக்குப் பெருங்கேடு சூழும்.

அகப்பொருட்டுறை, ஓவியத்துறை, இன்னிசைத் துறை, அறுவை-மருத்துவ-த்துறை முதலிய பல்திறக் கலைத் துறைகளும் விளங்கி வந்த பண்டை நாளில் ஒரு நூலுக்கு மறுப்பாக எழுந்த நூலுக்கு "எதிர் நூல்" என்று பெயர். இதனை இக்காலத்து மதிப்புரையாளர் மறுப்பு என்றும், மறுப்புக்கு மறுப்பு என்றும், தடைக்கு விடை என்றும் கூறுவர். இதனில் சிறிது வேறுபட்ட மதிப்பு நூலை ஆங்கிலத்தில் Treatise on criticism என்பர்.

இந்நெறி முறைகளில் தமிழின் மதிப்பீட்டு முறை பெரிதும் சீர்திருந்தி வளர்கை நனி விரும்பத்தக்கது. உரையாசிரியர்களும், மதிப்புரையாளர்களும்

"இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே"

என்ற ஆன்றோர் திருவாக்கை நோக்கியமர்ந்து, சுடு சொல் அம்பு பெய்யும் வன்கண் முறையைப்பேணாது, இன் சொல் வழங்கும் முறையினைக் கைக்கொண்டு, ஒருபாற்கோடாது நடுநின்று ஆராய்ந்துரைத்து, அமிழ் தனைய தமிழ் நடையினை நன்கு வளர்த்து, செந்தமிழ்ப் புலமையினைப் பேணி, வாழி! ஊழி வாழியவே!!

புலமையிலக்கியவியல் முற்றிற்று.

குரு வாழ்க!

முடிப்புரை.

இப்புலமை நூல் புலமை யியல், புலமையிலக்கண வியல், புலமை யிலக்கியவியல் என்னும் மூன்று பகுதிகளால் ஆராயப்பட்டவாறு கண்டோம். இதுகாறும் செய்த புலமை ஆராய்ச்சியினுல் அறிதற்பாலன வருமாறு :—

க. புலம் என்னும் சொல்லின் சிறப்புப் பொருள் மெய்யறிவெனவும், "புலமை யென்பது புலத்தின் மேம்பாடே" என்றபடி புலமையின் சிறப்புப் பொருள் மெய்யறிவுடைமை யெனவும், பரத்துவ குருத்துவ அநுபூதி (கடவுளின் தன்மை குருவின் தன்மை இவற்றை அநுபவித்தறிந்த அகண்டாகாரப் பேருணர்வு நிலே) வாயிலாக அடையப்பெற்ற மெய்யறிவுடையவரே புலவர் எனவும் அறியக்கிடக்கின்றது.

உ. அறிவு நிலே மூன்று வகையினதெனவும், அவை புலனறிவு, மனனறிவு, உயிரறிவு எனப்படுமெனவும், புலனறிவு வெளியறிவாதலால் உலகத்தை மட்டும் அப்புலனறிவாகிய கண்ணுடியால் அறியலாமெனவும், தொட்டனேத்தூறும் மணற்கேணி போன்று நினைவாழமுடைய சிலர் மனனறிவுகொண்டு எதனேயும் ஆராய்தலால் புலனறிவோடு கல்வியறிவாகிய மனனறிவும் சேர்ந்து ஒன்றுபட்டு நிற்கும் நிலே சற்றே உயரியதெனவும், மிகவும் நினைவாழமுடைய சிலர் அறிவு நிலேயிலே எதனேயும் கருதிச் செல்வதனுல் புலனறிவைத் தன்னுடன் ஒன்றுசேர்த்துங் கொண்டு மனனறிவு இப்போழ்து உயிரறிவு நிலேயில் ஒன்றுபட்டு நிற்றலால், இம்மூவகை நிலேயும் பொதுவாக அறிவுநிலே எனவும் தெளிக.

ரு. உரை (கல்வி) யெல்லாம் அறிவு நிலையைப் பற்றியே நிகழுமன்றி அதன் மேற் சென்று உணர்வு நிலையைப் பற்றமாட்டாதாகும். அறிவு நிலை வரையில் உயிரின் முனைப்புண்டு ; யான், எனது என்னும் (அகங்கார மமகார) எண்ணமும் உண்டு. இவ்வறிவுநிலை முதிர்ந் திடுங்கால் உணர்வு நிலைக்கு வந்து நிற்கும். மெய் புணர்தலால் உணர்வு நிலையாகிய இந்நான்காம் நிலையிலே திருவருள் விளங்கும். யான் எனதென்னும் செருக்காகிய அறிவு நிலை மாறிப்போய்விடுதலின் இந்நிலை, திருவருள் விளங்கும் அகன்ற அல்லது அகண்ட மன்றம் என்னும் திருச்சிற்றம்பலமாகிறது. உயிரறிவுநிலை வரையில் ஆழ்ந்து சென்றபின் அங்கு தோன்றும் உணர்வு நிலையில் உலக விளக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் இறை யருள் ஊறிவருகின்றது.

சு. உணர்வு நிலையாகிய மன்றத்தினுக்குரிய இடம் நெஞ்சு எனப்படும். இதனை நெஞ்சத் தாமரை என்பது முண்டு. உணர்வு நிலையாகிய ஆழ்ந்த நிலை கண்டால் ஆங்கு இறையருள் ஊறி வருதலின், அதனைத் திரு வள்ளுவனார் "மலர்மிசை ஏகினன்" என்ற தொடரால் அறிவுறுத்துகின்றனர். இதே கருத்தினை, "உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" என அப்பரடிகளும், "நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்துருகத் தஞ்சத்தருள்சண்முகன்" எனக் கந்தரநுபூதி ஆசிரியரும் உருக்கத்துடன் விளக்கி யருள்கின்றனர். மேலும், "மாற்றலாம் பிறப்பிறப்பையு நெஞ்சமே மன்றுளாடிய தாளும், தோற்றுமுள்ளொளிக் குள்ளொளி யாயதைத் தொழுது வாழ்தலு மாமே" எனச் சாந்தலிங்க சுவாமிகளும் பாடியருளியுள்ளார்கள்.

இன்னணம் இதயமாகிய உணர்வு நிலையில் நடைபெறுகின்ற திருச்சிற்றம்பலத் திருநடனத்தில், மிகவும் நுட்பமான திருச்சிலம் பொலியும் நிகழும். அருள் நிலையில் கலந்து நுகரும் அன்புருவாம் பரமசிவத்தின் இன்பக் காட்சி நிலையின் உண்மையைச் சேரமான் பெருமாள் நாயனுர் வரலாற்றிடைக் காணலாம். நாடோறும் தமது சிவபூசனை முடிவில் கூத்தப் பிரான் திருச்சிலம்பொலி கேட்கப் பெற்றுத் துதித்தின்புற்று வந்தனர் என்பது சரிதம். நுண்ணொலியாகிய இது பருநிலையாகிய அறிவு நிலையில், வான் ஓசையை இடனுகக்கொண்டு எழுத் தோசைகள் செவிப் புலனுதற்கும் ஏதுவாம். உணர்வு நிலையில் இறைவன் ஊற்றெடுத்து விளங்குகின்றனன் என்பது இந்நுண்ணொலி நிகழ்ச்சியினுலும் வெளியே நன் குணரப்படும். இறைவன் விளக்கத்தால் நிகழும் இந் நுண்ணொலிப் பொருளே வாக்கு, அஞ்செழுத்து, ஓங்காரம், குருமொழி முதலான பெரும் பெயர்களோடு சொல்லப்படுகின்றது.

ரு. உலகத்தின் விரிவுக்கெல்லாம் அடிப்படையாக உள்ள ஏதுக்கள் ஒலியும் ஒளியுமாகும். ஒளியைவிட ஓசை நுட்பமானது. கடவுள் என்னும் பெயரில் ஒளிநுட்ப முண்டு. இவ்வுண்மையை, கடவுளைப் போலவே, ஒளியும் எல்லாவற்றையும் தான் விளக்கித் தன்னை விளக்குவது வேறென்றின்றி நிற்பதினின்றும் தெளிந்து கோடலாம். ஒளியுருவிலும் ஒலிப் பெயரிலும் இவ்வண்ணம் யாவற்றை யும் இயக்கி வருகின்ற கடந்த பொருளாகிய ஒரு தனி முழு முதலை அக்கருத்துக்களெல்லாம் ஒருங்கே விளங்கு மாறு "பெரும் பெயர்க் கடவுள்" அல்லது இன்னுந்

சுருக்கமாகத் தாயுமான அடிகள் திருவாக்கினால், "பெரிய பொருள்" எனக் கூறுவது மிகவும் பொருந்தும். இங்ஙனம் ஒலிவாயிலாகவும் ஒளிவாயிலாகவும் இறைவன் உணர்வு நிலைக்கண் ஊறி முன்னின்றருள்கின்றனன் என்பது திருஞான சம்பந்தப் பெருமான் 'தோடுடைய செவியன்' என்ற தொடக்கமுடைய முதல் தேவாரத் திருப்பாடலினாலும், மற்றோர் அமயம் தேவாரத் திருப்பதிகம் பாடி முடித்தலும் அன்னார்முன் சிவபெருமான் அரிய பெரிய ஒளிவடிவாக விளங்கிப் பலர்க்கும் திரும்பாத வீடு பேற்றை நல்கியருளியதனாலும் ஆணித்தரமாக விளங்குகின்றது.

௬. கருத்து: புலமை அறிவு நிலை, உணர்வு நிலை என இருவகை நிலைகளில் மிளிரும். இவற்றுள் அறிவு நிலையைக்காட்டிலும் உணர்வு நிலையிலே இறைவன் திருவருள் விளக்கம் ஊறியசைந்து வருதலின், கல்வித் தவப் புலமையாகிய அறிவு நிலையில் துவங்கி அநுபூதிப் புலமையாகிய உணர்வு நிலையில் நின்று, இறைவனையோ, குருவையோ அகவெளியாகிய மனவெளியிலும் புறவெளியிலும் கண்டருள் பெற்றும் ஏத்தெடுத்தும், இன்புற்றும் அக்குருத்துவத்திலோ, பரத்துவத்திலோ இரண்டறக் கலந்து வாழ்தலே புலமைப் பயன்.

நூல் முற்றிற்று

குருவே துணை.

இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள் — 96.

(a) அச்சானவை **30** (b) கையெழுத்துப் பிரதிகள் **66**

I உரைநடை நூல்கள் — **18**:

அச்சானவை **4**: கையெழுத்துப் பிரதி **14**

1. சசிகாந்தன் — நாவல். *முதற் பதிப்பு* — 1924 *செப்டம்பர்: இரண்டாம் பதிப்பு* 1926 *பிப்ரவரி; மாணவர் பதிப்பு*: 1930 Non Detailed Text for the Dt. Bd. and Municipal High Schools, Coimbatore. *சென்னைச் செந்தமிழ்ச்* சங்கத்தின் பரிசு பெற்றது.

2. வேளாள புராண வசனம். 1926 *பிப்ரவரி வெளியீடு*. ஷை சங்கப் பரிசு பெற்றது.

3. இந்திய பத்திரிகைத் தொழிலியல்: (Indian Journalism) *முதற் பதிப்பு* 1935-ஆ: *இரண்டாம் பதிப்பு* 1938-ம் ஆ: A Prescribed Detailed Text for the Intermediate Examination 1938.

4. புலமை நூல்: *ஒரு நுணுகிய ஆராய்ச்சி.* Culture and its Development — A Critical Research. 1952 *மே-மீ வெளியீடு.*

II இயற்றமிழ் நூல்கள் — பிரபந்தங்கள் **55**.

மருதாசலப் பிள்ளைத் தமிழ்; மருதீசர் நவரச வண்ணத் திருப்புகழ் முதலன — அச்சானவை **26**: கையெழுத்துப் பிரதி **29**.

III இசைத்தமிழ் நூல்கள்: (கையெழுத்துப் பிரதி) **22**

IV நாடகத் தமிழ் நூல்: (கையெழுத்துப் பிரதி) **1**

இந்நாடக நூலின் பேர் தக்கன் மாட்சி. இது *விநாயகமூர்த்தியின் சாரூபம் பெற்ற முற்கல மாமுனி வரது* திருவருளால் *பிறவித் தொழுநோய் நீங்கிச் செங்கோல் ஆட்சி புரிந்த* தக்கன் *என்ற அரசன் வரலாறு. இச்சரிதம்* (விளாங்குறிச்சி) *விளவா பால மோகன நாடக சபையாரால் நடிக்கப்பெற்றது.*

விளம்பரம்.

புலமை நூல்:

ஒரு பிரதி விலை ரூபாய் **2—8—0**

கிடைக்குமிடம்:—

வி. நா. மருதாசலக் கவுண்டர்,

நூலாசிரியர்,

விளாங்குறிச்சி.

Velankurichi Post, COIMBATORE. (S. Ry.)

குறிப்பு: புலமை நூல் மட்டும் விலைக்குக் கிடைக்கும். மற்ற நூல்கள் கிடைக்கமாட்டா.